ஸ்ரீகலா SRIKALA

ஸ்ரீகலா SRIKALA

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

Contents

வெம்மை : 1
வெம்மை : 2
வெம்மை : 3
வெம்மை : 4
வெம்மை : 5
வெம்மை : 6
வெம்மை : 7
வெம்மை : 8
வெம்மை : 9
வெம்மை : 10
வெம்மை : 11
வெம்மை : 12
வெம்மை : 13
வெம்மை : 14
வெம்மை : 15
வெம்மை : 16
வெம்மை : 17
வெம்மை : 18
வெம்மை : 19
வெம்மை : 20
வெம்மை : 21
வெம்மை : 22

வெம்மை : 23

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM
தமிழ் நாவல்

“அப்பா... என்னவோ பேசணும்னு கூட்டிட்டு வந்திட்டு... எதுவும் பேசாம இருந்தா என்ன அர்த்தம்?” தந்தையைப் பார்த்து வினவியபடி அவருடன் இணைந்து நடைப்பயிற்சி மேற்கொண்டாள் அல்லிகொடி.

அவளை ஒரு பார்வை பார்த்தவர் ஒன்றும் பேசாமல் மேலே தன் நடையை எட்டி போட... ‘அப்படியென்ன விசயமா இருக்கும்?’ மனதுக்குள் நினைத்தபடி அவரைப் பின் தொடர்ந்தாள் அவள்.

இனி அவராக வாயை திறந்தால் ஒழிய தானாக வாய் திறக்க கூடாது என்று முடிவு செய்தவள் அதை அப்படியே பின்பற்றினாள். அவளின் அமைதியை கவனிக்கும் நிலையில் அவளின் தந்தை பரமேஷ்வர் இல்லை. அவர் தன்னினைவில் உழன்றபடி நடந்தார். இல்லையென்றால் படபடக்கும் பட்டாசாய் பொரியும் மகள் வாய் மூடி அமைதியாய் இருப்பதை அவரும் உணர்ந்திருப்பார்.

பரமேஷ்வர் இலங்கையில் உள்ள கண்டியில் வசிக்கின்ற பணக்காரர்களுள் ஒருவர். மிகப் பெரிய தொழிலதிபர். அப்படித்தான் எல்லோரும் நினைத்து கொண்டிருக்கின்றனர். ஆனால் கொஞ்ச வருடங்களாக அவரின் தொழில் சரிவை நோக்கி சென்று கொண்டிருப்பது அவருக்கு மட்டுமே தெரிந்த விசயம்.

மனைவி பொற்கொடி இல்லத்தரசி... ஆஸ்திக்கு ஒரு மகன் அஸ்வின்... ஆசைக்கு ஒரு மகள் அல்லிகொடி. அல்லி தான் மூத்தவள். அஸ்வின் அவளை விட ஐந்து வயது சிறியவன். தற்போது பள்ளி படிப்பு முடித்து லண்டனில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்லூரி படிப்புப் படிக்கச் சென்றிருக்கிறான்.

அவளும் அவனைப் போன்று தான் தன் கல்லூரி படிப்பை வெளிநாட்டில் தான் படித்து முடித்தாள். அவன் லண்டனில் படிக்கப் போனான் என்றால்... அவள் சென்னையில்

எம்எஸ்சி படித்து முடித்தாள். இந்த ஐந்து வருடமும் அவள் சென்னையில் விடுதியில் தங்கி தான் படித்தாள்.

நேற்று தான் படிப்பு முடிந்து கண்டிக்கு வந்திருந்தாள். வந்த மறுநாளே தந்தை 'உன்னுடன் பேச வேண்டும்' என்று கூறி காலையில் நடைப்பயிற்சிக்கு பூங்காவிற்குச் செல்லவிருந்தவர் மகளையும் உடன் அழைத்து வந்துவிட்டார்.

பூங்காவில் ஓரமாய்ப் போடப்பட்டிருந்த கல்மேடையில் அமர்ந்தவர், "பேபிம்மா... இங்கே உட்காரு..." அவரின் 'பேபிம்மா' என்றழைப்பில் முகமெல்லாம் விகசிக்க அவர் அருகில் அமர்ந்து,

"அப்பா..." என்று அவர் தோளை கட்டி கொண்டாள்.

"பேபிம்மா... நான் என்ன செய்தாலும் உன் நன்மைக்குத் தான் செய்வேன்னு உனக்குத் தெரியும் தானே?" அவர் பீடிகையுடன் ஆரம்பிக்க... அவரைப் புரியாமல் பார்த்தவள்,

"நிச்சயம்ப்பா..." நம்பிக்கையுடன் கூறியவளை வாஞ்சையுடன் பார்த்தவர்,

"அப்படியென்றால் நான் கேட்பதற்கு உன் சம்மதத்தைக் கொடுப்பாயா?"

"சொல்லுங்கப்பா..." அப்படியென்ன பெரியதாகக் கேட்டுவிடப் போகிறார்? என்று அவள் அசால்ட்டாகச் சொல்ல...

"நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளையை நீ கல்யாணம் செய்துக்க வேணும். அதுவும் இன்னும் ஒரு வாரத்தில்..." எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கூறியவரை... அதிர்வுடன் பார்த்தவள்,

"வாட்...?" அவள் முகம் பலவித உணர்ச்சிகளை வெளிப்படுத்தியது. அதில் அவநம்பிக்கையும், நிராசையும் அளவுக்கு அதிகமாகப் போட்டி போட்டது.

தமிழ் நாவல்

“என்ன விளையாடுறீங்களா அப்பா...? கல்யாணம்ன்னா என்ன நினைச்சிட்டு இருக்கீங்க? அது என்ன உங்க பிசினெஸ் காண்ட்ராக்ட் மாதிரின்னு நினைச்சீங்களா? இது மனசு சம்பந்தப்பட்டதுப்பா... என் கல்யாணத்தைப் பத்தி... எனக்கு வர போகும் கணவனைப் பத்தி... எனக்குன்னு நிறையக் கனவுகள் இருக்கு. அதையெல்லாம் ஒரு நொடியில் இடித்துத் தரைமட்டமாக்கிட்டீங்களே...?”

அவள் குரலில் துக்கம் நிரம்பி வழிந்த போதும்... அவள் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் துளிர்க்கவில்லை. அது தான் அவள். அவளுக்குத் தன் மேல் நிறைய நம்பிக்கை உண்டு. அதிலும் தந்தை சொல்லும் திருமணம் தன் விருப்பத்தை மீறி நடந்துவிடாது என்ற நம்பிக்கையில் அவள் உறுதியாய் இருந்தாள். அவரோ மகளை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். தன் ஆசை மகளின் கனவை தானே குழி தோண்டி புதைத்த தன் நிலையை எண்ணி உள்ளுக்குள் மறுகினார்.

‘நீ சொல்வது போல் இது ஒரு பிசினெஸ் காண்ட்ராக்ட் தான் பேபிம்மா... இதை நான் சொன்னால் நீ தாங்குவாயா? என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் சொல்லாமலும் உன்னிடம் இருந்து மறைக்க எனக்கு விருப்பமும் இல்லை... என் வாழ்க்கை உன் கையில்... உன் முடிவில் தான் அடங்கியிருக்கு...’ மனதுக்குள் குமைந்தவர்... மகளிடம் தன் நிலையைப் பற்றிப் பேச வேண்டிய நேரம் வந்து விட்டதை உணர்ந்தார்.

“பேபிம்மா... உன் திருமணத்தைப் பத்தி பேசும் முன் நான் நம் பிசினெஸ் நிலைமையைப் பத்தி முதல்ல சொல்லிடறேன்...” என்றவரை,

“அப்பா... என் கல்யாணத்துக்கும்... உங்க பிசினெஸ்க்கும் என்ன சம்பந்தம்?” பொறுமையில்லாமல் வெடித்து விட்டாள் அவள்.

அவளுக்குள் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் அப்படிப்பட்டது. பின்னே பட்டாம்பூச்சியாய் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கும் அவளைத் திருமணம் என்னும்

பந்தத்தில்... அதுவும் ஒரு வாரத்தில் தள்ளிவிடும் அளவுக்கு இப்போது என்ன நடந்துவிட்டது? இல்லை அவள் தான் அவர்களுக்குப் பாரமாகி போய்விட்டாளா? அவள் மனம் எரிமலையாய் குமுறியது.

“சம்பந்தம் இருக்கும்மா... கொஞ்ச வருடங்களா நம்ம பிசினெஸ் நல்ல நிலையில் இல்லை... இதில் உன் படிப்புச் செலவு... உன் தம்பி லண்டனுக்குப் படிக்கச் சென்ற செலவு என்று எல்லாம் சேர்த்து என்னை நிலை தடுமாறச் செய்தது. என் கஷ்டத்தை உங்க கிட்ட சொல்லி... மேலும் உங்களைக் கஷ்டப்படுத்த வேணாம்ன்னு தான் இதுவரை நானும் உங்க யார் கிட்டேயும் சொல்லல. எப்படியும் சமாளிச்சுடலாம்ன்னு நினைச்சேன். ஆனால் என்னால் அதைச் செய்ய முடியல... ஏகப்பட்ட கடனாகி போச்சு... வட்டி குட்டி போட்டு அதுவே ஒரு பெரிய தொகையா சேர... என்னால் மூச்சு விடக் கூட முடியாத அளவுக்குக் கடன் சுமை நாளுக்கு நாள் ஏறிக்கிட்டே போனது.”

“அப்போ தான் நாயகம் மூலம் எனக்கு அவர்... அதாவது மாப்பிள்ளையின் அறிமுகம் கிடைத்தது. பெயர் வெற்றியரசன்... அவர் கொழும்பில் பெரிய பிசினெஸ் மேன். என் கஷ்டத்தைப் பார்த்து எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர் தானாய் உதவி செய்ய முன் வந்தார். அவர் உதவி செய்த தொகை பல கோடிகள் பெறும்...” அவர் சொல்லும் போதே அவளுக்கு விசயம் புரிந்து போனது.

“அப்பா...” அதிர்ச்சியுடன் பார்த்தாள் அவள். புத்திசாலி மகள் தான் சொல்ல வருவதைப் புரிந்து கொண்டாள் என்பதை எண்ணி பெருமைப்படுவதா? இல்லை வருத்தப்படுவதா? என்று அவருக்குத் தெரியவில்லை.

“இப்போ திடீரென்று பணத்தைத் திருப்பித் தாருங்கள் என்று நெருக்கடி கொடுக்கிறார். இப்போ இருக்கும் நிலையில் அவர் கொடுத்ததில் நூறில் ஒரு மடங்கு பணத்தைக் கூட நம்மால் திருப்பிக் கொடுக்க முடியாது. அதை உணர்ந்தோ என்னமோ அவன்... சாரிம்மா அவர்...”

தமிழ் நாவல்

“அவர் என்னப்பா அவர்... அந்தக் குட்டிச்சுவரை அவன்னே சொல்லுங்க” வெறுப்பாய் சொன்னாள் அவள்.

“அவன் தந்த பணத்தைத் தர வேண்டாமாம்... அதுக்குப் பதிலாக அவன் உன்னைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறானாம். நம் வீட்டில் உன் போட்டோவை பார்த்தவுடன் உன்னை ரொம்பப் பிடித்துப் போய்விட்டதாம். அதனால் அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பம் தெரிவித்து என்னிடம் சொன்னான். ஆனால் நான் என் மகளின் முடிவே என் முடிவுன்னு அவன் கிட்ட சொல்லிட்டேன்... ஆனால் அதையே உன்னிடம் சொல்ல என்னால் முடியவில்லை பேபிம்மா.”

“ஏன்னா இப்போ இருக்கும் நம் நிலைமை அந்த மாதிரி இருக்கு... நீ மட்டும் சரி என்று சொல்லாவிட்டால்... இன்றைக்கு நமக்கு இருக்கும் சமூக அந்தஸ்து கேள்விக்குறியாகி விடும். அதையெல்லாம் விட நம்மைச் சுற்றி இருக்கும் கடனே நம் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடும். மான, மரியாதை எல்லாம் நாம் இழந்து நிற்க போகும் நம் நிலையை உன் அம்மா அறிந்தால்.... அந்தக் கணமே அவள் மூச்சடைத்து செத்து போவாள். அவள் போன பின் நானும் இருக்க மாட்டேன்... அதன் பின் உன் தம்பியும்...” அவர் மேலே பேசும் முன் அவர் வாய் பொத்தி தடுத்தவள்,

“இப்போ நான் என்ன பதில் சொல்லணும்ன்னு நீங்க நினைக்கிறீங்க?” அவரின் விருப்பம் என்னவென்று தெரிந்தும் அவள் வேதனையுடன் கேட்க... அதே வேதனையுடன்...

“நீ... நீ... பேபிம்மா சம்மதம் சொன்னால் நான் பிழைப்பேன்...” என்று சொல்லியவர்,

“பேபிம்மா... மாப்பிள்ளையைப் பத்தி நான் நன்கு விசாரித்துவிட்டேன்... எல்லோரும் நல்லவிதமாகத் தான் கூறுகிறார்கள். அதனால் வேறு எதையும் நினைத்து மனதை போட்டு உழட்டி கொள்ளாதே...” அவர் என்ன சொல்லியும் அவள் முகம் தெளியாததைக் கண்டு,

“பேபிம்மா...” வாஞ்சையுடன் அழைத்தார் அவர்.

“சரிப்பா... உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்... நம் குடும்பத்தை விட... எனக்கு என் ஆசைகள் பெரிதல்ல...” என்ன முயன்றும் அவள் வார்த்தையில் அவளின் மனவிரக்தி வெளிப்படத் தான் செய்தது.

“அப்படியெல்லாம் சொல்லாதே பேபிம்மா... உனக்கு எல்லாவிதத்திலும் தகுதியான மாப்பிள்ளை தான். ஆனால்...” ஏதோ சொல்ல நினைத்தவர் வாய் வரை வந்த வார்த்தையை மென்று முழுங்கி கொண்டார்.

வேறு சிந்தனையில் இருந்த அவளும் அதைக் கவனிக்கவில்லை. அவள் மனதில் அந்த முகம் தெரியாத வெற்றியரசன் பேரில் அவளுக்கு வெறுப்பு வளர்ந்து கொண்டே போனது. தான் என்ன பண்டமாற்று பொருளா? தான் உயிருள்ள மனுசி... தனக்கும் உணர்வுகள் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளாத காட்டுமிராண்டியா அவன்... என்று அவனை நினைத்து அவளுக்கு உள்ளுக்குள் காந்தியது. இருக்கட்டும்... திருமணத்திற்குப் பின் தான் யாரென்று அவனுக்குக் காட்ட வேண்டும் என்று மனதுக்குள் சூளுரைத்து கொண்டாள்.

வீட்டிற்கு வந்ததும் பரமேஷ்வர் தன் மனைவியிடம் மகளுக்குத் திருமணம் செய்யப் போவதை அறிவிக்க... அவரோ அதிசயமாய்க் கணவரை பார்த்தார்.

“இப்போ தான் படிப்பு முடிந்து வந்திருக்கா... அதுக்குள்ளே கல்யாணமா? ம்ஹூம்... இப்போ வேணாம்ப்பா... அவள் கொஞ்ச நாள் நம்முடன் இருக்கட்டுமே...” தாயின் பேச்சில் மனம் கனிந்த அல்லி அவர் தோள் மேல் சலுகையாய் சாய்ந்து கொண்டாள்.

“என்றைக்கு இருந்தாலும்... அவள் வேறு வீடு போகப் போகிறவள் தானே... மாப்பிள்ளை வலிய வரும் போது விடக் கூடாது பொற்கொடி...” பரமேஷ்வர் கூறியதை ஆச்சிரியமாய்ப் பார்த்த பொற்கொடி...

தமிழ் நாவல்

“அப்படி வலிய வந்த வரன் யாருங்க?” ஆர்வமாய்க் கேட்டார் அவர்.

“நம்ம வெற்றியரசன்...” தந்தை சொல்லும் போதே அல்லிக்கு புரிந்து போனது...

தாய்க்கும் அவன் பரிச்சயமே என்று. அன்னைக்கும் அவனைத் தெரியும் என்பதில் அவள் மனதில் சிறு நிம்மதி, நம்பிக்கை வந்தது. இனி அன்னை பார்த்து கொள்வார் என்ற தைரியம் மனதுக்குள் வந்தது.

“அவரா...?” பொற்கொடியின் முகம் ஒரு கணம் இருண்டது. அவரின் முக மாறுதலை கவனித்த பரமேஷ்வர்,

“பேபிம்மா... எனக்குக் களைப்பா இருக்கு... கொஞ்சம் டீ போட்டுக் கொண்டு வருகிறாயா?” அவர் சொல்லவும் அல்லி சரியென்று எழ,

“நல்லா இஞ்சி, ஏலக்காய் தட்டி போட்டுக் கொண்டு வாம்மா...” என்க... அதைக் கேட்டு தலையசைத்தவள் உள்ளே செல்ல... அவள் போனதை உணர்ந்து மனைவியின் புறம் திரும்பினார் அவர்.

“ஏன் வெற்றிக்கு என்ன?”

“நம் பேபிம்மாவுக்கும் அவருக்கும் சிறிதும் பொருந்தாது? அவரை நேரில் பார்த்தால் அவள் எவ்வளவு வேதனையடைவாள் என்பது உங்களுக்கும் தெரியும் தானே?” அவரின் பேச்சில் குறுக்கிட்டவர்,

“வெளித்தோற்றத்திற்குப் பேபிம்மா எப்பவுமே முக்கியத்துவம் கொடுக்க மாட்டாள். அதைத் தவிர்த்து மற்றதை யோசித்துப் பார் பொற்கொடி... அப்படிப் பார்த்தால்... நம் மகள் தான் அவர் பக்கத்தில் நிற்கும் போது கொஞ்சம் குறைவாகத் தெரிவாள்”

“ஏன் என் பெண்ணுக்கு என்ன குறைச்சல்? என்ன நிறம் கொஞ்சம் மட்டு அவ்வளவு தான்... அதற்காக அவள் அழகில்லை என்றாகிவிடுமா? மாநிறம் தான் என்றாலும்

அவளும் அழகு தான். அவள் கிடைக்க அவர் தான் கொடுத்து வைத்திருக்கணும்” தாயாய் மகளுக்காய் பரிந்து பேசினார்.

“மாப்பிள்ளை சுண்டினால் ரத்தம் வரும் அளவுக்குச் சிவப்பு அதையும் நீ நியாபகப்படுத்திக் கொள்...”

“இருந்தாலும்...” அவர் முகம் கலக்கத்தைக் காண்பிக்கத் தான் செய்தது.

“எல்லாம் சரியாகும்... என்னை நம்பு பொற்கொடி...” கணவரின் பேச்சில் அவரின் முகம் சற்றுத் தெளிந்தது. அதற்குள் அல்லிகொடி தேநீர் எடுத்து வர... பேச்சை நிறுத்தி கொண்டனர்.

“பேபிம்மா... அப்பா பார்த்திருக்கும் பையனை கல்யாணம் பண்ணி கொள்வதில் உனக்குச் சம்மதம் தானா?” தாய் அப்படிக் கேட்டதும் அவள் தந்தையைப் பார்த்தாள். அவர் கண்ணில் தெரிந்த எதிர்பார்ப்பை கவனித்தவள்...

“அப்பா எது செய்தாலும் அது என் நன்மைக்காகத் தான் இருக்கும்மா... அதனால் என் கல்யாணம் எப்பவுமே அப்பாவோட சாய்ஸ் தான்ம்மா...”

மகளின் பேச்சு அவருக்குத் திருப்தி அளித்த போதும்... ஏனோ மனதுக்குள் கலக்கமாய் இருக்க... கணவரை பார்த்தார். அதை உணர்ந்தார் போல் பரமேஷ்வர் மனைவியின் கையைப் பிடித்து ஆதரவாய் அழுத்தினார்.

அதன் பின் மெல்ல பேச்சு அவளின் திருமண ஏற்பாடுகள் பக்கம் திரும்பியது. அல்லிக்கோ முள் மேல் அமர்ந்திருப்பது போல் தோன்ற பெற்றோரிடம் அனுமதி கேட்டு தன் அறைக்குச் சென்றாள்.

தன் வீட்டு அறையே தனக்கு அந்நியமாய்த் தோன்ற... அவளுக்கு மூச்சு முட்டுவது போல் இருந்தது. அறையின் ஜன்னலை திறந்து விட்டு வெளிக்காற்றை ஆழமாய் மூச்சிழுத்து சுவாசித்தாள். கண்டி நகரத்துக்கே உரிய

தமிழ் நாவல்

மிதமான காலநிலைக்கு ஏற்ப வீசிய தென்றல் காற்று அவளின் மனதிற்குச் சற்று நிம்மதியை தந்தது.

அது ஏனோ அவளின் மனதின் சுமையைச் சற்றுக் குறைப்பது போல் தோன்ற... அவள் ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். பரந்து விரிந்து பச்சை பசேலென்று இருந்த தோட்டத்தைப் பார்த்து கொண்டிருந்தவள் மனதில் தன் திருமணத்தைப் பற்றிய யோசனையே நிரம்பி இருந்தது.

‘எப்படியெல்லாம் என் கல்யாணம் நடக்க வேண்டும் என்று விரும்பினேன்? காதலால் கசிந்துருகி... என்னவனைக் கை பிடிக்கும் நாளை பல கனவுகளுடன் காத்திருந்து... அவனுக்காய் உயிர் உருக வாழ வேண்டும் என்று நான் நினைத்திருக்க... இப்படி அதிரடியாய் என் கல்யாணம் நடக்குமென்று எனக்குத் தெரியாமல் போனதே... கேவலம் பணத்துக்காக ஒருவனை நான் கல்யாணம் செய்வதா? அப்படியென்றால் எனக்கும், விலைமாந்தருக்கும் என்ன வித்தியாசம்? என் மனதை பற்றி அவன் கொஞ்சமும் யோசிக்கவில்லையா? அவனுக்கு அவன் மனம் தான் பெரியதாய் போய்விட்டதா?’

‘இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதம் சொன்னது சரி தானா? இனிவரும் வாழ்க்கையில் என்னால் அவனுடன் நிம்மதியாய் வாழ முடியுமா? அவனின் இந்தச் செயல் நெருஞ்சிமுள்ளாய் என்னை வாழ் முழுவதும் என்னைக் குத்துமே? இதையெல்லாம் உதறி தள்ளிவிட்டு எங்கேயாவது கண் காணாத இடத்திற்கு ஓடிவிட முடிந்தால்...’ என்று நினைத்தவள் கண் முன்னே... குடும்பமே தற்கொலை பண்ணி இறந்து கிடப்பது போல் காட்சி ஓட... கண்களை இறுக மூடி கொண்டாள்.

‘ஐயோ வேண்டாம்... இந்த வேதனை என்னோடு போகட்டும்... என் ஒருத்தியால் அவர்கள் அனைவரும் வாழ்வார்கள் என்றால்... அந்தத் துன்பத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்’ வேதனையுடன் நினைத்தவள், ‘டேய் இதுக்கு எல்லாம் காரணமான உன்னை...’ பல்லை

கடித்தாள் அவள். அவளின் ஒட்டு மொத்த கோபம் எல்லாம் அவனின் மேல் திரும்பியது.

அவளின் திருமணச் செய்தியை கேள்விப்பட்ட அஸ்வின் ஆத்திரப்பட்டான். அவனைச் சமாதானப்படுத்த யாராலும் முடியவில்லை.

“என்னப்பா இது? எனக்கு இருப்பது ஒரே ஒரு அக்கா... அவள் கல்யாணத்தில் நான் எப்படியெல்லாம் ஓடியாடி வேலை செய்யணும்ன்னு நினைச்சு இருந்தேன் தெரியுமா? அதிலும் மச்சினனா அத்தானின் கைப்பிடித்து மணவறை அழைத்துப் போக வேண்டும் என்று எவ்வளவு ஆசையாக இருந்தேன் தெரியுமா? கல்யாணத்தை என்னோட லீவில் வைத்திருந்தால் எவ்வளவு நல்லா இருந்திருக்கும்? இப்போ உடனே நான் அங்கே வர முடியாத நிலை... இப்படிச் செஞ்சிட்டீங்களே”

அவனின் புலம்பலில் அவளுக்குக் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு வந்தது. ஆனாலும் அவள் அழவில்லை. இதற்கு எல்லாம் காரணமான அந்த வெற்றியை தான் அழ வைக்க வேண்டும்... தான் எக்காரணம் கொண்டும் அழ கூடாது... உறுதியாய் எண்ணியவள் மனம் பாறை போல் இறுகியது.

தன் முன் பரப்பிக் கிடந்த புடவைகளையும், நகைகளையும் எந்தவித சலனமும் இல்லாமல் வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள் அல்லிகொடி. எல்லாம் வெற்றி தான் கொழும்பில் இருந்து அவளுக்காய் அனுப்பி இருந்தான். அதன் விலையை மனதிற்குள் கணக்கிட்டு பார்த்தவள் இதழ்கள் ஏளனமாய் வளைந்தது.

‘இதையெல்லாம் அனுப்பினால்... உன் பணத்தைக் கண்டு உன் பக்கம் நான் சாய்ந்து விடுவேன் என்று உனக்கு நினைப்பா? நெவர்... இந்த அல்லியை யார்ன்னு நினைச்ச? என் கழுத்தில் தாலியை மட்டும் தான் உன்னால் கட்ட முடியும்... அது மட்டுமே உன் விருப்பம்... ஆனால் அதற்கு அப்புறம் வாழும் உன் வாழ்க்கை என் கையில்... என் விருப்பத்தில்... என்னை ஏன் கல்யாணம் பண்ணி

தமிழ் நாவல்

கொண்டோம்ன்னு நீ கதறணும்... என் மனதை கொன்ற உன்னை அணு அணுவாய் சாகயடிக்கிறேன்டா... இன்னும் ஐந்து நாள் தான் அதுவரை உன் வாழ்க்கையை நிம்மதியாய் என்ஜாய் பண்ணு... அதுக்கப்புறம் சந்தோசம் உன் வாழ்க்கையில் இருக்குமோ என்னவோ?'

குரூரமாய் நினைத்தவள் அங்கிருந்த புடவைகளை அலட்சியமாய்த் தூக்கி தூர போட்டாள். அதிலிருந்த முஹூர்த்த புடவை அறையின் மூலையில் போய் அனாதையாய் கேட்பாரற்று விழுந்தது.

அந்நேரம் அவளின் அலைப்பேசி அழைக்க... எடுத்து பார்த்தால்... அது அவளின் தம்பி தான் அழைத்திருந்தான்.

"சொல்லுடா அஸ்வின்... எப்படி இருக்க...?"

"நான் நல்லாயிருக்கேன் அக்கா... நான் பேச வந்த விசயத்தை முதல்ல சொல்லிர்றேன்... அத்தான் சூப்பர்க்கா..."

அவனின் குரலிலிருந்த உற்சாகம் அவளை வியப்பில் ஆழ்த்தியது. நேற்று அவன் புலம்பியது என்ன? இன்று உற்சாகமாய்ப் பேசுவது என்ன? எப்படி நடந்தது இந்த மாயமந்திரம்?

"அவரே எனக்கு அழைத்துப் பேசினார் அக்கா... என் படிப்பு... அதோட வேலை வாய்ப்பு எல்லாவற்றையும் பேசினார்... அவரோட பேச்சில் அவரோட திறமை தெரியுது... அன்பு தெரியுது... பாசம் தெரியுது..."

அவன் பேசி கொண்டே போக அவளுக்குச் சலிப்பாக வந்தது. மேற்கொண்டு பேச விருப்பமில்லாமல் 'உம்... உம்...' என்று அவன் பேசியதற்கு எல்லாம் உம் கொட்டி வைத்தவளுக்கு அப்போது தான் ஒன்று உறைத்தது.

தன் தம்பியின் மனநிலை அறிந்து அவனின் மனதை மாற்ற அவனிடம் பேசிய அந்த வெற்றி... அவனுக்கு வாழ்க்கை துணையாக வர போகும் தன்னிடம் ஒருமுறை கூடப் பேசவில்லை. ஏனோ அவளுக்கு அது வித்தியாசமாக

உறுத்தியது. விருப்பப்பட்டுத் திருமணம் செய்யும் ஒருவன் தன் துணைவியாக வர போகிறவளை சந்தித்துப் பேச வேண்டும் என்று எண்ண மாட்டானா? அவன் தன்னிடம் பேசவோ இல்லை நேரில் சந்திக்கவோ முயற்சிக்கவில்லை... ஏன்? என்று யோசிக்கும் போதே... எங்கேயோ இடித்தது அவளுக்கு.

அதிலும் அவனின் புகைப்படத்தைக் கூட அவள் தந்தை அவளிடம் இன்னமும் காட்டாதது குறித்து அவள் மனதில் இனம் புரியாத பயம் எழுந்தது. தானாய் அவரிடம் கேட்ட போதும் வேறு ஏதோ பேசி தன் மனதை அவர் திசை திருப்பி விட்டதை இப்போது அவள் நினைவு கூர்ந்தாள். அப்போது வேறுபாடாய் தோணாத விசயம் இப்போது பூதாகரமாய் அவளுக்குத் தோணியது.

என்ன தான் தந்தைக்காக என்றாலும்... என்ன தான் தைரியமான பெண்ணாய் இருந்தாலும்... வர போகும் வாழ்க்கை பற்றி... தன் எதிர்காலம் பற்றி... மனதில் ஒருவித அச்சம் துளிர் விடத் தான் ஆரம்பித்தது. இங்கே இவளின் மனநிலை இவ்வாறாக இருக்க... அங்கே அவனின் மனநிலையோ முற்றிலும் வேறாக இருந்தது.

****

கொழும்பில் ஜனசந்தடி மிக்க அந்தக் கடற்கரை அருகே காரை நிறுத்தினான் வெற்றியரசன். காரை விட்டு இறங்கியவன் அதைப் பூட்டிவிட்டு... அந்த ஜனசமுத்திரத்தில் கலந்து வெகுதொலைவு நடந்தவன் ஆளரவமற்ற பகுதியில் வந்து அமர்ந்தான். ஓய்வில்லாமல் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்த அலைகளை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவன் மனம் அந்த அலைகளை விட அதிகமாய் அலைப்புற்றிருந்தது.

தான் செய்யப் போகும் காரியம் சரி தானா? இது நல்லதற்குத் தானா? இந்தத் திருமணத்தால் மட்டும் எல்லாவற்றையும் சரி செய்துவிட முடியுமா? இப்படிப் பல கேள்விகள் அடுக்கடுக்காய் எழுந்து அவனை அலைக்கழித்தது. ஆனால் அதற்கான விடை தான்

தமிழ் நாவல்

அவனிடத்தில் இல்லை...காலம் அவனுக்கான விடையைத் தருமா? இத்தனை ஆண்டுகளாய் அவனின் மனதில் கனன்று கொண்டிருக்கும் வெம்மையைத் தான் அது தீர்க்குமா?

“அரசு... அரசு...” அறைக் கதவு தட்டும் ஒலியில் கதவை திறந்தான் வெற்றியரசன். அங்கே அவனின் பாட்டி லக்ஷ்மியம்மா கையில் தேநீர் கோப்பையுடன் நின்று கொண்டிருந்தார்.

“ஏன் அம்மாயி நீங்க எதுக்கு எடுத்திட்டு வந்தீங்க? இன்னும் கொஞ்ச நேரத்தில் நானே வந்திருப்பேனே?” சொல்லி கொண்டே அவரின் கையிலிருந்த தேநீர் கோப்பையை வாங்கி மேஜை மீது வைத்து விட்டு அவரைக் கட்டிலில் அமர்த்தினான்.

“ஏற்கெனவே கால்வலி இருக்கு... இதில் மாடியேறி வரலைன்னா என்ன?” அவரைச் செல்லமாய்க் கடிந்து கொண்டவன் கீழே அமர்ந்து அவரின் கால்களை எடுத்து தன் மடி மீது வைத்துக் கொண்டு மென்மையாய் பிடித்து விட்டான்.

“எதுக்குப்பா இதெல்லாம் செய்ற?” அவர் தன் கால்களை விலக்க முற்பட...

“ஏன் செய்தால் என்ன? எங்களுக்காக உழைத்து... உழைத்து... ஓடாய் தேய்ந்தவங்க நீங்க அம்மாயி... உங்களுக்காக நான் இதைக் கூடச் செய்யக் கூடாதா?” பழைய நினைவில் அவனின் கண்கள் கலங்கியது. அவரின் மனதிலும் அதே நினைவுகளின் தாக்கம்...

லக்ஷ்மியம்மாவுக்கு ஒரே ஒரு பெண் ரஞ்சிதா... அவள் தான் வெற்றியின் அன்னை... அரசு கூடப் பிறந்தது அவனின் அக்கா தேன்மொழி மட்டுமே. இரு குழந்தைகளுக்குத் தந்தையான பின்பும் அவனின் அப்பாவிற்கு வேறு பெண்ணின் மீது காதல் வந்து அந்தப் பெண்ணைத்

திருமணம் செய்து கொண்டவன் அதன் பின் இவர்களுடனான தொடர்பை முற்றிலுமாகத் துண்டித்துக் கொண்டான்.

சமையல் வேலை செய்து மகளைத் திருமணம் செய்து கொடுத்த பெரியவள் நிம்மதியாய் இருந்த வேளையில்... திருமண உறவு முறிந்து மீண்டும் மகள் தன்னை நாடி வந்ததில் சற்று துவண்டு தான் போனார். ஆனாலும் தன்னம்பிக்கை இழந்து விடவில்லை.

தன்னால் இயன்றளவு உழைத்து மகளின் குடும்பத்தைக் காப்பாற்றினார். இதற்கிடையில் ரஞ்சிதாவிற்கு வெளிநாட்டில் வீட்டு வேலை செய்யும் வாய்ப்பு கிடைக்க அவர் அங்கே சென்றார். பேரக்குழந்தைகளின் எதிர்காலம் முன்னிட்டு மகளை அனுப்பி வைத்தார் லக்ஷ்மியம்மா.

பத்து வருடங்களுக்கும் மேல் ரஞ்சிதா அங்கே வேலை பார்த்தார். அதில் வந்த வருமானத்தில் தேன்மொழியின் திருமணத்தை நல்லபடியாக நடத்தி முடித்தார். எல்லாம் நன்றாகச் சென்று கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று எதிர்பாராத விதமாக ரஞ்சிதா வேலை செய்த ஊரிலேயே விபத்தில் இறந்து போய்விட... இங்கே இவர்கள் அனைவரும் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க...

நல்லவேளையாக அவர் வேலை செய்த வீட்டின் தலைவர் தான் அவரின் உடல் இங்கே கொண்டு வருவதற்கு எல்லா உதவியும் செய்தார். ரஞ்சிதாவின் இறுதி கிரியைகள் நடைபெறும் வரை உடனிருந்தவர்... போகும் போது கணிசமான தொகையை லக்ஷ்மியம்மாவின் கையில் கொடுத்து சென்றார்.

அவர் தன் பேரன், பேத்தி இருவருக்கும் அந்தத் தொகையைப் பிரித்துக் கொடுக்க... தேன்மொழி தன் பங்கு பணம் அனைத்தையும் தன் தம்பிக்கே கொடுத்தாள். அவளின் கணவன் தாஸும் அதையே ஆமோதித்தான்.

“தம்பி... நீ ஏதோ தொழில் செய்யணும்ன்னு சொல்லிட்டு இருந்தியே... அதை இதை வைத்து ஆரம்பி... நீ நல்லா

தமிழ் நாவல்

வந்ததும் எனக்கு என்ன செய்ய நினைக்கிறாயோ அதைத் திருப்பிச் செய்... அப்போது நான் அதை விரும்பி வாங்கிக் கொள்கிறேன்" அவளின் அன்பில் அரசு நெகிழ்ந்துவிட்டான்.

அந்நேரம் அவன் எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் தான் இருந்தான். அதில் சகோதரி கூறிய வார்த்தைகள் அவனை வெறியோடு செயல்பட வைத்தது. அவள் சொன்னதைப் போல் அந்தப் பணத்தை வைத்து அவன் ஆரம்பித்தது தான் தரகு தொழில். அதையே மெல்ல மெல்ல விரிவுபடுத்தினான். தொழில் நன்றாகப் போகவும் கூடவே அக்காவின் கணவர் தாஸையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்.

உள்நாட்டில் கிடைக்காத பொருள்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து கொடுத்தான். அதில் கணிசமான லாபமும் கிடைத்தது. பின்பு அந்தப் பொருட்களைத் தானே தயாரிக்க ஆரம்பித்தான். அதிலும் அவன் முன்னேற்றம் காண... அதிலிருந்து அவனின் வாழ்க்கை ஏறுமுகம் தான். அது இன்றுவரை தொடர்கிறது.

"அரசு..."

பழைய நினைவுகளில் இருந்து வெளியில் வந்த லக்ஷ்மியம்மாவின் கைகள் அவனின் கன்னத்தை அன்பாய் வருடியது. அந்தக் கைகளில் தென்பட்ட சொரசொரப்புகள் அவரின் உழைப்பின் அளவை அவனுக்கு உணர்த்தியது. அந்தக் கைகளுக்கு மரியாதை செய்வது போல் அவரின் உள்ளங்கையில் முத்தமிட்டான் பேரன்.

"இன்னைக்கு என்ன நேரமே எழுந்துட்ட..." அவர் கேட்கவும் தான் அவனுக்குமே இன்று தன் கல்யாணநாள் என்பதே ஞாபகம் வந்தது.

"ஒரு வேலை விசயமா நான் கண்டி வரை போகணும் அம்மாயி..." அவரின் முகம் பார்க்காமல் அவன் சொன்னான்.

தன் அருமை பாட்டிக்குத் தெரியாமல் தான் திருமணம் செய்து கொள்வது அவனுக்குமே குற்றவுணர்ச்சியை அதிகப்படுத்தி இருந்தது. பாட்டிக்கு மட்டுமா தெரியாது... அவனின் அக்காவிற்கும் தான் அது தெரியாது. அவள் தன் குடும்பத்தினருடன் வெளிநாட்டிற்குச் சுற்றுலா சென்றிருந்தாள். அதனால் தான் அவன் வேண்டுமென்றே தான் தன் திருமணத்திற்கு இந்தத் தருணத்தைத் தேர்ந்தெடுத்தது.

“ஓ சரிப்பா...” என்றவர், “சாப்பிட்டு விட்டு தானே போவே?”

“இல்லை... போற வழியில் பார்த்துக்கிறேன்...”

தான் இருக்கும் மனநிலையில் உணவு உள்ளே செல்லுமா? என்று அவனுக்குமே தெரியவில்லை. அந்தளவுக்கு மனம் பரபரப்புற்று இருந்தது.

“இதுக்குத் தான் காலாகாலத்தில் திருமணம் செய்துக்கச் சொல்றது... என்னிடம் சொல்ற மாதிரி அவளிடம் சொல்ல முடியுமா? உன் காதை திருகி அவள் உன்னைச் சாப்பிட செய்துவிட மாட்டாள்?” அவரின் பேச்சில் அவனையும் அறியாமல் அவன் மனக்கண்ணில் அல்லியின் முகம் வந்து போனது.

‘அவள் அப்படி நடந்து கொள்வாளா...?’ என்ற கேள்வி அவனுள் எழுந்து அது அவனிடத்தில் இருந்து பெருமூச்சை கிளப்பியது.

“இப்போ உங்களுக்கு என்ன... நான் கல்யாணம் பண்ணி கொள்ளணும் அவ்வளவு தானே... நான் கண்டியில் இருந்து திரும்பி வரும் போது என் மனைவியோடு வருகிறேன்... நீங்க ஆரத்தி கரைத்து வைத்து அவளை வரவேற்க ரெடியா இருங்க...” கிண்டல் போல் அவன் நடப்பை அவருக்குச் சொல்லி அவரின் மனநிலையைக் கணிக்க முயன்றான்.

“முதல்ல அதைச் செய் அரசு... அப்படியாவது உனக்குக் கல்யாணம் நடந்தா சரி...”

தமிழ் நாவல்

அவர் சொல்லிவிட்டு கீழே செல்லவும்... அவனின் மனம் வருத்தமுற்றது. எல்லாம் ஒரு கணம் தான்... பின் தன் மனதை சமன் செய்தவன் தன் திருமணத்திற்குக் கிளம்பலானான்.

தயாராகிக் கீழே வந்தவன் அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த பாட்டியின் அருகில் வந்து, "நான் போயிட்டு வர்றேன் அம்மாயி..." என்றபடி அவரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க...

"நல்லாயிருப்பா... நீ போற காரியம் நல்லபடியா முடியும் அரசு..." அவன் ஏதோ தொழில் ரீதியாகச் செல்கிறான் என்று அவர் ஆசிர்வதிக்க...

"தேங்க்ஸ் அம்மாயி..." என்றவன் கையில் காரின் சாவியைச் சுழற்றிக் கொண்டு ஒரு அடி எடுத்து வைத்தவன் பின்பு திரும்பி அவரிடம்,

"நீங்க சொல்லியது அப்படியே தானே இருக்கு?"

"எது அரசு...?" அவர் யோசிக்க...

"அதான்... என் மனைவியை ஆரத்தி கரைத்து வரவேற்பது பத்தி..." அவன் சிரிக்காமல் கேட்க... அவரோ அவன் விளையாட்டுக்கு பேசுவதாய் நினைத்துக் கொண்டு,

"விளையாடாமல் கிளம்பு அரசு..." என்று சிரித்தபடி அவர் விடை கொடுக்க... அவனும் ஒன்றும் பேசாமல் சிரிப்பையே பதிலாகத் தந்துவிட்டு அங்கிருந்து அகன்றான்.

"விளையாட்டு பிள்ளை..." சொல்லியவர் தனக்குள் சிரித்துக் கொண்டார். அந்த விளையாட்டு பிள்ளை செய்யப் போகும் விபரீத காரியத்தை மட்டும் அவர் அறிந்தால்...?

****

அசூர வேகத்தில் காரை ஓட்டி கொண்டு வந்தவன் வழக்கமாய்ச் செல்லும் நேரத்தை விட வெகு சீக்கிரத்தில் கண்டியை அடைந்துவிட்டான். அங்குள்ள ஒரு ஹோட்டலில் தனது உடையைக் களைந்து விட்டு பட்டு வேஷ்டி, சட்டை

மாற்றிக் கொண்டவன் நேரே திருமணம் நடக்கும் கோவிலுக்குச் சென்றான். அங்கே அவனுக்காகப் பரபரப்புடன் காத்திருந்த பரமேஷ்வரை கண்டதும் அவனின் இதழ்கள் ஏளனமாய் வளைந்தது.

“என்ன வெ...” அவனை ‘வெற்றி’ என்றழைக்க வந்தவர் அப்படியே அதை நிறுத்திவிட்டு,

“மாப்பிள்ளை நீங்களே இப்படி லேட்டா வந்தா எப்படி? நேத்தே நீங்க இங்கே வந்திருக்க வேண்டாமா?” அவனைக் காணாது தவித்த அவரின் மனம் அதில் புலப்பட்டது.

“முஹூர்த்தம் பத்து மணிக்கு தானே... இப்போ மணி ஒன்பது தான் ஆகிறது. அப்படிப் பார்த்தாலும் நான் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே வந்துவிட்டேனே” அவரின் தவிப்பை கொஞ்சமும் உணராது அவன் அலட்சியமாய்ப் பேச...

அவனின் பேச்சை கேட்ட அவரின் மனம் துணுக்குற்றது. அவர் அறிந்த வெற்றி இப்படியெல்லாம் பேச மாட்டான். அவன் அப்படிப் பேசியது கண்டு அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

‘மாப்பிள்ளை என்று ஒரு சிறு துரும்பை கிள்ளி போட்டால்... அது கூடப் பந்தா காட்டும்... இவன் காட்டுவதற்கு என்ன?’ தன்னைத் தானே சமாதானப்படுத்தியவர் அவனை அழைத்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்தார்.

பரமேஷ்வர் தனக்கு முக்கியமான உறவினர்களையும், நண்பர்களையும் மட்டுமே அழைத்திருந்தார். அவன் தான் அதிகமாய் யாரையும் அழைக்க வேண்டாம் என்று கூறிவிட்டான். ஐந்து நாட்களுக்குப் பின் கொழும்பில் நடக்கும் வரவேற்பிற்கு அனைவரையும் அழைக்கலாம் என்று அவன் கூறிவிட அவராலும் அதை மறுத்து பேச முடியவில்லை. ஏனெனில் அவன் சார்பாக யாரும் வரவில்லை. அதனால் அவரும் யாரையும் அழைக்கவில்லை.

தமிழ் நாவல்

அவனின் அக்கா சுற்றுலா சென்றிருப்பதும், அவனின் பாட்டி உடல்நல குறைவால் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து வர முடியாது என்பதும் அவன் வாயிலாக அவருக்கு ஏற்கெனவே தெரியும். அதனால் அதைப் பற்றி அவர் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. அப்படிப் பெரிதாக எடுத்து கொண்டாலும் தன் மனதின் எண்ணங்களை வெளியிடும் நிலையில் தான் இல்லை என்பதை அவர் உணர்ந்து தான் இருந்தார்.

மணவறையில் அமர்ந்து அய்யர் சொன்ன சடங்குகளைச் செய்து கொண்டிருந்தவன் கண்கள் தீங்கங்கு போல் பளபளப்பாய் ஜொலித்தது. இந்தப் பத்தாண்டுகளாய் அவன் மனதில் கனன்று கொண்டிருந்த வெம்மை இன்று அல்லியின் கழுத்தில் அவன் கட்ட போகும் தாலியினால் தணிய போகிறது. இதைச் செய்து முடிக்க அவன் என்ன என்ன காரியம் செய்ய வேண்டியது இருந்தது. தனக்குள் உழன்று கொண்டிருந்தவன் தன்னருகில் வந்தமர்ந்த அல்லியின் அருகாமையில் நடப்புக்கு வந்தான்.

காலையில் எழுந்ததில் இருந்து அல்லிக்கு இருந்த பதட்டம் இப்போது அவனின் அருகில் அமர்ந்ததும் இன்னமும் அதிகரித்தது. அவள் மனதிலிருந்த அவன் மீதான கோபத்தால் அவனின் முகத்தை நிமிர்ந்து பார்க்க கூட அவள் விருப்பப்படவில்லை. ‘என் மனம் அறியாது கட்டாயத் தாலி கட்டும் இவன் எப்படியிருந்தால் எனக்கென்ன?’ என்ற விரக்தி மனநிலையில் அவள் இருந்தாள்.

அந்நேரம் அய்யர் அவனின் கையோடு அவளின் கை சேர்த்து வைத்து சில சடங்குளை செய்யச் சொல்ல... நடுக்கத்துடன் அவனின் கையோடு தன் கையைச் சேர்த்தாள் அவள். அப்போது தான் அவள் அதைக் கவனித்தாள்... அவனின் சிவந்த கையோடு... அவளின் மாநிறமான கை சற்று மட்டுப்பட்டுக் காணப்பட்டதை...

‘கையே இவ்வளவு நிறம் என்றால்... முகம்? இவ்வளவு நிறமுடையவன்... அவனுக்குச் சற்றும் பொருத்தமில்லாத என்னை எதுக்காகத் திருமணம் செய்ய வேண்டும்?’

திகைப்படைந்தவள் அவனின் முகத்தை ஏறிட்டு பார்த்தாள். அவளின் பார்வையை உணர்ந்தவனாய் அவனும் அவளைப் பார்த்தான்.

அவனின் முகத்தைப் பார்த்தவள் அப்படியே அதிர்ந்து தான் போனாள். அவளின் முகத்தைப் பார்த்து கொண்டிருந்தவன் கண்ணில் தோன்றிய ஆவல்... அவள் முகம் காட்டிய அதிர்ச்சியில் உடனே மறைந்து போக... உணர்ச்சியற்ற பார்வை ஒன்றை அவள் மேல் பதித்தான்.

“எல்லோரும் நம்மைத் தான் பார்க்கிறார்கள்...” அவள் காதருகே குனிந்து சொன்னவன் திருமணச் சடங்குகளில் தன் கவனத்தைச் செலுத்தினான்.

அவனை மாதிரி அவளால் சட்டென்று தன் உணர்வுகளை மறைத்துக் கொள்ள முடியவில்லை. அவள் மனதில் அவனின் முகம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் அவனின் சிவந்த முகம் முழுவதும் ஆங்காங்கே தழும்புகள் கருப்பு புள்ளிகளாகவும், கோடுகளாகவும் நிறைந்து அவனின் அழகிய முகத்தை அலங்கோலமாய் மாற்றியிருந்தது.

‘இதுக்குத் தான் அப்பா... இவனின் ஃபோட்டோவை எனக்குக் காண்பிக்கவில்லையா? இவனின் முகம் இப்படி இருப்பதால் தான் இவனுக்குப் பெண் கிடைக்காமல்... பணத்தைக் காட்டி என்னை மணக்கிறானோ? தான் அழகில்லாமல் இருப்பதால் தான்... என்னை மாதிரி நிறம் குறைவான பெண்ணை மணக்கிறானோ? கடவுளே... இது என்ன சோதனை? மனப்பொருத்தம் மட்டுமல்ல வேறு எந்தப் பொருத்தமும் இல்லாத இந்தத் திருமணம் அவசியம் தானா?’

மனதுக்குள் புலம்பியவளுக்கு அப்படியே அங்கிருந்து எழுந்து ஓடி விடலாமா? என்று கூடத் தோணியது. பெற்றோரின் கவலை தோய்ந்த முகம் கண்ணில் வலம் வர அவள் தன் முடிவை மாற்றிக் கொண்டாள்.

தமிழ் நாவல்

‘இந்த ஜென்மத்தில் இவன் தான் என் கணவன் என்று அந்த இறைவன் முடிவெடுத்து இருக்கையில் நான் மட்டும் போராடி என்ன செய்ய முடியும்?’ விரக்தியாய் நினைத்தவள் கழுத்தில் அவனின் கரங்கள் மங்கலநாணை பூட்டியது. அவளையும் அறியாமல் அவளின் கண்களில் இருந்து கண்ணீர் சொட்டியது.

அதை யாரும் அறியாத வண்ணம் நாசுக்காய் அவள் துடைத்து கொள்வதை அவனும் கவனித்துக் கொண்டிருந்தான். அவளின் கண்ணீர் அவனின் இதயத்தைச் சுட்டு அவனின் மனதை இளக்கினாலும்... அதற்காகப் பெரிதாக அவன் அலட்டி கொள்ளவில்லை. எதையோ சாதித்து விட்ட மனோபாவத்தில் வெற்றி பெருமிதத்துடன் அவன் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

பரமேஷ்வர் – பொற்கொடி தம்பதியருக்கு மகளின் திருமணம் நிறைவாய் நடந்து முடிந்ததில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தனர். அதிலும் பரமேஷ்வர் மகள் முரண்டு பிடிக்காமல் திருமணம் செய்து கொண்டதை நினைத்து நிம்மதியுற்றார். மாப்பிள்ளையையும், பெண்ணையும் வீட்டிற்கு அழைத்து வந்து பாலும், பழமும் கொடுத்து உபசரிக்க... அவனோ அதை இயல்பாய் ஏற்றுக் கொள்ள... அவளோ அவனின் அருகாமையில் அவஸ்தையில் நெளிந்தாள். வந்திருந்த உறவினர்களும், நண்பர்களும் கொஞ்சம் கொஞ்சமாய் விடை பெற்று போக... மீதமிருந்தது இவர்கள் நால்வர் மட்டுமே.

“அம்மா... எனக்குத் தலைவலிக்கிற மாதிரி இருக்கு... நான் ரெஸ்ட் எடுக்கப் போறேன்...” அன்னையிடம் கூறியவள் அவனைத் திரும்பியும் பாராமல் தனது அறையை நோக்கி நடந்தாள்.

“காலையில் எழுந்தது பிடிக்காமல் போயிருக்கும்...”

மகளின் செயலுக்கு விளக்கம் கூறுவது போல் பொற்கொடி அவனுக்குக் கூறினார். அவனோ அதைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை. அவனின் முகம் பாறை போல் இறுகி கடினமாய்க் காணப்பட்டது.

“மிசஸ் & மிஸ்டர் பரமேஷ்வர்...”

அந்த வரவேற்பறையில் நிலவிய அமைதியை கிழித்துக் கொண்டு அவனின் குரல் கம்பீரமாய் ஒலித்தது. அவனின் அழைப்பில் கணவன், மனைவி இருவரின் மனமும் துணுக்குற்றது.

“பத்து வருசத்துக்கு முன்பு இதே ஹாலில் ஒருத்தனிடம்... என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு என்ன தகுதி இருக்குன்னு கேட்டீங்களே ஞாபகமிருக்கா?” அவனின் பேச்சில் திடுக்கிட்ட இருவரும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்து கொண்டனர்.

“நீ... நீ... நீங்க...?” ஒரே மாதிரி கேட்டவர்களின் குரல் திக்கி திணறியது.

“நானே தான்... அதே அரசு தான்...”

முகத்தில் கர்வத்தைத் தேக்கி பெருமையாய் கூறியவனைக் கண்டு இருவருக்கும் கண்கள் இருட்டி கொண்டு வருவது போல் இருந்தது. பரமேஷ்வர் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்காகச் சோபாவில் சாய்ந்தமர்ந்தார். நின்று கொண்டிருந்த பொற்கொடியோ நிற்க முடியாமல் கால்கள் துவள... கணவர் அருகில் அமர்ந்து சோபாவின் கைப்பிடியை இறுக பற்றிக் கொண்டார்.

அவர்கள் இருவருக்கும் இப்போது அவனை நன்கு அடையாளம் தெரிந்தது. அன்று நெடுநெடுவென்று உயரத்துடன் ஒல்லியாய் சிவந்த நிறத்தில் சாதாரண உடையில் பார்க்க பாவமாயிருந்த அரசுவா இவன்? என்று அவர்களுக்குத் திகைப்பாய் இருந்தது. இன்று உயரத்திற்கு ஏற்ற உடல்வாகுடன் பணத்தின் செழுமை அவனின் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் பிரதிபலிக்க அவன் ஆளே முழுமையாய் மாறியிருந்தான். அதிலும் முகத்தை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கலாம் என்றால்... அதிலிருந்த தழும்புகள் அவனின் அடையாளத்தை முற்றிலுமாய் மாற்றியிருந்தது.

தமிழ் நாவல்

இந்தத் தழும்புகளை அவனுக்குக் கொடுத்தவர்கள் அவர்கள் அல்லவா... அதை அவர்களால் மறுக்கவும் இயலாது... மறைக்கவும் இயலாது. ஆனால் அதற்காக இன்று வேதனைப்பட்டனர்... அந்தத் தழும்பினால் தானே அவனை அவர்களால் அடையாளம் காண முடியவில்லை... அதனால் தானே அவர்களின் அருமை மகளின் வாழ்வு சிக்கலாகி போயிற்று.

“என்னடா அன்னைக்குப் பிச்சைக்காரனாய் இருந்த அரசு... இன்று எப்படிக் கோடீஸ்வரன் ஆனான் என்று தானே யோசிக்கிறீங்க...?” அவனே கேள்வி கேட்டுக் கொண்டு அவனே பதிலையும் சொன்னான்.

“அன்னைக்கு நீங்க பேசிய பேச்சு, நீங்க எனக்குச் செஞ்ச செயல் எல்லாம் தான் இன்னைக்கு என்னைக் கோபுரத்தின் உச்சியில் ஏற்றி வச்சிருக்கு... அந்த வகையில் நான் உங்களுக்கு நன்றி சொல்லி தான் ஆகணும்...” நன்றியை கூட இவ்வளவு கேலியாய் சொல்ல முடியும் என்பதை அவனின் குரல் நிரூபித்தது.

“தகுதியில்லாத உனக்கு என் பெண்ணைக் கொடுக்க மாட்டேன்... என் பொண்ணே உன்னைக் காதலிச்சாலும் நான் உன்னை என் மாப்பிள்ளையா ஏத்துக்க மாட்டேன்... அதையும் மீறி நீங்க கல்யாணம் பண்ணிக்க நினைச்சா உங்க கல்யாணத்தை நான் நடத்த விட மாட்டேன்...” சொல்லி கொண்டே போனவன் அவரைக் கூர்மையாய் பார்த்தவாறு,

“இந்த டயலாக் எல்லாம் எந்தப் படத்து டயலாக்ன்னு ரொம்ப யோசிக்காதீங்க... பத்து வருசத்துக்கு முந்தி நீங்க என்னைப் பார்த்து பேசிய அதே வசனம் தான்... ஒரு வார்த்தை கூட மாறல... நல்லா ரீவைன்ட் பண்ணி பாருங்க...” நக்கலாய் சொல்லியவன்...

“அதே சமயம் நான் உங்களுக்குச் சொன்ன பதிலும் உங்களுக்கு ஞாபகம் வந்திருக்குமே...” அவன் சொல்லும் போதே அன்று அவன் பேசியது அவர்களின் ஞாபகத்தில் வந்தது.

“நீங்களே என்னை மாப்பிள்ளையாய் ஏத்துக்கிட்டு உங்க பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பீங்க... அதேமாதிரி உங்க பொண்ணை என்னைக் காதலிக்க வைத்தே தீருவேன்...” ரத்தம் தோய்ந்த முகத்துடன் அவன் கூறிக் கொண்டே மயங்கி சாய்ந்தது அவர்களின் மனக்கண்ணில் படமாய் ஓடியது.

அதை நினைத்து பார்த்த இருவரும் மேற்கொண்டு ஒன்றும் பேச முடியாமல் வாயடைத்து போயினர். தண்ணீர் பாம்பு என்று அன்று அவர்கள் அலட்சியமாய் அடித்துப் போட்ட பாம்பானது... இன்று படமெடுக்கும் நல்ல பாம்பாய் மாறி அவர்களைக் கொத்தியே தீருவேன் என்று அவர்கள் முன் சீறி கொண்டிருப்பதைக் கண்டு அச்சத்தில் நிலைக்குலைந்து போயினர்.

“இன்னைக்குத் தான் என் சபதம் ஜெயிச்சு நான் சந்தோசமா இருக்கிறேன்... என்ன அதுல ஒண்ணே ஒண்ணு மட்டும் தான் என்னால் செய்ய முடியல... உங்க பொண்ணை என்னைக் காதலிக்க வைக்க முடியல... அதுக்கு எனக்கு நேரமும் இல்லை... இப்போ அதுக்கு அவசியமும் இல்லை. நீங்க வாங்கிய கடனுக்கு உங்க மகளை எனக்குக் கட்டி கொடுத்துட்டீங்க... அதோட நம்ம பிசினெஸ் டீலிங் முடிந்தது.”

“இனிமேல் கொண்டு உங்க பெண்ணைப் பார்ப்பதற்கோ இல்லை வேறு எதற்காகவும் என் வீட்டு வாசல் நீங்க மிதிக்கக் கூடாது. அப்படி என் வீட்டு வாசப்படி நீங்க மிதிச்சாலோ இல்லை... எங்களுக்குள் குழப்பம் விளைவிக்க நினைத்தாலோ நான் கையைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். நீங்க கையெழுத்து போட்டுக் கொடுத்த பத்திரங்கள் இன்னமும் என்னிடம் பத்திரமா தான் இருக்கு” ஆள் காட்டி விரல் நீட்டி அவர்களை அவன் எச்சரிக்க...

“என்னங்க... கடன் அது இதுன்னு ஏதேதோ சொல்றாரு... எல்லாம் உண்மையா?” பொற்கொடி கணவரிடம் கேட்க... அவரோ பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்தார்.

தமிழ் நாவல்

“சபாஷ்... உண்மையில் நீங்க ஒரு நல்ல அம்மா தான். இங்கே உங்க பெண்ணின் வாழ்க்கையே ஊஞ்சலாடி கொண்டிருக்கு... நீங்க உங்க சொத்து, கடனை பத்தி மட்டும் தான் பேசுறீங்க? நீங்க இன்னமும் மாறல அப்படித் தானே...” இளக்காரமாய்ச் சொன்னவன்,

“நீங்க எக்கேடோ கெட்டு போங்க... எனக்கு உங்களைப் பத்தி ஒரு கவலையும் இல்லை. நான் என் மனைவியைக் கூட்டிட்டு கிளம்பறேன்...” என்றவன் அவளின் அறையை நோக்கி நடக்க...

பதட்டத்துடன் பொற்கொடி அவனின் பின் செல்ல... பரமேஷ்வரும் அவரின் பின்னே யோசனையாய் சென்றார்.

அவள் அறைக் கதவை தாளிடாமல் இருந்ததால் அவன் கை வைத்ததுமே அது திறந்து கொண்டது. ஜன்னல் புறம் நின்று வெளியில் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தவள் கதவு திறக்கும் ஒலியில் திரும்பினாள். அங்கே அவனைக் கண்டதும் திடுக்கிட்டவள் முகத்தைச் சுருக்கினாள்.

“கிளம்பு போகலாம்...”

எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவன் சொல்ல... அவளோ அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த தன் பெற்றோரை பார்த்தாள்.

“அவனுடன் போக வேண்டாம் பேபிம்மா... அவன் பழி தீர்க்கவே உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கான். அவன் நல்லவன் இல்லை...” பொற்கொடி மகளைத் தடுக்கும் போதே...

“ஏன் பழி தீர்க்க எண்ணுகிறேன்னு அதையும் அவள் கிட்ட நீங்களே சொல்லியிருங்க... எனக்கு வேலை மிச்சம்...” அலட்சியமாய் அவன் சொல்ல...

அவன் அப்படிச் சொல்லவும் பொற்கொடி என்ன பேசுவது என்று தெரியாமல் அப்படியே நின்றுவிட்டார். அவளோ இவர்கள் பேசுவது புரியாமல் விழித்தாள்.

“வா...” அவளைப் பார்த்து கூறியவன் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்ல முற்பட்டான். அதுவரை அமைதியாய் இருந்த பரமேஷ்வர்,

“நீ கொடுத்த பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்... என் மகளை விட்டுவிடு” அவனின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச...

‘அவளைக் கைவிடுவதற்கா கல்யாணம் பண்ணிக் கொண்டேன்... பெரிய மனிதராய் இருந்து கொண்டு பேசுகிற லட்சணத்தைப் பார்...’ மனதுக்குள் எரிச்சலாய் நினைத்தவன்,

“அப்படியென்றால் வட்டியும் முதலுமாய் உங்க பணம் எல்லாவற்றையும் செட்டில் பண்ணிட்டு உங்க பெண்ணைக் கூட்டிட்டு போங்க... அதுவரை அவள் என் மனைவியாய் என் வீட்டில் இருக்கட்டும்”

அவனின் வார்த்தையில் அவளின் உடல் அதிர்ந்தது. மறுநொடி அவள் நிமிர்ந்து அவனை ஒரு பார்வை பார்த்தவள் பெற்றோரிடம்,

“அப்பா, அம்மா எல்லாம் தெரிந்து தானே நான் கல்யாணத்துக்குச் சம்மதித்தேன்... இப்போ ஏன் இவ்வளவு யோசிக்கிறீங்க...? என் வாழ்கையைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும். என்னைப் பத்தி நீங்க வீணே கவலைப்படாதீங்க...” அவள் தன் பெற்றோரை சமாதானப்படுத்த...

“பேபிம்மா... உனக்கு உண்மை நிலவரம் என்னன்னு தெரியாது” பொற்கொடி சொல்லும் போதே...

“எதுவாக இருந்தாலும் நடந்து முடிந்ததை யாராலும் மாற்ற முடியாதும்மா... நான் போகிறேன்...”

பணத்துக்காகத் தான் இந்தத் திருமணம் நடந்ததைத் தான் அவர் சொல்கிறார் என்று அவள் தவறாகப் புரிந்து கொண்டு அவள் தாய்க்கு பதிலளித்தாள். ஆனால் பொற்கொடி சொல்ல வந்ததோ வேறு... அவள் புரிந்து

கொண்டதோ வேறு... இங்கேயும் விதி அவளுக்கு எதிராய் சதி செய்ததோ?

பின் தன் தந்தையிடம் திரும்பியவள், “அப்பா நீங்க பணத்தோடு வந்து என்னை மீட்டெடுக்கும் நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்... அந்த நாள் சீக்கிரம் வர வேண்டும் என்று தான் இனி அந்தக் கடவுளிடம் நான் வேண்டி கொள்ளப் போகிறேன்”

அவனை வெறுப்பாய் பார்த்தவாறு சொன்னவளை கண்டு அவன் முகம் இறுகியது. அவளின் கையை விட்டு விட்டு விடுவிடுவெனக் கீழே இறங்கியவன் நேரே தன் காரிலேறி அவளுக்காகக் காத்திருந்தான்.

“கவலைப்படாதீங்க...” இருவருக்கும் பொதுவாய் கூறியவள் தன் அறையை விட்டு வெளியேறினாள்.

“என்னங்க... அவளிடம் உண்மையைச் சொல்லி...” என்ற மனைவியைக் கையமர்த்தித் தடுத்தவர்,

“உண்மையைச் சொன்னால்... உன் மகள் அவன் பக்கம் தான் நிற்பாள்... நாம் நம் மகளின் அன்பை இழக்க நேரிடும் பரவாயில்லையா?” அவர் கேட்டதும் சட்டென்று பொற்கொடி அமைதியானார்.

மகளை வழியனுப்புவதற்காக இருவரும் வெளியில் வந்தனர். அவள் இன்னமும் கிளம்பாமல் வரவேற்பறையில் நின்று கொண்டு வீட்டை சுற்றி தன் கண்களைச் செலுத்தி கொண்டிருப்பதை இருவரும் கண்டனர். பிறந்த வீட்டை பிரியும் துக்கம் அவள் கண்களில் தெரிந்தது. அவளின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்டு அவர்கள் இருவரும் அவளை ஆறுதலாய் அணைத்து கொண்டனர். வேலையாளை வைத்து அவளின் பொருட்களை எடுத்துவர சொன்னவர்கள் மகளை அழைத்துக் கொண்டு வாயிலுக்கு வந்தனர்.

அவளின் உடமைகளை வேலை செய்பவர்கள் எடுத்து வருவதைக் கண்டவன் அவசரமாய்க் காரிலிருந்து

இறங்கினான். “கட்டிய புடவையுடன் நீ வந்தால் போதும்” தன்னைப் பார்த்து முகம் இறுக சொன்னவனை... இளக்காரமாய்ப் பார்த்தவள்,

“அப்போ இந்த நகைகள் எல்லாம்...?” தான் கழுத்தில் அடுக்கடுக்காய் அணிந்திருந்த தங்க, வைர நகைகளைச் சுட்டி காண்பிக்க...

“இது ஒண்ணும் உன் அப்பன் சம்பாத்தியத்தில் வாங்கவில்லை. அதெல்லாம் நான் என் பணத்தில் வாங்கியது. அதனால் நீ தாராளமாய்ப் போட்டுக் கொண்டு வரலாம்”

அவளை விட ஏளனமாய்க் கூறியவன் அவளை நக்கலாய் ஒரு பார்வை பார்த்தான். அவனின் பார்வையில் அவள் முகம் சிறுத்துப் போனது. அதைக் கண்டு அவன் மனம் வருத்தமுற்றது.

‘இது தேவையா உனக்கு? பேசாமல் சொல்வதைச் செய்வதற்கு என்ன? ஏன் தேவையில்லாமல் பேசி வாங்கிக் கட்டி கொள்கிறாய்...? இது உன் பெற்றோருக்கும் எனக்கும் நடக்கும் பனிப்போர்... நீ பேசாமல் வேடிக்கை மட்டும் பார்த்தால் உனக்கு நல்லது... இல்லை வீணாய் மன வருத்தம் தான் உனக்கு நேரிடும்...’ மனதுக்குள் நினைத்தவன் அவளிடம் வாய்விட்டு சொல்லவில்லை.

“பேபிம்மா...” என்று கட்டி கொண்டு அழுத பெற்றோரை தேற்ற அவளால் முடியவில்லை.

தன் நிலையை எண்ணி மனதுக்குள் நொந்து கொண்டாள். எல்லாமுமாய்ச் சேர்த்து அவன் மீது தான் அவளுக்கு ஆத்திரம் வந்தது.

“ஓவராய் சீன் போட வேணாம்... கிளம்பு” உரக்க கூறியவன் காரிலேற...

அவனை முறைத்தவாறு அவளும் ஏறியமர்ந்தாள். கண்களை விட்டு பெற்றோரின் உருவம் மறையும் வரை

அவர்களைப் பார்த்து கையாட்டி கொண்டு வந்தவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

“போதும்... போதும்... கழுத்தும், கையும் சுளுக்கி கொள்ளப் போகிறது” கிண்டலாய் அவன் சொல்ல... அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள் அவள்.

“இது என் கழுத்து, என் கை... அது சுளுக்கினால் உனக்கு என்ன?” வெடுக்கென்று அவள் கேட்க...

“காலையில் கல்யாணமான புதுப் பெண்... தாலி கட்டிய புதுக் கணவனிடம் இப்படிக் கேட்டால் எப்படி? இன்றைக்கு இரவு உன் சேவை எனக்கு அவசியம் தேவைம்மா... இதில் கழுத்து சுளுக்கு... கை சுளுக்குன்னு அதில் ஏதேனும் தடை வந்துவிட்டால்... சின்னப் பையன் நான் ரொம்பவே ஏமாந்து போய்விடுவேன்... ஒரு சின்னப் பையனை ஏமாத்திய பாவம் உன்னைச் சும்மா விடாது...”

அவன் இலகுவாய் கேலி பேசிய விதம் அவளை ஆச்சிரியத்துடன் புருவத்தைத் தூக்க வைத்தது. மறுநொடி அவனின் பேச்சின் அர்த்தம் புரிந்தவளுக்குக் கோபத்தில் முகம் சிவந்தது.

“சேவை தானே செஞ்சிட்டா போச்சு...”

ஒவ்வொரு வார்த்தைக்கும் அழுத்தம் கொடுத்து மொழிந்தவள் அவனைப் பார்க்க விருப்பம் இல்லாமல் தன் பார்வையை வெளிப்புறம் திருப்பிக் கொண்டாள். அதற்கு மேல் அவனும் பேச விரும்பவில்லை.

****

கொழும்பை நோக்கி சென்று கொண்டிருந்த காரில் மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது. முன்பு கொழும்பு செல்லும் போது ஆட்டமும், பாட்டமுமாய்த் தான் செய்த பயணங்களை நினைத்து பார்த்தவளுக்கு மனதுக்குள் துக்கம் பொங்கியது. ஏதேதோ எண்ணங்களில் மூழ்கியிருந்தவள் அப்படியே உறங்கி போனாள்.

“அம்மாயி...” அவனின் குரலில் உறக்கம் கலைந்தவள் அப்போது தான் கவனித்தாள்... தாங்கள் கொழும்பு நகரத்திற்குள் நுழைந்து விட்டோம் என்று...

“அம்மாயி காலையில் சொன்ன சொல் அப்படியே தானே இருக்கு...” மறுமுனையில் என்ன சொன்னார்களோ?

“நான் என் மனைவியை அழைத்து வருகிறேன்... ஆரத்தியை கரைத்து வைத்து தயாராயிருங்க...”

“.....”.

“இல்லை அம்மாயி நான் விளையாடவில்லை... உண்மையா தான் சொல்கிறேன்...”
அவன் பேசும் போதே ஒரு வீட்டின் முன் தன் காரை நிறுத்தினான்.

“வீட்டின் முன் தான் இருக்கிறேன்... கதவை திறங்க...” அவன் சொல்லிவிட்டு அலைப்பேசியை அணைக்கும் போது கதவு திறந்தது.

“வா...” ஒற்றைச் சொல்லோடு அவன் அழைக்க...

அவன் அழைத்தால் தான் போக வேண்டுமா? என்று அவள் மனம் முரண்ட... அதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் அவன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்.

வீட்டின் வாயிலில் நின்றிருந்த லக்ஷ்மியம்மாவை கண்டதும் திகைப்பாய் அவனை நோக்கியவள், அடுத்த நொடி,

“ஆயாம்மா...” என்ற கூவலுடன் அவரை நோக்கி ஓடி வந்தவள் பெரிய கேவலுடன் அவரை அப்படியே அணைத்து கொண்டாள். அவளின் குரலில் ஆனந்தமும், அதிர்ச்சியும் சரிபாதியாய்க் கலந்திருந்தது.

தன்னை அணைத்துக் கொண்டு அழும் அந்தப் பெண்ணை லக்ஷ்மியம்மாவால் சட்டென்று யாரென்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும்... அவளின் “ஆயாம்மா...” என்றழைப்பே அவள் யாரென்று அவருக்குச் சொல்லாமல் சொல்லியது. இந்த உலகத்திலேயே அவரை ‘ஆயாம்மா’ என்று சொல்ல கூடியவள் ஒருத்தி மட்டுமே... அது அல்லிகொடி மட்டுமே...

“பேபிம்மா...”

அவர் சின்னவளின் முகத்தைப் பாசத்தோடு தடவி கொடுத்தார். அவர் அவளைப் பார்த்து எத்தனை வருடங்கள் ஆகிவிட்டது.

“அம்மாயி உள்ளே போய்ப் பேசிக்கலாம்...” பாட்டியிடம் சொன்னவன்,

“வர்ஷினி... இப்படியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி? சீக்கிரம் ஆரத்தி எடு...” அவன் வேலை செய்யும் பெண்ணிடம் உத்தரவிட...

அவனின் குரலிலிருந்த கடுமையில் அந்த வர்ஷினி வேகமாய் ஆரத்தி சுற்றிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

“என்ன அப்படியே நின்னுக்கிட்டு இருக்க? வலது காலை எடுத்து வைச்சு உள்ளே வா...” அல்லியை பார்த்து சொல்லியவன் அவளின் கைப்பிடித்து அழைத்தான். அவளோ அசையாமல் அழுத்தமாய் அங்கேயே நின்றாள்.

“வாம்மா...”

லக்ஷ்மியம்மா அவளை அன்போடு அழைக்கவும் வேறுவழியில்லாமல் உள்ளே வந்தவள்... அவரையும் அவனையும் மாறி மாறி பார்த்தாள். அவளின் முகம் குழப்பத்தைத் தத்தெடுத்து இருந்தது.

“ஆயாம்மா... இவன் உங்க பேரன் அரசுவா?” அவரைப் பார்த்துச் சந்தேகமாய்க் கேட்டாள் அவள்.

ஏனெனில் அவரின் பேரன் அரசுவை அவள் ஏற்கெனவே பார்த்திருக்கிறாள். ஆனால் இவன் அவன் போலில்லையே... இல்லை லக்ஷ்மியம்மாவுக்கு வேறு பேரன் ஏதும் இருக்கிறானா? என்று அவள் குழம்பித்தான் போனாள்.

அல்லியின் பேச்சில் லக்ஷ்மியம்மா அதிர்ந்து தான் போனார். தன் பேரன் தான் அரசு என்று தெரியாமலா அல்லி திருமணம் செய்தாள்? என்ற கேள்வி அவருள் எழுந்து அவர் மிகவும் குழம்பி போனார். அவர்களின் திருமணம் என்ன மாதிரியான திருமணம் என்று அவரால் கணிக்க முடியவில்லை.

“ஏய்... அம்மாயியை ஆயாம்மா ஆயாம்மான்னு கூப்பிட்ட அப்படியே அறைஞ்சுடுவேன் அறைஞ்சு. என் அம்மாயி இன்னமும் உன் வீட்டில் வேலை பார்க்கல... அவங்க இந்த வீட்டின் ராணி... அதனால ஒழுங்கு மரியாதையா அவங்களைப் பாட்டின்னு கூப்பிடு...”

அவள் அவரை அப்படிக் கூப்பிடுவதால் அவனுக்குப் பழைய ஞாபகம் கிளர்ந்ததா? இல்லை அவளுக்குத் தான் தகுதியில்லை என்பதை அவனுக்கு அது உணர்த்தியதா? எதுவென்று தெரியவில்லை... பழையதை கிளறிவிடும் எந்தவொரு நினைவும், சொல்லும் வேண்டாமென்று அவன் நினைத்தான் போலும்.

அல்லியின் பேச்சில் அதிர்ந்து போயிருந்த லக்ஷ்மியம்மா பேரனின் பேச்சில் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

“டேய் அரசு ஏன் பேபிம்மாவை மிரட்டுகிறாய்? அவளுக்குப் பிடித்தது போல் என்னைக் கூப்பிடட்டும்” அவனை அதட்டிய லக்ஷ்மியம்மா,

“ஆமாம் பேபிம்மா... இவன் என் பேரன் அரசு தான்...” அவளிடம் சொல்ல...

அவள் யோசனையாய் அவனைப் பார்த்தாள். ஏனெனில் அவள் அறிந்த அரசு சினிமாவில் வரும் கதாநாயகன் போல் அழகாய் இருப்பான். அவ்வளவு அழகுடைய அவன் முகத்தில் இவ்வளவு தழும்புகள் எப்படி வந்தது? என்று அவளுக்குக் குழப்பமாய் இருந்தது.

“ஓ...” என்றவள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

ஆனால் அவள் மனதில் அவனிடம் பேசுவதற்கு ஓராயிரம் விசயங்கள் இருந்தது. அதை முதியவள் முன்னிலையில் பேச அவள் விரும்பவில்லை. ஏனெனில் அவனின் பொருட்டு அந்த வயதான பெண்மணி வேதனையடையச் செய்வதில் அவளுக்குப் பிடித்தம் இல்லை.

அவளின் அந்த ஒற்றைச் சொல்லில் அவனின் மனம் அப்படியே உடைந்து போனது. தான் அரசு என்று தெரிந்தும் அவள் எந்தவொரு உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல் அமைதியாய் இருந்தது அவனுக்கு வருத்தமாய் இருந்தது. அவள் முகத்தைப் பார்த்தான். அதிலிருந்து அவளின் மனதை அவனால் படிக்க முடியவில்லை.

இருவரின் முகத்தையும் பார்த்த பெரியவள் சின்னவளிடம், “பேபிம்மா... உங்கள் கல்யாணம் எப்படி நடந்தது? ஏன் நடந்தது? என்பதைப் பத்தி நான் எதுவும் கேட்க போவதில்லை... எதுவாக இருந்தாலும் நீ இந்த வீட்டின் மருமகள்... முதன்முறையாய் புகுந்த வீட்டிற்கு வந்த பெண் பூஜையறையில் விளக்கு ஏற்றுவது தான் முறை... வாம்மா வந்து விளக்கேற்று...” என்றழைக்க... அவள் அவர் சொன்னதை அப்படியே செய்தாள்.

அரசு அவள் பூஜையறையில் விளக்கேற்றும் அழகை ரசித்தான். என்றாவது ஒருநாள் அவள் அவன் வாழ்வில் ஒளியேற்றுவாள் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தது வீண் போகவில்லை என்று எண்ணிவன் மனம் எல்லையற்ற ஆனந்தத்தில் திளைத்திருந்தது.

“அரசு அவளை உன் அறைக்கு அழைச்சிட்டு போப்பா... பேபிம்மா கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுக்கட்டும்...”

லக்ஷ்மியம்மா பேரனிடம் கூற... அவளோ,

“நான் உங்க கூட இருக்கிறேன் ஆயாம்மா...” அவசரமாய் மறுத்தாள்.

“அம்மாயி டேப்லெட் போட்டு இருப்பாங்க... அதுவுமில்லாம இது அவங்க தூங்கும் நேரம்... அதனால அவங்க கொஞ்ச நேரம் தூங்கட்டும்... நீ என்னோடு வா...” அவன் சொல்லவும்... வேறுவழியில்லாமல் பலியாடு போல் அவன் பின்னே சென்றாள்.

அவனின் பின்னேயே சென்றவள் அவன் அறைக்குள் நுழைந்ததும் அவன் பின்னே செல்ல தயங்கி அறை வாசலில் அங்கேயே நின்றாள். அவள் வராததை உணர்ந்து திரும்பி பார்த்தவன்,

“இன்னும் என்ன தயக்கம்? உள்ளே வா” இயல்பு போல் அவன் அவளை அழைக்க...

அவளுக்கோ பற்றிக் கொண்டு வந்தது. விறுவிறுவென்று உள்ளே வந்தவள் அவன் அருகில் வந்து நின்றாள். அவளின் செயலில் அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

“அரசு நீயா இப்படியொரு காரியத்தைச் செஞ்ச?”

கண்களில் வலியுடன் கேட்டவளை கண்டு அவனுக்குமே வலித்தது. ஆனால் அதை அவளிடம் அவன் காட்டி கொள்ளவில்லை... அமைதியாய் அவளைப் பார்த்தான்.

“நான் உன்னை எவ்வளவு நல்லவன்னு நினைச்சிருந்தேன்? ஆனால் நீ... என் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டுவது போல் மிரட்டி இந்தக் கல்யாணத்தை நடத்தி இருக்க... ஏன் அரசு? ஏன் இப்படிச் செஞ்ச?” அவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு ஆங்காரமாய்க் கத்தியவளை அவன் சமாதானப்படுத்த முயலவில்லை.

ஒருவிதத்தில் அவள் சொல்வதும் சரி தானே... அவன் அப்படித்தானே நடந்து இருக்கிறான்... ஆனால் அவனின்

செயலுக்குப் பின்னால் அவள் மீதான அவனின் காதல் இருக்கிறது என்றால் அவள் நம்புவாளா? அது அவனுக்குத் தெரியவில்லை. அவன் பேசாமல் அமைதி காத்தான்.

“ஏண்டா... பேசாம இருக்க... உன்னால என் கனவுகள் எல்லாம் அழிஞ்சு போச்சே... என் மனதின் ஆசைகள் எல்லாம் நீ குழி தோண்டி புதைச்சிட்டியே...”

இதைச் சொல்லும் போது அவன் முகம் சுருங்கி தொங்கி போனது. ‘அவள் யாரையும் விரும்பி... இல்லை... இல்லை... அதுக்கு வாய்ப்பே இல்லை’ என்று எண்ணியவன்,

‘ஒருவேளை என்னை மாதிரி அசிங்கமாய் இருப்பவனை அவள் விரும்பவில்லையோ... கணவனாய் சொல்ல விருப்பமில்லையோ?’ மனதுக்குள் நினைக்கும் போதே,

‘உன்னை மாதிரி ஒருவனை எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள்... அப்படியிருக்கும் போது அல்லி மட்டும் உன்னை விரும்புவாளா என்ன?’ அவனின் மனசாட்சி அவனைக் கேலி செய்தது.

‘இல்லை இல்லை... அவள் என்னைக் காதலித்துத் தான் ஆகணும்... அவள் என் மனைவி மட்டுமல்ல... என் காதலியும் கூட... அவள் எனக்கு மட்டும் தான்... வேறு யாருக்கும் அவள் சொந்தமாக நான் விட மாட்டேன்’ மனதுக்குள் கூக்குரலாய் கூச்சலிட்டவன் முகம் உணர்ச்சிகளைத் தொலைத்தது.

“ஏன்... என்னை விட அழகானவனைத் திருமணம் செஞ்சிக்கணும்ன்னு ஆசை வச்சிருந்தியா? அப்படியொரு ஆசை இன்னமும் உன் மனதில் இருந்தால் இப்போது அதை அடியோடு அழித்துவிடு. இந்த ஜென்மத்தில் இந்த அவலட்சணமானவன் தான் உன் கணவன்... அதை முதலில் உன் மனதில் பதிய வை...” கோபமாய் அவன் சொல்ல... அவளோ முகத்தைச் சுளித்தாள்.

“சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நீ அசிங்கமாய் இருப்பது உண்மை தானே... உனக்குப் பெண் கொடுக்க

யாரும் முன் வந்திருக்க மாட்டார்கள்... அதான் என் அப்பாவை மிரட்டி என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... நீ எல்லாம் இப்படி மிரட்டி கல்யாணம் பண்ணினால் தான் உண்டு. உன்னையெல்லாம் எந்தப் பெண்ணாவது விரும்புவாளா?" உதட்டை சுழித்து அலட்சியமாய் அவள் சொல்ல... அவனின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லை மீற துவங்கியது.

"யார் விரும்புறாங்களோ இல்லையோ... அதைப் பத்தி எனக்குக் கவலை இல்லை. ஆனால் நீ என்னை விரும்பி தான் ஆகணும்" ஆங்காரமாய்க் கர்ஜித்தவனைக் கண்டு அவள் துளியும் பயப்படவில்லை. அவனைத் தைரியமாய்க் கண்ணோடு கண் நோக்கினாள்.

"அது மட்டும் ஒருபோதும் நடக்காது... நான் உன்னை எப்போதுமே காதலிக்க மாட்டேன்..." ஆவேசமாய்க் கூறியவள்,

"விட மாட்டேன் அரசு... நீ பண்ணியதுக்கு நான் உன்னைப் பழிவாங்காம விட மாட்டேன்..." ஆங்காரமாய்க் கத்தி கொண்டிருந்தவளை பார்த்தவனுக்கு ஏனோ நகைப்பாய் இருந்தது.

"அதையும் தான் பார்க்கலாம்..." என்று அலட்சியமாய்ச் சொன்னவன், அவள் கைகளில் இருந்து தன் சட்டையை நிதானமாய் விடுவித்தவன்,

"இப்போது நான் வெளியில் போய்விட்டு வருகிறேன்... நான் திரும்பி வரும் வரை என்னை எப்படிப் பழிவாங்குவது என்று யோசித்துக் கொண்டிரு..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் வெளியேறினான்.

அவன் தன்னையோ, தன் வார்த்தைகளையோ கொஞ்சமும் மதிக்காமல் சென்றதை நினைத்து அவளுக்கு ஆத்திரமாய் வந்தது. அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் அறையின் மூலையில் போய் முடங்கினாள்.

அறையை விட்டு வெளியில் வந்தவன் நேரே சென்றது அவனின் பாட்டியின் அறைக்கு... கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தவன் அவர் இன்னமும் ஓய்வெடுக்காமல் கட்டிலில் அமர்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்குத் தெரியும் அவனிடம் பேசாமல் அவர் ஓய்வெடுக்க மாட்டார் என்று.

“அம்மாயி...” அவரின் அருகில் அமர்ந்து அவரின் கையைப் பிடித்து,

“என்னை மன்னித்துவிடுங்கள் அம்மாயி...”

“மன்னிக்கும்படியான காரியத்தை நீ செய்யவில்லை போலிருக்கிறதே அரசு... அதைப் பேபிம்மாவின் முகமே காட்டி கொடுக்கிறது” அனுபவம் மிக்க அந்தப் பெரியவள் சரியாகக் கணித்துவிட்டார்.

“அம்மாயி... நான் தவறு செய்வேனா?” அவன் குரல் கவலையுடன் ஒலித்தது.

“இப்போ நீ செய்த செயல் தவறு இல்லாமல் வேறு எதுப்பா...?”

“நான் காதலிப்பவளை கல்யாணம் பண்ணி கொண்டது எப்படித் தவறாகும் அம்மாயி...?”

“அரசு...” அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தார் அவர்.

“அப்போ நீ இன்னமும் அவளைக் காதலிக்கிறாயா?” அவர் குரல் அவரையும் அறியாமல் நடுங்கியது. ஆம் என்பது போல் அவன் தலையை ஆட்டினான்.

“நான் எப்படி அம்மாயி அவளை மறப்பேன்...? அவள் என் உயிரோடு... உணர்வோடு கலந்துவிட்டவள்... அவளை நான் மறப்பதும் ஒன்று தான்... நான் இறப்பதும் ஒன்று தான்...” கண்கள் கலங்க சொன்னவனை ஆறுதலாய் அணைத்துக் கொண்டார் அவர்.

“ஏற்கெனவே நீ பட்ட அடி போதும் அரசு... இன்னொரு முறை நீ கஷ்டப்பட்டால்... அதை என்னால் தாங்க முடியாது”

அந்த நாளின் நியாபகம் அவரின் நெஞ்சில் எழுந்ததோ என்னமோ அவர் முகம் வேதனையில் ஆழ்ந்தது.

“அதுக்குத் தான் பதிலுக்குப் பதில் வலிக்க வலிக்க அவர்களை அடித்து விட்டு வந்திருக்கிறேன். எந்தப் பணம் இல்லாதததால் என்னை அவமானப் படுத்தினார்களோ அதே பணத்தால் அவர்களின் வாயை அடைத்து அவர்களின் மகளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்திருக்கிறேன். இனிமேல் அவர்களால் என் சுண்டு விரலை கூட அசைக்க முடியாது. காலம் எந்நேரமும் அவர்களுக்குச் சாதகமாய் அமையாது அம்மாயி...” கண்கள் பளபளக்க அவன் கூறியதை கேட்டு மூதாட்டியின் முகத்தில் கலவரம் வந்தது.

“என்ன பணம்... என்ன செய்தாய்?” அவர் பதற்றமாய்க் கேட்டதும் எல்லாவற்றையும் கொட்டி தீர்த்து விட்டான் பேரன்.

“தப்பு செய்துவிட்டாயே அரசு... பணத்தைக் காட்டி மிரட்டி அவளைத் திருமணம் செய்தது... அவளுக்கு எவ்வளவு வலித்திருக்கும்? அதைப் பெண்ணான என்னால் நன்கு உணர முடிகிறது. நீ செய்தது மிகப் பெரிய தவறு... அதனாலேயே அவள் உன்னை வெறுத்துவிடுவாள்”

“பணம் இல்லாமல் அவளை நான் நெருங்கி இருக்க முடியுமா அம்மாயி? பணம் இருப்பதால் தான் அவள் என் மனைவியாய் என் அருகில் இருக்கிறாள்... இல்லையென்றால் அவள் அருகில் நிற்க கூட என்னை விட்டு இருப்பார்களா அந்தப் பணத்தாசை பிடித்த மிருங்கங்கள்?”

“இருந்தாலும் அவள் மனதில் உன்னைப் பத்தி நல்ல அபிப்பிராயம் இல்லையே... இதில் நீ வேறு... நீ யார்? எவர்? என்பதை மறைத்து அவளைத் திருமணம் செய்திருக்க... இதெல்லாம் உன் திருமண வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி விடும். அதைக் கொஞ்சம் யோசித்துப் பார். பேசாமல் ஒன்று செய்... நீ பேபிம்மாவை காதலிப்பதை அவளிடம் சொல்லிவிடு... பேபிம்மா மனசு ரொம்ப நல்ல

மனசு... உண்மை தெரிந்தால் அவள் நிச்சயம் உன்னை ஏத்து கொள்வாள்...”

“இல்லை அம்மாயி... அதை மட்டும் என்னால் சொல்ல முடியாது” அவரின் கூற்றை அவன் மறுத்தான்.

“அவளாகத் தான் என்னைக் காதலிக்கணும்... அதுவும் இந்தத் தோற்றத்தில் இருக்கும் அரசுவை தான் அவள் காதலிக்க வேண்டும்” அவன் குரல் தீர்மானமாய் ஒலித்தது.

“அது எப்படி அரசு முடியும்? கொஞ்சமாவது யோசித்துத் தான் பேசுகிறாயா? அப்படி அவள் உன்னைக் காதலிக்கணும்ன்னு நீ நினைத்தால்... ஒண்ணு நீ உன் காதலை அவளிடம் சொல்லணும்... இல்லை உன் முகத் தோற்றத்தை சரி செய்து கொள்... ரெண்டும் இல்லாமல் அவளே சொல்லணும்னு எதிர்பார்த்தால் எப்படிப்பா? நீ உண்மையை மறைக்க மறைக்க... அது விபரீதத்தில் தான் முடியும். பேபிம்மா... எவ்வளவுக்கு எவ்வளவு நல்ல பெண்ணோ அதே போல் பிடிவாதமும் அதிகமுள்ள பெண்...”

“அவளைப் போல் உங்க பேரனும் பிடிவாதக்காரன் தான் என்பதை நீங்களும் மறந்துடாதீங்க அம்மாயி...” என்றவன்,

“என்னை முழுதாய் புரிந்து கொண்டு அவள் தான் காதலை சொல்லணும்... அவளுக்காக என்னை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன்... ஆனால் அவள் என்னிடம் காதல் சொன்ன மறுகணம் நான் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து என் முகத்தைச் சீர் செஞ்சு கொள்வேன். அதுவரை நான் இப்படித்தான் இருப்பேன்”

அவனின் கூற்றை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றாலும் அவனின் மனம் புரிந்ததால் அவரும் அமைதி காத்தார்.

அவளைக் காதலித்ததால் அவளின் பெற்றோர் அவனுக்குக் கொடுத்த பரிசு தான் இது. இந்தத் தோற்றத்தை தினமும் அவன் கண்ணாடியில் பார்க்கும் போது எல்லாம் அவளைத்

தான் அடைய வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் தீயாய் எரியும். அவளின் பெற்றோரால் ஏற்பட்ட வலி, வேதனையானது முழுமையாய் மறைவது... அவள் தன்னை இந்தத் தோற்றத்தில் காதலிப்பதில் தான் அடங்கியிருக்கிறது என்பதில் அவன் உறுதியாய் இருந்தான். பழைய நினைவில் அவன் உழன்று கொண்டிருக்க அங்கே மயான அமைதி நிலவியது.

“அரசு...” லக்ஷ்மியம்மா கலக்கமாய்ப் பேரனை பார்த்தார். அவரின் முகத்திலிருந்த கலக்கத்தில் அவன் என்ன கண்டானோ?

“அம்மாயி... ரொம்பக் கவலைப்படாதீங்க... நிச்சயம் என் அன்பு, காதல் அவள் மனதை மாற்றி என்னைக் காதலிக்க வைக்கும்...” கண்சிமிட்டி கேலியாய் சொன்னவனைக் கண்டு அவரின் மனம் சற்று நிம்மதியுற்றது.

“அம்மாயி... என் கல்யாணத்தைப் பார்க்கும் கொடுப்பினையை என்னால் உங்களுக்குக் கொடுக்க முடியாமல் போய்விட்டது” மெய்யான வருத்தத்தோடு சொன்னவனின் கன்னத்தைப் பற்றி ஆறுதலாய் தடவி கொடுத்தார்.

“உங்களை நான் கூட்டி சென்றால்... இந்தக் கல்யாணம் நடப்பதே கேள்விக்குறியாகி இருக்கும்... நிச்சயம் அவர்கள் அல்லியை எனக்குக் கொடுக்கச் சம்மதித்திருக்க மாட்டார்கள். அதனால் தான் நான் அதைத் தவிர்த்துவிட்டேன் அம்மாயி...”

“புரிகிறது அரசு... எப்படியோ நீ கல்யாணம் பண்ணி கொண்டாயே அதுவே எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு. கூடிய சீக்கிரம் கொள்ளு பேரனையோ, பேத்தியையோ பெத்து கொடு... அது போதும் எனக்கு...” அவரின் பேச்சில் அவனின் முகம் மலர்ந்தது.

“அது உங்கள் பேபிம்மாவின் கையில் இருக்கிறது” குறும்பாய் சொன்னவன்,

“சரி அம்மாயி... நான் வெளியில் போய்விட்டு வருகிறேன்... நீங்கள் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்திட்டு... உங்க பேபிம்மாவை பத்திரமாய்ப் பார்த்துக்கோங்க...”

“நான் பார்த்துக் கொள்கிறேன்... நீ கவலைப்படாதே...” அவர் சொல்லவும் அவன் நிம்மதியாய் அங்கிருந்து நகன்றான்.

****

மாலையில் சென்ற அரசு வீடு திரும்ப இரவானது. களைத்து போய் வீட்டினுள் நுழைந்தவன் அங்கே சோபாவில் அமர்ந்திருந்த அல்லியை பார்த்ததும்... அவனின் சோர்வு எல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் அவனிடமிருந்து விடைப்பெற்றுச் சென்றது.

முழங்காலில் முகம் புதைத்து அவள் அமர்ந்திருந்த விதம் அவன் மனதை கொள்ளை கொள்ள... ஒருவித உல்லாச மனநிலையில் அவள் அருகே சென்று அமர்ந்தான். தன்னருகில் யாரோ வந்து அமர்வதைக் கண்டவள் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தவள், அங்கே அவனைக் கண்டதும் நிம்மதியுற்றவள்... மறுகணம் அவனை வெறுப்பாய் பார்த்தாள்.

ஒரு கணமே என்றாலும் தன்னைப் பார்த்தும் அவளின் கண்ணில் தோன்றிய அந்த நிம்மதி உணர்வை அவன் கண்டு கொண்டான். அதில் அவளின் ஆழ்மனதை அறிந்து கொண்டவனுக்கு உற்சாகமாய் இருந்தது. அவளின் மனதை தன் பக்கமாய்க் கொண்டு வருவது மிகவும் எளிது என்று அவனுக்குத் தோன்றியது.

“என்ன அல்லிராணி... எனக்காகத் தானே காத்திருக்கிறாய்?” வேண்டுமென்றே அவளைச் சீண்டி விளையாடினான்.

“என் பெயர் அல்லிகொடி... அல்லிராணி இல்லை...” மறுத்து கூறியவள்,

“ஆமாம்... ஆமாம்... உனக்காகத் தான் நான் காத்திருக்கிறேன் பாரு... நீ கேட்ட கேட்டுக்கு ரொம்ப அவசியம்...” நக்கலாய் சொன்னவளை

“எனக்கு நீ எப்பவுமே அல்லிராணி தான்...” அவளை மீண்டும் சீண்டியவன்,

“ச்சே... நான் கூட அருமை மனைவி எனக்காக வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறாளேன்னு ஒரு நொடி பூரிச்சு போயிட்டேனே... ம்ஹூம்... அரசு நீ கொடுத்து வைச்சது அவ்வளவு தான்டா...” அவளிடம் சொல்லியவன்... பின் பாதியை தனக்குத் தானே சொல்லி கொண்டான்.

“சரி அம்மாயி எங்கே?” அவனுக்குத் தெரியும்... இது அவர் உறங்கும் நேரம் என்று...

“தூங்க போயிட்டாங்க...”

“சரி வா... வந்து சாப்பாடு போடு...” அவன் லகுவாய் அவளை அழைக்க... கண்களில் நெருப்பு பறக்க அவனைப் பார்த்தாள் அவள்.

“சாப்பாடா போட சொல்ற? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன்னைக் கழுத்து நெறிச்சு கொன்னாலும் கொன்னுடுவேன்... ஓடி போயிரு...” எரிச்சலுடன் கூறியவளின் முகத்தின் அருகே தன் முகத்தைக் கொண்டு வந்தவன்,

“கொல்ல முடிந்தால் கொல்லு பார்க்கலாம்... உன் கையால் நான் இறப்பது என்றாலும் எனக்குச் சந்தோசமே...”

அவனின் பேச்சில் அதிர்ந்தவள் அவன் கண்களை ஏறிட்டு பார்க்க... அதிலிருந்த உணர்ச்சியை அவளால் உணர முடியவில்லை. இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

“அதுக்குக் கூட உன் மேல் என் கை படுவதற்கு எனக்கு விருப்பமில்லை”

முகத்தில் அருவருப்பைத் தேக்கி கொண்டு சொன்னவளை கண்டு அவன் முகம் கடினமுற்றது. அவன் செய்த காரியத்தால் மனம் வெறுத்து போயிருந்ததால் அவள் அவ்வாறு சொன்னாள். ஆனால் அவனோ தான் அழகற்று இருப்பதால் அப்படிச் சொல்கிறாள் என்று தவறாக எண்ணி கொண்டு அவள் மீது கோபம் கொண்டான்.

“உன் கை என் மேல் படாவிட்டாலும் பரவாயில்லை... ஆனால் இன்றைக்கு என் கை உன்னைத் தொடுவதை நீ தடுக்கவும் முடியாது... மறுக்கவும் முடியாது”

இரு பொருள் படக் கூறியவன் அவளை ஒருமாதிரியாகப் பார்க்க... அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.

அவள் இதைச் சற்றும் யோசிக்கவில்லை. திருமணம் வாழ்விற்கு அடிப்படை காரணமே தாம்பத்தியம் தான் என்பதை அவள் மறந்து போயிருந்தாள். அதை அவன் ஞாபகப்படுத்தவும் அவளிடமிருந்த தைரியம் எல்லாம் எங்கோ பறந்து ஓடிவிட்டது போலிருந்தது. எல்லாம் கொஞ்ச நேரம் தான் தன் மனதை மறைத்துக் கொண்டு அவனை முறைத்து பார்த்தாள்.

அவளின் பார்வையைக் கண்டு கொள்ளாமல் எழுந்தவன் உணவு மேஜையை நோக்கி சென்றான். யாருமே உண்ணாமல் உணவு அப்படியே இருந்ததைக் கண்டான். அவனின் பாட்டி இரவில் சூப், பழம் போன்று எளிமையான உணவு தான் உண்பார்கள். அதனால் அல்லி இன்னமும் உணவு உண்ணவில்லை என்பதை எளிதாய் அறிந்து கொண்டான். இரண்டு தட்டுக்கள் எடுத்து வைத்து பரிமாறியவன் மீண்டும் அவள் முன் வந்து நின்றான்.

“சாப்பிட வா...” மென்மையாய் அழைத்தான்.

அவள் இன்னமும் உண்ணாமல் இருப்பதைக் கண்டு... அவள் மேல் அவன் கொண்டிருந்த கோபத்தை... அவன் அவள் மேல் கொண்ட காதல் புறம் தள்ளிவிட்டது.

“எனக்கு ஒண்ணும் வேண்டாம்...” அவன் பேசிய பேச்சின் தாக்கம் இன்னமும் அவளின் மனதில் நிறைந்திருந்தது.

“நீ வரவில்லை என்றால்...” சொல்லி கொண்டே அவளின் அருகில் கையைக் கொண்டு வந்தவன்,

“நானே உன்னைத் தூக்கிட்டு போறேன்” என்றவனைப் பார்த்து பதறி எழுந்தவள்... அவனுக்கு முன்பே உணவு மேஜையை நோக்கி நடந்தாள். அவளின் செயலில் மனதுக்குள் நகைத்து கொண்டவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

நாற்காலியில் அமைதியாய் அமர்ந்தவளுக்கு உணவு தொண்டையில் இறங்கவில்லை. உணவில் கையை விட்டு அலைந்து கொண்டிருந்தவளை கண்டு, “என்ன சாப்பிடாமல் யோசிச்சிட்டு இருக்க... ஒருவேளை நான் ஊட்டி விட்டால் தான் சாப்பிடுவியா? சரி... எவ்வளவோ செய்துட்டேன்... இதைச் செய்ய மாட்டேனா?” அவளின் தட்டின் அருகில் தன் கையை அவன் கொண்டு செல்ல...

அவசரமாய்த் தன் தட்டை நகர்த்தியவள்... அதைவிட அவசரமாய் உணவை வாயில் திணித்தாள். உண்ணும் அவசரத்தில் அவன் அவளுக்குப் பார்த்து பார்த்து பரிமாறியதையோ, அவள் உண்ணும் அழகை அவன் ரசித்துப் பார்த்ததையோ... அவை எதையுமே அவள் உணரவில்லை.

இருவரும் உணவு முடிந்து வரவேற்பறைக்கு வர... அவள் எங்குச் செல்வது என்று தெரியாமல் நிற்க... அவன் அறைக்குச் செல்ல எத்தனித்தவன் அவள் அசையாமல் நிற்பதை உணர்ந்து,

“எதையும் பேஸ் பண்ணி தான் ஆகணும். இங்கேயே நின்று கொண்டிருப்பதால் எதுவும் மாறி விடப் போவதில்லை” அவன் குரல் அழுத்தம் திருத்தமாய் ஒலித்ததில் நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசாமல் அவனுடன் சென்றாள்.

அறைக்குள் வந்ததும் அவன் குளிக்கச் சென்று விட... நிம்மதி பெருமூச்சு விட்டவள்... அறையின் மூலையில் சுவற்றில் ஒன்றிக் கொண்டு கீழே அமர்ந்து விட்டாள். அடுத்து என்ன செய்வது? எப்படி அவனிடமிருந்து தப்பிப்பது? என்பதே அவளின் மனதில் ஓடி கொண்டிருந்தது.

குளியலறை கதவு திறக்கும் ஓசை கேட்டதும் அவள் அசையாமல் சிலை போல் அமர்ந்திருந்தாள். அதிலும் அவன் அவள் அருகில் வருவதைக் கண்டு அவள் உடல் மெதுவே அதிர்ந்தது. அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தவன், அவள் முகத்தருகே குனிந்து,

“இங்கே உட்கார்ந்திருந்தால் என்னிடம் இருந்து தப்பி விடலாம் என்ற எண்ணமா?” புருவத்தை உயர்த்திக் கேள்வியாய் பார்த்தவனை என்ன செய்தால் தகும்? என்று அவளுக்கு ஆத்திரமாய் வந்தது.

“தாம்பத்திய வாழ்விற்குக் கட்டிலோ இல்லை கட்டாந்தரையோ ஒரு பொருட்டல்ல. அதற்குத் தேவை ஆணும், பெண்ணும் தான்... எனக்கு இங்கே என்றாலும் ஓகே தான்... அங்கே என்றாலும் ஓகே தான்” கையால் கட்டிலை சுட்டி காட்டி சொன்னவன்,

“உனக்கு எது ஓகேன்னு சொல்லு” அவளைப் பார்த்து மந்தகாச புன்னகையை ஒன்றை உதிர்த்தான்.

அவள் ஒன்றும் பேசாமல் இருப்பதைக் கண்டு, அவள் அருகில் நெருங்கி அமர்ந்தவன் அவளின் தோளில் கையைப் போட வர, எங்கிருந்து தான் அவளுக்கு அவ்வளவு வேகம் வந்ததோ, படக்கென்று அவன் கையைத் தள்ளிவிட்டவள்,

“என்னைத் தொட்ட... அப்புறம் நான் மனுசியா இருக்க மாட்டேன்” என்றவள் தன் இரு கைகளையும் அவன் முன்னே தூக்கி காண்பித்து,

“பார்த்தியா பத்து விரலிலும் இருக்கும் நகத்தை... இதை வைத்து உன் முகத்தில் நான் குத்தி கிழித்தால் எப்படி இருக்கும் தெரியுமா? நாளை உன் அம்மாயி, உன்னிடம் வேலை செய்பவர்கள், நண்பர்கள் எல்லாரின் முகத்திலும் எப்படி முழிப்பாய்? எந்த முகத்தைக் கொண்டு அவர்களைப் பார்ப்பாய்? அவர்கள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வாய்? என் மனைவியை நான் கற்பழித்து விட்டேன் என்றா சொல்வாய்? அது உனக்கே அவமானமாய் இருக்காது? அந்த அவமானம் வேண்டாம் என்றால் தள்ளி போய் விடு”

ஆத்திரத்துடன் மூச்சு வாங்க கூறியவளை நிதானமாய்ப் பார்த்தான். அவனின் நிதான பார்வையில் அவளின் முதுகுத்தண்டு சில்லிட்டது. தான் இவ்வளவு கூறியும் அசையாமல் இருக்கிறானே என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது.

“எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவாய் என்று தானே கேட்ட...?” சிறிது நேரம் யோசிப்பவன் போல் பாவ்லா செய்தவன்,

“பேசாமல் முகமூடி போட்டுக் கொண்டு போகிறேன்... என்ன உனக்கு ஓகே தானே... ஏற்கெனவே உன் அப்பா, அம்மா என் முகத்தில் போட்ட கோலம் அழியாமல் இன்னமும் இருக்கு... அவர்களின் மகள் நீயும் அதே தான் செய்யப் போகிறாய் என்றால்... தாராளமாய்ச் செய்து கொள். எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதுக்காக எல்லாம் உன்னை நான் விட்டு விட முடியாது” என்று கூறிக் கொண்டே அவள் முகம் நோக்கி அவன் குனிய... அவளோ அவனைத் தாக்குவதற்கு ஏதுவாகத் தன் கைகளை உயர்த்தினாள்.

பாயும் பெண் புலியாய் தன்னைத் தாக்குவதற்குத் தயாராகக் கைகளை உயர்த்திக் கொண்டு கண்களில் ஒருவித தீவிரத்துடன் அமர்ந்திருந்த அல்லியின் கண்டு அரசுக்குச் சிரிப்பு சிரிப்பாய் வந்தது. அடக்கமாட்டாமல் வாய் விட்டு சிரித்தவனைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் வர,

“இப்போ எதுக்குச் சிரிக்கிற?” எரிச்சலுடன் அவள் வினவினாள்.

“அடேங்கப்பா... முஸ்தீபுகள் எல்லாம் பலமாயிருக்கே...” போலியாய் வியந்தவன்,

“ஆனால் இதையெல்லாம் ஒரு நொடியில் ஒன்றும் இல்லாமல் செய்யும் வித்தை எனக்குத் தெரியும்” என்று அலட்சியமாய்க் கூறியவனை அருவருப்புடன் பார்த்தவள்,

“ஆண்டாண்டு காலமாய் உங்கள் ஆண் இனம் அதைத் தானே செய்கிறது” உதட்டை சுழித்துக் கொண்டு கூறியவள்,

“ஆனால் நீ என்னிடம் அந்த வித்தையைக் காட்டலாம் என்று எண்ணினால்... கட்டாயம் அதில் நீ தான் தோற்று போவாய்...”

“அப்படியா பார்ப்போமா?” அவன் சவால் விட...

“பார்க்கலாம்...” முகத்தில் படிந்த முடியை சிலுப்பிக் கொண்டு அவனைப் பார்த்து பதிலுக்கு அவள் சவால் விட,

“உன் அப்பா கைப்பட எழுதி கொடுத்த கடன் பத்திரங்கள் இன்னமும் என்னிடம் தான் இருக்கிறது என்பதை உன் ஞாபகத்தில் நீ வைத்துக் கொண்டால் நல்லது...”

“அதுக்கு...” அவனைக் கூர்மையாகப் பார்த்தாள் அவள்.

“நீ என்னுடன் வாழ மறுத்தால்... அவையெல்லாம் கோர்ட் படியேறும்... கூடவே உன் அப்பனும் கோர்ட் படியேறி

அசிங்கப்படணும்... இதெல்லாம் தேவையா உனக்கு?” அவன் அசராமல் அவள் தலையில் குண்டை போட்டான்.

“நீ அவருக்குக் கடன் கொடுத்தால்... அது அவர் பாடு... உன் பாடு... இடையில் ஏண்டா என் உயிரை எடுக்கிறாய்?” அவள் ஆவேசமாய்க் கத்தினாள்.

“அப்படியா... ஓகே நீ உன் இஷ்டம் போலிரு... நாளைக்குக் கோர்ட்டில் உன் அப்பனை நான் சந்தித்துக் கொள்கிறேன்” அசால்ட்டாய் கூறியவன் படுப்பதற்காகக் கட்டிலை நோக்கி நகர்ந்தான்.

‘போனால் போடா எனக்கென்ன?’ மனதுக்குள் கருவியவளுக்குச் சிறிது நேரத்திலேயே பதற்றம் தொற்றிக் கொண்டது.

தந்தைக்குக் கொடுத்த வாக்கு, அன்னையின் உயிர், தம்பியின் எதிர்காலம் எல்லாம் அவள் கண் முன் தோன்றி அவளைப் பயமுறுத்தியது. தந்தை வாங்கிய கடனுக்காக நடந்தது தான் இந்தத் திருமணம் என்பது அவள் மூளையில் மெதுவே உறைத்தது. இதைக் கொஞ்சமும் உணராமல் தான் மடத்தனமாய் அவனைப் பழிவாங்க கிளம்பிவிட்டதை எண்ணி தன்னைத் தானே நொந்து கொண்டாள். தான் ஒரு சிறை கைதி என்பதை அவள் முழுதாய் உணர்ந்ததும்... அவளுள் இருந்த கோபம், பழிவாங்கும் குணம் எல்லாம் ஒன்றுமில்லாமல் போய் அவளிடமிருந்த உயிர்ப்பு மெல்ல மெல்ல செத்துப் போனது.

அவள் மெதுவே தலையைத் திருப்பி அவனைப் பார்க்க... அவன் கட்டிலில் படுத்திருந்ததைக் கண்டாள். ஆனாலும் அவன் காலையாட்டி கொண்டு படுத்திருந்த விதத்தில்... அவன் இன்னமும் தூங்கவில்லை என்பதை அவள் உணர்ந்தாள். மெல்லமாய் எழுந்தவள் முடுக்கிவிட்ட இயந்திரம் போல் அவனருகில் சென்றாள். எதையோ யோசித்துக் கொண்டு படுத்திருந்தவன் தன் அருகில் அசைவு தெரியவும் கண்களைத் திறந்தான். அங்கே அவளைக் கண்டதும் கேள்வியாய் புருவத்தைத் தூக்கியவன் எழுந்தமர்ந்தான்.

“என்ன?” என்றவன் அவளைக் கூர்மையாய் பார்த்தான்.

அவள் பதில் பேசாது அவனை நோக்கி கரத்தை நீட்டினாள். அவளை ஆச்சிரியத்துடன் பார்த்தவன் ஒன்றும் பேசாது நீட்டிய அவளின் கரத்தை தன் வலிமை மிகுந்த கரத்தால் பூ போல் பற்றியவன், அவளைத் தன்னருகில் அமர்த்தினான். அவனைப் பாராது தலைகுனிந்திருந்தவளை ஒற்றை விரல் கொண்டு அவளின் முகத்தை அவன் நிமிர்த்த... அவனைப் பார்க்கும் சக்தியில்லாது அவள் கண்களை இறுக மூடி கொண்டாள்.

‘இந்த ராட்சசன் என் விருப்பமில்லாமல் என்னை ஆள போகிறான்... கடவுளே இந்த நிமிடம் என் உயிரை எடுத்துவிடு... எனக்கு வாழவே விருப்பமில்லை... அதிலும் இவனுடன் வாழ கொஞ்சமும் விருப்பமில்லை...’

மனதுக்குள் குமுறியவளின் கண்ணில் அவளையும் அறியாது கண்ணீர் வடிந்தது. என்ன தான் தைரியமாய்க் காட்டி கொண்டாலும்... அவளும் மனதில் பல ஆசைகள் அடங்கிய சாதாரணப் பெண் தானே... அவளின் கண்ணீரை கண்டவன் மனமோ அவளை விட அதிகமாய் வலித்தது.

‘என்னுடன் வாழ விருப்பம் இல்லாததற்கா இந்தக் கண்ணீர்... பெண்ணே! எப்போது தான் நீ என்னைப் புரிந்து கொள்ளப் போகிறாய்? உன்னைக் காயப்படுத்தும் எந்தவொரு செயலையும் நான் செய்ய மாட்டேன் என்று உனக்கு ஏன் புரிய மாட்டேங்குது?’ மனதுக்குள் தவித்தவன் மிருதுவாய் அவளின் கண்ணீரை துடைத்துவிட்டான்.

காமுகனாய் கற்பனை செய்து வைத்திருந்தவன் இடத்தில்... இந்த மாதிரியான ஒரு செயலை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கண்களைத் திறந்தவள் திகைத்து போய் அவனையே பார்த்து கொண்டிருந்தாள்.

“என்ன அல்லிராணி... இதுக்குப் போய் இப்படியா பயப்படுவ? கொஞ்ச நேரத்துக்கு முன் சொன்ன கைவிரல் நகம் எங்கே போனது? அது இப்பவும் இருக்குது தானே... அப்புறம் உன் வாயில் இருக்கும் பல் அதையும் நீ

ஆயுதமாய்ப் பயன்படுத்தலாம். பார்... உன்னிடத்தில் எத்தனை ஆயுதங்கள் இருக்கு... தைரியமாய் எதிர்த்து நின்னு போராட வேண்டாமா என் அல்லிராணி... இப்படியா அழுது கொண்டு இருப்பாய்?" கேலியாய் பேசி அவளின் மனதை அவன் மாற்ற முயல... அவன் எண்ணியது போல் அவனின் பேச்சில் பழைய அல்லி கொஞ்சம் கொஞ்சமாய்த் திரும்பலானாள்.

"அதைத் தான் கடன்பத்திரம் என்ற ஒற்றை வார்த்தையால் அடக்கி விட்டுவிட்டு இப்போது கேட்கும் கேள்வியைப் பார்" சினமாய்ப் புறப்பட்டது அவளின் வார்த்தைகள்.

அவளுக்குப் பதில் தராமல் அவன் அவளின் கையைப் பற்ற... அவளோ வெடுக்கென்று அதைப் பிடுங்கி கொள்ள முயல... அவனோ அவளின் கையை விடுவிக்காமல்,

"கொஞ்ச நேரம் முன்பு யாரோ என்னிடத்தில் அவர்களின் கையைக் கொடுத்தார்களே... அவர்கள் யார்ன்னு உனக்குத் தெரியுமா?"

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு அவன் நகைச்சுவையாய் வினவ, அவனின் பேச்சில் அவளின் கோபம் பொங்கிய பாலில் குளிர் நீர் தெளித்தது போல் சட்டென்று அடங்கியது. அதைக் கண்டு உள்ளுக்குள் நகைத்தவனாய்,

"கடன்பத்திரத்தை உன்னைக் கல்யாணம் பண்ணி கொள்வதற்குத் தான் நான் பயன்படுத்தினேனே தவிர... உன்னை வலுக்கட்டாயமாய்ப் பலவந்தப்படுத்தி வாழ்வதற்கு அல்ல... அதனால் என்னிடத்தில் பயப்படாமல் போய்த் தூங்கு..." என்றவன் அவளின் புறங்கையில் மென்மையாய் முத்தமிட...

அவனின் பேச்சில் நிம்மதியுற்றவள்... அவனின் செயலில் வெகுண்டு போனாவளாய், "இதெல்லாம் எனக்குப் பிடிக்காது..."

“அதே தான் நானும் சொல்கிறேன்... நானும் இன்றும் போல் என்றும் இருக்க மாட்டேன்... நீயே உன் மனதை மாற்றிக் கொண்டு என்னுடன் வாழும் வழியைப் பார்... இல்லையென்றால் அதற்கான வழியை நானே உருவாக்கி கொள்வேன்... அப்போது நீ அழுது புலம்பினாலும்... தவித்தாலும்... என்னிடம் இருந்து தப்பிக்க முடியாது” அவளின் பேச்சில் அவனும் வெகுண்டான்.

“அதையும் பார்க்கலாம்...” அலட்சியமாய்ச் சொன்னவள் அவனின் மறுபுறம் வந்து படுத்தாள். அதைக் கேலியாய் அவன் பார்க்க...

“எனக்குக் கீழே படுத்துப் பழக்கம் இல்லை... வேலைக்காரன் உனக்குத் தான் கீழே படுத்துப் பழக்கம் இருக்கும்... அதனால் நீயே கீழே படுத்துக் கொள்”

அவனைக் காயப்படுத்தி விடும் நோக்கத்தில் தான் அவள் அவ்வாறு கூறியது. வேறு எந்தவித உள்நோக்கத்துடனும் அவள் அதைச் சொல்லவில்லை.

“இந்த வேலைக்காரன் தான் உன் அப்பன் எல்லோர் முன்னும் கேவலப்படாமல் இருப்பதற்குப் பணத்தை வாரி கொடுத்தவன். அதை முதலில் நீ ஞாபகத்தில் வைத்து கொள்” அவள் தன்னை வேலைக்காரன் என்று சொல்லியது அவனின் தன்மானத்தைச் சீண்டி விட்டது.

“அதுக்குத் தான் நோகாமல் என்னைக் கல்யாணம் பண்ணி கொண்டு வந்தாயிற்றே... பிறகு வேறென்ன வேணும்? நீ கனவிலும் நெருங்க முடியாத உயரத்தில் இருந்தவள் நான்... அப்படிப்பட்ட என்னைப் பணத்தைக் காட்டி மிரட்டி...” அவள் சொல்லி கொண்டு போகும் போதே...

“சும்மா சும்மா இதையே சொல்லாதே... நான் பணத்தைக் காட்டி மிரட்டினவன் தான். வேண்டுமென்றால் உன் அப்பன் அந்தப் பணத்தைத் தூக்கி போட்டு உன் வாழ்க்கையைக் காப்பாற்றி இருக்க வேண்டியது தானே... நான் என்ன நீ தான் வேணும்... பணம் வேண்டாம் என்றா சொன்னேன். உன் அப்பன் தான் பெத்த பெண்ணை விடப் பணம் தான்

பெரிசுன்னு உன்னை என்னிடம் தள்ளிவிட்டான். நானாகக் கண்டு நல்லவிதமாய் உன்னிடம் பேசி கொண்டிருக்கிறேன்... வேறோருவனாக இருந்திருந்தால் இந்நேரம்...”

அவன் வாக்கியத்தை முடிக்காமல் விட்டு விட்டு அவளை ஆழ்ந்து பார்த்தான். அவனின் பேச்சில் அவள் வாயடைத்து போனாள்.

“அப்புறம் என்ன சொன்ன... நான் கனவிலும் நெருங்க முடியாத உயரத்தில் இருப்பவள் நீயா? அப்படியொரு நினைப்பு உன் மனசில் இருக்கிறதா? காக்காய் போலிருந்து கொண்டு என்னமோ கிளி போலிருப்பதாய் எட்டூருக்கு வாய் கிழிய பேசும் பேச்சை பார்” அவன் எகத்தாளமாய்ப் பேச... அவனின் பேச்சில் அவள் முகம் கறுத்து சுருங்கி போனாள்.

“நான் காக்கவாய் இருந்துவிட்டு போறேன்... உனக்கென்ன வந்தது? பின்னே எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட? உனக்கு ஏற்றார் போல் அழகாய் வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட வேண்டியது தானே?” தன்னை விட அவன் நிறம் அதிகம் என்பதில் அவளின் தாழ்வு மனப்பான்மை அவளை அப்படிப் பேச வைத்தது.

“நான் யாரை கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் அட்வைஸ் பண்ண வேணாம்?” கோபமாய்ச் சொன்னவன் எழுந்து பால்கனி கதவை திறந்து கொண்டு வெளியில் செல்ல... அவளும் அதே கோபத்துடன் திரும்பி படுத்து கொண்டாள்.

‘காக்காவாமே... நானா காக்கா? அப்புறம் எதுக்கு என்னைத் தேடி வந்து கல்யாணம் பண்ணிக்கிட்ட... உனக்கே இவ்வளவு திமிர் இருக்கும் போது எனக்கு இருக்காதா? போடா... நீ ஒன்றும் எனக்கு வேண்டாம்...’ அவனிடத்தில் கோபம் கொண்டு வெகுநேரம் முழித்திருந்தவள் எப்போது தூங்கினாள் என்று அவளுக்கே தெரியாது.

பின்னிரவின் குளிர் உடம்பை துளைக்க ஆழ்ந்து தூங்கி கொண்டிருந்த அரசு கண்களைத் திறந்தவன்... பால்கனி நாற்காலியில் அப்படியே உறங்கி விட்டதை அறிந்து எழுந்து உள்ளே சென்றான்.

அங்கே ஆழ்ந்த துயிலில் இருந்த மனையாளை கண்டதும் அவனையும் அறியாமல் அவனின் கால்கள் அவள் பக்கம் சென்றது. போர்வை ஒரு பக்கமும், அவள் ஒரு பக்கமுமாய்ச் சிறு குழந்தை போல் உறங்கி கொண்டிருப்பதைக் கண்டவனுக்குச் சிரிப்பு வந்தது. அவளருகில் வந்தவன் அவளுக்குப் போர்வையை எடுத்து போர்த்தி விடக் குனிந்த போது அவளின் பால் முகம் அவனுக்கு வெகு அருகிலிருக்க... கண்ணிமைக்காமல் அவளின் முகத்தைப் பார்த்தான்.

‘சாரி அல்லிராணி... உன் மனதை மிகவும் காயப்படுத்தி விட்டேனோ? நீ பேசியதால் தான் நானும் அப்படிப் பேச வேண்டியதாய் போயிற்று. எனக்கு எந்த அழகுராணியும் வேண்டாம்... இந்த அல்லிராணி மட்டும் போதும். நீ காக்கை இல்லையடி... நீ தான் நான் கொஞ்சும் அழகு கிளி’ மனதுக்குள் அவளைக் கொஞ்சியவன் அவள் அருகில் அமர்ந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாநிறமாய் வெகு சாதாரணமாய் இருந்தவளிடத்தில் அவன் அப்படி என்ன தான் கண்டான் என்று அவனுக்கே விளங்கவில்லை. அன்று அவளைத் தாவணி பாவாடையில் முதன்முறையாய் பார்த்த போது அவளில் விழுந்தவன் தான் இன்று வரை அவனால் எழ முடியவில்லை. அதைச் சொன்னால் அவள் நம்பவா போகிறாள்?
என்றெண்ணியவன் மனம் பத்தாண்டுகளுக்குப் பின்னோக்கி சென்றது.
****

அவன் அப்போது தான் பள்ளி படிப்பு முடித்துக் கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்த்திருந்தான். முதன் முதலாய் சம்பளம் வாங்கியதும் அம்மாயிடம்

கொடுத்து அவரின் ஆசீர்வாதம் வாங்க வேண்டி அவன் கண்டிக்கு வந்திருந்தான்.

லக்ஷ்மியம்மா அல்லியின் வீட்டில் தான் வேலை செய்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் அல்லியையும், அர்ஜுனனையும் பார்த்துக் கொண்டு இருந்தவர்... பின்பு அவர்கள் பெரியவர்களானதும் அந்த வீட்டின் சமையல் பொறுப்பைக் கையில் எடுத்துக் கொண்டார். பரமேஷ்வரும் நல்ல சம்பளம் கொடுக்கவும் லக்ஷ்மியம்மா அங்கேயே இருந்த அவுட் ஹவுசில் தங்கிவிட்டார். அந்த வயதிலும் யாருக்கும் பாரமாய் இருக்க வேண்டாம் என்று அவர் நினைத்தார்.

குளித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தவன் காதில், "ஆயாம்மா... நான் எப்படி இருக்கேன்" என்ற குரல் தேனாய்ப் பாய்ந்தது.

யாரது என்று நினைத்துக் கொண்டே அவன் முன்னறைக்கு வர, அங்கே அம்மாயி முன் பட்டுப் பாவாடை தாவணியில் தனக்குத் தானே சுழன்று சுற்றி தன் அழகை காட்டி கொண்டிருந்த அல்லியை கண்டு அப்படியே கண்ணிமைக்க மறந்து நின்றுவிட்டான்.

பல தடவை அவன் அல்லியை பார்த்து இருக்கிறான் தான்... இல்லை என்பதற்கு இல்லை. அப்போது எல்லாம் சிறு பெண் என்று அவளைக் கருத்தில் கொள்ளாது அவன் சென்று விடுவான். ஆனால் இது போல் தாவணி பாவாடையில் பெரிய மனுசியாய்... அழகு பெட்டகமாய் அவளை அவன் பார்த்ததில்லை. அவள் அழகு தந்த பிரமிப்பில் அவன் அசையாது கல்லாய் சமைந்து போனான்.

அங்கே அரசுவை திடுமெனக் கண்டதும் வெட்கியவளாய் அல்லி அம்மாயியின் பின்புறம் சென்று மறைந்து கொண்டாள். எப்போதும் தன்னைக் கண்டால் சிரித்துக் கொண்டு செல்லும் அல்லி இன்று வெட்கப்படுவதை அவன் அதிசயமாய்ப் பார்த்தான். அதிலும் அம்மாயின் முதுகின் பின் நின்று கொண்டு தன் கண்ணை மட்டும் உயர்த்தி

அவள் அவனைப் பார்த்ததில்... அந்த விழியின் வீச்சில் அவன் முழுதாய் வீழ்ந்து போனான்.

“பேபிம்மா... கிளம்பாமல் இங்கே இருந்தால் அப்பா திட்ட போகிறார்... நீ போம்மா” லக்ஷ்மியம்மா அவளைக் கிளம்பச் சொல்ல...

“ஆமாம் ஆயாம்மா... ரம்பொடை ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போகணும்ன்னு அப்பா சொல்லிட்டு இருந்தார். நான் வர்றேன் ஆயாம்மா. அப்புறம் ஆயாம்மா... பாயசத்தில் முந்திரிபருப்பை அதிகமாய்ப் போட்டு வைங்க...” நியாபகமாய்ச் சொல்லியவள்,

“அந்த அஸ்வின் தடியனுக்கு முந்திரிபருப்பு கொடுத்துடாதீங்க... எனக்கு மட்டும் கொடுங்க...” கண்களை உருட்டி அவள் பேசிய விதம் அவன் மனதை கவர்வதாய்...

வாயில் வரை சென்றவள் நின்று பின் திரும்பி அவன் அருகில் வந்தவள், “அரசு... இன்னைக்கு எனக்குப் பேர்த்டே...” என்றபடி அவன் முன்னே சாக்லேட்டுகள் அடங்கிய பெட்டியை நீட்ட...

“மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் தி டே...” அவன் அவளை வாழ்த்த...

“தேங்க்யூ அரசு...” கன்னம் குழி விழ சிரித்தவள் அங்கிருந்து சிட்டாய் பறந்தாள்.

“அம்மாயி... அல்லியின் பிறந்தநாளுக்கு நீங்க எதுவும் கொடுக்கலையா?”

“பேபிம்மாவுக்குக் கொடுக்கும் அளவுக்கு நம்மிடம் என்னப்பா இருக்கிறது? அவள் அப்பா அவளுக்கு வாங்கித் தந்ததை விடவா நாம் அவளுக்கு வாங்கிக் கொடுத்து விட முடியும்?” அம்மாயின் பேச்சு அவனுக்கு ரசிக்கவில்லை.

“அவளுக்கு வேறு ஏதேனும் பிடித்ததாய்... நன்றாக யோசித்துப் பாருங்கள்”

“ம்... அவளுக்கு நெல்லிக்காய் என்றால் ரொம்பப் பிடிக்கும். உப்பும், மிளகாய் பொடியும் தொட்டுச் சப்பு கொட்டி சாப்பிடுவாள்”

அம்மாயி சொன்னதை அப்படியே மனக்கண்ணில் கொண்டு வந்து ரசித்தவன், அவர் சொன்னபடி நெல்லிக்கனிகளை வாங்கி வந்து அல்லியிடம் கொடுத்தான்.

“அய்... நெல்லிக்காய்...” கூவி கொண்டே அவன் கையிலிருந்து அதை வாங்கியவள் உடனே வாயில் போட்டுக் கொண்டு ருசித்துச் சாப்பிட அதை மனநிறைவுடன் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

“தேங்க்ஸ் அரசு...” அவன் கை பற்றி நன்றி சொல்லியவள் அங்கிருந்து ஓடி விட... அவள் கைப்பற்றிய இடத்தை அவன் வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன் பின் அவன் அடிக்கடி அவளைப் பார்ப்பதற்காகவே கண்டிக்கு வருகை தர ஆரம்பித்தான். சிலசமயம் சிறு குழந்தையாய் துள்ளி விளையாடுபவளை கண்டு அவனின் மனம் குற்றவுணர்வில் தவிக்கும். பதினாலு வயது சிறு பெண்ணைப் போய்க் காதலிக்கிறோமே... இது சரியா? என்று அவனின் மனசாட்சி அவனைக் கேள்வி கேட்கும். தனக்கும் அவளுக்கும் ஆறு வயது இடைவெளி இருப்பதைக் கண்டு அவனின் மனம் வருந்தும். அப்போது எல்லாம் அவள் பெரிய பெண்ணாக வளரும் வரை பொறுமையாய் இருக்க வேண்டும் என்று மனதுக்குள் கட்டுப்பாட்டை விதைத்து கொள்வான்.

இவ்வளவையும் யோசித்தவன் தனக்கு எட்டாத உயரத்தில் இருக்கும் அவளின் மீது தான் கொண்ட காதலை மட்டும் தவறாகவே எண்ணவில்லை. சினிமா படம் பார்த்ததின் விளைவு, இளம் வயதின் வேகம் மற்றும் முதலாளி, தொழிலாளி வேற்றுமை பாராத கம்யூனிச கொள்கை இவையெல்லாம் அவனின் காதலை உரம் போட்டு வளர்த்தது.

ஒருநாள் அவனின் அம்மாயியை தேடி அல்லியின் வீட்டிற்கு வந்தவன் அங்கு வரவேற்பறையில் மேஜையின் மீதிருந்த கையடக்க அல்லியின் புகைப்படத்தைப் பார்த்தான். அப்போது அவன் மனதில் அந்த விபரீத எண்ணம் தோன்ற அக்கம் பக்கம் பார்த்தவன் யாருமில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு அதை எடுத்து தன் சட்டைப்பையில் மறைத்து வைத்துக் கொண்டு வேகமாய் வெளியேறினான். அவனின் கெட்ட நேரமோ என்னமோ வெளியில் சென்றிருந்த அல்லியின் பெற்றோர் அந்நேரம் வீட்டினுள் நுழைந்தனர்.

அவன் எதையோ மறைத்து எடுத்துக் கொண்டு போவது போல் பொற்கொடிக்கு தோன்ற... கணவனின் காதில், “அரசுவை பாருங்கள்... எதையோ ஒளித்துக் கொண்டு போவது போலில்லை...” கிசுகிசுக்க... பரமேஷ்வர் அவனைக் கூர்ந்து கவனித்தார். மனைவி சொன்னது உண்மை என்று அவருக்குப் புரிய...

“அரசு இங்கே வா...” என்று அவனை அழைத்தார்.

அவரின் குரலில் இருந்த கடுமை அரசுவை நடுங்க செய்தது. முயன்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவர் அருகில் சென்றான்.

“உன் சட்டைக்குள் என்ன?” நேரடியாய் அவர் கேட்க... அவனோ திருதிருவென முழித்தான். என்னவென்று தான் அவன் சொல்லுவான்?

“ஒண்ணுமில்லை...” அவன் மழுப்ப... அவர்கள் இருவருக்கும் சந்தேகம் வலுக்க... அவனின் சட்டையைப் பிடித்து இழுக்க...

உள்ளே இருந்த புகைப்படம் கீழே விழுந்து அதன் கண்ணாடி சட்டம் நொறுங்கியது. ஏதோ பணமோ, நகையோ திருடி செல்கிறான் என்பதாய் நினைத்தவர்களுக்கு அது தங்களின் பெண்ணின் புகைப்படம் என்பதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவ்வளவு தான் ஆத்திரத்தில் அவர்கள் இருவரும் கொதித்துப் போய்விட்டனர்.

“ஏண்டா வேலைக்கார நாயே... உனக்கு என் பொண்ணு கேட்கிறதா?” ஆக்ரோஷமாய்க் கத்தி கொண்டே பரமேஷ்வர் அவன் கன்னத்தில் அடித்தார்.

அவரின் கோபக்குரல் கேட்டு வேலையாள் எல்லோரும் அங்குக் கூடிவிட... லக்ஷ்மியம்மாவும் அங்கே வந்துவிட்டார். முதலாளி பேரனை அடிப்பதை பார்த்து,

“அய்யா... எதுக்கய்யா அவனைப் போட்டு அடிக்கிறீங்க? அவன் என்ன தப்பு செய்தான்?” அவர் கதறியழ...

“என்ன தப்பு செய்தானா? அதை அவனிடமே கேள்” பொற்கொடி ஆவேசமாய்க் கத்த...

“அரசு அப்படி என்ன தான் செய்தாய்?” பேரனிடம் கேட்க, பரமேஷ்வர் தன்னை அடித்ததில் இளரத்தமான அவன் கொதித்துப் போயிருக்க,

“நான் அல்லியை காதலிக்கிறேன் அம்மாயி... அதுக்குத்தான் அவங்க அடிக்கிறாங்க... நான் ஏன் அவளைக் காதலிக்கக் கூடாது? எனக்கு என்ன அந்தத் தகுதியில்லையா?” காதலுக்கு ஆணும், பெண்ணுமாய் இருப்பதே தகுதி என்று நினைத்து அவன் திமிராய் பேச...

“அரசு என்ன வார்த்தையடா சொல்லுகிறாய்... அவங்க நமக்குப் படியளக்கிற தெய்வம். அவங்க பெண் பேபிம்மாவை போய் நீ விரும்பலாமா? அதுக்கான தகுதி உனக்கு இருக்கா?” அந்த மூதாட்டி கதறிக் கொண்டு அழ...

“என் பெண்ணைக் காதலிக்க உனக்கு என்னடா தகுதி இருக்கு... வேலைக்கார நாயே...”

பரமேஷ்வர் ஆத்திரமாய்ச் சொல்லியவர் அவனின் முகத்தில் ஓங்கி குத்த... அவரின் அடியில் அவன் நிலைக்குலைந்து கீழே போய் விழுந்தான். வலது கையில் அவர் போட்டிருந்த மூன்று மோதிரமும் அவனின் இடது

கன்னத்தைப் பதம் பார்க்க... அதிலிருந்து ரத்தம் சொட்டியது. வயதான மூதாட்டி கதறிக் கொண்டே பேரன் அருகில் வர... அவனோ தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தவன்,

“இதற்கெல்லாம் பின்னால் நீங்க வருத்தப்படப் போறீங்க... நீங்க என்ன அடித்தாலும் நான் உங்கள் மகளைக் காதலிப்பேன்... அவளையும் என்னைக் காதலிக்க வைப்பேன். நீங்களே எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கத் தான் போறீங்க...” அவன் அவருக்குச் சவால் விட...

“அரசு... கொஞ்சம் பேசாமல் இருப்பா...” லக்ஷ்மியம்மா அவனை அடக்க...

“தகுதியில்லாத உனக்கு என் பெண்ணைக் கொடுக்க மாட்டேன்... என் பொண்ணே உன்னைக் காதலிச்சாலும் நான் உன்னை என் மாப்பிள்ளையா ஏத்துக்க மாட்டேன்... அதையும் மீறி நீங்க கல்யாணம் பண்ணிக்க நினைச்சா உங்க கல்யாணத்தை நான் நடத்த விட மாட்டேன்...” கோபத்தில் கர்ஜித்தவர் அவனின் முகத்தில் தன் காலை கொண்டு எட்டி உதைத்தவர்...

அவன் எதிர்பாராத தருணத்தில் அவனின் முகத்தில் தன் பூட்ஸ் காலை கொண்டு அழுத்தி மிதித்தார். அப்படியிருந்தும் அவர் ஆத்திரம் தணியவில்லை. அவனின் தலை முடியை பிடித்துத் தூக்கியவர்... அருகிலிருந்த கண்ணாடி டீப்பாயில் அவனின் முகத்தை வேகமாய்த் தள்ளி மோதினார். இதையெல்லாம் பார்த்து கதறியழ தான் முடிந்தது அந்த மூதாட்டியால்...

பரமேஷ்வர் தன் ஆத்திரத்தை அடக்கி கொண்டு நிதானமாய் யோசித்திருந்தால் இந்தப் பிரச்சினையை ஒன்றுமில்லாமல் செய்திருக்கலாம். அவனுக்கு எடுத்து சொல்லி புரிய வைத்து திருத்தி இருக்கலாம். இதை எதையும் அவர் செய்யவில்லை. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதற்கிணங்க அவர் செய்த செயலானது பின்னர் அவருக்கு வினையாய் வளர்ந்து நின்றது.

“நீங்களே என்னை மாப்பிள்ளையாய் ஏத்துக்கிட்டு உங்க பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பீங்க... அதேமாதிரி உங்க பொண்ணை என்னைக் காதலிக்க வைத்தே தீருவேன்...”

டீப்பாயில் இருந்த கண்ணாடி உடைந்து அவன் முகத்தைக் குத்தி கிழித்து ரத்தம் சொட்டிய அந்த நிலையிலும் அவன் மீண்டும் அவருக்குச் சவால் விட்டு விட்டு அப்படியே மயங்கி விழ...

“டேய் இவ்வளவு அடி வாங்கியும் இன்னமும் உனக்குக் கொழுப்பு அடங்கவில்லை” ஆங்காரமாய்க் கத்தி கொண்டே அவனை அடிக்க அவர் வர...

“வேணாம் அய்யா... இதுக்கு மேல் அடித்தால் அவன் செத்து விடுவான்... உங்கள் வழிக்கு வராமல் அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். இது என் மேல் சத்தியம்” அந்தப் பெரியவள் சத்தியம் செய்து கொடுக்க...

“நீ சொல்வதால் விடுகிறேன்... இப்போதே இவனைக் கூட்டி கொண்டு இடத்தைக் காலி செய்... உன் சம்பள பணத்தை வாங்கிக் கொண்டு போ. இனிமேல் நீ இங்கு வருவதை நாங்கள் விரும்பவில்லை”

கொஞ்சமும் இரக்கமில்லாமல் அவர்கள் இருவரும் கூற... சரியென்று சொன்ன லக்ஷ்மியம்மா அழுது கொண்டே பேரனை மருத்துவமனையில் சேர்த்தார்.

இவ்வளவு விசயங்கள் வீட்டில் நடந்த போது அல்லி பள்ளிக்கு சென்றிருந்தாள். பள்ளி விட்டு வந்தவள் லக்ஷ்மியம்மாவை தேட... அவள் அன்னையோ அவர் உடல்நலம் இல்லாமல் ஊருக்கு சென்று விட்டார் என்று சமாளித்து விட... அதையே அல்லியும் நம்பிவிட்டாள். அதனால் அவளை உயிருக்கு உயிராய் ஒரு ஜீவன் அவளை நேசித்ததை அவளும் அறியாமலே போனாள்.

அரசுவின் முகத்திலிருந்த காயங்கள் ஓரளவுக்குக் குணமாகிய போதும் அதன் தடங்கள் மாறவில்லை. அது

அழியாத தழும்பாய் அவன் முகத்தில் நிலைத்து விட்டது. உடம்பு கொஞ்சம் தேறியதும் அவன் அல்லியை காண விருப்பட... அவளை அவன் ஒருபோதும் சந்திக்கக் கூடாது என்று லக்ஷ்மியம்மா தன் மேல் சத்தியம் வாங்கிக் கொண்டார். அதற்கு மேல் அவரும் கண்டியில் இருக்க விருப்பப்படாமல் அவனையும் அழைத்துக் கொண்டு கொழும்புக்கே வந்துவிட்டார்.

பாட்டிக்காக அவளை மறந்துவிட்டது போல் அவன் நடித்தாலும் அவனின் அடி மனதில் அவள் மீதான காதல் அதிகரித்துக் கொண்டே போனது. அதையெல்லாம் விடப் பரமேஷ்வர் கொடுத்த வலி, அவமானம் அவன் மனதை விட்டு சிறிதும் அகலவில்லை. அவனுக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால்... அவரை உண்டு இல்லையென்று ஆக்கி விடவேண்டும் என்ற வெறி அவனுள் ஒளிர்ந்து கொண்டே இருந்தது. அந்த நேரத்தில் தான் அவனின் தாய் இறந்து அவனின் வாழ்க்கைக்கு ஒளியேற்றி வைத்தார்.

அன்னையின் பணத்தில் தொழில் செய்து முன்னேறியவன் பரமேஷ்வரை தான் பழி தீர்ப்பதற்காக ஓடும் நீரில் உறுமீனுக்காய் ஒற்றைக் காலில் தவமிருக்கும் கொக்கு போல் நல்ல சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான். அவனின் நல்ல நேரமோ அவரின் கெட்ட நேரமோ என்னவோ மனிதர் கடனில் சிக்கி தவித்தார். அவனும் அவருக்கு உதவுவது போல் அவருடன் நட்பு பாராட்டியவன் கடைசியில் அவன் சொன்னது அவரின் மகளையும் அவரிடம் இருந்து கவர்ந்து கொண்டு வந்துவிட்டான்.

அவனின் இந்தப் போராட்டம் யாருக்காக? எல்லாம் அவளுக்காகத் தானே... அவள் மீது அவன் வைத்த காதலுக்காகத் தானே... அதை அவள் என்று உணர போகிறாள்? என்று நினைத்தவனுக்குப் பெருமூச்சு கிளம்பியது. அவளிடம் அசைவை உணர்ந்து அங்கிருந்து எழுந்தவன், சத்தமில்லாமல் கீழே படுக்கை விரித்துப் படுத்துக் கொண்டான்.

ஏதோ உள்ளுணர்வு உந்த விழித்த அல்லி கீழே படுத்திருந்த அரசுவை கண்டாள். அந்த நிலையிலும் அவனின் கண்ணியத்தை அவள் மனம் குறித்துக் கொண்டது. என்ன தான் அவன் அவளைச் சீண்டி பேசினாலும் ஒருபோதும் வரம்பு மீறி நடக்கவில்லை என்பதை உணர்ந்தாள். ஆனாலும் அவன் அவளைத் திருமணம் செய்த விதம் அவளின் நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தி... அவனிடத்தில் அவளைக் கோபம் கொள்ளச் செய்தது.

அவனின் மனதில் அவளின் தந்தை கொடுத்த வலி, வேதனையானது ஆறாத ரணமாய் இருக்க... அவன் அவளை மிரட்டி திருமணம் செய்து கொண்டது அவள் மனதில் நெருப்பாய் கொதிக்க... இருவரின் மனதிலும் இருக்கும் தகிக்கும் வெம்மை என்று தான் தீர போகிறதோ?

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தன்னை யாரோ எழுப்புவதை உணர்ந்த அல்லி, “ப்ளீஸ்ம்மா... இன்னும் கொஞ்ச நேரம் தூங்குறேனே...” கண்களைத் திறவாமல் கூறியவள் மீண்டும் விட்ட உறக்கத்தைத் தொடர்ந்தாள்.

“ஹேய் அல்லிராணி... இப்போ மணி எத்தனை தெரியுமா?” என்ற குரல் சீறலாய் அவளின் காதுக்கருகில் ஒலிக்க...

‘இது... இந்தக் குரல்...?’ என்ன யோசித்தும் அவளுக்கு ஞாபகம் வரவில்லை.

பழக்கமில்லாத குரல் காதில் ஒலிக்கவும் திடுக்கிட்டு போய் எழுந்தவள் தன் முகம் அருகிலிருந்த அரசுவின் முகம் கண்டு வீலென்று அலறினாள். அவளின் அலறலில் அவனின் முகம் பேயறைந்தது போலானது.

“சாரி... ரியலி சாரிம்மா...”

தட்டுத் தடுமாறியவனாய் அவளிடம் மன்னிப்பு கேட்டவன், அருகிலிருந்த மேஜையில் காபி கோப்பையை வைத்து விட்டு வேகமாய் அங்கிருந்து நகர்ந்து பால்கனி பக்கம் போய்த் தஞ்சம் புகுந்தான்.

அவளுக்குக் கொஞ்ச நேரம் எதுவும் புரியவில்லை. தான் எங்கிருக்கிறோம்? இவன் யார்? என்று அவளுக்குக் குழப்பமாய் இருந்தது. கைகளில் தலையைத் தாங்கியபடி குனிந்தவள் கண்ணில் கழுத்தில் தொங்கி கொண்டிருந்த தாலி பட... நேற்று நடந்த திருமணம் அவளுக்கு ஞாபகத்தில் வர... சட்டென்று தன் நெற்றியில் தானே அறைந்து கொண்டாள்.

‘ச்சே... நேற்று கல்யாணமானதை கூட மறந்து... அவனின் வீட்டில் இருப்பதையே உணராமல் இப்படியா இருப்பாய் அல்லி?’ தன்னைத் தானே கடிந்து கொண்டாள் அவள்.

அதிலும் அவளின் அலறலில் அவன் முகம் போன போக்கு அவளுக்கு ஞாபகத்தில் வர... மனதுக்குள் நொந்து

போனாள். அவனின் முகத்தைப் பார்த்து தான் தான் அப்படி அலறியதாய் அவன் நினைத்து கொண்டானா? அதை நினைக்கும் போதே அவளுக்கு மிகவும் கஷ்டமாய் இருந்தது.

பொதுவாய் அவள் நல்ல பெண் தான். அவன் அவளிடத்தில் நடந்து கொண்ட விதத்தில் அவளுக்கு அவன் மேல் கோபம் இருந்தது உண்மை தான் என்றாலும்... அவன் மனம் நோகும் படி தான் அப்படிக் கத்தியிருக்கக் கூடாது என்று வருந்தினாள். அவனைத் தேடி அவளும் பால்கனி பக்கம் வந்தாள்.

அங்கே பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டு எங்கோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவன் முகம் வேதனையில் ஆழ்ந்திருந்தது அப்பட்டமாய்த் தெரிந்தது.

‘எல்லோரையும் படுத்தி எடுக்கும் இவனுக்குக் கூட வேதனையிருக்குமோ?’ மனதுக்குள் சந்தேகமாய் எண்ணியவள் அவனைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றிருந்தாள்.

அலுவலகத்திற்குக் கிளம்பியிருந்தான் போலும்... அது அவன் அணிந்திருந்த உடையிலேயே தெரிய... அவள் அறைக்குள் எட்டி பார்த்து மணி என்ன என்று பார்த்தாள். பத்து மணி என்றது கடிகாரம்...

“க்கும்...” அவள் தன் வரவை அவனுக்கு உணர்ந்த எண்ணி தொண்டையைக் கனைக்க...

அதில் திரும்பியவன் அவளின் முகம் பார்த்தான். அவன் கண்ணில் தெரிந்த அடிப்பட்ட வலியில் அவள் பேச்சிழந்தாள். தன்னை அவனுக்கு உணர்த்திடும் வேகத்தில் அவள் பேச்சை ஆரம்பித்தாள்.

“நான் வேண்டுமென்றே கத்தவில்லை... நான் இன்னமும் என் அம்மா வீட்டில் இருப்பதாய் நினைத்து தூங்கி கொண்டிருந்தேனா... திடீரென்று உன்னைக் கண்டதும்

பயந்து அலறிவிட்டேன். மத்தபடி உன் முகத்தைக் கண்டு...” எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தியவள்,

“நான் உன்னை ஹர்ட் பண்ணியிருந்தால் ஐயம் ரியல்லி சாரி...” அவளின் பேச்சில் அவன் முகம் மலர்ந்தது.

“பரவாயில்லை...” என்றபடி அவளருகில் வந்தவன் அவள் முகத்தில் படிந்திருந்த முடிகற்றையை விலக்கி அவள் காது பக்கமாய்க் கொண்டு செல்ல... அவளோ வேகமாய் அவனின் கையைத் தட்டிவிட்டவள்,

“என்னைத் தொட்டு பேசும் வேலை வச்சுக்காதே... நான் மன்னிப்பு கேட்டது நான் நடந்து கொண்ட முறை தவறு என்று எனக்குத் தோணியதால்... அதுக்காக நான் உன்னை முழுவதுமாய் மன்னித்துவிட்டேன் என்று பொருளல்ல. நமக்குள் தீர்க்கப்படாத கணக்கு இன்னமும் அப்படியே தான் இருக்கிறது. உன் மீதான என் கோபமும் அப்படியே தான் இருக்கிறது” படபடவென அவள் பொரிய... அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தவன்,

“என்றாவது ஒருநாள் உனது இந்தக் கோபமும் தவறுன்னு உனக்குப் புரியும்...” அவளுக்குப் புரியும் படி அவன் எடுத்து சொல்ல...

“இந்தக் கோபம் நான் சாகும் வரை என்னை விட்டு மறையாது... இந்த மாதிரி ஒரு காரியத்தைச் செஞ்ச உன்னை எந்தப் பெண்ணும் மன்னிக்க மாட்டாள். அதற்கு நானும் விதிவிலக்கு அல்ல...”

குரலை உயர்த்தாமல் அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் பல்லை கடித்துக் கொண்டு அவள் பேச... அவன் பதில் ஒன்றும் கூறாமல் அவளையே பார்த்தான்.

அப்போது தான் எழுந்திருந்ததால் அவளின் உடை ஆங்காங்கே கசங்கி போயிருந்த போதிலும் அதிலும் அழகாய் தெரிந்தவளை பார்க்க பார்க்க அவனுக்குத் தெவிட்டவில்லை. காலை வெயிலில் முகத்தில் அரும்பிய

வியர்வைத் துளிகள் கூட அவளுக்கு அதீத அழகை கொடுக்க... அவளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் பேசிய பேச்சு எதுவும் அவனின் மனதை பாதிக்கவில்லை. சிறிது நேரம் முன்பு அவளின் தவறை உணர்ந்து அவள் மன்னிப்பு கேட்டது போல்... இந்தத் திருமணத்துக்குப் பின்னணியில் அவளின் மீதான தன் காதல் இருக்கிறது என்று அவளுக்குத் தெரியும் போது நிச்சயம் அவள் தன்னை உணர்ந்து கொள்வாள் என்று உறுதியாய் நம்பினான்.

அவனின் பார்வையில் தெரிந்த மாற்றத்தில் அவஸ்தையாய் நெளிந்தவள், “நான் குளிக்கப் போகணும்...”

“அதுக்கு எதுக்கு என்னிடம் பெர்மிசன் கேட்கிற? குளிக்கப் போக வேண்டியது தானே...” என்றவன்,

“ஒருவேளை உன்னைக் குளிக்க வைக்க என் ஹெல்ப் வேணுமா? நான் ரெடி அல்லிராணி...” கண்ணைச் சிமிட்டி அவன் சொல்ல...

“உன் கண்ணு ரெண்டையும் அப்படியே பிடுங்கி விடுவேன் பிடுங்கி...” கையை அவன் கண் முன் உயர்த்தியவள்,

“பெரிசாய் ஜம்பமாய் என் வீட்டிலிருந்து எந்தவொரு பொருளையும் கொண்டு வர கூடாதுன்னு சொல்லிட்ட... இப்போ நான் குளிச்சிட்டு என்ன ட்ரெஸ் போடுறது?” அவள் சொல்லவும் தான் அவள் சொன்னதன் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது.

“வா...” என்று அவளை அழைத்தவன்... அங்கிருந்த பெரிய அலமாரியை திறந்து,

“இதில் உனக்கு வேண்டியதிருக்கு...” என்க...

அதில் உள்ளவற்றைப் பார்வையிட்டவள், “நாட் பேட்... பெண்கள் உடை விசயத்தில் நல்ல எக்ஸ்பீரியன்ஸ்

இருக்கும் போலிருக்கே...” நக்கலடித்தவளின் வாயை மூட வேண்டும் என்பதற்காகவே அவன்,

“இதுவரை எத்தனையோ கேர்ள் பிரெண்ட்ஸ்க்கு வாங்கிக் கொடுத்திருக்கிறேன்... அது தான் இப்போதும் எனக்குக் கை கொடுத்திருக்கிறது. எல்லாம் அந்த எக்ஸ்பீரியன்ஸ் தான்ம்மா...” அவனின் பேச்சில் அவளின் முகம் ஒரு நொடிக்கும் குறைவான நேரம் சுருங்கி சட்டென்று இயல்புக்கு வந்தது.

“அந்தக் கேர்ள் பிரெண்ட் யாரையாவது நீ மணம் முடித்திருந்தால் நானும் தப்பியிருப்பேன்...” அலட்சியம் காட்டி சொன்னாலும் அவளுக்குள் சுருக்கென்று ஒரு வலி புறப்பட்டது என்னமோ நிஜம் தான்.

ஏற்கெனவே பிடிக்காத திருமணத்தால் அவனை வெறுப்பவள்... இதில் அவனுக்குப் பெண்கள் சகவாசம் உண்டு என்றால்... அவளால் அதைக் கொஞ்சமும் தாங்கி கொள்ள முடியவில்லை. தன்னை இந்த இழிநிலைக்குத் தள்ளிய விதியை தான் அவள் மனதுக்குள் சபித்தாள்.

“முடித்திருக்கலாம் தான்...” அவன் இழுக்க...

“ஏன் உன் அழகு கண்டு எவளும் மணக்க முன் வரவில்லையா?”

‘உன் திமிர் அடங்கவே அடங்காதா?’ மனதுக்குள் வெதும்பியவன்,

“மணக்க வந்தார்கள் தான்... ஆனால் என்ன செய்ய? என் விதி... பணத்தை வசூலிக்கவென்று உன்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதாய் போச்சு...”

சோகமாய்ச் சொன்னவனைக் கண்டு முறைத்தவளுக்குக் கண்கள் கலங்கியது. அதை அவனிடம் காட்டி கொள்ள மனம் இல்லாமல் அலமாரியினுள் உடையைத் தேடுவது போல் தன் முகத்தை மறைத்து கொண்டாள்.

“சரி நீ குளித்துவிட்டு வா... நான் கீழே போய் வெய்ட் பண்றேன்...” என்றவன் அங்கிருந்து செல்ல...

அவ்வளவு நேரம் அவள் தனக்குள் அடக்கி வைத்திருந்த அழுகையானது கேவலாய் வெளிப்பட்டது. கதவு வரை போனவன் அவளின் கேவல் சத்தத்தில் திரும்பி பார்த்தான். அப்படியே மடங்கித் தரையில் தலை குனிந்து அமர்ந்திருந்தவளை கண்டவன் மனம் கேட்காமல் அவளருகே வந்தான்.

தன்னருகில் கீழே மண்டியிட்டு அமர்ந்தவனைக் கண்டு நிமிர்ந்து பார்த்தவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு,

“இந்தக் கல்யாணத்தால் உனக்கும் நிம்மதியில்லை... எனக்கும் நிம்மதியில்லை... பேசாமல் என்னை என் வீட்டுக்கு அனுப்பிவிடு. அப்படியே நீயும் வேறு பெண்ணை மணந்து கொள்”

“எனக்கு நிம்மதியில்லைன்னு யார் சொன்னா? நான் சந்தோசமா தான் இருக்கேன். நீயா ஏதேதோ நினைச்சிக்கிட்டு இருக்காதே” அவளின் கண்ணீர் பார்த்தோ என்னமோ அவன் தன் மனதின் உண்மை நிலையை எடுத்து கூற...

அவளோ அதைக் கொஞ்சமும் உணரவில்லை. அவர்களின் திருமணத்திற்கு அடிப்படை காரணம் பணம் மட்டுமே என்று அவள் நம்பினாள். அதற்குப் பின்னால் அவனின் காதல் இருக்கும் என்று அவள் கொஞ்சமும் எண்ணவில்லை. முதலில் அவள் அவனைப் புரிந்து கொண்டால் தானே அவனின் காதலை புரிந்து கொள்வதற்கு?

“என் சந்தோசத்தைக் குழி தோண்டி புதைத்து விட்டு நீ மட்டும் சந்தோசமாய் இருக்கிறாயா? இருப்பாய் இருப்பாய்...” முகத்தை வெட்டி கொண்டு அவள் சொல்ல... அவள் சகஜமான மனநிலைக்கு வந்துவிட்டதை உணர்ந்தவன் அமைதியாய் சிரித்தபடி எழுந்து,

“சீக்கிரம் குளித்துவிட்டு வா... எனக்குப் பசி உயிரை எடுக்கிறது” என்றவன் அறையை விட்டு வெளியேறினான்.

“நான் தான் உன் உயிரை எடுக்க முடியல... அதாவது உன் உயிரை எடுக்கட்டுமே...” முணுமுணுத்தவள் வெகுநிதானமாய்க் குளித்துவிட்டு வந்து அதை விட நிதானமாய் உடையை மாற்றிக் கொண்டு கீழே வந்தாள்.

வெள்ளை முக்கால் பேண்ட்டும், இளம் நீல வண்ணத்தில் மேல் சட்டையும் அணிந்து... குளித்ததால் நீர் சொட்டிய குட்டை முடியை விரித்துப் போட்டுக் கொண்டு துள்ளியபடி மாடிப்படியில் இறங்கி வந்தவளை கண்டு அவன் கண்ணிமைக்க மறந்தான். அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாலும் அவனைக் கண்டு கொள்ளாமல் அவள் உணவு மேஜையை நோக்கி செல்ல... அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“பேபிம்மா... நல்லா தூங்கினாயா?” லக்ஷ்மியம்மா அவளிடம் கேட்க,

“ம்... நல்லா தூங்கினேன்...” என்று அவள் கூறும் போதே...

“நாங்க தூங்க விடியற்காலை ஆகிவிட்டது அம்மாயி... அதான் உங்க பேபிம்மா எழும்ப இவ்வளவு நேரம்”

அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியவன் உல்லாசமாய்ச் சிரிக்க... பெரியவள் சின்னவர்களுக்குத் தனிமை கொடுக்க எண்ணி சிரித்தபடி அங்கிருந்து அகன்றார்.

“எதுக்குடா அப்படிச் சொன்ன?” அவனை முறைத்து பார்த்தாள்.

“புதிதாய் திருமணமானவர்கள் வேறு எப்படி இருப்பார்களாம்?” அவனின் கிண்டல் பேச்சின் அர்த்தம் உணராமல் அவள் அவனுடன் சண்டைக்கு வந்தாள்.

“புதிதாய்த் திருமணமானால் என்ன? ம்...”

“போச்சுடா... இதுக்கும் நான் உனக்கு ட்யூசன் எடுக்கணுமா? உனக்குப் புரியாது... இதெல்லாம் பெரியவங்க விசயம்... நீ பேபி போல் ஃபீடிங் பாட்டிலை வாயில் வைத்து பாலை குடித்துக் கொண்டிரு...” அவன் கேலி பேச...

“ஏன் எனக்குப் புரியாது? புதியதாய் திருமணமானவர்கள் தூங்க கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கிறதா?”

“கடவுளே... நீ உண்மையில் தத்தி தான் அல்லிராணி...” என்று சலித்துக் கொண்டவன்,

“இங்கே வா...” என்க...

“முடியாது போடா...” என்று அவள் சிலிர்த்துக் கொள்ள...

“சரி நானே வர்றேன்...” என்றவன் அவள் காதுக்கருகில் குனிந்து ரகசியம் பேச... அவனின் பேச்சில் அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது.

“யூ ராஸ்கல்...” உணவு மேஜையின் மீதிருந்த கரண்டியை தூக்கி அவன் மேல் ஏறிய... அதை லாவகமாய்ப் பிடித்தவன்,

“இதுக்கே இப்படியென்றால் எப்படி? இன்னமும் இருக்கு... சொல்லவா?” மீண்டும் அவள் அருகில் குனிய,

“வேண்டாம்...” அவள் பின்னால் நகர...

“ஓ... சொல்ல வேண்டாம் மடையா... செயலில் காட்ட வா என்கிறாயா? அதுவும் சரி தான்...” என்றவன் தன் முழுக்கை சட்டையை முழங்கை வரை மடித்து விட்டுக் கொண்டு அவளருகில் வர...

“சொன்னால் கேளு அரசு... கிட்டே வராதே...”

அவள் சொல்வதைச் சட்டை செய்யாமல் அவன் அருகில் வருவதைக் கண்டு அவள் என்ன செய்வது என்று தெரியாமல் முழிக்க... அந்நேரம்,

“பேபிம்மா...” என்று பொற்கொடியின் குரல் கேட்க...

“அம்மா...” மகிழ்ச்சியுடன் அவள் வாயிலை பார்க்க... அவனின் முகமோ உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது.

அவள் அன்னையைக் காண போக வேண்டுமென்றால் அவனைத் தாண்டி தான் போக வேண்டும். ஆனால் அவன் சிறிதும் அந்த இடத்தை விட்டு அகலுவதாய் இல்லை. அவள் பரிதாபமாய் அவனைப் பார்த்தாள். அவளின் பார்வையில் என்ன கண்டானோ, பேசாமல் வழியை விட்டு விலகி நின்றான். அவன் விலகியதும் தான் தாமதம் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் வேகமாய் வாயில் பக்கம் ஓடினாள்.

“அம்மா, அப்பா...” என்று இருவரையும் அணைத்துக் கொண்டு அவள் அழ... அவர்களின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

“நல்லாயிருக்கிறாயா பேபிம்மா...” அவளை மேலும் கீழும் பார்த்துக் கொண்டு அவர்கள் வினவ...

“நல்லாயிருக்கேன்... முதல்ல நீங்க உள்ளே வாங்க...” அவர்கள் இருவரையும் அவள் உள்ளே அழைக்க...

அவளுக்குப் பின்னால் நின்றிருந்த அரசுவை கண்டு அவர்கள் இருவரும் யோசனையாய் நின்றனர். அவர்களைத் தொடர்ந்து தன் பார்வையைத் திருப்பியவள் அங்கே அவனைக் கண்டதும் திகைத்தவள்... பின் சமாளித்துக் கொண்டு அவன் அருகில் சென்றவள்,

“என்ன தான் இருந்தாலும் அவர்கள் என் அம்மா, அப்பா...” அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொல்ல...

“அதுக்கு...?” அவனின் குரலிலோ இல்லை முகத்திலோ சிறிதும் இளக்கமில்லை. அதில் அதிர்ந்து போனவளாய் அவன் முகம் பார்க்க... சிறிது நேரம் பேசாமல் இருந்தவன்,

“நான் கிளம்புகிறேன்... நீ உன் அம்மா, அப்பாவை அழைத்து வைத்து கொஞ்சு...” என்று கூறியவன்,

“ஆனால் ஒண்ணு மட்டும் ஞாபகத்தில் வை... அப்படியே அவர்களுடன் போய்விடலாம் என்று மட்டும் நினைக்காதே... உன் நிலைமை இன்னும் அதே நிலையில் இருப்பதாய் எனக்கு நினைவு... உனக்கும் அந்த நினைவு இருக்குமென்று நினைக்கிறேன்” மிரட்டும் குரலில் கூறியவன் வாயிலை நோக்கி சென்றான். அவளின் பெற்றோரை வாவென்று கூடக் கேட்காமல் அவர்களை முறைத்தவாறு சென்றவன் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

“நீங்க வாங்க...” பெற்றோரை அவள் அழைக்க...

அவர்கள் இருவரும் அந்த வீட்டை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தனர். அதிலும் அரசு இவர்களைக் கண்டதும் முகத்தைச் சுளித்ததும்... பின் தங்கள் பெண் அவனிடம் ஏதோ சொன்னதும் அவன் சம்மதமாய்த் தலையசைத்துவிட்டு சென்றதையும் அவர்கள் கவனத்தில் விழுந்தது. அதை வைத்து அவர்களின் மனதில் பெரிய திட்டம் ஒன்று உருவானது.

“நீங்க உட்காருங்க... நான் ஆயாம்மாவை அழைத்து வர்றேன்...” என்றவள் லக்ஷ்மியம்மாவை அழைக்க அவரின் அறைக்குள் நுழைந்தாள்.

“ம்ஹூம்... வேலைக்காரர்களுக்குக் கிடைச்ச வாழ்வை பார்த்தீங்களா?”

பொற்கொடி பெருமூச்சு விட்டுக் கொண்டே அந்த வரவேற்பறையைச் சுற்றி தன் கண்களைச் சுழற்ற... அதைப் பரமேஷ்வரும் ஆமோதித்தார்.

“வாங்க அய்யா...” இருகரம் கூப்பியபடி வந்த லக்ஷ்மியம்மா அவர்களின் முன் பவ்யமாய் நிற்க... அதைக் கண்டு இருவர் முகத்திலும் கர்வம் மிளிர்ந்தது.

“ஆயாம்மா... நீங்க இருங்க... நான் போய்க் குடிக்க ஏதாச்சும் கொண்டு வர்றேன்...” என்றவள் உள்ளே செல்ல...

“அய்யா... என் பேரன் பண்ணியது தப்பு தான்... ஆனால் பேபிம்மா மேல் ரொம்ப அன்பு வச்சிருக்கிறான்... பேபிம்மாவை அவன் நல்லா பார்த்துக்குவான். அதுக்கு நான் உத்திரவாதம் தர்றேன்...” பெரியவள் பணிவாய் பேச... அவர்களுக்கு எரிச்சலாய் வந்தது.

“உன் பேரன் பண்ணிய காரியத்துக்கு ஜெயிலுக்குப் போக வேண்டியவன்... ஏதோ உன் பேரன் என்பதால் விட்டு வைத்திருக்கிறோம்...” அலட்சியமாய்ப் பரமேஷ்வர் சொல்ல... அதைக் கண்டு அவர் பதறிப் போனார்.

“வேண்டாம் அய்யா... அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க...”

“அது உன் பேரன் என் பெண்ணை நல்லா வச்சுக்கிறதில் இருக்கு...” பொற்கொடி சொல்லும் போதே... அல்லி அங்கே வந்துவிட... அவர்களின் பேச்சு நின்றது.

லக்ஷ்மியம்மா இன்னமும் நின்று கொண்டே பேசி கொண்டிருப்பதைக் கண்டு பதறியவளாய், “ஆயாம்மா நீங்க ஏன் நின்னுட்டு இருக்கீங்க? முதல்ல உட்காருங்க...” அவரின் வயதை முன்னிட்டு அவள் சொல்ல...

அதைக் கண்டு அவளின் பெற்றோருக்கு உள்ளுக்குள் எரிந்தது. வேலைக்காரிக்கு மகள் அதிகப்படியாய் சலுகை கொடுப்பதாய் அவர்கள் எண்ணினார்கள்.

அதன் பின் எல்லோரும் சாதாரணமாய்ப் பேசி கொண்டிருக்க... லக்ஷ்மியம்மா அவர்களைப் பேசி கொண்டிருக்கச் சொல்லிவிட்டு தனது அறைக்கு அவர் செல்ல... இது தான் சாக்கு என்று பொற்கொடி அவளைத் தனியே அழைத்துச் சென்று,

“என் கண்ணே... ஒரே நாள் இரவில் அவனை உன் முந்தானையில் முடிந்து வைச்சுட்டியே... சாமார்த்தியசாலி...” மகளின் கன்னம் வழித்துக் கொஞ்ச... அவளோ புரியாமல் அவரைப் பார்த்தாள்.

“என்னம்மா சொல்றீங்க?”

“என்ன புரியாத மாதிரி கேள்வி கேட்கிற? உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவன் எங்களை வீட்டுக்குள் அழைத்ததை நாங்க கவனிக்கத் தான் செஞ்சோம். அந்தளவுக்குப் பயலுக்கு உன் மேல் மயக்கம். இப்படியே அந்த மயக்கத்தை உனக்குச் சாதகமா பயன்படுத்திக்கோ பேபிம்மா. அவனிடம் உள்ள நம் கடன்பத்திரத்தை எங்களிடம் வாங்கிக் கொடுத்து விடு கண்ணம்மா. உனக்குப் புண்ணியமாய்ப் போகும்...”

ஏற்கெனவே அரசு அவளைக் காதலித்ததை மனதில் வைத்துக் கொண்டு பொற்கொடி பேச... தாயின் பேச்சில் அவள் அவரைப் புரியாமல் பார்த்தாள். அப்போதாவது அவர் அவன் அவளைக் காதலித்ததைச் சொல்லியிருக்கலாம்... ஏனோ அவர் அதைச் சொல்லவில்லை.

“அம்மா நானே நீங்க எப்போடா பணத்தைக் கொண்டு வந்து அவன் மூஞ்சியில் விட்டெறிந்து விட்டு என்னைக் கூட்டிட்டு போவீங்கன்னு காத்துக்கிட்டு இருக்கேன்... இதில் நீங்க வேற...” தன் ஆத்திரத்தை அன்னையிடம் கொட்ட...

“பணத்தைக் கொண்டு வந்து மூஞ்சியில விட்டெறியறதா... கொஞ்சமாவது அறிவோடு தான் பேசுறியா? அவன் கொடுத்தது ஒரு ரூபா, ரெண்டு ரூபான்னு நினைச்சியா? இது கோடி ரூபாய் சமாச்சாரம்... அதைப் போய்த் திருப்பிக் கொடுக்கச் சொல்றியே?” பொற்கொடி மகளை ஒரு மாதிரியாய் பார்த்துக் கொண்டு பேச...

“அதுக்காக... அவன் கூட என்னை வாழ சொல்றிங்களா? என்னால் அது முடியாது” கைகளைக் கட்டி கொண்டு அழுத்தமாய்த் தாயின் கூற்றை மறுத்தவள்... அவரின் முகம் பார்க்க விரும்பாமல் வேறு பக்கம் பார்த்தாள்.

“இங்கே பார் பேபிம்மா... வலிய வர்ற சீதனத்தை எட்டி உதைக்கக் கூடாதும்மா... அவன் கூட வாழ்றது உனக்குச் சகிக்க முடியாத ஒண்ணா தான் இருக்கும். கண்ணை மூடி கொண்டால் எல்லாம் சகிக்கக் கூடியதாய் மாறிவிடும். இல்லை இருட்டில் அவனின் முகம் தான் உனக்குத் தெரிய

போகுதா?” என்ற தாயின் பேச்சில் அதிர்ந்து தான் போனாள்.

“அம்மா... நேற்று நீங்கள் பேசியது என்ன? இன்று நீங்கள் பேசுவது என்ன?” அருவருப்பில் முகத்தைச் சுழித்துக் கொண்டு அவள் பேச...

“நேற்று இரவு முழுவதும் நான் நல்லா யோசிச்சுப் பார்த்தேன் பேபிம்மா... சொத்து முழுவதையும் இழந்து நடு ரோட்டில் நிற்கும் நிலையை என்னால் கொஞ்சமும் நினைச்சு பார்க்க முடியல. உனக்கே தெரியும்... எனக்கு ஏசி இல்லாமல், கார் இல்லாமல் ஒரு நொடி கூட இருக்க முடியாது. இப்போ என்ன நடந்து போச்சுன்னு நீ இப்படிப் பேசற? எப்படி இருந்தாலும் என்றாவது ஒருநாள் உன்னை இன்னொருத்தன் கையில் பிடிச்சு கொடுக்க வேண்டியது எங்க கடமை... அது இவனாக இருந்துவிட்டு போகட்டும். நாங்களாய் பார்த்து வைத்த மாப்பிள்ளை என்று இவனை நீ நினைத்து கொள்... என்ன கல்யாணம் பண்ணிய முறை தான் தவறு... அதை எதையும் நீ மனதில் வைத்து கொள்ளாதே” நீளமாய்ப் பேசி முடித்த அன்னைக்கு அவளால் பதில் பேச முடியவில்லை.

‘நீங்க பார்த்து வைக்கும் மாப்பிள்ளையும்... இப்படி என் மனம் அறியாமல் மிரட்டி திருமணம் செய்த இவனும் ஒன்றா?’ அவளின் மனதில் துக்கம் பொங்கியது. ஆனால் அதை அவள் தன் அம்மாவிடம் சொல்லவில்லை. சொன்னாலும் அவர்களால் இவளை புரிந்து கொள்ள முடியாது.

அன்னை கூறியதை அப்படியே தந்தையிடம் கூறி அவள் புகார் படிக்க... அவரோ இன்னமும் ஒருபடி மேல் போய்,

“எப்படியாவது அவனிடம் பழகி அந்தக் கடன் பத்திரங்களை எடுத்துக் கொண்டு வந்துவிடு பேபிம்மா... அதன் பின் நானே உனக்கு வேறு மாப்பிள்ளை பார்த்து ஜாம் ஜாமென்று கல்யாணம் பண்ணி வைக்கிறேன்... அவன் கொடுத்த பணத்தைக் கொடுப்பது என்பது நம்மால் இயலாத காரியம்... இனியும் நாட்களைக் கடத்த கடத்த

வட்டியும் குட்டியும் சேர்ந்து இன்னமும் தொகை பெரிதாகி கொண்டே போகும். அதைக் கொஞ்சம் நினைத்து பாரம்மா...”

“அப்பா... அவன்... அவன்...” திகைத்து போய் அவள் பார்க்க...

“அவன் நம்மிடம் வேலை செய்த வேலைக்காரன் என்று எண்ணுகிறாயா? அதெல்லாம் பணம் என்ற ஒன்று மறைத்து விடும்மா... அதனால் உன் மனதை போட்டு குழப்பிக்காதே...” பேசி கொண்டு போனவர் மகளின் முகம் போன போக்கில் அப்படியே நிறுத்தினார்.

“இப்போ உங்க ரெண்டு பேரையும் நான் நல்லா புரிஞ்சிக்கிட்டேன். இப்படியொரு கல்யாணத்துக்கு என்னை நீங்க வற்புறுத்தும் போதே நான் உங்க குணத்தைப் புரிஞ்சிக்கணும். அதைப் புரிஞ்சுக்காம நான் இருந்தது என் குற்றம் தான். என்னைப் பாழும் கிணத்தில் தள்ளிவிட்டதும் இல்லாமல் கொஞ்சமும் மனசாட்சி இல்லாமல் உங்களால் எப்படிப் பேச முடியுது? உங்களுக்கு அவனே மேல்... மிரட்டி கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் என்னைக் கண்ணியமா தான் நடத்துறான்... ச்சீ... உங்க முகத்தைப் பார்க்கவே எனக்கு அருவருப்பா இருக்கு... தயவுசெய்து இனிமேல் என்னைப் பார்க்க வராதீங்க... கிளம்புங்க...” கைகள் இரண்டையும் கூப்பிச் சொன்னவள்... பின்பு கையை வாசல் பக்கம் காட்டினாள்.

“உன் நல்லதுக்குத் தான் சொல்றோம் பேபிம்மா...” இருவரும் தயங்க...

அவள் பதில் பேசாமல் மாடிப்படி ஏறி விறுவிறுவெனச் சென்றுவிட்டாள். அவள் போவதை கண்டவர்கள் மௌனமாய் அங்கிருந்து வெளியேறினர்.

அறைக்குள் வந்தவளுக்கு மனக்கொதிப்பு இன்னமும் அடங்கவில்லை. பெற்றோரே என்றாலும் அவர்களின் பேச்சை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

‘என்னை என்ன... பணத்தைக் கண்டதும் படுக்கும் வேசி என்று நினைத்தார்களா? பின்னே அவர்கள் சொல்வதற்கு அது தானே அர்த்தம்? அவனிடம் பணம் இருந்தால் அது அவனோடு... அதுக்காக நான் தரமிழந்து போக முடியுமா? இனி அவர்களாச்சு... அவனாச்சு... அவர்கள் பணம் கொடுத்தால் இவன் வாங்கிக் கொள்ளட்டும்... இல்லையென்றால் கோர்ட்டுக்கு போய் வாங்கிக் கொள்ளட்டும்... எனக்கென்ன வந்தது? இடையில் கிடந்தது நான் எதுக்குப் போராடணும்?’

மனதுக்குள் தீர்மானம் எடுத்தவள் அடுத்தக் கணம் அவனின் வீட்டை விட்டு வெளியேறினாள்.

அலுவலகத்தில் வேலையில் ஆழ்ந்திருந்த அரசுவுக்கு மனதுக்குள் ஏதோ ஒரு சஞ்சலம் உறுத்தி கொண்டிருக்க அவனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. அவனின் நினைவு முழுவதையும் அல்லியே ஆக்கிரமித்திருந்தாள். அவளின் பெற்றோர் ஏதேனும் சொல்லி அவர்களுடன் அவளை அழைத்துச் சென்று விடுவார்களோ என்று மனதுக்குள் அச்சம் படையெடுக்க... அதற்கு மேல் அவன் ஒரு நொடி கூடத் தாமதிக்கவில்லை... உடனடியாக வீட்டை நோக்கி புறப்பட்டான்.

வீட்டை அடைந்ததும் புயல் வேகத்தில் காரிலிலிருந்து இறங்கி வீட்டினுள் சென்றவன் கண்கள் தன்னவளை தான் தேடியது. வரவேற்பறையில் யாருமில்லாததை உணர்ந்து நேரே தன்னறைக்குச் சென்றான்... இல்லை இல்லை ஓடினான் என்பதே பொருந்தும். அங்கும் அவளைக் காணாது பால்கனி, குளியலறை என்று தேடியவன் தடதடவெனக் கீழே இறங்கி வந்தான்.

சுற்றும் முற்றும் பார்த்தவன் என்ன செய்வது என்று தெரியாமல் கைகளால் முடியை அழுந்த கோதி கொண்டவன்... பின்பு யோசித்தவனாய் தோட்டத்துப் பக்கம் வந்தான். தோட்டத்தைக் கண்களால் அலசியவன் கண்ணில் அவள் மட்டும் விழவே இல்லை.

‘ஒருவேளை அம்மாயி கூட இருக்கிறாளோ?’ மனதில் நினைத்தவன் அவரின் அறைக்குச் சென்றான். அங்கே ஓய்வாக அமர்ந்திருந்த லக்ஷ்மியம்மா பேரனின் வரவு உணர்ந்து திரும்பி பார்த்தார்.

“என்ன அரசு... இந்த நேரத்தில் இங்கே...?” வியப்பாய் அவனைப் பார்த்து கேட்க...

“அம்மாயி... அல்லி... உங்க பேபிம்மா எங்கே?” கேட்கும் போதே அவனின் குரல் நடுங்கியது.

“அங்கே தானே அவளின் அப்பா, அம்மாவுடன் பேசி கொண்டிருந்தாள்? ஏன் என்னவானது?” அவர் புரியாமல் கேட்க... அவரின் பதிலில் அவன் மொத்தமாய் உடைந்து போய் அப்படியே அம்மாயின் அருகில் தொப்பென்று அமர்ந்தான்.

“அரசு... என்னப்பா...?” அவனின் கலக்கம் உணர்ந்து அவர் ஆறுதலாய் கேட்க...

“அம்மாயி... வீட்டில் எங்குத் தேடியும் அவளைக் காணவில்லை...”

“என்னது...?” அவன் கூறியதை கேட்டு பெரியவள் அதிர்ந்தார்.

“என்ன சொல்கிறாய் அரசு... அவளை நல்லா தேடி பார்த்தாயா?” பதற்றத்துடன் அவர் கேட்க... அவன் ஆம் என்பது போல் தலையசைத்தான்.

“அய்யோ...” என்று தலையில் கை வைத்துக் கொண்டு அப்படியே அவர் அமர்ந்துவிட்டார்.

அரசுவுக்கு இன்னமும் அவள் வீட்டை விட்டு போனதை நம்ப முடியவில்லை. அவள் பெற்றோர் கூப்பிட்டால் அவள் எப்படித் தன்னை விட்டுப் போகலாம்? என்று அவனுக்குள் கோபம் முளைத்தது. தான் அவ்வளவு சொல்லியும் தன் பேச்சுக் கேட்காமல் அவள் போனது குறித்து அவனுக்கு ஆத்திரம் வந்தது. அதே ஆத்திரத்துடன் தன் அலைப்பேசியை எடுத்து பரமேஷ்வருக்கு அழைத்தான். மறுபக்கம் எடுத்ததும்,

“எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் என் அனுமதி இல்லாமல் உங்க பொண்ணைக் கூட்டிட்டு போவீங்க?” எடுத்தவுடன் அவன் நேரே விசயத்துக்கு வந்தான்.

“என்ன பேசுறோம்ன்னு உணர்ந்து தான் பேசுகிறாயா?” மகள் தன்னை அவமானப்படுத்தியதில் எரிச்சலில் இருந்த பரமேஷ்வர் அதை அவனிடம் காட்டினார்.

“புரியாத மாதிரி நடிக்க வேணாம்... எங்கே என் மனைவி?”

“உன் மனைவியை எங்கே என்று எங்களுக்குத் தெரியாது? பெருசாய் உனக்குப் பரிஞ்சிட்டு எங்களைத் தூக்கியெறிந்து பேசினாளோ அப்போதே அவள் எங்களுக்கு மகளில்லை. நாங்களே அவளைத் தலைமுழுகி விட்டு தான் வந்திருக்கிறோம். இனிமேல் அவளைப் பத்தி எங்களிடம் பேசாதே. அவள் எக்கேடு கெட்டால் எங்களுக்கு என்ன?” கத்திவிட்டு அவர் அழைப்பை துண்டிக்க...

அவர் பேசியது கேட்டு அவனுக்குத் தலையும் புரியவில்லை... வாலும் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது... அது அல்லி அவர்களுடன் செல்லவில்லை என்பது. அலைப்பேசியைச் சட்டைப்பையில் போட்டவன் தளர்ந்து போனவனாய் அப்படியே அமர்ந்துவிட்டான்.

அவளின் தந்தை பேசியதை மீண்டும் மீண்டும் யோசித்துப் பார்த்தவனுக்கு... ஏதோ ஒன்று புரிவது போல் தோன்ற... அவன் முகம் மலர்ந்தது. எது எப்படியோ அவள் தனக்காக அவளின் பெற்றோரிடம் பரிந்து பேசியிருக்கிறாள்... அந்தச் செய்தி ஒன்றே அவனுக்குப் போதுமானதாய்... உவகை அளிப்பதாய் இருந்தது. எல்லாம் கொஞ்ச நேரம் தான்... மீண்டும் அவனின் நினைவு அவளிடத்தில் வந்து நின்றது.

‘இந்தக் கொழும்பில் அவளுக்கு யாரையும் தெரியாதே... எங்கே போனாளோ? எப்படிப் பரிதவிக்கிறாளோ?’ அவளை நினைத்தவன் மனம் அவனையும் அறியாது கலங்கியது. கலங்கிய மனதை அடக்கி கொண்டு,

“அம்மாயி நான் கொஞ்சம் வெளியில் போயிட்டு வர்றேன்...” என்றவன் எழ...

“அரசு... பேபிம்மா...”

“வந்தால் அவளுடன் தான் வருவேன் அம்மாயி...” அவருக்கு உறுதியளித்தவன் வேகமாய் அங்கிருந்து வெளியேறினான்.

இவ்வளவு பெரிய நகரத்தில் அவளை எங்கே போய்த் தேடுவது? அவள் எங்கே சென்றிருப்பாள் என்ற ஊகம் கொஞ்சமும் இல்லாமல் அவளை எப்படித் தேடுவது? அவனுக்குச் சற்று மலைப்பாக இருந்தது. அப்படியிருந்தும் அவன் ஒவ்வொரு இடமாகப் பொறுமையாய் தேட ஆரம்பித்தான். அவனின் தேடல் அவனுக்குக் கிடைக்குமா?

****

அரசுவின் வீட்டிலிருந்து வெளியில் வந்தவள் கால் போன போக்கில் நடக்க... தெருவில் சென்ற வாகனங்களின் ஒலியில் தன்னுணர்வு அடைந்தவள் அப்போது தான் சுற்றுப் புறம் உணர்ந்தாள். இந்த ஊருக்கு அவள் அடிக்கடி வந்திருந்தாலும்... ஒரு சில இடங்கள் மட்டுமே அவளுக்குப் பரிச்சயம். அவனின் வீடு இருக்கும் இடம் அவளுக்குப் பரிச்சயமில்லாத ஒரு இடம்... அதனால் அவளுக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது.

பெரியதாய் கோபம் கொண்டு வீட்டை விட்டு வந்தவளுக்கு எங்கே செல்வது என்று தெரியவில்லை. அதையெல்லாம் விட எங்குச் செல்வது என்றாலும் பணம் வேண்டும்... அந்தப் பணம் இப்போது அவள் கையில் சுத்தமாய் இல்லை. தன்னை நினைத்து அவளுக்குக் கழிவிரக்கம் தோன்ற கண்கள் கலங்கியது. சுற்றும் முற்றும் பார்த்தவள் கண்ணில் பூங்கா தென்பட அங்கே சென்றவள் அங்கிருந்த மர இருக்கையில் அமர்ந்தாள்.

நேரம் செல்ல செல்ல... மெதுவாய் இருள் கவிழ ஆரம்பிக்க... அவளுக்குள் பயப்பந்து உருள ஆரம்பித்தது. காலையிலிருந்து உண்ணாதது வேறு ஏதோ செய்ய அவளுக்கு மயக்கம் வருவது போலிருந்தது. திரும்ப வீட்டிற்குச் செல்வதற்கு அவளுக்கு வழியும் தெரியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பூங்கா அவனின் வீட்டின் அருகில் தான் இருக்கிறது என்பதை அவள் அறியவில்லை.

அரசு அவளைத் தேடி தேடி சோர்ந்து போனவனாய் திரும்பி வந்து கொண்டிருந்தவன் கண்ணில் அவனின் வீட்டின் அருகே இருந்த பூங்கா தென்படக் காரை நிறுத்திவிட்டு அங்கே சென்றான். இப்போது இருக்கும் மனநிலையில் வீட்டிற்குச் செல்ல அவனுக்கு விருப்பமில்லை. மனதுக்குள் ஆயாசமாய் இருக்கச் சோர்வாய் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கண் மூடி பின்னால் சாய்ந்தான். மூடிய அவனின் விழிக்குள் அல்லியின் சிரித்த உருவமே கண்ணாமூச்சி ஆடியது. ஒவ்வொரு கணமும் அவளை நினைத்து நினைத்து அவன் மனம் துடியாய்த் துடித்தது அவனுக்கு மட்டுமே தெரியும்.

‘எங்கே இருக்க அல்லிராணி...? எங்கிருந்தாலும் வந்துவிடு... நானே உன் பெற்றோரிடம் உன்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறேன். நீ நிம்மதியாய் இருந்தால் அதுவே எனக்குப் போதுமானது. உன்னைக் காணாமல் நான் தவிக்கும் தவிப்பிற்கு... உன்னைப் பிரிந்திருப்பது எவ்வளவோ மேல்... உன் பெற்றோரின் பாதுகாப்பில் இருக்கிறாய் என்பதே எனக்குப் பெருத்த நிம்மதி தரும்’ அவன் மனம் அவளைக் காணாமல் கண்டபடி யோசித்தது. இப்போது அவனுக்கு அவனின் காதலை விட... அவள் உயிரோடு கிடைத்தால் போதுமென்றே இருந்தது.

பயத்தில் கண்ணைச் சுழற்றி அந்தப் பூங்காவை பார்த்தவள் கண்ணில் அங்குக் கண்களை மூடி கொண்டு அமர்ந்திருந்த அரசு தென்பட... அவளையும் அறியாது மனதில் எழுந்த மகிழ்ச்சியுடன் அவனருகில் சென்றாள். எவனை வெறுத்து வெளியில் வந்தாளோ... எவனை அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காதோ அவனைத் தேடி அவளே மகிழ்ச்சியுடன் செல்வது விந்தையிலும் விந்தையே...

பக்கத்தில் யாரோ வந்து உட்காருவதை உணர்ந்தும் கண்களைத் திறக்காமல் அப்படியே அமர்ந்திருந்தான். “அரசு...” திடுமென அல்லியின் குரல் அவனின் காதில் ஒலிக்க... அது தன் மனப்பிரம்மையோ என்றெண்ணியவன்

அதீத வேதனையுடன் தன் கண்களை இறுக மூடி கொண்டான்.

“அரசு...”

மீண்டும் அவள் அழைப்பது போல் தோன்ற... யோசனையாய் கண்ணைத் திறந்தவன் கண்முன் அவள் அமர்ந்திருந்தாள். நம்ப முடியாதவனாய் கண்களைக் கசக்கி கொண்டு அவன் பார்க்க...

“அரசு...” என்றாள் மெல்லமாய்.

அவளைத் தேடி தேடி களைத்து போய், மனம் முழுவதும் பாரமாய் எதிலோ தோற்று போனவனாய் அவன் இருந்த போது... இல்லை இல்லை நீ தோற்று போகவில்லை என்பது போல் வரமளிக்கும் தேவதையாய் அவள் அவன் கண் தோன்றியது கண்டு அவன் மனம் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தது. அவளைக் காணவே காண முடியாது என்று மனம் வெறுத்தவனாய் அவன் மனம் வெதும்பி போயிருந்த போது எதிர்பாராத விதமாய் அவளைப் பார்த்ததில் உணர்ச்சி பெருக்கில் அவனின் கண்கள் கலங்கியது.

“அல்லிராணி...” உணர்ச்சிவசப்பட்டதில் அவனின் குரல் நடுங்கியது.

“நான் அல்லிராணி இல்லையென்று உனக்கு எத்தனை தடவை சொல்வது அரசு... என் பெயர் அல்லிகொடி” அந்த நிலையிலும் தன்னிடம் முறுக்கி கொள்ளும் அவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“வா போகலாம்...” என்றபடி எழுந்தவனைத் தொடர்ந்து அவளும் பேசாமல் எழுந்து அவன் பின் சென்றாள்.

காரில் வரும் போது இருவரும் பேசவில்லை. ஒருவித மௌனமே அங்கே ஆட்சி செய்தது. எதையாவது பேசி அவளைத் தான் காயப்படுத்தி விடக் கூடாது என்று அவன் அமைதி காக்க... வீம்பாய் அவனை விட்டு விலக வேண்டுமென்று வீட்டை விட்டு வெளியில் வந்த தான்

வேறுவழியின்றி அவனிடமே உதவி கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதை நினைத்து உள்ளுக்குள் மருகியவள் பேச தோன்றாமல் அமைதி காத்தாள்.

அவள் வீட்டினுள் நுழைந்ததும் “வந்துட்டியா பேபிம்மா...” கேட்டபடி வேகமாய் வந்த லக்ஷ்மியம்மா அப்படியே மயங்கி கீழே சரிய...

அவள் பதறி போனவளாய் அவரைத் தாங்கி கொண்டாள். அவளின் பின்னே வந்த அரசு இந்தக் காட்சியைக் கண்டு பதட்டத்துடன் ஓடி வந்து அவரைத் தன் கரங்களில் ஏந்தி கொண்டு சோபாவில் படுக்க வைத்து... அவளைப் பார்த்து,

“கொஞ்சம் தண்ணீர் எடுத்துட்டு வா...” என்று ஏவ...

என்ன செய்வது என்று தெரியாமல் அவனின் செய்கையைப் பார்த்து கொண்டிருந்தவள் அவசரமாய் உள்ளே ஓடி சென்று நீரை கொண்டு வந்தாள். அவன் பாட்டியின் முகத்தில் தண்ணீரை தெளித்ததும் அவரின் மயக்கம் தெளிய... அந்த நிலையிலும் அவரின் கண்கள் அவளைத் தான் தேடியது.

“பேபிம்மா... இங்கே வா...” அவளை அருகில் அழைத்து அணைத்தவர்,

“இனி மேல் நீ எந்தக் காரணம் கொண்டு வீட்டை விட்டுப் போகக் கூடாது. உனக்கு எந்த மனக்கஷ்டம் என்றாலும் என்னிடம் சொல்லு... இப்படிக் கோபித்துக் கொண்டு போகக் கூடாது சரியா? நீ சந்தோசமாய் இருந்தால் தான் அரசு சந்தோசமாய் இருக்க முடியும். இந்த வீட்டை விட்டு... எங்களை விட்டு போக மாட்டேன்னு சத்தியம் செய்து கொடு”

அவளின் பெற்றோர் அவளை நன்றாக வைத்து கொள்ளவில்லை என்றால் தன் பேரனை சிறையில் போட்டு விடுவோம் என்று கூறியது அந்த மூதாட்டியை பெரிதும் தாக்கியிருந்தது. ஆனால் அவருக்குப் பேரனின் தற்போதைய உயரம் தெரியவில்லை... பாவம் அவர்...

இன்னமும் அவர் மனதளவில் அவளின் வீட்டில் வேலை செய்த ஆயாம்மாவாகத் தான் இருந்தார்.

“பேபிம்மா...” கையை நீட்டியபடி பெரியவள் அவளை அழைக்க...

வேறுவழியின்றி அவள் தன் கையை அவர் கை மேல் வைத்தாள். ஆனால் வாய் மொழியாய் அவள் எந்த உறுதிமொழியும் கூறவில்லை. அவளை ஆழ்ந்து பார்த்தவன்,

“அதெல்லாம் உங்க பேபிம்மா இனிமேல் எங்கேயும் போக மாட்டாள். அதற்கு நான் உத்திரவாதம் தருகிறேன். முதல்ல நீங்க என் கூட ஹாஸ்பிட்டல் வாங்க...”

அவளுக்குப் பதிலாய் பதில் கூறியவன் அவரை அழைத்துக் கொண்டு மருத்துவமனை செல்ல ஆயத்தமானான். கூடவே அவளும் வருகிறேன் என்று சொல்ல அவளை மறுத்துவிட்டு அவன் மட்டும் சென்றான். அங்கு அவரைப் பரிசோதித்ததில் அவருக்கு இரத்த அழுத்தம் கூடியதால் உண்டான மயக்கம்... அதனால் கவலைப்படத் தேவையில்லை என்று கூறவும் தான் அவன் நிம்மதியடைந்தான்.

வீட்டிற்கு வந்து அம்மாயிக்கு தேவையான மருந்துகள் கொடுத்து அவரைப் படுக்க வைத்து விட்டு அவரின் அறையை விட்டு வெளியில் வந்தவனுக்கு அப்போது தான் அவளின் நியாபகம் வந்தது. விரைந்து வரவேற்பறைக்கு வந்தவன் அங்கே சோபாவில் அமர்ந்திருந்த அவளைக் கண்டதும் தான் பெருமூச்சு விட்டான். அவளின் ஓய்ந்த தோற்றத்தை பார்த்தவன், அவளருகில் வந்து,

“சாப்பிடலாமா?” அவன் கேள்விக்கு மறுப்பாய் அவள் தலையசைக்க...

“உன்னைப் பார்த்தாலே தெரிகிறது... காலையில் இருந்து ஒண்ணும் சாப்பிடலன்னு... வா...”

அவனின் வார்த்தையில் சரேலென்று அவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்ணில் அவனின் களைத்த முகம் விழ... ஒன்றும் பேசாமல் அவனோடு உண்ண சென்றாள். உணவு முடிந்து அறைக்கு வரும் வரை அவர்களிடையே அமைதி நிலவியது. அவளைத் தொடர்ந்து அறைக்குள் நுழைந்தவன் கதவை தாளிட்ட அடுத்த நொடி அவளை இறுக்கமாய் அணைத்திருந்தான்.

“அரசு... என்ன பண்ற? என்னை விடு...” அவனின் அணைப்பில் அவள் திமிற...

“ப்ளீஸ் ஒண்ணும் பேசாதே...” என்றவனின் அணைப்பு மேலும் இறுகியது.

என்ன தான் தாலி கட்டிய கணவனே என்றாலும் அவளுக்கு அவன் அந்நிய ஆண்மகன் தானே. அதிலும் மூச்சு முட்டுவது போல் அவன் அணைத்திருந்த விதத்தில்... அவளின் படக்கூடாத உடலின் பாகத்தில் அவனின் உடல் உரச கண்டு அவள் மனதுக்குள் கூசி போனாள். அவனின் அணைப்பு யாரோ தெரியாத ஒருவன் அணைத்தது போல் அவளுக்கு அருவருப்பாய் இருந்தது.

அவனோ அவளைக் காணாது தவித்த தவிப்பையும், அவளைக் கண்டதும் அவன் அடைந்த மகிழ்ச்சியையும், இனிமேல் அவளை நொடி கூடப் பிரிந்திருக்க முடியாது என்பதை உணர்ந்த தன் மனதையும் அவளுக்கு உணர்த்தும் விதமாக அவளை இறுக அணைத்திருந்தான். அந்தோ பரிதாபம்... அவளோ அதை உணரும் நிலையில் இல்லை. முதலில் அவள் மனதில் அவன் பதிந்தால் தானே அவனின் காதல், அணைப்பு எல்லாம் அவளுக்குப் புரிய வரும்.

“அல்லிராணி...”

அவளை அணைத்திருந்ததில் அவன் தன்வசம் இழந்து அவள் கழுத்தில் தாபத்துடன் முகம் புதைத்தான். தனக்கும் அவளுக்கும் உள்ள பிரச்சினைகள் இன்னமும்

தீர்க்கப்படாமல் இருப்பதை அவளின் அருகாமையில் அந்தக் கணம் அவன் மறந்தான்.

“அரசு...” கத்தி கொண்டே அவனை அவள் உதறி தள்ள...

உணர்ச்சியின் பிடியில் இருந்தவன் அவளது அந்த உதறலில்... அவளை அணைத்திருந்த அவனின் கைகள் தளர... அது தான் சமயம் என்று அவனிடமிருந்து வேகமாய் விலகியவள் அவனின் கைக்கெட்டாத தொலைவில் நின்று கொண்டு,

“அரசு... என்னைத் தொட்ட... அதுக்கப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது?” அவள் கோபமாய்ச் சீற...

தனக்கும் அவளுக்குமாய்த் தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவனுக்கு அவளின் வார்த்தையில் கோபம் வந்தது.

“காலையில் நான் உன்னிடம் என்ன சொல்லிட்டு போனேன்... ஞாபகம் இருக்கிறதா?”

“இருக்குது... இருக்குது... நல்லா ஞாபகம் இருக்குது...” அவள் கிண்டல் தொனியில் பேச...

“நான் அவ்வளவு சொல்லியும் நீ வீட்டை விட்டு போயிருக்கேன்னா என் வார்த்தைக்கு என்ன மதிப்பிருக்கு...” தன்னைக் கொஞ்சமும் புரிந்து கொள்ள மாட்டேங்கிறாளே என்ற ஆத்திரத்தில் அவன் சொல்ல...

“உனக்கே மதிப்பில்லை... இதில் உன் பேச்சுக்கு நான் மதிப்பு கொடுக்கணுமா?”

“அல்லி... உன் அப்பா கையெழுத்து போட்டுக் கொடுத்த கடன் பத்திரங்கள் இன்னமும் என்னிடம் இருப்பதாக எனக்கு நினைவு...” அவன் சொன்னதும் தான் தாமதம்... அவனருகே ஆத்திரத்துடன் வந்தவள்,

“இதையே எத்தனை நாள் தான் சொல்வ? நான் உயிரோடு இருக்கும் வரை சொல்வாயா? நாளைக்கே நான் செத்து

போய் விட்டால்... என் பிணத்திடம் அதைச் சொல்வாயா?” ஆத்திரம் கொஞ்சமும் அடங்காமல் தன் முன் நின்றவளை கண்டு,

“அல்லி...” அவன் வாயில் வார்த்தை எழவில்லை. அவளின் உயிரை பறித்த பின் அவனுக்கும் தான் வாழ்க்கை ஏது?

“என் அம்மா என்னடான்னா கொடுத்த காசுக்கு உன் கூடப் படுக்கையைப் பகிர்ந்துக்கச் சொல்றாங்க... என் அப்பா என்னடான்னா உன்னை மயக்கி அந்தக் கடன்பத்திரத்தை நான் திருடி கொண்டு வந்துடணுமாம்... எனக்கு வேற நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து மறுகல்யாணம் பண்ணி வைப்பாராம்... ஏற்கெனவே அவர் பண்ணி வைத்த கல்யாணத்தால் நான் படும் அவஸ்தை போதாதுன்னு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கிறாராம்.”

“அவங்க இப்படியெல்லாம் பேசுறதுக்குக் காரணம் யாரு... எல்லாம் நீ தான் அரசு... நீ கொடுத்த பணம் தான் அரசு... என் மேல் எவ்வளவு பாசம் வைச்சிருந்தாங்க தெரியுமா? அந்தப் பாசத்தை எல்லாம் உன் பணம் காவு வாங்கியிருச்சே... அவங்க வாயாலேயே கூசாம நீ கொடுத்த பணத்துக்கு ஈடா என்னை வேசி தொழில் பார்க்க சொல்றாங்க... எனக்கு எவ்வளவு அருவருப்பா இருக்கு தெரியுமா? என் உடம்பும், மனசும் அப்படியே தீயாய் எரியுது அரசு... அந்தளவுக்கு என் மனசு உடைஞ்சு போச்சு...”

“ஏன் அரசு... நான் உன்கிட்ட ஏதும் தப்பா நடந்துக்கிட்டேனா? என்னையும் அறியாமல் உன்கிட்ட திமிரா நடந்துக்கிட்டேனா? எதுக்கு அரசு... இப்படிக் கல்யாணம்ங்கிற பேரில் என்னைக் கஷ்டப்படுத்தற... நான் உனக்கு என்ன பாவம் பண்ணினேன் அரசு...? உன்னைப் பிடிக்காத என்னை உன்னோடு வாழு... வாழுன்னு நீ சொல்ற? அப்படி வாழுற வாழ்க்கைக்கு அர்த்தம் தான் என்ன அரசு? உன் மனசு என்ன கல்லா அரசு? நீ என்ன ராட்சசனா? மனசாட்சி என்பதே உனக்குக் கிடையாதா?” அவனின் சட்டையைப் பிடித்துக் கேட்டவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் மனதில் இடி போல் இறங்கியது.

அவள் பேச பேச... அவனின் மனம் அதிர்ந்தது. அவளின் பெற்றோரின் பேச்சு அவனுக்கே அருவருப்பாய் இருந்தது. அதை எப்படித்தான் அவர்களால் தங்கள் மகளிடம் பேச முடிந்ததோ என்று மனதுக்குள் மாய்ந்து போனான். என்ன தான் தாலி கட்டிய போதும் அவன் கூட அவளைத் தன்னுடன் வாழ வற்புறுத்தவில்லை.

அப்படி வற்புறுத்தி, கட்டாயப்படுத்தி, துன்பப்படுத்தி வாழ்வதில் அப்படியென்ன சுகம் கண்டு விட முடியும்? பெண்ணின் உடலை வெல்வது மட்டும் தான் ஆணுக்கு வெற்றியா? இல்லையே நல்ல ஆண்மகனுக்கு அழகு அவளின் மனதை வெற்றி கொள்வதே... அதை உணர்ந்து தான் அவனும் அவளிடத்தில் பொறுமை காட்டி வருகிறான். ஆனால் அவளை அடைய தான் செயல்பட்ட முறை எந்தளவுக்குத் தவறு என்பதை அவளின் வார்த்தையால் உணர்ந்தான்.

விறுவிறுவென அறையை விட்டு வெளியேறியவன் நேரே தன்னுடைய அலுவல் அறைக்குச் சென்றான். அங்கிருந்த அலமாரியை திறந்து அதிலிருந்த கோப்புகளில் இருந்து அவளின் தந்தை கையெழுத்திட்ட பத்திரங்கள் அடங்கிய கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு மீண்டும் அறைக்குள் நுழைந்தான்.

“இதைத்தானே உன் கைவிலங்கா நீ நினைக்கிற? இதைக் காட்டி தானே நான் உன்னைச் சிறைப்பிடிச்சு வச்சிருக்கிறதா நீ நினைக்கிற? இதனால் தானே உன் அப்பா, அம்மா உன்னைக் கேவலமாய் நடந்து கொள்ளச் சொன்னதாய் நீ சொன்ன? உன் மனசை கஷ்டப்படுத்துற இந்தப் பத்திரத்தை இந்த நொடி நான் கிழித்து எறிந்து விடுகிறேன்...” என்றவன் அவள் கண்முன்னேயே அத்தனை பத்திரங்களையும் கிழித்து எறிந்தான்.

எல்லாம் கோடிக்கணக்கில் மதிப்பு உடையது... ஆனால் அவளின் அன்பின் முன் அவனுக்கு எல்லாமே தூசாய்த் தெரிந்தது. அவன் ஒன்றும் பிறக்கும் போதே பணத்துடன் பிறக்கவில்லை... எல்லாம் இடையில் வந்தது. அதனால்

அவனுக்கு இந்த இழப்பு ஒன்று பெரியதாய் வருத்தவில்லை. இப்போது அவன் இழந்த இத்தனை பணத்தையும் அவன் எப்போது வேண்டுமென்றாலும் சம்பாதித்து விடுவான். ஆனால் அவளின் அன்பை இழக்க மட்டும் அவன் தயாராக இல்லை.

“இப்போ சொல்லு என் மனசு கல்லா? நான் ராட்சசனா? நான் மனசாட்சி இல்லாதவனா?” அவளின் கேள்விகளின் தாக்கத்தை அவனால் தாங்க முடியவில்லை. அதான் அவளைப் பார்த்து அப்படிக் கேட்டான்.

“ஹ... இப்படியெல்லாம் நீ செய்தால்... உன் செயலில் அப்படியே பூரிச்சு போய் நான் உன்னை ஏத்து கொள்வேன்னு உனக்கு நினைப்பா? இப்படிச் செய்வதால் நீ பண்ணிய தப்பு இல்லையென்று ஆகிவிடுமா? இப்போ தான் உன்னைக் கண்டு எனக்கு இன்னமும் வெறுப்பு அதிகமாகிட்டே போகுது. உனக்கு ஒண்ணு தேவைன்னா எந்த நிலைக்கும் நீ இறங்குவன்னு... நீ ப்ரூவ் பண்ணிட்ட...” அவளின் பேச்சில் அவனுக்கு ஆயாசமாக வந்தது.

“இல்லை அல்லி... அப்படியெல்லாம் இல்லை...” அவன் மறுத்து கூறும் முன்னே...

“வேணாம் அரசு நீ எதுவும் பேச வேணாம்...” ஒற்றைக் கையைத் தடுப்பது போல் காட்டியவள்,

“உனக்கு ஒண்ணு தெரியுமா அரசு... நீ மட்டும் இந்தப் பணத்தைக் காட்டாமல்... என்னை மிரட்டாமல்... உண்மையில் என்னைக் காதலித்து என்னைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பப்பட்டு இருந்தா கூட... நான் சந்தோசமாய் உன்னை ஏத்துக்கிட்டு இருப்பேன். எனக்கு வேண்டியது பணமில்லை அரசு... காதல் கொண்ட நல்ல உள்ளம். அது தான் உன்கிட்ட இல்லையே... நீயேன் ஆயாம்மாவின் பேரனாய்... நல்லவனாய் இல்லாமல் போனாய் அரசு. எனக்கு அந்த அரசுவை தான் பிடித்திருந்தது. எனக்கு இந்தப் பணக்கார அரசுவை பிடிக்கவில்லை... உன்னை நான் வெறுக்கிறேன்... உன் முகத்திலுள்ள தழும்புகள் கூட எனக்குப் பெரியதாய்

தோன்றவில்லை. ஆனால் உன் மனதிலுள்ள அழுக்குகள் என்னை ரொம்ப வருத்துது அரசு...”

அவளின் பேச்சில் அவன் இறுகி போய்க் கல்லாய் மாறிப் போனான். அவனின் உணர்வுகளைத் தான் அவள் ஒவ்வொன்றாய் கூறி சாகடித்துக் கொண்டிருக்கிறாளே...!

“நீ நினைக்கலாம் இவ்வளவு வாய் பேசுபவள்... எதுக்குத் திரும்பவும் உன்னைத் தேடி வந்தேன்னு?” என்று நிறுத்தியவள், அவன் முகத்தை அண்ணாந்து பார்த்து,

“எனக்கு அந்த இருட்டில் தனியா உட்கார்ந்திருக்கப் பயமாயிருந்தது. மனசுக்குள் பயந்திட்டு இருந்தப்போ தான் நீ அங்கே வந்த... யார் கிட்டேயோ கெட்டு சீரழிறதை விட... உன்னிடம் கெட்டுச் சீரழிறது பரவாயில்லைன்னு தான் உன்னைத் தேடி நான் வந்தேன்... ஆனா... ஆனா... என்னை நீ கட்டிப் பிடிச்சப்போ... என்னால் தாங்க முடியல. இதையே என்னால் தாங்க முடியல... இதுக்கு மேல் உன்னோடு...” அவள் பேசும் போதே...

“இதுக்கு மேல் பேசி வார்த்தையால் என்னை உயிரோடு கொல்லாதே... ப்ளீஸ்...” என்றவன் அறையை விட்டு வெளியேற... அவளோ தன் நிலையை எண்ணி தனக்குள் மறுகியவள் அப்படியே முடங்கினாள்.

அறையை விட்டு வெளியில் வந்தவன் அலுவல் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான். அவனின் காதில் அல்லி பேசிய பேச்சு தான் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளின் ஒவ்வொரு வார்த்தையும் அவனின் மனதை குத்தீட்டியாய் குத்தி கொன்றது.

அவளின் அப்பாவை பழிவாங்க அவன் தீட்டிய திட்டம்... இப்படி அவளின் அன்பை காவு வாங்கும் என்று அவன் சிறிதும் நினைக்கவில்லை. வாழ்க்கையில் வெற்றியடைந்து விட்டோம் என்று இறுமார்ந்து இருந்தவன்... முதன்முறையாய் அவளின் மனதை வெற்றிக் கொள்வது எப்படி? என்று தெரியாமல் திகைத்தான்.

“அல்லி... உன்னிடம் கொஞ்சம் பேசணும்...”

தன்னைக் கண்டதும் அறையை விட்டு வெளியேற போன அல்லியை கை நீட்டி தடுத்த அரசு... அவளிடம் தான் பேச விரும்புவதாகக் கூற... அவள் தன் முகத்தில் எந்தவித வேறுபாட்டையும் காட்டாமல் அங்கேயே அப்படியே நின்றாள்.

அதிகாலையிலேயே குளித்து முடித்து அன்றலர்ந்த மலர் போல் அழகாய் இருந்தவளை கண்டு மனம் எப்போதும் போல் தடுமாற... ஆழ மூச்செடுத்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

“முதலில் நீ உட்காரு...” என்றவனை நிமிர்ந்து பார்த்தவளுக்கு அவனின் முகத்திலிருந்து அவன் மனதில் என்ன இருக்கிறது? என்ன பேச போகிறான்? என்பதைக் கணிக்க முடியவில்லை. ஆனாலும் அவன் சொன்னதைச் செய்தாள்.

நேற்றிரவு முழுவதும் யோசித்து அவன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். இனியும் காலத் தாமதம் செய்யாமல் அதைச் செயலாற்ற எண்ணியவன் விடிந்ததும் அவளைத் தேடி வந்துவிட்டான். அவன் நினைத்தது எந்தளவுக்கு வெற்றியடையும் என்று அவனுக்குத் தெரியவில்லை என்றாலும்... தான் நினைத்ததை அவளிடம் சொல்லியாக வேண்டுமென்று அவன் விரும்பினான்.

“அல்லி... நேத்து ராத்திரி முழுவதும் நீ பேசியதை யோசித்துப் பார்த்தேன். இதற்கு மேலும் நீயும் நானும் சேர்ந்து வாழ்வது என்பது சரிவராது. அதனால்... அதனால்...” அவன் நிறுத்திவிட்டு அவள் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தான்.

“அதனால்...” கண்களைச் சுருக்கி கொண்டு அவனைக் கூர்மையுடன் பார்த்தாள்.

“அதனால் உன் விருப்பப்படி நாம பிரிந்து விடலாம்...” அவன் சொன்னதைக் கேட்டு அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்.

“நீ சொன்னது போல் நம்ம ரெண்டு பேருக்கும் சந்தோசத்தைத் தராத இந்தக் கல்யாணத்தால் யாருக்கு என்ன பயன்? அதுக்கு நாம ரெண்டு பேரும் பிரிஞ்சி விடுறது நல்லது இல்லையா?” விரக்தியாய் சொன்னவன்,

“சரி... இங்கிருந்து கிளம்பியதும் எங்கே போவாய்? உன் வீட்டுக்கு போறியா? இல்லை...” திடுமென அவன் அப்படிக் கேட்டதும் அவள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தவள் பின் சுதாரித்துக் கொண்டு,

“இல்லை என் வீட்டுக்கு போக மாட்டேன்...” உறுதியாய் மறுத்தவள்,

“ஆனா எங்கே போறதுன்னு தெரியல...” கூறும் போதே அவள் குரல் நலிந்து ஒலித்தது. அவளின் நிலை கண்டு அவனுக்குமே பரிதாபமாய் இருந்தது.

“நான் வேணா உனக்கு ஒரு வேலை வாங்கித் தரவா? அதே போல் தங்குவதற்கும் இடம் பார்த்து தர்றேன். அதுக்கு ஒரு ரெண்டு நாள் ஆகும் கொஞ்சம் பொறுத்து கொள்வாயா?”

“ம்...” சம்மதமாய்த் தலையை ஆட்டினாள்.

“நான் ஒண்ணு சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டியே” கேட்டவனைப் புரியாமல் பார்த்தாள்.

“என்னால் உன் வாழ்க்கை பாழாகி விட்டதோன்னு எனக்குக் குற்றவுணர்ச்சியா இருக்கு. அதனால் உன் வாழ்க்கையைச் சீரமைக்கிற பொறுப்பை எனக்குக் கொடுப்பியா? அதாவது உனக்கு வேறொரு நல்ல மணமகனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கும் பொறுப்பை எனக்குக் கொடுப்பியா?” இதைச் சொல்லும் போது அவன் இதயம் கனத்தது. ஆனாலும் இதைக் கேட்டு தான் ஆக வேண்டும்.

அவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தவள், “போதும் ஒரு கல்யாணம் பண்ணி கொண்டு நான் படும் அவஸ்தை... இன்னொரு கல்யாணம் எல்லாம் வேணாம். முடிந்தால் எனக்கு ஒரு வேலை மட்டும் வாங்கிக் கொடு. இல்லை நானே தேடி கொள்கிறேன்... மத்தபடி இனிமேல் என்னிடம் இந்தக் கல்யாணம், கருமாதின்னு பேசாதே...” அவளின் பேச்சில் நிம்மதியுற்றவன்,

“அப்போ நான் கட்டிய தாலி...” அவன் கூர்மையாய் அவளைப் பார்த்தான்.

“இப்போ உனக்கு என்ன வேணும்? நீ வேறு கல்யாணம் பண்ணிக்க நான் தடையா இருப்பேன்னு இப்படிப் பேசுறியா? அப்படி ஒரு நினைப்பு இருந்தா தூக்கி தூர போடு... நானே டிவோர்ஸ் பேப்பரில் சைன் பண்ணி தர்றேன்... நீ யாரை வேணும்ன்னாலும் கல்யாணம் பண்ணிக்கோ... எனக்குக் கொஞ்சமும் ஆட்சேபணை இல்லை” என்று சுத்தி வளைத்து பேசியவள்...

அவன் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் பேசவில்லை. அவளின் பதிலில் அவன் மனம் கும்மாளமிட்டது. ஆனால் அதை அவன் வெளிக்காட்டி கொள்ளவில்லை.

“சரி அதுக்கு மேல் உன் இஷ்டம்...” தோளை குலுக்கி அசால்ட்டாய் சொன்னவன்... பேச்சு வார்த்தை முடிந்தது போல் அங்கிருந்து அகல...

“அரசு...” என்று அவள் அழைக்க... என்ன? என்பது போல் அவன் அவளைப் பார்க்க...

“நீ கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான் அரசு...” சொல்லியவளை அவன் ஆழ்ந்து பார்க்க...

அவனின் பார்வையின் பொருள் என்ன? என்பதை அறிய முற்படாமல் அவள் அறையை விட்டு வேகமாய் வெளியேறினாள். அவள் போவதையே பார்த்து கொண்டிருந்தவன் முகத்தில் விசம புன்னகை பூத்தது.

‘என்னை விட்டுப் போறதில் உனக்கு அவ்வளவு விருப்பமா அல்லிராணி? அவ்வளவு சீக்கிரம் என்னை விட்டு உன்னைப் போக விட்டிருவேனா? இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் திட்டம் எப்படிப் பிசுபிசுத்துப் போகப் போகுதுன்னு நீயே உணருவ... உன் வழியிலேயே போய் உன்னை எப்படி என் வழிக்குக் கொண்டு வர்றதுன்னு எனக்குத் தெரியும். என் பெயரிலேயே வெற்றியை வச்சிருக்கிறவன் நான்... அப்படிப்பட்ட நான் உன் விசயத்தில் தோல்வியடைவதாவது.... நோ நெவர்... உன்னை வெற்றிக் கொள்ளாமல் விட மாட்டான் இந்த வெற்றியரசன்... இனி தான் அல்லிராணி என் கேம் ஸ்டார்ட்... என்னோடு விளையாட நீயும் ரெடியாயிரு...’ மனதுக்குள் நினைத்தவன் முகம் தீவிரமாய் மாறியிருந்தது.

அலுவலகத்துக்குத் தயாராகிக் கீழே வந்தவன் நேரே தன் அம்மாயியின் அறைக்குச் சென்றான். அங்கே அல்லியும் இருப்பதைப் பார்த்தவன் முகத்தில் மீண்டும் விசம புன்னகை தோன்றியது. ‘நான் வந்த வேலை சுலபம்...’ என்றெண்ணியவன் லஷ்மியம்மா அருகில் கட்டிலில் அமர்ந்தான்.

“அம்மாயி... இப்போ உடம்புக்கு எப்படியிருக்கு?” அவரின் கையைப் பற்றிக் கொண்டு அவன் நலம் விசாரித்தான்.

“நான் நல்லாயிருக்கிறது உங்க ரெண்டு பேர் கையில் தான் இருக்கு... இனியும் சின்னப் பிள்ளைகள் போல் நடந்து கொள்ளாமல் நீயும், பேபிம்மாவும் சந்தோசமாயிருந்தா அதுவே எனக்கு ஊக்கம் தரும். என்ன பேபிம்மா நான் சொல்றது சரி தானே?” பெரியவள் சின்னவளிடம் கேட்க... அவளோ அவருக்குப் பதில் சொல்ல முடியாமல் திருதிருவென விழித்தாள்.

“அம்மாயி... உங்க பேபிம்மாவுக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லையாம்...” அவன் சொல்லும் போதே,

“என்ன சொல்ற அரசு?” பேரனிடம் கேட்டவர்...

“உண்மையா பேபிம்மா?” என்றபடி கவலையுடன் கேட்டவரை கண்டவள், நேற்று போல் அவருக்கு ஏதும் ஆகிவிடுமோ என்று பதற்றமடைந்து,

“அப்படியெல்லாம் இல்லை ஆயாம்மா... அரசு பொய் சொல்றான்” அவரசமாய் அவள் மறுக்க...

“கொஞ்ச நேரம் முன்பு தானே நீ...” அவன் சொல்லும் போதே அவனருகில் வந்து அவன் வாயை தன் வலது கரத்தால் பொத்தியபடி,

“நீ கொஞ்சம் பேசாம இருக்கியா அரசு?” அவனைப் பார்த்து அவள் கோபத்துடன் சொல்ல...

தன் முகத்துக்கு அருகே குனிந்திருந்த அவள் முக அழகில் சிறிது நேரம் தன்னை மறந்து இருந்தவன்... அவளைச் சீண்டி பார்க்கும் நினைவில்...

“நீ தானே சொன்ன...” வாயை மூடிய அவளின் கைய அகற்றியபடி அவன் கூறியதும் அவளுக்கு எங்கிருந்து தான் ஆத்திரம் வந்ததோ...

“உன்னைப் பேசாமல் இருக்கச் சொன்னேன் அரசு...” வலது கரத்தால் அவனின் வாயை இறுக மூடியவள்...

இடது விரலின் ஆள் காட்டி விரலை தன் வாயின் குறுக்கே வைத்து, “மூச்...” என்று கண்களை உருட்டி மிரட்டியவள் அவன் பக்கமாய்ச் சாய...

அவளின் அருகாமையில் தடுமாறியவன் தன் பின்புறமாக இருகைகளையும் கொண்டு சென்று... அதைப் படுக்கையில் அழுந்த பதித்துத் தன்னைத் தாங்கி சமன்படுத்திக் கொண்டவன், கண்ணிமைக்காமல் அவளைப் பார்த்தான். அவளின் அழகில் அவன் தன்னை மறந்ததும் மட்டுமில்லாமல்... தன்னருகில் அமர்ந்திருந்த அம்மாயியையும் மறந்தான். சிறியவர்களின் விளையாட்டைப் பார்த்து அவர்களுக்குள் எல்லாம் சரியாகி விட்டதாய் எண்ணி நிம்மதியடைந்த லக்ஷ்மியம்மா சிரித்தபடி அங்கிருந்து அகன்றார்.

“அவங்களே உடம்பு சரியில்லாதவங்க... அவங்க கிட்ட போய் ஏன் இதையெல்லாம் சொல்ற? உனக்குக் கொஞ்சம் கூட மூளையில்லை அரசு”

படபடவெனப் பொரிந்தவளின் நெருக்கத்தில் அவனின் மூளை கொஞ்சம் கொஞ்சமாய்ச் செயலிழந்து கொண்டிருந்தது என்பது தான் உண்மை.

அவளின் பேச்சில் சுற்றுபுறம் உணர்ந்தவன் தன் அம்மாயியை தேட... அவர் அங்கே இல்லாததைக் கண்டதும் அவனின் மனதில் உல்லாசம் பொங்கியது. அவளையும், தன் வாயை மூடியிருந்த அவள் கையையும் மாறி மாறி பார்த்தவன் அவளைப் பார்த்துக் குறும்பு சிரிப்புச் சிரித்தான். ஆனால் அவள் அதை எதையும் உணரவில்லை.

“என்ன பேசாமலிருக்க?” அவள் அவனை மிரட்ட...

அப்போதும் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனின் பார்வையில் முகம் சுருக்கி யோசித்தவளுக்குத் தான் செய்த செயலின் விபரீதம் வெகுதாமதமாய்ப் புரிய... அவனின் முகத்தைத் திகைப்புடன் பார்த்தாள் அவள். அதிலும் அவனின் அருகாமை, அவனின் பார்வை எல்லாம் அவளைப் படபடக்கச் செய்வதாய்... சட்டென்று அவனின் வாயின் மீதிருந்த தன் கையைப் பட்டென்று எடுத்தவள் அவனை விட்டு தள்ளி நின்றாள்.

“சாரி... சாரி... அரசு... நான் யோசிக்காம...” திணறியவள் அவனைக் கண் கொண்டு பார்க்க முடியாமல் தலை குனிய...

அவளின் அந்தத் திணறல் கூட அவனுக்கு விருப்பமாய்... ரசனையுள்ளதாய் இருந்தது. எப்போதும் நிமிர்வோடு, அலட்சியமாய், தைரியமாய் இருக்கும் அவள் இன்று முகம் சிவந்து, தலை குனிந்திருப்பதைக் கண்டவனுக்கு அந்த வானத்தை வசப்படுத்தி விட்டது போல் ஓர் பரவசம்...!

“எப்படியும் அம்மாயி கிட்ட சொல்லி தானே ஆகணும்... எத்தனை நாள் மறைக்க முடியும்?” அவளின் நிலையை மாற்ற எண்ணி அவன் சகஜமாய் அவளிடம் பேசினான்.

அவன் கூறுவது முற்றிலும் உண்மை என்றாலும்... அதை இப்போதே கூறி அந்த வயதான பாசக்கார பெண்மணியை வருத்தப்பட வைக்க வேண்டுமா? என்று அவளுக்குக் கவலையாய் இருந்தது. அவளுக்கு லக்ஷ்மியம்மா மீது அதிக அன்பு, பாசம் இருந்தது... அது அவர் அவள் வீட்டில் வேலை செய்ததால் மட்டுமல்ல... சிறுவயது முதல் அவளை வளர்த்ததாலோ என்னமோ அவரை அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

“ஆயாம்மா கிட்ட சொல்லி தான் ஆகணுமா அரசு?” அவள் கவலையுடன் கேட்க...

“வாடி வா... என் அல்லிராணி... இதற்குத் தானே நான் காத்திருந்தேன்...’ மனதுக்குள் உற்சாகம் அடைந்தவன்,

“என்றைக்காவது ஒருநாள் சொல்லி தானே ஆகணும்... அது இன்றே இருந்திட்டு போகட்டும்...”

“இதைக் கேட்டு அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆகிட்டா...” பரிதாபமாய்க் கேட்டவளை அதை விடப் பரிதாபமாய்ப் பார்த்தவன்,

“தெரியல...” உதட்டை பிதுக்கி கொண்டு இருகையையும் அகல விரித்தான்.

தான் ஒருநாள் வீட்டை விட்டு வெளியில் போனதையே தாங்க முடியாமல் மயக்கம் போட்டு விழுந்த லக்ஷ்மியம்மா... தான் நிரந்தரமாய் வீட்டை விட்டு வெளியில் செல்வதை அறிந்தால்...??? அதை நினைத்து பார்க்க முடியாதவளாய் கண்களை இறுக மூடி கொண்டாள்.

“வேணாம் அரசு... இதை ஆயாம்மாவிடம் சொல்ல வேணாம்...” அதைக் கேட்டு அவனின் மனம் குத்தாட்டம் போட... அதை அடக்கி கொண்டு,

“ஏன்...?” வேண்டுமென்றே புரியாதவனாய் அவன் கேட்க,

“பாவம் வயதான காலத்தில் அவங்களை நாம கஷ்டப்படுத்த வேணாம்...” சொல்லியவளை ஆழ்ந்து நோக்கியவன்,

“என்னைக் கண்டாலே உனக்குப் பிடிக்காது... பணத்தைக் காட்டி மிரட்டி கல்யாணம் பண்ணியவன் நான்... கெட்டவன்... அதிலும் நான் தொட்டால் உனக்கு அருவருப்பாய் இருக்கும். இப்படிப்பட்ட என்னுடன் ஒரே அறையில் எப்படி இருப்பாய் அல்லிராணி...? அதுவும் வெளி உலகத்துக்கு என் மனைவியாய்...? மனைவிங்கிற வார்த்தைக்கு அர்த்தம் தெரியும் தானே...”

“சிலநேரங்களில்... சில இடங்களில்... உண்மையான கணவன், மனைவியாய் நடிக்க வேண்டியிருக்கும்... அதையெல்லாம் உன்னால் செய்ய முடியுமா? இல்லை என் அருகாமையைத் தான் உன்னால் சகித்துக் கொள்ள முடியுமா? ரொம்ப ஈசியா பிரிவை யார் கிட்டேயும் சொல்ல வேணாம்ன்னு சொல்ற...” அவனின் ஒவ்வொரு வார்த்தையும் கூர்மையுடன் வந்து அவளின் மனதை பதம் பார்த்தது.

‘நான் என்ன செய்வது?’ என்று கண்கள் கலங்க அவள் இயலாமையுடன் அவனைப் பார்த்தாள்.

அவள் நினைத்திருந்தால் ‘நீயாச்சு... உன் அம்மாயி ஆச்சு... கிழம் உயிரோடு இருந்தால் என்ன... இல்லாவிட்டால் எனக்கென்ன...?’ என்று அலட்சியமாய்ப் பேசிவிட்டு தன் வழியைப் பார்த்துக் கொண்டு போயிருக்கலாம். ஆனால் அவள் அதைச் செய்யவில்லை. மாறாக அந்த மூதாட்டியின் நலனை பற்றி மட்டுமே யோசித்தாள். அவளின் மனதை நன்கு புரிந்த அரசுவுக்கு அவளின் மேல் மரியாதை கூடியது.

‘இது தான்... இந்த நல்ல குணம் தான் என்னை உன்னிடம் இழுத்துப் பிடித்திருக்கிறது. அதனால் தான் உன் பெற்றோர் எப்படியிருந்தாலும் உன்னை நான் நேசித்தேன்...

இப்படிப்பட்ட பொக்கிஷமான உன்னை நான் எப்படிக் கை நழுவ விடுவேன்’ மனதுக்குள் நினைத்தவன், அவள் கண்கள் கலங்கி நிற்பதை கண்டு பொறுக்க மாட்டாமல்... அவளை வம்பிழுக்க எண்ணி,

“ஆனால் நான் அப்படியெல்லாம் உன்னைச் சொல்ல மாட்டேன்... உன்னைப் போல்... நீ என் அருகில் வந்தால் எனக்கு அருவருப்பாய் இருக்குன்னு நான் சொல்லவே மாட்டேன்... இப்போ கூட நீ கிட்ட வந்த நான் ஏதாவது சொன்னேனா? நான் அந்தளவுக்குப் பெருந்தன்மையானவன் அல்லிராணி...”

“அரசு...” அவன் நினைத்தது போல் அவள் கோபமாய்ச் சீறினாள்.

“கோபப்படாமல் நான் சொல்வதைக் கேளு... கொஞ்ச நேரம் முன்னாடி என் பக்கத்தில் வந்து என்னைத் தொட்டு பேசின... அப்போது உனக்கு அருவருப்பாய் இருந்ததா? இல்லை தானே... என்னைப் பிடிக்காது என்ற முகமூடி போட்டுக் கொண்டு என்னைப் பார்த்தால்... உனக்கு என்னைப் பிடிக்காமல் தான் போகும். என்னைப் பழைய அரசுவாய் உன் மனதில் நினைத்து பார்... இந்த வெறுப்பு மறைந்து விடும்” அவன் பேச பேச அவள் மனதில் ஏதோ மாற்றம்... சரியென்பது போல் வெறுமெனே தலையசைத்தாள். அவளின் சம்மதம் அவனையும் நெகிழ செய்வதாய்...!

“அல்லிராணி... எல்லாவற்றையும் மறந்துவிட்டு நாம் ஏன் சாதாரணக் கணவன், மனைவியா வாழ கூடாது...?”

அவனின் ‘கணவன் – மனைவி’ என்ற வார்த்தையில் அவன் மிரட்டி தன்னைத் திருமணம் செய்தது அவளின் ஞாபகத்தில் வர... அருகில் கிடந்த தலையணை எடுத்து அவன் மேல் கோபமாய் வீசியவள்,

“எதைடா மறக்க சொல்ற... பண்றது எல்லாம் பண்ணிட்டு மறக்கணுமா? நான் மறக்க மாட்டேன்டா... நான் சாகும் வரை நீ செஞ்ச காரியத்தை மறக்க மாட்டேன்... அதிலும்

உனக்கு மனைவியா வாழணுமா? உன்னை...” கோபத்தில் கத்த...

“இங்கே பார்... ஒண்ணு என் கூட வாழும் வழியைப் பார்... இல்லை வீட்டை விட்டு போகும் முடிவை எடு... இப்படி ரெண்டும் இல்லாமல் சும்மா சும்மா கத்திட்டு இருந்தா எப்படி?” அவனும் வேண்டுமென்றே தன் குரலை உயர்த்த...

“என்னடா கொழுப்பா? நீயா வந்து என் கழுத்தில் தாலி கட்டுவ... அதுக்கப்புறம் நீ என்னை வேணாம் வீட்டை விட்டு போன்னு சொன்னதும்... நானும் நீ சொன்னதைக் கேட்டு அப்படியே போயிடணுமா? அதுக்கு வேறு ஆளை பார்... நீ கட்டிய தாலிக்கு தண்டனையா நான் இங்கே தான் இருப்பேன்... நான் வேலைக்கு எல்லாம் போக மாட்டேன்...”

“அதனால எனக்கு மூணு வேளையும் சாப்பாடு போட்டு... எனக்கு ஆக வேண்டிய செலவு எல்லாத்தையும் நீ தான் பார்க்கணும். பொண்டாட்டின்னா சும்மான்னு நினைச்சியா? இனி தான்டா இருக்கு மவனே உனக்கு... நான் உனக்குக் கொடுக்கிற டார்ச்சர்ல நீ துண்டை காணோம்... துணியைக் காணோம்ன்னு ஓடணும்...” அவள் கருவி கொண்டே பேச... அவளின் வார்த்தையில் அவன் அகமகிழ்ந்தான்.

“பார்ப்போம் பார்ப்போம்... யார் துண்டை காணோம் துணியைக் காணோம்ன்னு ஓடுறாங்கன்னு...” அவன் பதிலுக்குச் சவால் விட...

“உன்னை விட்டு தள்ளி போகணும்ன்னு தான் நான் நினைச்சேன்... நீ இவ்வளவு சொன்னதுக்கு அப்புறம் நான் இங்கே இருந்து போக மாட்டேன்... பார்க்கலாம் அரசு... நீயா நானா?” ஆக்ரோசமாய்க் கத்தியவளை ஆசையுடன் பார்த்தவன் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அசட்டையாய் தோளை குலுக்கி கொண்டு அங்கிருந்து நகர்ந்தான். அவனின் முதுகை வெறித்துப் பார்த்தவளின் பார்வையில் வெறுப்பு மண்டி கிடந்தது.

****

அலுவலக நேரத்தில் அரசுவின் அலைப்பேசி அழைத்தது. எடுத்து பார்த்தவன்... அது தன் அக்காளின் கணவன் தாஸ் என்றதும் உற்சாகமாய் உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்.

“ஹாய் மாமா... ஊருக்கு வந்துட்டிங்களா? ஈவினிங் நான் வந்து பார்க்கிறேன்...”

“நீ என்ன எங்களைப் பார்க்க வர்றது அரசு... உன் கல்யாணம் கேள்விப்பட்டதும் உன் அக்கா கோபமாய் உங்க வீட்டுக்கு கிளம்பிட்டிருக்கா... அதான் உனக்கு ஃபோன் பண்ணினேன்...” அவர் பேசவும் தான்... தான் செய்த திருமணத்தை இன்னமும் அவர்களிடம் தெரிவிக்கவில்லை என்பது அவனுக்கு ஞாபகத்தில் வந்தது.

“சாரி மாமா...” அவன் உணர்ந்து மன்னிப்பு வேண்ட...

“உன் சாரியை கொஞ்சம் தள்ளி வச்சிட்டு உன் அக்காவை எப்படிச் சமாளிக்கிறதுன்னு யோசி...”

“இப்போ நான் என்ன செய்ய மாமா?” என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

“அவள் அங்கே போவதற்குள் நீ எப்படியாவது வீட்டில் இருக்கும் வழியைப் பார்... இல்லைன்னா தேனுக்கு இருக்கிற கோபத்துக்கு அந்தப் பொண்ணை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவா?” தாஸின் எச்சரிக்கையில் அவன் உடனே வீட்டிற்குக் கிளம்பினான்.

வீட்டின் முன் அவன் காரை நிறுத்தவும் அவனின் அக்கா வருவதற்கும் சரியாய் இருந்தது. காரிலிருந்து இறங்கிய தேன்மொழியைப் பார்த்து அன்பாய் புன்னகைத்தவன்,

“அக்கா வாங்க...” என்க...

“இப்போ தான் இந்த அக்கா உன் கண்ணுக்கு தெரியுறாளா? ஏண்டா நாங்க எல்லாம் உயிரோட இல்லைன்னு முடிவு பண்ணிட்டு உன் இஷ்டத்துக்கு ஆட்டம் போடுறியா? அப்படி என்னடா கல்யாணத்துக்கு அவசரம்... அப்படிக் கல்யாணம் பண்ணனும்ன்னு தோணியிருந்தா

உனக்காகக் காத்திட்டு இருக்கிற காயூவை நீ பண்ணியிருக்க வேண்டியது தானே? இல்லை அவள் வேணாம்ன்னு நீ சொல்லியிருந்தா... நானே நல்ல பொண்ணுங்களா பார்த்து வரிசையில் கொண்டு வந்து நிறுத்தியிருப்பேனே...”

அவனை வசைபாடி கொண்டே தேன்மொழி வீட்டிற்குள் நுழைய... அங்கே லக்ஷ்யம்மாவுடன் அமர்ந்திருந்த அல்லியின் காதில் அவள் பேசியது எல்லாம் விழுந்தது.

“சின்னுவை கூட்டிட்டு வரலையா?” அவளின் மகள் சித்ராவை கேட்டான் அவன். சித்ரா பதினொன்று வயது குட்டி பெண்.

“நான் ஒண்ணும் உன் வீட்டில் விருந்தாட வரல... சண்டை போட வந்திருக்கேன்... அதான் அவளைக் கூட்டிட்டு வரல...”

“என் கூட நீங்க சண்டை போடாம வேறு யார் போட போறாங்க? தாராளமா சண்டை போடுங்க...” சிரித்தபடி சொன்னவன் அவளின் தோள் பற்றிச் சோபாவில் அமர வைத்தான். அவனின் பொறுமையை அதிசயமாய்ப் பார்த்து கொண்டிருந்தாள் அல்லி.

“அக்கா இவள் தான் என் மனைவி அல்லிகொடி...” அக்காவிற்கு அல்லியை அறிமுகப்படுத்தியவன்,

“அல்லி... இவங்க தான் என் ஒரே அக்கா தேன்மொழி...” என்று அக்காவை அறிமுகப்படுத்தினான்.

அல்லி தேன்மொழியை அவ்வளவாய் பார்த்ததில்லை. தேன்மொழியும் அடிக்கடி கண்டி செல்பவள் இல்லை... எப்போதேனும் இருந்திருந்து போவாள்... அப்படிப் போனாலும் ஒரே நாளில் திரும்பிவிடுவாள். அதனால் இருவரும் சந்திக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு. ஆனால் அல்லியின் பெற்றோரால் அரசு அடைந்த காயங்கள் அவளுக்கு நன்கு தெரியும்.

“தேனு எப்படிம்மா இருக்க? மாப்பிள்ளை, சின்னு எல்லோரும் சௌக்கியமா?” பெரியவள் பேத்தியிடம்

கேட்க...

“அவங்க எல்லாம் நல்லா தான் இருக்காங்க அம்மாயி... ஆனா உங்க பேரன் பண்ணிய காரியத்தால் நான் தான் நல்லாயில்லை” தேன்மொழி சலிப்புடன் கூறினாள்.

“அப்படி அவன் என்ன தப்புப் பண்ணினான்? கல்யாணம் பண்ணிக்கிட்டது அவ்வளவு பெரிய தப்பா தேனு?” பெரியவள் பேரனை விட்டுக் கொடுக்காமல் பேச...

அவனோ இருவரும் பேசுவதைச் சிரித்தபடி பார்த்திருந்தான். அவனின் திருமணத்திற்கு அவன் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

“கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பில்லை தான்... எதுக்கு இவ்வளவு அவசரமாய்க் கல்யாணம் பண்ணிக்கணும்... அதிலும் போயும் போயும்... இந்த மாதிரி பெண் தானா உங்க பேரனுக்குக் கிடைக்கணும்? கொஞ்சமும் அழகில்லை...”

அல்லியை பார்த்து தேன்மொழி முகத்தைச் சுழித்துக் கொண்டு சொல்ல... அல்லியோ ஆத்திரத்துடன் கணவனைப் பார்த்தாள். அவனோ எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் புன்னகை முகத்துடன் அமர்ந்திருக்க... அதைக் கண்டு அவளின் கோபம் எல்லையைக் கடக்க ஆரம்பித்தது.

“ஏண்டா இருந்திருந்து உன் புத்தி ஏன் இப்படிப் புல் மேய போனது? உன்னை விரும்பும் காயூவின் கால் தூசி பெறுவாளா இவள்? அவள் அழகு எங்கே இவள் அழகு எங்கே? சரி படிப்பாவது அவள் அளவுக்கு வருமா?” அவனிடம் கேட்டவள் அல்லியிடம்,

“ஏய் பொண்ணு... நீ என்ன படிச்சியிருக்க?” அதிகாரமாய் அவள் வினவ...

அல்லியின் கோபம் எல்லையும் கடந்து ஆக்ரோசமாய் அவளை ஆக்கிரமித்தது. கோபமாய் ஏதோ பேச அவள் வாய் திறக்கும் முன்,

“அல்லி எம்எஸ்சி படிச்சியிருக்கா அக்கா...” அரசு அவளை முந்தி கொண்டு சொல்ல...

“ம்ஹூம்... இருந்தாலும் காயூ படித்த டாக்டர் படிப்புக்கு இணையா வருமா? எல்லாம் உன் தலையெழுத்து அரசு? இப்படிப் போய் மாட்டிக்கிட்டியே...” அங்கலாய்த்த பேத்தியிடம் பெரியவள்,

“தேனு தேவையில்லாமல் பேசாதே... என்ன இருந்தாலும் அவள் உன் தம்பியின் மனைவி... நாளை உனக்குப் பிறந்து வீட்டு சொந்தமாய் முன்னால் நிற்க போவது அவள் தான். அதை மறந்து விடாதே... அதிலும் அரசு அல்லியை...” மேலே என்ன சொல்லியிருப்பாரோ...?

“அக்கா... இவள் தான் என் மனைவி அதில் எந்த மாற்றமும் இல்லை... நடந்து முடிந்ததைப் பேச வேணாம்...” அவன் முடிவாய் உறுதியாய் கூற...

அவனின் குரலில் தேன்மொழி சற்று அடங்கினாள். தம்பியின் அந்த உறுதியான குரலின் அர்த்தம் அவனின் இறுதியான முடிவை தெரிவிப்பது என்பது அவளுக்குமே தெரியும் ஆதலால் அமைதியானாள். ஆனாலும் அல்லியை முறைக்கத் தவறவில்லை.

“என்னமோ போடா தம்பி... என் மனசு ஆறவே மாட்டேங்குது?” தன் ஆற்றாமையை அவள் புலம்ப...

“அக்கா... நீங்க அன்றைக்குப் பார்த்து வைத்த வைர நெக்லஸ் வந்துவிட்டதாம் கடைக்காரர் சொன்னார்... போகலாம் வர்றீங்களா?” அரசு கேட்டுக் கொண்டே எழ...

வைர நகை ஆசையில் தம்பியின் மனைவி பற்றிய நினைவை தள்ளி வைத்துவிட்டு அவனுடன் கடைக்குக் கிளம்பினாள் தேன்மொழி. அவர்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த அல்லியின் இரத்த கொதிப்பு ஏகத்துக்கும் எகிறியிருந்தது.

தேன்மொழிக்கு அவள் கேட்டதை விட அதிகமாய் நகைகளை வாங்கிக் கொடுத்து அவளைச் சந்தோசமாய் அவள் வீட்டில்

இறக்கி விட்ட அரசு... கொஞ்ச நேரம் அங்கே இருந்து அவள் மனதை குளிர்வித்து விட்டு வீட்டிற்குத் திரும்பி வந்தான். அம்மாயி படுக்கப் போயிருக்க... இவன் நேரே தன் அறைக்குச் சென்றான். அவன் உள்ளே நுழைந்ததும் தான் தாமதம் அல்லி படபடவெனக் காய்ந்த எண்ணையில் இட்ட கடுகாய் பொரிந்து தள்ளிவிட்டாள்.

“உன் அக்கா அந்தப் பேச்சு பேசுறா... நீ ஒண்ணுமே பேசாம சிரிச்சிட்டு இருக்க... உன்னால பேச முடியாததால் அவளைப் பேச விட்டு நீ வேடிக்கை பார்க்கிறியா?” கோபத்துடன் மூச்சிரைக்கப் பேசி கொண்டு நின்றவளை பார்த்து,

“ஏய்... எனக்குத் தான் மரியாதை கொடுக்க மாட்டேங்கிறே... என் அக்காவுக்கும் மரியாதை கொடுக்க மாட்டியா? அவங்க வயசுக்காவது மரியாதை கொடு... இல்லை நடக்கிறது வேற...” அவனும் பதிலுக்குக் கத்த...

“அவ பேசுற பேச்சுக்கு மரியாதை ஒண்ணு தான் குறைச்சல்... முதல்ல நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு... உன் அக்கா என்னைக் கேவலமா அவ்வளவு பேசுறாங்களே... ஒரு தடவை கூட உனக்கு என்னைச் சப்போர்ட் பண்ணனும்ன்னு தோணலையா?”

“நான் எதுக்கு உனக்குச் சப்போர்ட் பண்ணனும்?” கண்களைச் சுருக்கி கொண்டு அவளைப் பார்த்து அவன் கேட்க...

“உன் மனைவிக்கு நீதானே சப்போர்ட் பண்ணனும்... நீயே எனக்குச் சப்போர்ட் பண்ணலைன்னா வேறு யார் பண்ணுவா?” என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

“என் மனைவிங்கிற நினைப்பு கொஞ்சமாவது உனக்கு இருக்கா என் அல்லிராணி...?” நிதானமாய் அவன் கேட்ட கேள்வியில் அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

“என்ன அரசு... இப்படியெல்லாம் கேட்டா நான் பயந்திருவேன் நினைச்சியா? இல்லை அப்படியே மனைவிக்கு உண்டான கடமையை நான் உனக்குச் செய்வேன்னு நினைக்கிறியா?”

தன்னைப் பார்த்து நக்கலாய் கேட்ட அல்லியை அரசு திகைத்துப் போய்ப் பார்க்க... அவளோ தன் கழுத்தில் கிடந்த தாலியை எடுத்து அவன் கண் முன் காட்டி...

“இது நீ தானே கட்டினே...” ஏற்கெனவே அவளின் பேச்சில் திகைத்து போயிருந்தவனின் தலை தாமாக ‘ஆம்’ என்பது போல் ஆடியது.

“நீ என் கணவன் தானே...” அவனைக் கூர்மையாகப் பார்த்தவள்,

“அப்போ அதுக்குண்டான கடமையை நீ செய்து தான் ஆகணும். உன் மனைவின்னு சொன்னால் மட்டும் போதாது. எப்போதும் எனக்குச் சப்போர்ட்டா இருக்கணும்... பேசணும். அதுவும் உன் கடமை தான் அரசு”

அவளின் பேச்சில் அவன் வியந்து போய் அவளைப் பார்த்தான். தான் கேட்ட கேள்வியைச் சாமார்த்தியமாய் மறைத்து விட்டுத் தன்னிடம் வாயாடும் அவளின் அறிவை எண்ணி மனதுக்குள் மெச்சி கொண்டான்.

‘என்னவொரு அறிவு என் அல்லிராணி... உன்னால் மட்டுமே இப்படிப் பேச முடியும். இப்போ நான் கேட்கிறதுக்கு நீ பதில் சொல்லி தான் ஆகணும்... இப்போ பாரு...’ மனதுக்குள் எண்ணியவன்,

“அதே போல் உனக்கும் கடமை இருக்கில்ல அல்லிராணி...” என்றவனை முறைத்து பார்த்தவள்,

“நீ தான் என்னைத் தேடி வந்து கல்யாணம் பண்ணிக்கிட்ட... நானில்லை... நீ தான் என்னை உன் மனைவி... மனைவின்னு சொல்ற... நான் உன்னை என் கணவனா

கூட நினைக்கல... இதில் கடமை வேறா? அதுக்கு வேற ஆளை பார் அரசு... நீ என்னைக் கல்யாணம் பண்ணியது எவ்வளவு தப்புன்னு... இன்னும் கொஞ்ச நாளில் நான் படுத்தும் பாட்டில் நீயே உணர்ந்து கொள்வாய்”

அலட்சியமாய்ப் பேசியவளின் வார்த்தைகள் அவன் மனதை தாக்க... அவனின் முகம் சுருங்கி போனது. பேசாமல் அங்கிருந்து நகரப் போனவனைத் தடுத்து நிறுத்தியவள்,

“நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லல...” அவன் கேள்வியாய் அவளைப் பார்க்க...

“அதான் உன் அக்காவிடம் எனக்காகச் சப்போர்ட் பண்ணாம இருந்தல்ல...” அவள் எடுத்து கொடுக்க... சின்னப் பிள்ளையாய் விளக்கம் கேட்டு அடம் பிடிக்கும் அவளைப் பார்த்தவன்,

“இங்கே பார் அல்லி... அவங்க என் அக்கா மட்டும் அல்ல... அவங்க என்னோட வாழ்க்கை வழிகாட்டி... தெய்வம்” என்றவனைக் கேலியாய் நோக்கினாள் அவள்.

“உண்மையா தான் சொல்றேன் அல்லிராணி... நான் இந்தளவுக்கு முன்னேறி வந்திருக்கேன்னா அதுக்கு அவங்க தான் காரணம்... அன்னைக்கு மட்டும் அவங்க எனக்குக் கொடுத்து உதவலைன்னா... நான் இன்னைக்கு இந்தளவுக்கு வளர்ந்திருக்க முடியாது. ப்ளீஸ் எனக்காக அவங்களைக் கொஞ்சம் பொறுத்துக்கோ... அதுக்காக அவங்க உன் கிட்ட அத்துமீறி பேசவும், நடக்கவும் விட மாட்டேன். நான் எப்பவும் உன் கூடயிருந்து உன்னைப் பத்திரமா பார்த்துக்குவேன்”

அவளுக்குப் புரியும் படி அவன் எடுத்து சொல்ல... அவளோ கண்களில் கனல் பறக்க பத்ரகாளியாய் நின்றிருந்தாள்.

“ஓஹோ... உன்னைப் பணக்காரன் ஆக்கியது உன் அக்கா தானா? அந்தப் பணம் கொடுத்த அகம்பாவத்தால் தானே என்னை நீ இப்படி மிரட்டி கல்யாணம் பண்ணியிருக்க. உன்

பணத்தால் தானே எனக்கு இந்த இழிநிலை. உன் பணத்தால் தான் என் நிம்மதி போச்சு... என் சந்தோசம் போச்சு... மொத்தத்தில் எல்லாம் போச்சு. உன்னோட சேர்த்து உன் அக்காவையும் நான் வெறுக்கிறேன்... எல்லாம் அவளால் தான் வந்தது... அதனால் தான் நான் உன் கிட்ட இப்படிக் கேவலப்பட்டு இருக்கேன்...”
ஆங்காரமாய்க் கத்தியவளை கண்டு அவன் விக்கித்துப் போய் நின்றான்.

‘நான் என்ன சொன்னால் இவள் என்ன பேசுகிறாள்? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஏன் முடிச்சு போட்டு பேசுகிறாள்? இந்தப் பணம் நான் யாருக்காகச் சம்பாதித்தேன்... எனக்காகவா? இல்லை என் குடும்பத்துக்காகவா? இல்லையே உனக்காகத் தானே அல்லிராணி... இந்தப் பணம், வாழ்க்கை, வசதி எல்லாம் உன்னை மனதில் வைத்துக் கொண்டு சம்பாதிச்சது தானே... உன்னை ராணி போல் நல்லா வாழ வைக்கணும்ன்னு நினைச்சு தானே நான் ராப்பகல் பாராமல் உழைத்தது...”

‘இந்தப் பணம் இருக்கப் போய்த் தானே உன் அப்பா உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி வைத்தார். இந்தப் பணம் இல்லையென்றால் உன் அருகில் நிற்கும் தகுதி எனக்கு இருந்திருக்குமா? இப்போதைக்கு உனக்கும் எனக்குமான பந்தத்தை நிர்ணயித்து இருப்பது இந்தப் பணம் தான்... இந்தப் பந்தத்தைக் காதலால் மலர செய்வது உன் கையில் தான் இருக்கிறது பெண்ணே...!’

மனதுக்குள் அவளிடம் நீளமாய்ப் பேசியவன் வெளியில் ஒன்றும் சொல்லவில்லை. எல்லாவற்றையும் தன் மனதுக்குள் போட்டு புதைத்துக் கொண்டான். ஒரு சில சமயம் அவளிடம் தன் மனதிலிருப்பதை எல்லாம் கொட்டி அவளின் காதலை யாசிக்கலாமா என்று கூட அவனுக்குத் தோன்றும்... ஆனால் ஏதோ ஒன்று அவனின் மனதை தடுத்துக் கொண்டே இருந்தது.

ஏனோ காத்திருந்த அவனின் காதல்... அந்தக் காதலால் ஏற்பட்ட அவமானம், வலி எல்லாம் சேர்த்து அவளிடம் அதைச் சொல்ல முடியாமல் தடுத்தது. என்றாவது ஒரு நாள் தன் நேசத்தை அவளாய் உணர மாட்டாளா என்று அவன் தவித்தான். ஆனால் அதை உணர மாட்டேன் என்று கண்ணை மூடி கொண்டு இருட்டில் தான் இருப்பேன்னு பிடிவாதம் பிடிக்கும் அவளை அவனும் தான் என்ன செய்வான்? அவனுக்குள் ஒருவித அலுப்பும், சலிப்பும் தட்ட அவளுக்குப் பதில் பேசாமல் குளியலறைக்குச் செல்ல முற்பட்டான்.

“இங்கே ஒருத்தி கரடி மாதிரி கத்திட்டு இருக்கேன்... உனக்குக் காது கேட்கலையா?” அவனின் முன்னால் வழி மறிப்பது போல் வந்து நின்றாள் அவள்.

கோபத்தில் முகமெல்லாம் சிவக்க, கண்களை உருட்டி கொண்டு அவள் நின்ற விதத்தில் அவனின் மனதிலிருந்த ஆயாசம் அவனை விட்டு விலக,

“என்ன அல்லிராணி... உன்னைப் போய் யாராவது கரடின்னு சொல்வாங்களா? நீ உன்னைக் கண்ணாடியில் பார்த்ததே இல்லையா? நீ ஒரு அழகான இளம்பெண்...” அவளின் முகத்தை ரசித்தபடி அவன் சொல்ல...

“என்ன கிண்டலா?” கோபமாய் அவள் அவனை முறைக்க...

“ச்சே... ச்சே... இதில் எல்லாம் நான் கிண்டல் பண்ணுவேனா அல்லிராணி... நானெல்லாம் அந்த அரிச்சந்திரன் மாதிரி உண்மையை மட்டும் தான் பேசுவேன். இந்த உலகத்திலேயே அழகான பெண் யாரென்றால்... என் அல்லிராணி தான்னு கண்ணை மூடிட்டு சொல்வேன்...” தன் மனதிலிருந்து காதல் உந்த... அவளை மயக்கத்துடன் பார்த்தவன் வார்த்தைகள் அதே மயக்கத்துடன் வந்தது.

வார்த்தைகளை விட்ட பின் தான் அவன் தான் பேசியதன் அர்த்தம் புரிய நாக்கை கடித்தவன்... அவள் கேள்வி கேட்கும் முன் சட்டென்று குளியலறைக்குச் சென்று கதவை அடைத்துக் கொண்டான். அவனின் ஒவ்வொரு

வார்த்தையும் அவளின் செவியில் விழுந்து இதயம் நுழைந்து மனதில் ஆழ பதிந்தது. அவன் பேசியதை அசை போட்டுக் கொண்டு திரும்பியவள் கண்ணில் அங்கிருந்த நிலைக் கண்ணாடி விழ... அதன் முன் போய் நின்று தன்னை உற்று பார்த்தாள்.

மாநிறம் தான் என்றாலும் மாசுமருவில்லாத குழந்தைத்தனம் மிளிரும் முகம், எப்போதுமே புன்னகைக்கும் கண்கள், உதடுகள் (அரசு அருகில் இருந்தால் மட்டுமே அது தன் உணர்வுகளை வெளிப்படுத்தாது... இப்போது அரசு பக்கத்தில் இல்லாததால் அது தாராளமாய்ப் புன்னகைத்தது), பூசினார் போன்ற தேகம் எனப் பார்ப்பதற்கு அவள் அழகாகத் தான் இருந்தாள்.

ஆனால் ஏனோ அவளுக்குத் தான் அழகாக இல்லை என்ற எண்ணம் இருந்து கொண்டே இருந்ததால் அவள் கண்களுக்கு மட்டும் அவளின் அழகு தெரியவில்லை. தான் அவ்வளவாக நிறமில்லை என்ற குறையே அவளை அப்படி எண்ண வைத்திருந்தது. மனிதர்கள் சிவப்பாய் இருந்தால் மட்டும் அழகு என்று நினைத்திருக்கும் சில பல மூடர்களில் அவளும் ஒருத்தி. இடமும், வலமுமாய்த் தன்னைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள்... ம்ஹூம்... அப்படியொன்றும் தான் அழகாய் இருப்பது போன்று அவளுக்குத் தோன்றவில்லை.

‘பொய்க்காரன், வேசக்காரன்... எப்படிக் கூசாமல் பொய் சொல்றான்... அவன் அரிச்சந்திரனா? இதை மட்டும் அந்த அரிச்சந்திரன் உயிரோடு இருந்து கேட்டிருந்தா... தூக்கு போட்டு செத்து போயிருப்பான். உடம்பு பூரா பொய்... இதில் உண்மை விளம்பின்னு விளம்பரம் வேற... நிச்சயம் என்னைக் கிண்டல் பண்ண தான் அப்படிப் பேசியிருக்கிறான்... நான் அழகாயில்லைன்னு சொல்லாமல் சொல்லியிருக்கான்... என்னைப் பார்த்தா அவனுக்கு எப்படித் தெரியுது...? அதிலும் கண்ணை மூடிக்கிட்டு சொல்வானா? அப்போ தானே பொய் சொல்ல முடியும்’ மனதில் அவனை நினைத்து அவள் கருவி

கொண்டிருக்கும் போதே... அவன் குளியலறையில் இருந்து வெளிப்பட்டான்.

அவளின் முகத்தை வைத்தே அவளின் கோபத்தின் அளவை புரிந்து கொண்டவனாய் அவள் பேசுவதற்கு இடம் கொடுக்காமல், அவளைக் கண்டு கொள்ளாமல் கீழே தன் படுக்கையை விரித்துப் படுத்தவன் அடுத்தச் சில நிமிடங்களில் தூங்கியும் போனான். அவள் தான் உறக்கம் வராமல் அவனைக் கோபமாய்ப் பார்த்து கொண்டிருந்தாள்.

****

மறுநாள் காலையில் உணவு உண்ண அவன் வரும் வேளையில் அம்மாயி அவனிடம்,

“அரசு... உனக்கும், பேபிம்மாவுக்கும் நடந்த கல்யாணத்தை ஊரறிய செய்ய வேணாமா? சின்னதா ஒரு வரவேற்பு வைச்சால் என்னப்பா?” அதைக் கேட்டதும் அவனின் முகம் மாறியது.

“வேணாம் அம்மாயி... வரவேற்பு எல்லாம் எதுக்கு?” அவன் மறுத்தான்.

“என்ன அரசு இப்படிக் கேட்கிற?”

“இல்லை அம்மாயி இது சரி வராது?” அவன் முடிவாய் மறுத்துவிட... அல்லிக்குக் கோபம் வலுத்தது.

உணவு உண்டவன் எதையோ எடுப்பதற்காகத் தங்கள் அறைக்குச் செல்ல... அவனைப் பின் தொடர்ந்து அவளும் சென்றாள். அறைக்குள் நுழைந்தவன் தன் பின்னோடு வந்த அவளைக் கேள்வியாய் பார்க்க,

“ஏன் அரசு ரிசப்சன் வைக்க வேணாம்ன்னு சொல்ற? என்னை உன் மனைவின்னு சொல்ல உனக்கு அவ்வளவு அவமானமாவா இருக்கு? இல்லை என்னை யாருக்கும் தெரியாமல் வைப்பாட்டி மாதிரி வைத்து விட்டு... யூஸ் அன்ட் த்ரோ மாதிரி கழட்டி விடலாம்ன்னு எண்ணம் இருக்கா?” அவள் முடிக்கும் முன்,

“ஏய்...”

அவளை அடிப்பதற்காய் அவனின் கை அவனையும் அறியாமல் ஓங்கியிருந்தது. அவனின் ஓங்கிய கையைப் பார்த்தவள் கண்ணில் அச்சத்துடன் பின்னே நகர்ந்தாள். அவளின் பார்வையில் தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன், அவளின் பயந்த தோற்றம் கண்டு,

“சாரி அல்லிராணி... சாரி...” மனமார மன்னிப்பு கேட்க...

“கட்டாயத் தாலி கட்டினது மட்டுமில்லாமல்... என்னை அடிக்க வேற செய்வியா அரசு?” கண்களில் நீர் நிரம்பியிருக்க அவனை அவநம்பிக்கையாய் பார்த்தாள் அவள். அவனின் செயலை இன்னமும் அவளால் நம்ப முடியவில்லை.

“ச்சீ... ச்சீ... என்ன பேசுற அல்லி... உன்னைப் போய்... அதுவும் நான் அடிப்பேனா? ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிக்கோ அல்லி...” அவன் கெஞ்சி கொண்டே அவளருகே வர,

“வேணாம் கிட்டே வராதே...” அவள் அவனை எச்சரிக்க...

“ஓகே கிட்ட வரல... இனிமேல் இது போல் அபத்தமாய்ப் பேசாதே... நம்ம கல்யாணம் என்ன மாதிரி நடந்திருந்தாலும் இப்போது நீ என் மனைவி அதை நல்லா மனசில் வச்சுக்கோ... இந்த மாதிரி கீழ்த்தரமான வார்த்தை சொல்லி உன்னையை நீயே கேவலப்படுத்திக்காதே...”

“அப்போ எதுக்கு ரிசப்சன் வேணாம்ன்னு சொல்ற... முதல்ல அதுக்குப் பதில் சொல்லு...” அவள் தன் நிலையில் பிடியாய் நிற்க,

“அது வந்து...” அதன் காரணத்தை அவனும் எப்படிக் கூறுவான். இந்தத் திருமண வரவேற்பு வைப்பதினால் வீணே அவளுக்குத் தான் மனக்கஷ்டம் என்பதை அவளுக்கு எப்படிப் புரிய வைப்பான்.

ஒன்று அவனை அழகில்லை என்று கூறி அவளைக் கஷ்டப்படுத்துவார்கள்... இல்லை அவள் அழகில்லை என்று

கூறி அவனைக் கஷ்டப்படுத்துவார்கள். இந்த ரெண்டுமே அவனைப் பாதிக்கப் போவதில்லை. அவனின் அழகின் அளவு அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும். அதே போல் அவளின் அழகு அவனுக்கு மட்டுமே தெரிந்த ஒன்று.

இது உடல் சார்ந்தது இல்லை... மனம் சார்ந்தது. இதை ஒவ்வொருவருக்கும் எடுத்து சொல்லி புரிய வைக்க வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. ஆனால் மற்றவர்கள் கூறும் இந்த ரெண்டுமே அவளைப் பெரிதும் பாதிக்கக் கூடியது என்பது அவனுக்குச் சர்வ நிச்சயமாய்த் தெரியும்.

“என்னை உன் மனைவின்னு சொல்றது உனக்குக் கேவலமாவா இருக்கு?” அவள் அதிலேயே நிற்க, அவளை ஆழ்ந்து பார்த்தவன் பின் பெருமூச்சு விட்டபடி,

“இப்போ உனக்கு என்ன...? ஊரை கூட்டி நீ தான் என் மனைவின்னு நான் சொல்லணும் அவ்வளவு தானே... உன் விருப்பப்படி செய்றேன்... ஆனால் இந்த ரிசப்சன் எல்லாம் வேணாம். நம்ம வீட்டிலேயே ஒரு சின்னப் பங்கசனுக்கு ஏற்பாடு பண்றேன். இப்போ உனக்குச் சந்தோசமா?” என்றவனை ஒன்றும் கூறாமல் பார்த்தாள். அவன் மறுப்பான்... பெரிய சண்டை போடலாம் என்று காத்திருந்தவளுக்கு அவன் ஒத்துக் கொண்டதும் சப்பென்று போய்விட்டது.

அவளின் மௌனத்தைக் கண்டவன் தன் பேச்சை தொடர்ந்தான். “ஆனால் இதனால் வரும் பின்விளைவுகளை நீதான் சந்திக்கணும். அதுக்கு அப்புறம் என்னிடம் வந்து புலம்பக் கூடாது” அவன் எச்சரிக்கை செய்ய...

‘அப்படி என்ன பெரியதாய் வந்துவிடப் போகிறது?’ என்று மனதுக்குள் அலட்சியமாய் நினைத்தவள் அவனின் வார்த்தைகளைப் புறம் தள்ளினாள்.

அரசு சொன்னது போல் தன் வீட்டிலேயே சிறிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அவனின் நெருங்கிய உறவினர்,

நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுத்தான். யாரும் அவளின் மனதை நோகடித்து விடக் கூடாது என்பதில் கவனமாய் இருந்தான். அதே போல் அவளின் பெற்றோருக்கும் அழைப்பு விடுத்தான். அதைக் கேட்டு அதற்கும் அவள் அவனிடத்தில் எகிறினாள்.

“இப்போ எதுக்கு அவங்களை அழைக்கிற? அவங்க பேசிய பேச்சுக்கு அவங்க முகத்தில் முழிக்க எனக்கு விருப்பமில்லை...” என்று சொன்னவளை கண்ணிமைக்காமல் பார்த்தான்.

“எல்லாம் உனக்காகத் தான் அல்லி சொல்றேன்... விருந்துக்கு வர்றவங்க முன்னாடி உன் அப்பா, அம்மா இல்லாம நீ அவமானப்படக் கூடாதுன்னு தான் அவங்களை நான் அழைச்சேன்...” என்றவனைப் பார்த்து,

“அவங்க வர்றது தான் எனக்கு அவமானமாயிருக்கு...” என்றவள் மேலே பேச விருப்பமில்லாமல் சென்றுவிட்டாள்.

அவளுக்குத் தெரியாத விசயம் ஒன்று இருக்கு... அது அவன் அவள் பெற்றோரிடத்தில் விடுத்த எச்சரிக்கை.

“உங்க கடன்பத்திரத்தை நான் தள்ளுபடி செய்துவிட்டேன்... அல்லிக்காகத் தான் இதை நான் செய்றேன்... அவளுக்காக மட்டுமே... அவளைக் கஷ்டப்படுத்துற எதையும் நான் செய்ய விரும்பல... இனிமேலாவது அவளிடம் தேவையில்லாததைப் பேசி அவள் மனதை கஷ்டப்படுத்தாதீங்க...” என்றவனின் பேச்சில் அவர்கள் மகிழ்ந்தார்கள் என்றால் அவன் நிம்மதியடைந்தான். அவ்வளவு நாள் அவனின் மனதை குறுகுறுத்த ஏதோ ஒன்று அந்த நொடி அவனிடமிருந்து விலகி ஓடியது.

அன்று விருந்து நடக்கும் நாளில் அவன் தனியே அம்மாயிடம், “அம்மாயி நான் சிலசமயம் என் பிரெண்ட்சோடு பேசிட்டு இருப்பேன். அதனால் அல்லியை நீங்க உங்க கூடவே வைச்சுக்கோங்க அம்மாயி... யாரும் எதுவும் அவள் மனக்கஷ்டப்படும்படி பேசாமல் பார்த்துக்கோங்க” பெரியவளும் சரியென்று சம்மதித்தாள்.

அதே போல் அவன் தன் அக்காளிடமும் சொல்லி வைத்தான். அதுவே தேன்மொழியின் கோபத்தை அதிகப்படுத்துவதாய் இருந்தது.

என்ன தான் கவனமாய்ப் பார்த்து கொண்டாலும் பேசும் வாயை யாராலும் மூட முடியாது. அவனின் அக்கா தேன்மொழியின் தோழி ஒருத்தி வந்தவள்,

“என்ன தேனு... உன் தம்பிக்கு இருந்திருந்தும் இப்படிப்பட்ட ஒரு பொண்ணு தான் கிடைத்தாளா? இதுக்கு என் நாத்தனார் மகள் பரவாயில்லையே... நான் ஏற்கெனவே உன்னிடம் கேட்டிருந்தேனே... நீ தான் சரின்னு சொல்லல” தன் ஆதங்கத்தைக் கொட்ட...

தேன்மொழிக்கு அந்தத் தோழியின் நாத்தனார் பெண்ணைப் பற்றி நன்கு தெரியும். அவள் சுமாரான அழகாய் இருந்ததால் அவளுக்குப் பிடிக்கவில்லை... அதான் தன் தம்பிக்கு வேண்டாமென்று கூறிவிட்டாள். அதைத் தோழி சுட்டி காட்டவும் அவளின் கோபம் எல்லாம் தம்பியின் மனைவி மேல் பாய்ந்தது.

“என்ன செய்யச் சரோ... யாருக்கு என்ன விதித்து இருக்கோ அது தான் நடக்கும். என் தம்பியின் தலையெழுத்து இவள் தான் எழுதியிருக்கு... யாரை நொந்து என்ன செய்ய?” அல்லியை முறைத்துக் கொண்டு கூறியவள் அங்கிருந்து நகர்ந்தாள். அதைக் கேட்டு அல்லியின் மனதில் அன்றைய நாளின் முதல் அடி விழுந்தது.

“பேபிம்மா... எப்படிக் கண்ணா இருக்க?” என்றபடி வந்த பெற்றோரை கண்டு முகம் சுருக்கியவள் ஒன்றும் பேசாமலிருக்க...

“இந்த அப்பா, அம்மாவை மன்னிக்கக் கூடாதா பேபிம்மா? அந்தஸ்து, கௌரவம்ன்னு ஏதோ மதி கெட்டு அப்படிப் பேசிவிட்டோம்...” பொற்கொடி அவளிடம் கெஞ்சவும் தான் அவள் கொஞ்சம் இறங்கி வந்தாள்.

இதற்கு எல்லாம் சிகரம் வைத்தார் போல் அமைந்தது காயத்ரியின் வரவு. நிறம் என்றால் அப்படியொரு நிறம். கதாநாயகி போல் அப்படியொரு அழகு... அதிலும் அவள் முகத்தில் படிப்பு கொடுத்த அறிவுக்களை அதிகமாய்ச் சொட்டியது. அதுவே அவளுக்குத் தனியொரு கம்பீரத்தை கொடுத்தது. அரசு காயத்ரியை அல்லியிடம் அறிமுகப்படுத்தி வைத்தான்.

“அல்லி... இவள் தான் காயூ... காயத்ரி. ஸ்கூலில் என்னோட ஜூனியர்...”

‘ஓ... இவள் தான் அவனின் அக்கா சொன்ன காயூவா?’ அல்லியின் கண்கள் அவளை நிதானமாய் அளவெடுத்தது. காயத்ரியை பார்த்த நொடி அவளுக்குப் புரிந்து போனது அவள் தான் அரசுவுக்கு ஏற்ற பொருத்தமான ஜோடியென்று. அவனின் அழகுக்கும், கம்பீரத்துக்கும் காயத்ரி தான் சரியென்று அவள் நினைத்தாள்.

“காயூ... இவள் என் மனைவி அல்லி... அல்லிகொடி”

அந்தக் காயத்ரி அவளைப் பார்த்துச் சினேகமாய்ப் புன்னகைத்தாள். அவளின் பார்வையிலோ, செயலிலோ எந்தவித விகல்பமும் இல்லை. அல்லி அரசுவை கைப்பிடித்து விட்டாளே என்ற பொறாமை கொஞ்சமும் அவளின் கண்களில் இல்லை. அதைக் கண்டு அல்லி தான் சற்று குழம்பி போனாள்.

“காயூ எப்படியிருக்க...?” ஆர்ப்பாட்டமாய்க் கேட்டபடி வந்த தேன்மொழி காயத்ரியை அணைத்து கொண்டாள்.

“உன் கனவு எல்லாம் இப்படிக் கனவாய் போயிடுச்சே...” மெல்லிய குரலில் தேனு சொன்னாலும் அருகிலிருந்த அரசு, அல்லியின் காதில் அது நன்கு விழ தான் செய்தது.

“அக்கா... என்ன பேச்சு பேசுறீங்க?” அவன் அவளைக் கண்டிக்க...

“அய்யோ என்ன தேனுக்கா... இப்படி எல்லாம் பேசுறீங்க? நீங்க நினைப்பது போல் எல்லாம் இல்லை” அவசரமாய்

மறுத்தாள் காயத்ரி. அதில் ஏதோ பயம் ஒளிந்து இருப்பதாய் தோன்றியது அல்லிக்கு.

கண்டதையும் யோசித்த அல்லிக்கு திடீரென்று தலைவலிப்பது போலிருக்க... அரசுவை விட்டு விலகி தனியே சென்று யார் கண்ணிலும் படாமல் அமர்ந்தாள். சிறிது நேரம் தலையைக் கைகளில் தாங்கி பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவள் காதில்,

“அரசு... நீங்க இப்படிப் பண்ணுவீங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல... உங்களுக்குக் கல்யாணம் பண்ணனும்ன்னு ஆசை வந்தப்போ கொஞ்சம் கூடவா என் முகம் உங்க ஞாபகத்தில் வரலை... நான் உங்களை லவ் பண்றேன்னு உங்களுக்கு நல்லாவே தெரியும்... தெரிஞ்சியிருந்தும்... எப்படி இப்படி?” நலிந்த குரலில் காயத்ரி அரசுவிடம் கேட்டு கொண்டிருந்தாள்.

காயத்ரியின் வார்த்தையில் அல்லியின் காதுகள் கூர்மையடைந்தது. அவளின் கேள்விக்கு அரசுவின் பதில் என்னவாக இருக்கும் என்று அல்லியின் மனம் படபடவென அடித்துக் கொண்டது. அது ஏனென்று அவளுக்குத் தெரியவில்லை.

“நாம ஆசைப்பட்டது எல்லாம் நடந்துடறது இல்லை காயூ...” காயத்ரிக்குப் பதில் சொன்ன அரசுவின் பதிலில் அல்லி அதிர்ந்து தான் போனாள்.

காயத்ரி பேசியது கூட அல்லியின் மனதை பாதிக்கவில்லை. அதற்கு அரசுவின் பதில் அவளை அதிகமாய்ப் பாதித்தது. அவ்வளவு அழகான காயத்ரியை விட்டு விட்டு அவன் சுமாரான தன்னை மணந்தது பணத்தை வசூலிக்கத் தானா? என்ற கேள்வி அவளின் மனதில் முளைத்து அவளைச் சூறாவளியாய் ஆட்டி படைத்தது.

“இப்போவாவது அவனின் மறுபக்கம் உனக்குப் புரிந்ததா பேபிம்மா... இப்பவும் ஒண்ணும் கேட்டு போகல... பேசாமல் அவனை விட்டு கிளம்பி நம்ம வீட்டுக்கு வா... அவன்

உனக்கு வேணாம் பேபிம்மா...” பொற்கொடியின் பேச்சில் அவரை யோசனையாய் ஏறிட்டு பார்த்தாள் அல்லிகொடி.

மேற்கொண்டு பொற்கொடி ஏதோ பேச போக அவரைக் கையமர்த்தித் தடுத்த அல்லி மேலே அரசுவும், காயத்ரியும் பேசுவதைக் கவனிக்கலானாள். அதைக் கண்டு பொற்கொடியின் மனம் குதூகலமானது. தங்களை ஏமாற்றிய, அவமானப்படுத்திய அரசுவை பழிவாங்க இதுவே சரியான சந்தர்ப்பம் என்று அவர் எண்ணினார்.

அரசுவின் பலம், பலவீனம் இரண்டுமே தன் மகள் தான் என்பதில் அவருக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அதனால் மகளை அவனிடமிருந்து பிரித்தாலே அவர் வெற்றியடைந்தது போல் ஆகிவிடும். அதன் பின் அவன் தன் வாழ்க்கைக்காக, தன் மனைவிக்காக அவர்களிடம் தானே வந்து கெஞ்ச வேண்டும். அவர் தன் மனதில் அதை நினைத்துக் கொக்கரித்துக் கொண்டு மகளின் அருகில் அமர்ந்தார்.

“ஏன் நடந்திருக்காது அரசு? நீங்க நினைச்சிருந்தா எல்லாமே நடந்திருக்குமே?”

காயத்ரியின் கேள்வியில் அல்லியின் முகம் கறுத்துப் போனது. அரசு ஒன்றை நினைத்தால் அதை எவ்வாறு செய்து முடிப்பான் என்பதற்கு அவளைத் திருமணம் செய்ததே ஒரு அத்தாட்சி அல்லவா!

“காயூ... அர்த்தம் இல்லாமல் பேசாதே... நான் உனக்கு எத்தனை தடவை தான் சொல்றது? உன் மேல் எனக்குக் காதல் இல்லை என்று...”

இதைக் கேட்டு காயத்ரியின் முகம் இருண்டது என்றால்... அல்லியின் முகத்தில் வெளிச்சம் பரவியது.

“என் மனதில் வேறொரு பெண் இருக்கிறாள். அவளைத் தான் நான் காதலிக்கிறேன். என் மனம் அவளிடத்தில் இருக்கும் போது நான் எப்படி உன்னைக் காதலிக்க முடியும். ஏற்கெனவே உன்னிடம் நான் சொல்லியிருக்கேன்... உன் மனதை மாற்றிக் கொண்டு வேறொரு நல்ல பையனா

பார்த்துக் கல்யாணம் பண்ணுன்னு. இல்லை நானே உனக்கு நல்ல பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்... இன்னொரு முறை இப்படி அபத்தமாய்ப் பேசி கொண்டு திரியாதே...”

அவனின் பேச்சுப் பெண்கள் இருவரின் மனதிலும் பெரும் சூறாவளியை கிளப்பியது. காயத்ரியை அவன் காதலிக்கவில்லை என்றதும் நிம்மதியடைந்த அல்லி... அவன் வேறொரு பெண்ணைக் காதலிக்கிறான் என்றதும் அவளின் இதயம் சுக்குநூறாகி போனது. ஏனோ மனம் பாரமாகி வலிப்பது போல் தோன்றியது. அது ஏன் என்று அவள் உணர்ந்திருந்தால் பல பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம்.

காயத்ரிக்கு அவனின் காதல் தெரியும்... ஆனால் யாரை அவன் காதலிக்கிறான் என்று தெரியாது? அரசுவின் இந்தத் திடீர் திருமணம் அவள் மனதில் பெருத்த சந்தேகத்தைக் கிளப்பியது. அவன் காதலித்த பெண் இவளாக இருந்தால் அவன் இப்படித் திருட்டுத்தனமாய்த் திருமணம் புரிந்திருக்கத் தேவையில்லையே. ஊரை கூட்டி... ஊர் மெச்சும்படி திருமணம் செய்திருக்கலாமே. எங்கேயோ இடித்தது அவளுக்கு?

“எல்லாம் சரி தான் அரசு... நீங்க காதலித்த பெண்ணையும் மணக்கவில்லை... உங்களைக் காதலிக்கிற என்னையும் மணக்கவில்லை... எதுக்காகச் சம்பந்தமே இல்லாத இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணியிருக்கீங்க? அப்படியென்ன நிர்பந்தம் உங்களுக்கு? அந்தப் பெண் கத்தியை காட்டி உங்களை மணந்து கொண்டாளா?” காயத்ரியின் பேச்சில் அல்லியின் மனம் வெகுண்டது.

‘யார் கழுத்தில் யார் கத்தியை வைத்தது? உண்மை என்னன்னு தெரியாமல் என்ன பேச்சு பேசுகிறாள்?’ மனதில் ஆத்திரமாய் நினைத்தவள் முகம் கோபத்தில் சிவந்தது.

“அதெல்லாம் உனக்கு எதுக்குக் காயூ... ஒரு டாக்டரா இருந்து கொண்டு ஏன் இப்படிப் பேசுகிறாய்?”

அரசு தான் அல்லியை விரும்புவதை அவளிடம் சொல்லவில்லை. அல்லியிடமே அவன் இன்னமும் சொல்லவில்லை. இதில் காயத்ரியிடம் எப்படிச் சொல்வான்?

“டாக்டரா இருந்தால் காதலிக்கக் கூடாதா அரசு?” அவனைப் பார்த்துப் பாவமாய்க் கேட்டவள்...

“நான் என்ன கேட்டாலும் நீங்க பதில் சொல்ல போவதில்லை... எப்படியிருந்தாலும் உங்க திருமணத்தை மாற்ற முடியாது. வாழ்த்துக்கள் அரசு...” அவளின் குரலிலேயே கவலை தெரிந்தது. அதை அல்லியும் உணர்ந்தாள். அரசுவும் உணர்ந்தான்.

“எல்லாம் கொஞ்ச நாளில் சரியாகிவிடும்... கூடிய சீக்கிரம் உன் கல்யாண பத்திரிக்கையை நான் எதிர்பார்ப்பேன்...”

அரசுவின் கேள்விக்குக் காயத்ரி என்ன சொன்னாள் என்று தெரியவில்லை... அதன் பின் அவர்கள் அந்த இடத்தை விட்டு அகலும் சத்தம் மட்டுமே கேட்டது.

“அவனின் யோக்கியதையைப் பார்த்துக்கிட்டியா பேபிம்மா... கட்டிய மனைவி நீ இங்கே இருக்கும் போதே அவன் இன்னொருத்தியிடம் கொஞ்சிக்கிட்டு இருக்கான். இப்படிப்பட்ட இவன் உனக்குத் தேவையா? பேசாமல் எங்களுடன் கிளம்பி வந்துவிடு பேபிம்மா...”

சாமார்த்தியமாய் அரசு அல்லியை காதலித்த விசயத்தை அவளிடமிருந்து மறைத்துவிட்டார் அவர். அப்படி அவர் சொன்னால் அது அவனுக்கு அல்லவா சாதகமாகப் போய்விடும்.

தேனொழுக கேட்ட தாயை இமைக்காமல் பார்த்த அல்லி, “அரசுவுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எல்லாம் கொடுத்திட்டீங்களா?” நிதானமாய்க் கேட்க...

‘நான் என்ன பேசுகிறேன்? இவள் என்ன பேசுகிறாள்?’ என்று அவருக்கு எரிச்சலாக வந்தது.

“அதைத் தான் அவன் தள்ளுபடி செய்துவிட்டானே... அப்படியே இருந்தாலும் கொடுக்கணும்ன்னு அவசியம் இல்லையே... அதுக்குத் தான் உன்னைக் கல்யாணம் பண்ணி... இத்தனை நாள் அனுபவித்து விட்டானே... அது போதாது. இன்னமும் நீ அவனைச் சகிக்கத் தேவையில்லை பேபிம்மா... அவனெல்லாம் ஒரு ஆளுன்னு... அவன் மூஞ்சியும், அவனும்... அவனைக் கண்டால் எனக்கே சகிக்கவில்லை...” தோளை குலுக்கியபடி அலட்சியமாய்ப் பேசினார் அவர்.

“இப்போ வேற யார் கிட்டேயாவது கடன் வாங்கி இருக்கீங்களா?” கூர்மையுடன் அன்னையைப் பார்த்தாள் அவள்.

“எதுக்குப் பேபிம்மா இப்படிக் கேட்குற...?” புரியாமல் அவர் மகளைப் பார்க்க...

“இல்ல... அரசுவிடம் வாங்கிய கடனுக்கு அவனோடு ஐந்து நாள் அவனின் படுக்கையைப் பகிர்ந்துக்கச் செய்தாயிற்று...”

இதைச் சொல்லும் போது அவள் மனம் அடைந்த துக்கம் அவளுக்கு மட்டுமே தெரியும். உதட்டை அழுத்தி கடித்துத் தன்னுள் பொங்கிய துக்கத்தை அடக்கினாள். தன்னுடைய இழிநிலை யாருக்கும் வர கூடாது என்று நினைத்தவள் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

“இப்போ என்னை உங்க கூடக் கூட்டிட்டு போய்... நீங்க வேற யாரிடமாவது வாங்கிய கடனுக்கு அவனின் படுக்கையை ஆசைநாயகியாய் அலங்கரிக்கச் செய்யச் சொல்றீங்களா? உங்க பாஷையில் அப்படித் தானே கடனை அடைக்கச் சொல்வீங்க...” அவள் சொல்லும் போதே...

“பேபிம்மா...” பொற்கொடி அதிர்ந்து போனார்.

“சும்மா ஏன் கத்துறீங்க? உண்மையைத் தானே சொன்னேன். அரசுவிடம் நீங்க நடந்து கொள்கிற முறை அது மாதிரி தானே இருக்கு. நீங்க நல்ல அப்பா, அம்மாவா

இருந்திருந்தா... அவன் கொடுத்த கடனை கொடுத்திட்டு என்னைக் கூட்டிட்டு போயிருக்கணும். அதை விட்டுட்டு அவன் கடன் வேணாம்ன்னு சொன்னதும் பல்லை காமிச்சிட்டு வந்திட்டு... அவனுக்கு எதிராவே என் கிட்ட பேசுவீங்களா? நீங்க வாங்கிய கடனுக்கு நான் வட்டி கட்டிக்கிறேன்."

"இனிமேல் இது மாதிரி பேசிட்டு இங்கே வராதீங்க. எனக்கு வாழ்வோ... சாவோ... இனிமேல் அது அரசுவோட தான். என் வாழ்க்கையை நான் பார்த்துக்கிறேன்... இனிமே அரசுவே கூப்பிட்டா கூட நீங்க இங்கே வராதீங்க. இப்போ இந்த நொடி நீங்க இங்கிருந்து கிளம்பலாம்"

தன் மனதின் வலியை மறைத்துக் கொண்டு கம்பீரமாகப் பேசிய அல்லி விருந்து நடக்கும் இடம் நோக்கி சென்றாள். மகளின் பேச்சில் பொற்கொடியின் முகத்தில் ஈயாடவில்லை. அதற்கு மேல் அங்கிருக்கப் பொற்கொடி என்ன அறிவில்லாதவரா? அடுத்த நொடி கணவனை அழைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

"அல்லி எங்கே போயிருந்த?"

அவளின் வரவு உணர்ந்து அவளை நோக்கி சிரித்தபடி வந்த அரசுவை கண்ணிமைக்காமல் நோக்கினாள். அவன் மனதில் வேறொரு பெண் இருக்கிறாள் என்ற நினைவே அவளை ஏதோ செய்தது. கலங்கிய கண்களை அவனுக்குக் காட்டாமல் இமைகளைத் தாழ்த்தி அவள் மறைத்தாள்.

"தலைவலிக்கிற மாதிரி இருந்தது... அதான்..." அவள் முடிக்கும் முன்னே... அவன் பதறினான்.

"நீ வேணா ரெஸ்ட் எடு... இங்கு நான் பார்த்துக் கொள்கிறேன்"

கரிசனையுடன் அவன் கேட்டதில் அவளுக்குக் கண்கள் கரித்தது. ஆனாலும் அவளின் உள்மனம் 'என்னமாய் நடிக்கிறான்?' என்று குமுறியது. சரியாக அந்நேரம் பார்த்து அங்கு வந்த தேன்மொழி,

“அரசு... இவள் அந்தப் பரமேஷ்வர் பொண்ணா?” கோபத்துடன் கேட்க...

“ஆமாம் அக்கா... அதுக்கென்ன?”

அவனின் குரலிலிருந்த அழுத்தம் தேன்மொழியை அடுத்த வார்த்தை பேச விட வில்லை. இந்தக் கட்டுப்பாடு எல்லாம் அல்லிக்கு தான் இல்லையே...

“ஏன் அவர் பொண்ணுன்னா என்ன?” அல்லியின் அலட்சியமான கேள்வி தேன்மொழியை உசுப்பிவிட...

“அவர் பொண்ணுன்னு தெரிந்திருந்தா உன்னைக் கல்யாணம் பண்ண என் தம்பியை விட்டிருக்க மாட்டேன்...” எரிச்சலுடன் வந்தது தேனுவின் வார்த்தைகள். அல்லின் மீதான காதலால் தன் தம்பி பட்ட வேதனையை அவளால் மறக்க முடியவில்லை.

“அக்கா விருந்து நடக்கும் இடத்தில் எதுக்கு வீண் விதண்டாவாதம்? அல்லி என் மனைவியான பின் நீங்க பேசும் பேச்சு அவளை மட்டும் காயப்படுத்தல... என்னையும் சேர்த்து தான் காயப்படுத்துது...” அரசுவின் குரலில் இருந்த கவலை தேனுக்குப் புரிந்ததோ என்னமோ அமைதியாய் அங்கிருந்து நகர்ந்தாள்.

‘என்னைக் கல்யாணம் பண்ண விட்டிருக்க மாட்டேன்னா... வேற எந்த ஊரு ரதிய உன் தம்பிக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருப்ப...’

அல்லிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஏற்கெனவே காயத்ரியினால் ஏற்பட்ட கோபம், தேனுவின் வார்த்தைகள், அரசு மனதில் இருக்கும் காதலி எல்லாமுமாய்ச் சேர்த்து அவளின் மனதில் ஆழமான காயத்தை உண்டு பண்ணியது.

“சாரி அல்லி... அவங்களுக்காக நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்...”

அரசு அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் மன்னிப்பு கேட்க... அவளோ அவனை முறைத்து பார்த்தாள்.

“இந்த ஜென்மத்தில் உன் அக்கா என்னைக் குறை சொல்வதை நிறுத்த போவதில்லை. அவளுக்காக நீ மன்னிப்பு கேட்குறதா இருந்தா... உன் வாழ்நாள் முழுவதும் கேட்டுட்டே இருக்க வேண்டியது தான். நான் பாட்டுக்கு நிம்மதியா இருந்தேன் அரசு... ஏன் என்னைக் கல்யாணம் பண்ணி இந்தப் பாடு படுத்தற...?” கேட்டவளின் வார்த்தையில் கோபத்தை விட... ஆதங்கமே அதிகமாயிருந்தது.

“நாம பிறகு பேசலாம்... முதலில் வந்தவர்களைக் கவனிக்கப் போகலாமா?”

முற்றுப்பெறாத அவளின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு தன் கையை அவளை நோக்கி அவன் நீட்ட... அவளோ யோசனையாய் அவனின் கையைப் பார்த்தவள், அதைக் கண்டு கொள்ளாமல் நடந்தாள்.

“வந்திருக்கும் விருந்தாளிகள் முன்பு நாம் கணவன், மனைவியாய் நடிக்கவாவது செய்யலாமே அல்லி? நமக்கு இடையில் நடக்கும் பிரச்சினைகளை அடுத்தவர்களுக்கு வெளிச்சம் போட்டு காண்பிக்க வேண்டுமா? பேசும் நாக்குக்கு நாமே செய்தியை கொடுப்பானேன்...” அவளுடன் சேர்ந்து நடந்து கொண்டே அவன் பேச... அவளுக்குமே அது சரியென்றே தோன்றியது.

அதன் பின் அவள் அவனுடன் இணக்கமாய்ச் சிரித்துப் பேசாவிட்டாலும்... முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை. அதிலும் முக்கியமாகக் காயத்ரி முன்பாகத் தாங்கள் சந்தோசமான, ஒத்துமையான தம்பதியராகக் காட்டி கொள்ள வேண்டியிருந்தது அவளுக்கு. அந்த நடிப்பை யாரும் அறியாத வண்ணம் சிறப்பாக நடித்து முடித்தாள்.

விருந்து முடிந்து அறைக்குள் வந்த அல்லியிடம் அரசு, “ரொம்பத் தேங்க்ஸ் அல்லி...” என்க,

“எதுக்கு...?”

“எதுக்கோ... தேங்க்ஸ் சொல்லணும்ன்னு தோணிச்சு சொன்னேன்...” சிரித்தபடி சொன்னவன் அவள் மேலே பேசும் முன் குளியலறைக்குள் சென்றிருந்தான்.

குளியலறையில் இருந்து திரும்பி வந்தவன் வழக்கம் போல் கீழே படுத்துக் கொள்ள... அவள் கட்டிலில் மேலே படுத்து கொண்டாள். அவன் உறங்கி விட்டானோ என்னமோ படுத்ததும் அவனிடத்தில் எந்த அசைவுமில்லை. ஆனால் அவளுக்குத் தான் உறக்கம் வருவதாய் இல்லை.

தேன்மொழியின் உதாசீன பேச்சுக்கள், அரசு மீதான காயத்ரியின் காதல், அன்னையின் இகழ்ச்சியான பேச்சு... இதற்கு எல்லாம் சிகரம் வைத்தார் போன்று அரசுவின் மனதில் அழியாமல் ஆழ புதைந்திருக்கும் காதல்... இவையெல்லாம் சேர்த்து அவளின் மனதை தூங்காமல் அலைக்கழித்தது. ஏற்கெனவே அரசுக்குப் பெண்களிடத்தில் சினேகம் உண்டு என்று அவன் வாய் வார்த்தையாய் ஒத்துக் கொண்டிருக்கிறான். அதையே தாங்க முடியாத அவளால் அவனின் இந்தக் காதலை முற்றிலும் தாங்க முடியவில்லை.

தன்னை இந்த இழிநிலைக்கு ஆளாக்கிய கடவுளின் மேல் அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அப்படி அவள் என்ன ஆசைப்பட்டு விட்டாள் என்று அந்தக் கடவுள் அவளை இப்படிக் கஷ்டப்படுத்துகிறார்? தன்னிடம் மட்டும் அன்பை பொழியும் கணவனைத் தானே அவள் கேட்டாள்... இப்படி வேறொருத்தி மேல் காதல் கொண்டிருக்கும் கணவனையா அவள் கேட்டாள்?

எதையெல்லாமோ நினைத்து அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. அடக்கமாட்டாமல் தேம்பி தேம்பி அழுதவள் ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் சத்தமாய் அழுதுவிட்டாள். அதை அவள் உணரவில்லை. ஆனால் அரசுவின் காதில் அவளின் அழுகை விழ... பதறியடித்துக் கொண்டு எழுந்தவன் வேகமாய் அவளருகில் வந்தான்.

“அல்லி...”

அவன் அழைப்பது கேட்டும் அவள் பதில் பேசாமல் தன்னினைவில் கரைய... என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தவன் அவளின் தோளின் மீது கை வைத்தான்.

“ஏன் அழுற?” அவனின் அந்தக் கேள்விக்கும் அவளிடமிருந்து பதில்லை.

“இதுக்குத் தான் நான் சொன்னேன்... இந்த ரிசப்சன், விருந்து எல்லாம் வேணாம்ன்னு... நீ தான் கேட்கவில்லை... இப்போ அழுது என்ன பிரயோஜனம்?” விருந்தில் நடந்த வேண்டாத நிகழ்வால் அவள் அழுவதாய் அவன் நினைத்துக் கொண்டான்.

“நான் ஒண்ணும் அதுக்கு அழல...” வெடுக்கென்று சொல்லியவள் எழுந்து அமர்ந்தாள்.

“வேற எதுக்கு அழுற?”

“ம்... எல்லாம் உன்னை மாதிரி ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கிட்ட என் துரதிர்ஷ்டத்தை நினைச்சு தான்...” என்றவளின் அழுகை கூடியதே ஒழிய குறையவில்லை.

“என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது உனக்குத் துரதிர்ஷ்டமா அல்லி?”

அவனின் குரலில் வேதனை நிரம்பி வழிந்தது. என்று தான் அவள் தன்னைப் புரிந்து கொள்வாளோ? என்று அவனுக்குத் துக்கம் பொங்கியது.

“பின்னே உன்னை மாதிரி ஒருவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது எனக்கு என்ன சந்தோசமாவா இருக்கும்? ஒருத்தி என்னடான்னா உன்னைக் காதலிக்கிறேன்... என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு உன்கிட்ட கெஞ்சிட்டு இருக்கா... நீ என்னடான்னா வேற பொண்ணைக் காதலிக்கிறேன்னு கூசாமல் சொல்ற... இதையெல்லாம் கேட்டதுக்கு அப்புறமும் எனக்கு எப்படிச்

சந்தோசம் இருக்கும்... நீயே சொல்லு? இப்படிக் கஷ்டப்படுத்த தானா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட? என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு நான் வந்து உன்னைக் கெஞ்சி கேட்டேனா?"

அவள் பேச பேச... அவனுக்கு ஏதோ புரிவதாய்... ஏதோ மலர்வதாய்!!! பேச வார்த்தைகள் இல்லாமல் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீ யாரை லவ் பண்ணினியோ அவளையே கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... என்னை ஏன் பண்ணிக்கிட்ட? கல்யாணம் தான் தப்பா போச்சுன்னா... கட்டிய கணவனுமா தப்பா போகணும்? நீ ஒரு நல்ல கணவனே இல்லை. ஐ ஹேட் யூ..." சொல்லி கொண்டே அழுதவளின் அழுகை அவனைப் பாதிக்க...

அவளின் அழுத விழிகளைத் துடைக்க எண்ணி அவன் தன் கையை அவள் நோக்கி நீட்ட... அவளோ அவனின் கையைத் தட்டி விட்டாள்.

"ப்ளீஸ் அழாதே அல்லி..." அவன் குரல் அவளிடம் கெஞ்சியது.

"உன்னை மாதிரி ஒருத்தன் புருசனா வந்தா... நானில்லை... எந்தப் பெண்ணாயிருந்தாலும் அழ தான் செய்வாங்க..."

அடக்க மாட்டாத அழுகையில் அவள் குமுற... இதற்கு மேல் பொறுமையாய் இருப்பது வேலைக்காகாது என்று நினைத்தவன் நின்ற வாக்கில் அவளை இழுத்துப் பிடித்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"டேய் என்னை விடுடா..." தன் கை கொண்டு அவனைத் தள்ளிவிட அவள் செய்த முயற்சியெல்லாம்... அவனின் உறுதியான அணைப்பில் ஒன்றுமில்லாததாய்ப் போனது.

"ஏண்டா இப்படிப் பண்ற? எப்பவுமே என் பேச்சை கேட்கவே கூடாதுன்னு கங்கணம் கட்டிட்டு இருக்கியா?" கேட்ட அவளின் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

“எப்போதுமே உன் பேச்சை நான் கேட்டு கொண்டிருப்பேன்னு தப்பு கணக்கு போடாதே அல்லி... உன் கணக்கு எப்பவுமே தப்பு கணக்கு தான்...” அவளின் அத்தனை நேர கேள்விகளுக்கும் சேர்த்துப் பதில் சொல்லியவனின் அணைப்பு மேலும் இறுகியது.

அவனை எதிர்க்க வேண்டும் என்று அவள் மனம் எண்ணினாலும்... அவளின் உடல் முதன்முறையாய் அவனின் அணைப்பில் நெகிழ்ந்தது. அன்று அருவருப்பாய் இருந்த அவனின் அணைப்பு இன்று ஏனோ ஆறுதலாய் இருந்தது. காயத்ரி மூட்டிய பொறாமையா?, தேன்மொழியின் உதாசீன பேச்சுகளா?, அன்னையின் தரங்கெட்ட சொற்களா?, தனக்கென்று யாருமில்லை என்ற தனிமை உணர்வா? இல்லை ‘இவன் என் கணவன்’ என்ற எண்ணம் தந்த உரிமையா? ஏதோ ஒன்று அவனிடத்தில் அவளை ஒன்றிவிடச் செய்தது.

தன் நெஞ்சில் முகம் புதைத்திருந்த அல்லியின் மோன நிலையைக் கண்ட அரசுவால் தன் கண்களைக் கொஞ்சமும் நம்ப முடியவில்லை. அவளின் இணக்க நிலை கொடுத்த தைரியத்தாலோ இல்லை ஆண் மகனுக்கே உரிய உணர்ச்சிகள் உந்தப்பட்டதாலோ அவனின் கரங்கள் அவளின் மேனியில் ஆழ பதிய, அவனின் உதடுகள் அவனையும் அறியாமல் அவளின் உச்சந்தலையில் தன் முதல் முத்திரையைப் பதித்தது.

“அம்முலு...” கிறக்கமாய்க் கூறியவனின் முகம் அவள் கழுத்தில் புதைந்து அவளின் வாசனையை நுகர்ந்தது. அவளின் நறுமணத்தால், அவளின் அருகாமையால் எழுந்த அவனின் உணர்வுகள் பேயாட்டம் போட... அவளுள் மூழ்க அவனின் இளமை துடித்தது. தனக்குள் அழுது கரைந்து கொண்டிருந்த அவளோ அவனின் செயலை கொஞ்சமும் உணரவில்லை. உணரும் நிலையில் அவளும் இல்லையோ...!!!

அல்லியின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரானது அவளின் கழுத்தில் முகம் புதைத்து தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அரசுவின் பின்னங்கழுத்தில் விழ... அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவளின் அந்தக் கண்ணீர் அவனின் தொடுகையைச் சகிக்க முடியாமல் வந்ததல்ல என்பது அவனுக்கு நன்கு தெரியும். அது அவன் நல்ல கணவன் இல்லை என்று அவள் குமுறியதால் வந்த கண்ணீர் என்பதும் அவனுக்குப் புரியும்.

அவளின் கண்ணீரை அவன் போக்க வேண்டுமானால் அவன் நல்ல கணவனாக நடந்து கொள்ள வேண்டும். அதைச் செயலாக்க எண்ணியவன் அவளின் முகத்தைத் தன் இரு கரங்களில் தாங்கி அவளின் கண்ணீரை தன் உதடு கொண்டு துடைத்து வெற்றிகரமாக அதற்கான முதல் படியில் கால் வைத்தான்.

அவளின் கண்கள், கன்னம் என்று பயணித்த அவனின் உதடுகள் அவளின் இதழை கண்டதும் ஒரு நொடி தயங்கியது. இரு மனம் சேராமல் இரு உடல் மட்டும் சேர்வது எப்படி இனிமையான தாம்பத்தியம் இல்லையோ அது போல் தான் இந்த இதழ் முத்தமும். இதிலும் இரு மனமும் ஒன்றி, ஒருவருக்கொருவர் உயிராய் உருகி தங்களின் காதலை வெளிப்படுத்தும் விதமாய் இருக்க வேண்டும் இந்த இதழ் பரிமாற்றம்...

அப்படியில்லாமல் வலுக்கட்டாயமாய் இழுத்துப் பிடித்துச் சுவைக்கும் இதழில் தேன் சிந்தாது... மாறாகக் கசப்பு தான் மிஞ்சும். அதை அவன் உணர்ந்ததாலோ என்னமோ பொங்கிய தன் உணர்வுகளை நிமிடத்தில் கட்டுக்குள் கொண்டு வந்தவன் அவளை அணைத்தவாறு கட்டிலில் அமர்ந்தான்.

இடது கையால் அவளைச் சிறு குழந்தை போல் தாங்கியவன்... வலது கையால் அவளின் முகத்தில் படிந்திருந்த முடியை விலக்கி கோதி விட்டு, கன்னத்தில்

வழிந்த கண்ணீரை துடைத்து விட்டான். அப்பவும் அவள் அவனின் அணைப்பையோ, தொடுகையையோ கொஞ்சமும் உணரவில்லை. ஆறுதல் படுத்த... படுத்த அழுகையை அதிகரிக்கும் சிறுகுழந்தை போல் அவனின் ஆறுதலில் அவளின் அழுகை மேலும் மேலும் அதிகரித்தது.

“அம்முலு... ப்ளீஸ்டா அழாதே...” அவனின் குரல் அவளின் காதில் விழவில்லையோ?

“அல்லிராணி... ப்ளீஸ் அழாதே...”

மீண்டும் அவளை அழைத்த அவனின் குரலில் அவள் தன் கண்களைத் திறந்தவள் அப்போது தான் உணர்ந்தாள்... தான் அவனின் அணைப்பில் இருப்பதை. அவனிடமிருந்து பதறி போய் விலகியவள்... அவனின் முகத்தைப் பார்க்க முடியாமல் கண்களைத் தாழ்த்தி கொண்டாள்.

‘கடவுளே... அவனைப் பிடிக்கவில்லை... பிடிக்கவில்லைன்னு சொல்லிட்டு அவனின் அணைப்பில் ஆறுதல் தேடியிருக்கேனே... எனக்கு என்னவானது... இன்றைக்கு ஏன் என் புத்தி இப்படித் தறி கெட்டுப் போனது? இப்போ என்னை என்ன சொல்லி கிண்டல் பண்ண போகிறானோ?’ மனதுக்குள் பயந்தவளாய் முழங்காலை இறுக கட்டி கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தாள்.

“அம்முலு...” அவனின் குரலில் விலுக்கென்று நிமிர்ந்தாள். அவனின் இந்தச் செல்ல அழைப்பை கேட்டு அவளின் முகம் யோசனையில் சுருங்கியது.

“என்னை அப்படிக் கூப்பிடாதே அரசு...? நாம வாழ்ற வாழ்க்கைக்கு இந்தச் செல்ல பெயர் எல்லாம் வேணாம்...” அவன் முகம் பாராமல் எங்கோ பார்த்துக் கொண்டு அவள் கூற...

“ஏன் நாம வாழ்ற வாழ்க்கைக்கு என்ன?”

சிரித்தபடி கூறியவன் அவளருகில் நெருங்கி அமர, அவனின் செயலில் அதிர்ந்த அவளோ தள்ளி அமர்ந்தாள். அவன் இன்னமும் நெருங்கி அமர... அவள் விலகி அமர...

கடைசியில் கட்டிலின் முனையில் அமர்ந்தவளின் அருகே வந்தவனைக் கண்டு இனிமேல் எங்கே நகர்வது என்று திகைத்தவள் வெடுக்கென்று எழ போனாள். அவளின் கையைப் பற்றித் தன் அருகில் அமர்த்தியவனின் கையை உதறி தள்ள முயற்சித்தவளின் முயற்சி பலனில்லாமல் போக... வேறுவழியின்றி அவன் அருகில் அமர்ந்தாள்.

“நீ தானே சொன்ன... நான் நல்ல கணவனா நடந்துக்கலன்னு. அதான் முதலில் செல்ல பெயரில் இருந்து ஆரம்பிக்கலாம்ன்னு இருக்கேன்...” கூறியவனைத் திகைத்து போய் அவள் பார்க்க...

“சாரி அம்முலு... என்னால் நல்ல காதலனா தான் நடந்துக்க முடியல. இனிமேல் ஒரு நல்ல கணவனாகவாவது நடந்து கொள்ள முயற்சிக்கிறேன்...”

குறும்பு சிரிப்புடன் அவன் சொல்ல... அவனின் பேச்சு போகும் விபரீத பாதையை உணர்ந்து அவசரமாய்க் குறுக்கிட்டவள்...

“இல்லை அப்படியெல்லாம் வேணாம்... அது ஏதோ ஒரு நினைப்பில் சொன்னது... அதையெல்லாம் மைன்ட் பண்ணிக்க வேணாம்”

“சரி நான் மைன்ட் பண்ணிக்கல” என்றவன் அவளை ஆழ்ந்து பார்த்தவாறு,

“ஏன் அம்முலு எதுக்காக இப்படியொரு அழுகை அழுத?”

அவனின் கேள்வியில் திடுக்கிட்டவள் அப்போது தான் யோசித்தாள் தன் அழுகைக்கான காரணத்தை... அதன் காரணத்தை உணர்ந்த அவளுக்குத் திக்கென்று இருந்தது. அந்தக் காரணத்தை எப்படி அவள் தன் வாயால் சொல்வாள்? அவளின் மனதை புரிந்தது போல் அவன்,

“நான் நல்ல கணவனா நடந்து கொள்ளாதது மட்டும் தான் காரணமா? இல்லை...” என்று இழுத்தவன்,

“காயூ என்னைக் காதலிக்கிறாள் என்பதால் வந்த பொறாமையா? இல்லை நான் வேறு பெண்ணைக் காதலிக்கிறேன் என்றதில் உண்டான துக்கமா? எது காரணம்? ஆக மொத்தம் நாங்க பேசியதை ஒட்டுக் கேட்டிருக்க அப்படித்தானே... ஒட்டுக் கேட்பவர்கள் நல்லதை கேட்பதில்லை என்பது உனக்குத் தெரியாதா?” அதுவரை பொறுமை காத்தவள் அவனின் கடைசிப் பேச்சில் வெகுண்டு எழுந்தாள்.

“நீ ஒண்ணும் மறைவா... ரகசியமா பேசலையே? எல்லோரும் இருக்கும் இடத்தில் தானே நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருந்தீங்க? என்னமோ நான் ஒட்டு கேட்ட மாதிரி பேசுற... விட்டால் இந்த ஊரே உன் பேச்சை கேட்டிருக்கும்”

“சரி அதை விடு... நீ அழுததுக்குக் காரணம் பொறமை தானே...?” இரு புருவத்தையும் தூக்கியபடி கேலியாய் வினவியவனின் கிண்டலில் அவளின் தன்மானம் சீண்டப்பட,

“பொறாமையா எனக்கா? அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே... உன்னையும் போய் ஒரு பொண்ணு லவ் பண்றாளேன்னு பரிதாபம் தான் வந்தது...” என்றவளின் நக்கலில் அவனின் முகம் கறுத்துப் போனது.

“ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீயும் என்னைப் பார்த்து உங்களை லவ் பண்றேன் அரசுன்னு சொல்லத் தான் போற... கெஞ்ச தான் போற... அப்போ கவனிச்சுக்கிறேன் உன்னை...” முகம் இறுக கூறியவனை அலட்சியத்துடன் பார்த்தவள்,

“அதையும் பார்க்கலாம்...” என்றவள்,

“அரசு... எனக்குத் தூக்கம் வருது... முதல்ல நீ இடத்தைக் காலி பண்ணு...” ஏற்கெனவே அவள் சீண்டியதில் கொதித்துப் போயிருந்தவன் அவளின் இந்தப் பேச்சில் ஆத்திரமடைந்தான்.

“நீ இவ்வளவு பேசிய பின்பும் நான் கீழே படுப்பேன்னு எப்படி நீ நம்புற? இன்னையில் இருந்து நல்ல கணவனா நடக்கலாம்ன்னு நான் முடிவு பண்ணிட்டேன்... அதனால...” சொல்லியபடி கால்களை நீட்டி படுத்தவன்... அவள் எழும் முன் அவளைத் தன் கைவளைவிற்குள் சிறை செய்தவன்,

“நீயும் நல்ல மனைவியாய் என் அருகில் படு...” என்றவன் அவளை வலுக்கட்டாயமாய்த் தன்னருகில் படுக்கச் செய்ய...

முதன் முறையாகத் தன் வார்த்தைக்கு அவனிடத்தில் மதிப்பு இல்லை என்பதை உணர்ந்த அவளுக்குப் பயத்தில் தொண்டைக்குழி வறண்டது. அவனின் செயலை எதிர்க்க முடியாத பலகீனத்தில் அவனை அவள் பயத்துடன் பார்த்தாள்.

தன்னருகில் படுத்திருந்தவளின் முகத்தை உற்று நோக்கியவன், “கணவன் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா? அந்தக் கணவன் தன் மனைவியிடத்தில் என்ன மாதிரியான உரிமை எடுத்துப்பான்னு உனக்குத் தெரியுமா?” என்றவனின் கேள்வியில் அவளின் தலை தானாக இல்லை என்பது போல் அசைந்தது.

“தெரியாதா...?” போலியாய் வியந்தவன்,

“தெரிய வச்சுட்டா போச்சு...” நக்கலாய் கூறியவன் அவளின் முகம் நோக்கி குனிய...

அவளோ அச்சத்தில் கண்களை இறுக மூடி கொண்டாள். அல்லிராணியாய் அவனை ஆட்டி படைக்கும் அவள் அச்சப்பட்டுக் கண்களை மூடியது அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

‘மனசுக்குள் இவ்வளவு பயத்தை வச்சுக்கிட்டு... வெளியில் பெரிய இவ மாதிரி என்னமாய் வாயடிக்கிற... உன்னை என் வசப்படுத்துறதுக்கு எனக்கு ஒரு நொடி போதும்... ஆனால் உன்னை நீயே உணராத இந்த நிலையில் உன்னைத் தொடுவது என் காதலை நானே கேவலப்படுத்துவது

போலாகிவிடும். உன் மனசுக்குள்ள நான் வந்திட்டேன்னு எனக்குத் தெரியுது. ஆனா அது உனக்குப் புரிய மாட்டேங்குதே. இல்லை புரிஞ்சிக்க வேணாம்ன்னு அடம் பிடிக்கிறியா? எப்போ அம்முலு புரிய போகுது உனக்கு...? சீக்கிரம் புரிஞ்சிக்கோ அம்முலு... உன் அரசு பாவமில்ல... எத்தனை நாள் தான் நான் தள்ளி நின்னு விரதம் காக்கிறது... அழகு ராட்சசி என்னைக் கொல்லாமல் கொல்றியே...'

மனதுக்குள் அவளைச் செல்லமாய் வைதவாறு கொஞ்சியவன் சிரித்தபடி அவளின் நெற்றியில் முத்தமிட்டு விலகினான். அவனின் விலகலை கூட உணராமல் இன்னமும் கண்களை இறுக மூடி கொண்டு படுத்திருந்தவளை பார்த்து,

"அல்லிராணி..." என்று அவளை அழைக்க... அவனின் அந்த அழைப்பில் கண்களைத் திறந்தவள் முகம் சுருங்கியது. ஒருவேளை அவனின் 'அம்முலு' என்றழைப்பை எதிர்பார்த்தாளோ?

"குட்நைட்..." கண் சிமிட்டி சொன்னவனை ஆச்சிரியமாய் அவள் பார்க்க...

"இன்னும் கொஞ்ச நாள் உனக்கு டைம் தர்றேன்... நீயே மனசார என்னிடம் வரணும். அதுவரைக்கும் நான் காத்திருக்கிறேன்... அதுக்காக இப்படியே நாளை ஓட்டிடலாம்ன்னு நினைச்சிறாதே... அப்புறம் எனக்கு என்ன தேவையோ நானே எடுத்துக்குவேன்" அவனின் பேச்சில் ஒரு கணம் நிம்மதியடைந்தவள்... மறு கணம் கோபம் கொண்டு அவனுக்கு முதுகு காட்டி படுத்து கொண்டாள்.

"நீ என்னை விட்டு விலகி... விலகி போனாலும்... நான் உன்னை விட மாட்டேன்... என் அல்லிராணி..." என்றவாறு அவள் பக்கமாய்த் திரும்பியவன் அவளை அணைத்துக் கொண்டு படுத்தான்.

அவளின் அருகாமை கொடுத்த நிம்மதியில் அவன் படுத்தவுடன் உறங்கிவிட... அவளுக்குத் தான் அவனில்

அணைப்பில் உறக்கம் வரவில்லை. வாழ்க்கையில் முதன்முறையாய் ஆடவனின் தொடுகையை, அண்மையை உணர்கிறாள்.

ஒரு புறம் துக்கமாகவும், மறு புறம் சந்தோசமாகவும் என்ன மாதிரியான மனநிலை என்று கணிக்க முடியாத ஒரு வேறுபட்ட மனநிலையில் அவள் இருந்தாள். சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தவள் பின் மெதுவே அவனின் அணைப்பில் நிம்மதியாய் துயில் கொள்ள ஆரம்பித்தாள்.

****

மறுநாள் காலையில் அவன் எழும் போதே அவனின் கைகள் அவனையும் அறியாமல் தன்னவளை தேடி துளாவியது. அவளைக் காணாது கண்களைத் திறந்தவன் நேற்றைய நினைவில் சிரித்தபடி படுக்கையை விட்டு எழுந்தான். அல்லி எங்கே? என்று தன் கண்களை அறையைச் சுற்றி சுழல விட... அங்கே எங்கேயும் அவளைக் காணாது யோசனையில் முகம் சுருங்கியவன் குளித்து அலுவலகத்துக்குக் கிளம்பி கீழே சென்றான்.

வரவேற்பறையைச் சுற்றி தன் பார்வையை ஓடவிட்டவன் அங்கேயும் அவள் இல்லாததை உணர்ந்து அவன் மனதில் திடீரென்று வலியொன்று தோன்றியது. நேற்று தான் நடந்து கொண்ட முறை பிடிக்காமல் அன்று போல் எங்கேனும் சென்றுவிட்டாளோ? என்ற எண்ணம் மனதை அலைக்கழிக்க... எதற்கும் இருக்கட்டும் என்று இறுதியாக அம்மாயியின் அறையை நோக்கி சென்றான்.

அவள் அங்கே தான் இருப்பாள் என்று அவனின் மனதின் ஓரத்தில் நம்பிக்கை தோன்ற கால்களை எட்டி போட்டான். அங்கே அவன் கண்ட காட்சியில் அப்படியே அதிசயித்துப் போய் அறையின் வாயிலேயே நின்றுவிட்டான். ஏனெனில் அங்கே அல்லி லக்ஷ்மியம்மாவுக்குக் கால்களில் தைலம் தேய்த்து விட்டு கொண்டிருந்தாள். அதைக் கண்டு அவன் மனம் நிறைந்தது.

“அரசு... பேபிம்மா சொன்னால் கேட்க மாட்டேங்கிறாள். பிடிவாதமாய்க் காலுக்குத் தைலம் தேய்த்து விடுகிறாள். நீயாவது சொல் அரசு...?”

அங்கே வந்த அரசுவிடம் பெரியவள் புலம்பினார். தான் வேலை செய்த வீட்டின் சின்ன எஜமானி தனக்குக் கால் பிடித்து விடுவது குறித்துப் பெரியவளுக்குச் சங்கடமாய் இருந்தது.

“ஏன் அல்லி இதையெல்லாம் நீ செய்ற?” கேட்டுக் கொண்டே உள்ளே வந்தவனுக்கு அவளின் செயல் மனதுக்குப் பிடித்திருந்த போதும்.... அவளின் அந்தஸ்து உயரம், தகுதி எல்லாம் அவனையும் சங்கடப்படுத்தியது.

“ஏன் நான் செய்தால் என்ன? மூட்டு வலியில் கஷ்டப்பட்டுட்டு இருந்தாங்க... அதான் தேய்ச்சு விடுறேன்...”

தன் செயலை சாதாரணமாக்கி கூறியவளை உள்ளத்தில் மிகுந்த காதலோடு அவன் பார்த்தான். நல்லவேளை அவள் தன் வேலையில் கண்ணாயிருந்ததால் அவனின் பார்வையை உணரவில்லை.

“என்ன அப்படிச் சொல்லிட்ட பேபிம்மா... நான் உங்க வீட்டில் வேலை செய்த சாதாரண வேலைக்காரி... நீ போய் என் காலை பிடித்துக் கொண்டு...” பெரியவள் தர்மசங்கடத்துடன் கூற...

பாட்டியின் பேச்சு பேரனையும் பாதிக்கத் தான் செய்தது. அவரின் பேச்சு அவனின் தகுதியையும் அல்லவா சுட்டி காட்டியது.

“போங்க ஆயாம்மா... நான் என்னைக்காவது அப்படி நினைத்து இருக்கேன்னா... நீங்க என்னடான்னா இப்படிப் பேசுறீங்களே. அரசுக்கு நீங்க எப்படிப் பாட்டியோ... அதே மாதிரி தான் நீங்க எனக்கும்...” அவளின் பேச்சில் பெரியவள் முகம் மட்டுமல்ல... அவனின் முகமும் மலர்ந்தது.

“பேபிம்மா உன் குணம் யாருக்கும் வராது...”

லக்ஷ்மியம்மா அவளின் கன்னம் வழித்துத் திருஷ்டி கழிக்க... அதைக் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள். அவளின் சிரிப்பு அவனின் மனதில் பெருத்த நிம்மதி தந்தது.

“சரி அம்மாயி... நான் வர்றேன்...” என்றபடி எழுந்தவனை, “அரசு சாப்பிட்டியாப்பா?” பெரியவள் அக்கறையுடன் கேட்க...

“ம்ஹூம் இல்லை அம்மாயி... என் மனைவி எனக்குப் பரிமாறாமல் இனிமேல் நான் உண்பதாய் இல்லை...” அவளைப் பார்த்து கண்சிமிட்டியவன் கேலியாய் சிரிக்க... அவளோ கோபத்தில் முறைத்து பார்த்தாள்.

“நல்ல கணவனுக்கு அது தான்ம்மா அழகு...”

அவளுக்கு மட்டுமே கேட்கும்படி அவளின் காதுக்கருகில் குனிந்து சொன்னவனைக் கண்டு அவளால் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது.

“பேபிம்மா... போம்மா... அவனுக்குப் போய்ப் பரிமாறு...” பெரியவள் சொல்ல...

அவர் சொல்லை தட்ட முடியாமல் அவள் அறையை விட்டு வெளியில் வர, அவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

அறையை விட்டு வெளியில் வந்தவன்... முன்னே நடந்து கொண்டிருந்த அவளின் கைப்பற்றித் தடுத்து நிறுத்த... அவள் கேள்வியாய் அவனை நோக்கினாள். அவள் தன் கையை உதறிக் கொள்ள முயற்சிக்காததை மனதில் பதிய வைத்து கொண்டவன்,

“அம்முலு... நீ இன்னமும் என்னை உன் வீட்டு வேலைக்காரனாகத் தான் பார்க்கிறியா? அதனால் தான் என்னை உன் கணவனாய் ஏத்துக்க முடியலையா?” வெகுநாள் அவன் மனதை உறுத்திய சந்தேகத்தை இன்று அவன் கேட்டே விட்டான்.

“அரசு... இன்னமும் உன்னை நான் வேலைக்காரனாய் நினைத்திருந்தால்... இப்படி என் கையை நீ பிடித்துக் கொண்டிருப்பதைச் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்... இந்நேரம் உன் கன்னம் பழுத்திருக்கும். என் கழுத்தில் தாலி கட்டிய கணவனாக நீ இருக்கப் போய்த் தான் என் கையைப் பிடிக்கும் உரிமை உனக்குக் கொடுத்திருக்கேன்” அவளின் பேச்சில் அவன் முகம் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தது.

“ஏன் அரசு... நான் என்னைக்காவது உன்னை அந்த மாதிரி நடத்தியிருக்கேனா? அதாவது நம் கல்யாணத்துக்கு முன்...?” அவளின் கேள்வியில் அவன் இல்லை என்று தலையசைக்க...

“அதை எப்போதும் உன் நினைவில் வைத்து கொள்...” கம்பீரமாக உரைத்தவள் முன்னே நடக்க... அவன் மனதில் நிறைந்த சந்தோசத்துடன் அவளின் பின்னே சென்றான்.

உணவு மேஜையை அடைந்தவள் பேசாமல் அவனுக்குத் தட்டு எடுத்து பரிமாற, அவனோ இன்னொரு தட்டை எடுத்து வைத்துப் பரிமாறினான். அதைக் கண்டு அவளுக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்தது. நேற்று அவன் நடந்து கொண்ட விதம் வேறு அவளின் நியாபகத்தில் வந்து அதற்குத் தூபம் போட்டது.

“உனக்கு உடம்பு பூரா கொழுப்பு அரசு... நான் பரிமாறியது உனக்குப் பிடிக்கலன்னா... எதுக்கு ஆயாம்மா கிட்ட அப்படிச் சொன்ன? வேணும்ன்னே நீ என்னை அவமானப்படுத்துற?” கோபத்தில் அவளின் குரல் உயர்ந்தது.

அவனோ அவளுக்குப் பதிளிக்காமல் அவளின் தோள் பற்றி அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்தவன், தான் பரிமாறிய தட்டை அவள் முன் நகர்த்தி, “சாப்பிடு...” என்று சொல்ல... அவள் அவனைப் புரியாமல் பார்த்தாள்.

“நான் என்றைக்கு உன்னை விட்டு சாப்பிட்டு இருக்கேன்... நீ இங்கே வந்த நாள் முதல் நான் இதைத் தான் செய்றேன்... நீ தான் அதை உணரல...” இலகு குரலில் கூறியவன்

அவளின் அருகில் அமர்ந்து அவள் அவனுக்காய் பரிமாறிய தட்டிலிருந்து உண்ண ஆரம்பித்தான்.

சிறு விசயம் தான் ஆனால் அதைக் கூட அவள் கவனிக்கவில்லை. அந்தச் சின்ன விசயத்தில் கூட அவனின் பெருத்த அக்கறையைக் கண்டவள் மனம் நெகிழ்ந்து கண்களில் கண்ணீரை துளிர்க்க செய்தது. அவளின் நெகிழ்ச்சியை உணர்ந்தோ என்னமோ அதை மாற்றிய எண்ணியவன்,

“இதுவும் நல்ல கணவனின் கடமை தான் என் அல்லிராணி...”

அவளின் காதுக்கருகில் சீண்டலாய் ஒலித்த அவனின் குரலில் அவளின் கோபம் மீண்டும் திரும்பலானது. சாப்பிடாமல் அவனை அவள் முறைத்து பார்க்க...

“நமக்கு எல்லாம் சோறு தான் முக்கியம்... வீம்பு, சண்டை எல்லாம் அதுக்கப்புறம் தான்...” அவளை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே அவன் தன் உணவில் கவனமாக... அதைக் கேட்டு அவளுக்குச் சிரிப்பு பீறிட்டது.

“இப்போவாவது கோபத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு சாப்பிடலாமே...?” அவனின் கேள்வியில் அவள் அவன் சொன்னதைச் செய்தாள்.

கையைக் கழுவி கொண்டு எழுந்தவனின் பின்னேயே வந்த அல்லி, “அரசு...” என்று அவனைக் கூப்பிட...

“என்ன சொல்லு?”

“நான் ஷாப்பிங் போகணும்... எனக்குப் பணம், கார், டிரைவர் எல்லாம் வேணும்” என்றவளை யோசனையாய் அவன் பார்க்க...

“இதுவும் கணவன் கடமை தான் அரசு...” நக்கலாய் சிரித்தவள்,

“நானும் நல்ல மனைவியாய் நடந்து கொள்ள வேணாமா?” தலையைச் சரித்து ஒன்றும் அறியாத பெண்ணைப் போல்

கண்சிமிட்டி கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“ம்... ஷாப்பிங் போவது நல்ல மனைவிக்கு அழகா? உன் எண்ணம் சூப்பர் தான் போ... அதே போல் நல்ல கணவனாய் நானும் பணம் தந்து விடுறேன். ஆனால் நீ எப்படித் தனியா...?” அவன் யோசனையாய் நிறுத்த...

“அதுக்குத் தான் அரசு டிரைவர் கேட்டேன்... ஆனா எனக்கு இந்த டிரைவர் தான் வேணும்...” என்று அவனைச் சுட்டி காட்டி அவள் சொல்ல... அதைக் கேட்டு வாய் விட்டு நகைத்தவன்,

“இன்னைக்கு இந்த டிரைவர் ப்ரீ இல்லைம்மா... அதனால் உண்மையான டிரைவரை அனுப்பறேன்...” என்றவன் அவள் வெளியில் செல்வதற்கு ஏதுவாய் எல்லா ஏற்பாட்டையும் செய்து விட்டு,

“இந்தா என்னுடைய க்ரெடிட் கார்ட்... தேவைப்பட்டா யூஸ் பண்ணிக்கோ...”

அவளின் திட்டம் தெரியாமல் அவன் வெள்ளேந்தியாய் சொல்லிவிட்டு அலுவலகத்திற்குப் புறப்பட... அவனையே பார்த்து கொண்டிருந்தவளின் முகத்தில் விசம புன்னகை பூத்தது.

இரவு வீடு திரும்பியவனின் முன் அன்றைக்கு அவள் செய்த செலவுகளைப் பட்டியலிட்டு எழுதி வைத்தவள், அவனின் கடன் அட்டை மூலம் எடுத்த பணத்தின் தொகையையும் தனியே குறித்து வைத்தாள். அதே போல் அவள் வாங்கிய பொருட்கள் அனைத்தையும் அவன் முன் கடை பரப்பி வைத்தவள் அவனின் முகத்தையே ஆராய்ச்சியாகப் பார்த்தாள்.

ஏனெனில் இன்று அவள் செலவு செய்த தொகை மட்டும் பல லட்சங்களைத் தாண்டியது. இதைக் கண்டு அவன் வானத்துக்கும் பூமிக்குமாய்க் குதிப்பான் என்று எதிர்பார்த்தே அவள் அந்த மாதிரி நடந்து கொண்டாள்.

அதிகமாய்ச் செலவு செய்யும் மனைவியை எந்தக் கணவனுக்கும் பிடிப்பதில்லை என்பதை இன்று காலையில் இருந்து அவள் தன் மூளையைக் கசக்கி கண்டு பிடித்த விசயம். அவனைக் கோபப்படுத்த வேண்டும்... எரிச்சல் படுத்த வேண்டும் என்று தான் அவள் வேண்டுமென்றே இதைச் செய்தது. ஆனால் அந்தோ பரிதாபம் அவனுக்கு அவளின் நோக்கம் புரிந்து போனது தான் கொடுமை...

'இப்போ நீ எதுக்கு இப்படி நடந்துக்கிறன்னு எனக்கு நல்லாவே தெரியும் என் அம்முலு... இதையெல்லாம் பார்த்து நான் உன் கூடச் சண்டை போடணும்ன்னு தானே எதிர்பார்க்கிற? நோ நெவர் அம்முலு... நீ இந்த மாதிரி உரிமையாய் என்னிடம் எல்லாவற்றையும் கேட்டு வாங்க வேண்டும் என்று நான் எவ்வளவு ஆசைப்பட்டேன் தெரியுமா? பணம் சம்பாதிக்கும் போதெல்லாம் உனக்குக் கொடுக்க முடியவில்லையே என்று எவ்வளவு ஏங்கி தவித்திருக்கிறேன் தெரியுமா? அந்த விதத்தில் நான் வித்தியாசமான கணவன் அம்முலு... நீ என் சொத்தையே கரைத்தால் கூட நான் கவலைப்பட மாட்டேன்... நான் சம்பாதிப்பதே உனக்காகத் தான் அம்முலு...' உள்ளுக்குள் அவளுக்காய் உருகியவன், வெளியில் அதைக் காட்டி கொள்ளவில்லை.

"என்ன அல்லிராணி இவ்வளவு தான் உன் ஷாப்பிங்கா? நான் என்னமோ நீ கடையையே வாங்கிட்டு வருவேன்ல எதிர்பார்த்தேன்... நான் உன்னிடம் இன்னமும் அதிகமாய் எதிர்பார்க்கிறேன் அல்லிராணி..." என்று வம்பிழுத்தவனின் வார்த்தையில் அவள் ஆவென்று அவனைப் பார்க்க... அவளின் அருகில் வந்து அவளின் தாடையில் கை வைத்து அவளின் வாயை மூடியவன்,

"நாளைக்கு இந்த டிரைவர் உன்னோடு ஷாப்பிங் வரலாம்ன்னு இருக்கேன். என்னை ஏமாத்தி விடாதே என் அல்லிராணி..."

நாடக பாணியில் பேசியவன் அவள் முகம் நோக்கி குனிந்து அவளின் நெற்றியில் செல்லமாய் முட்ட... அவளோ தன் முதல் திட்டமே பிசுபிசுத்துப் போனதில் என்ன செய்வதென்று தெரியாமல் 'ஞே' என்று விழித்தாள்.

“அம்மாயி... உங்க பேபிம்மா என் கூட வெளியில் வர மாட்டேங்கிறா? கொஞ்சம் என்னன்னு கேளுங்க...?” காலையிலேயே தன் புகாரை லக்ஷ்மியம்மாவிடம் வாசித்தான் அரசு.

“ஏன் பேபிம்மா... அவன் கூப்பிட்டால் போக வேண்டியது தானே...? எவ்வளவு நேரம் தான் வீட்டுக்குள்ளேயே இருப்ப?” அவர் சின்னவளிடம் எடுத்து சொல்ல...

“வேணாம் ஆயாம்மா... நேத்து தான் ஷாப்பிங் போயிட்டு வந்தேன்... இன்னைக்குமா? வேணாமே...” கெஞ்சலுடன் அல்லி மறுத்தாள்.

நேற்று அவள் செலவு செய்த தொகையே அவள் மனதில் ஒருவித குற்றவுணர்ச்சியை ஏற்படுத்தியிருக்க... இன்று வேறு அவன் கூப்பிட்டது மேலும் குற்றவுணர்ச்சி அதிகரிக்க... அதனால் வேண்டாம் என்றாள். அவள் சொல்லி அவன் அப்படியே கேட்டால் அது அவனில்லையே...

“சரி ஷாப்பிங் வேணாம்... வேறு எங்கேயாவது போயிட்டு வருவோம்? உனக்காக நான் போட்ட லீவை ஏன் வேஸ்ட் ஆக்குவானேன்?” அவன் விடாப்பிடியாய் கேட்கவும்... பெரியவள் வேறு வற்புறுத்தவும் வேறுவழியின்றி அவள் சம்மதித்தாள்.

கிளம்பி காரில் ஏறியமர்ந்த அல்லி, “விதி வலியது அரசு... ம்... இன்னைக்கு நீ என் கிட்ட மாட்டிட்டு படுற அவஸ்தையில இனிமேல் என்னை வெளியில் கூட்டிட்டு போகணும்ங்கிற எண்ணத்தை நீ மறந்திடணும்...” என்று வில்லி சிரிப்பு சிரிக்க...

“ம்ஹூம்... அப்படியா?” ஒற்றைப் புருவத்தைத் தூக்கி கேலியாய் வினவியவன்,

“இது ஒரு சுகமான அவஸ்தை... பேபிம்மா அதெல்லாம் உனக்குப் புரியாது...” என்று சொன்னவனைப் புரியாமல் பார்த்தவள்,

‘இவன் பேசுறது உனக்கு என்னைக்குத் தான் புரிஞ்சியிருக்கு அல்லி... இன்னைக்குப் புரியறதுக்கு...?’ மனதில் நினைத்தவள் தோளை குலுக்கி கொண்டு வெளிப்புறம் பார்த்தாள்.

அப்போது தான் அவள் அந்தப் பூங்காவை கவனித்தாள். அன்று வீட்டை விட்டுக் கோபித்துக் கொண்டு வெளியில் வந்த போது அவள் சென்று அமர்ந்திருந்த பூங்கா தான் அது. அவன் வீட்டில் இருந்து இவ்வளவு அருகில் இருக்கும் என்று அவள் நினைத்து கூடப் பார்க்கவில்லை.

“அரசு... இது அந்தப் பார்க் தானே...” கேட்டவளின் கேள்விக்கு ஆமென்பது போல் அவன் தலையசைத்தான்.

அன்றைய நினைவில் அவளின் முகம் இருண்டது. கூடவே தன் பெற்றோர் பேசிய வேண்டாத பேச்சுக்களும் அவளின் ஞாபகத்தில் வந்து அவளை வருத்த... அவளின் கண்கள் கலங்கியது. அதை அவனுக்குக் காட்டாமல் மறைக்க எண்ணி தலையைக் குனிந்து கொண்டாள்.

அவள் தன் நிலையை மறைத்தாலும்... அவனால் அவளின் நிலையை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஒரு கையால் காரை ஓட்டியபடி மறு கையால் அவளின் முகத்தை நிமிர்த்தித் தன் பக்கமாய்த் திருப்பினான். அவள் கண்களில் கண்ணீர் நிறைந்திருப்பதைக் கண்டவன்,

“ம்ச்சு... என்ன அம்முலு இது... எதுக்கெடுத்தாலும் அழுதிட்டு... முதலில் கண்ணைத் துடை... எனக்குத் தெரிஞ்சு என் அல்லிராணி எதுக்கும் கலங்க மாட்டாளே...” அவனின் சொல்லில் அவள் கண்களைத் துடைக்க...

“தட்ஸ் குட்...” என்றபடி சாலையில் தன் கவனத்தைச் செலுத்தினான்.

“அரசு... நீ ஏன் கடனை தள்ளுபடி செஞ்ச?” தயக்கத்துடன் அவள் கேட்டாள். அவன் திரும்பி அவளைப் பார்த்தவன் பதில் பேசாமல் காரை ஓட்டினான்.

“சொல்லு அரசு...”

“ம்... என்ன சொல்றது? உன் மேலுள்ள காதலால்ன்னு சொன்னா நீ நம்பவா போற...” என்றவன் அவளை ஓரக்கண்ணால் பார்க்க...

“சத்தியமா நம்ப மாட்டேன்...” என்று காது தொங்கட்டான் அசைந்தாட மறுத்து சொன்னவள்,

“ஆனாலும் அவ்வளவு பெரிய தொகையை நீ தள்ளுபடி செஞ்சது உன் கரெக்டருக்குக் கொஞ்சம் இடிக்குது அரசு... அதான் புரியல...”

‘ம்ஹூம்... ஆனாலும் நீ இவ்வளவு புத்திசாலியா இருக்கக் கூடாது அம்முலு... ஹா... ஹா... இதைக் கூட உன்னால் கண்டுப்பிடிக்க முடியல... இதில் என் காதலை நீ எப்படிக் கண்டுப்பிடிக்கப் போற? ம்... இப்படி நீ யோசிக்காமல் இருப்பதும் ஒரு வகையில் எனக்கு நல்லது தான்...’ மனதுக்குள் எண்ணியவன்,

“அதை விடு... நான் உன்னிடம் ஒண்ணு கேட்கிறேன்... இப்போ உனக்குக் கடன் பத்திரம் என்ற கை விலங்கு இல்லை. நீ நினைச்சா என்னை விட்டு எப்போ வேணும்னாலும் போகலாம்... ஆனாலும் ஏன் போகாம இருக்க...?” அவனின் கேள்வியில் அவள் முகம் சுருங்கியது.

“நீ கடனை தள்ளுபடி செய்தது உன் பெருந்தன்மையா இருக்கலாம். என் அப்பா, அம்மா அதை மறந்திட்டு மனசாட்சியில்லாமல் உன்னைப் பேசலாம்... ஆனால் அவ்வளவு அதிகமான தொகையை நீ கடன் கொடுத்தது உண்மை தானே... அது உனக்கும் தெரியும்... எனக்கும் தெரியும்... அப்படி இருக்கும் போது அந்தக் கடனை அடைக்காமல் நான் எப்படி உன்னை விட்டு போவது? அது தப்பில்லையா?”

மெதுவான குரலில் கூறியவளின் பதிலில் அவன் நெகிழ்ந்து போனான். தன்னவளிடத்தில் மனிதாபிமானம் இருக்கிறது என்பதே அவனுக்கு உவகையாய் இருந்தது.

“இல்லடா... இப்போ உனக்கு எந்த நிர்பந்தமும் இல்லை... நீ உன் இஷ்டப்படி இருக்கலாம்...”

“இருக்கலாம் தான்...” மடியில் கோர்த்திருந்த தன் கைகளைப் பார்த்தவாறு கூறியவள்,

“ஆயாம்மாவுக்காகப் பார்க்கிறேன்... வயசான காலத்தில் அவங்களைக் கஷ்டப்படுத்த வேணாம்ன்னு நினைக்கிறேன்...” என்றவளுக்கு அது மட்டும் தானா காரணம் என்று அவளின் மனசாட்சி கேள்வி கேட்க... அதற்கான பதில் அவளிடத்தில் இல்லை.

அவளின் பதிலில் அவன் நெகிழ்ந்து போய், “தேங்க்ஸ்...” என்றவன் அவளின் கை மீது தன் கை வைத்து அழுத்தி கொடுக்க... அவளோ பேசாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

‘இப்போ அம்மாயிக்காக இருக்கிறேன் சொல்ற நீ... ஒருநாள் இல்லை ஒருநாள் உனக்காகத் தான் இருக்கிறேன் அரசுன்னு உன்னைச் சொல்ல வைக்கிறேன்...’ மனதுக்குள் சபதம் எடுத்து கொண்டவனுக்கு மனதில் பெருத்த நிம்மதி ஏற்பட்டது.

“இறங்கு...” காரை நிறுத்தியவன் அவளை இறங்க சொல்ல... அப்போது தான் அதை அவள் கவனித்தாள். அது ஒரு கோவில் வளாகம் என்று...

“முதல் முறையா வெளியில் வந்திருக்கிறோம்... அதான் இங்கே விசிட்...”

புன்னகையுடன் அவளுக்குப் பதிலளித்தவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். உள்ளே சென்றவள் இன்னமும் வியந்தாள். அது ஒரு விஷ்ணு கோவில்... கண்களில் ஆச்சிரியத்தைத் தேக்கியபடி அவனைப் பார்க்க...

“உனக்குப் பெருமாள் பேவரைட் கடவுள் என்பது எனக்குத் தெரியும்...” என்றவன் மேலும் அவள் கேள்வி கேட்கும் முன் அர்ச்சனைக்கான ரசீது வாங்குவதற்காக அங்கிருந்து நகர்ந்தான்.

அவனின் பதிலில் சிறிது நேரம் குழம்பியிருந்தவள் அவன் வந்ததும் அதை மறந்துவிட்டு கடவுளை வழிபடுவதில் தன் கவனத்தைச் செலுத்தினாள். பிடித்த கடவுள் என்பதாலோ இல்லை தெய்வத்தின் சந்நிதியில் மனம் நிறைந்திருந்ததாலோ அவள் தனக்காய் எதுவும் வேண்ட தோணவில்லை. ஆனால் அவன் அவளுக்கும் சேர்த்துக் கடவுளிடம் வேண்டி கொண்டான்.

இருவரும் மனநிறைவுடன் கோவிலை விட்டு வெளியில் வந்தவர்கள் காரிலேறி அமர... அவன் காரை கிளப்பாமல் தன் கையிலிருந்த அர்ச்சனை பொருட்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

“என்ன ஏதும் மறந்து வச்சிட்டு வந்திட்டீயா அரசு...?” அவள் புரியாமல் அவனைப் பார்க்க... அவனோ எதையோ கையில் எடுத்தவன்,

“நீ தான் அம்முலு மறந்துட்ட...” என்றவாறு அவளின் நெற்றி வகிட்டில் குங்குமத்தை வைத்து விட்டான்.

அவனின் அந்தச் செயலில் அவளின் கோபம் கொண்ட மனம் வெகுண்டாலும்... கடவுளின் பிரசாதத்தை நிராகரிக்க அவளுக்கு மனம் வரவில்லை. அதனால் குங்குமத்தை அழிக்காமல் அப்படியே விட்டு விட்டு அவனை முறைத்து பார்த்தாள்.

“தேவையில்லாத விசயத்தில் மூக்கை நுழைக்காதே அரசு...”

“இது எனக்குத் தேவையான விசயம் அம்முலு... அதிலும் இது நல்ல கணவனுக்கான செய்கையம்மா...” அவன் கிண்டலுடன் கூறி தன் செயலை நியாப்படுத்த...

“அரசு...” அவனின் பதிலால் அவள் தன் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது. அதைக் கண்டு சிரித்தபடி அவன் காரை கிளப்பினான்.

அன்றைய தினம் முழுவதும் அவன் அவளுக்கு இனிய அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாய் கொடுத்தான். அவளுக்குப் பிடித்ததாய் அவள் விரும்பியது போல் எல்லாப் பொருள்களையும் பார்த்து பார்த்து வாங்கியவனைக் கண்டு அவள் உண்மையில் ஆச்சிரியத்தின் விளிம்பிற்கே சென்றுவிட்டாள்.

அதிலும் அவளுக்குப் பிடித்த சைனீஸ் ரெஸ்டாரென்ட்க்கு அவன் கூட்டி கொண்டு போன போது அவளின் ஆச்சிரியம் கரை கடந்தது. ஆனாலும் அவள் அவனிடத்தில் ஏதும் கேட்கவில்லை. பின் லக்ஷ்மியம்மா அவனிடம் தன்னைப் பற்றிச் சொல்லியிருப்பார் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். அந்த மூதாட்டிக்குச் சைனீஸ் உணவு வகைகளைப் பற்றி ஏதும் தெரியாது என்பது அந்நேரம் அவளின் ஞாபகத்திற்கு வரவேயில்லை.

வீடு திரும்பிய இருவரின் மனமும் ஒருவித குதூகலத்துடன் சந்தோசமாய் இருந்தது. அதனால் இருவருமே அநாவசிய பேச்சுக்களைத் தவிர்த்து கொண்டனர். ஆனால் அந்த மகிழ்ச்சியைக் குழைப்பதற்கு என்றே மறுநாள் தேன்மொழி அரசுவின் வீட்டிற்கு விஜயம் செய்தாள்.

“வாங்க அக்கா...” அரசு வரவேற்க...

தேன்மொழி வாய் கொள்ளா சிரிப்புடன் தன் தம்பியை பார்த்து சிரித்தவள், அங்கே நின்றிருந்த அல்லியை கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“என்ன தம்பி... அதுக்குள்ளே கிளம்பிட்ட?”

“ஆமாக்கா... ஒரு அவசரமான வேலையிருக்கு... நான் கிளம்பறேன்... மதியம் லன்சுக்கு வரும் போது பேசலாம்...” என்றவன் அக்காவிடம் விடை பெற்று கிளம்ப...

‘நீ முதல்ல கிளம்புடா தம்பி... அப்போ தான் நான் வந்த வேலை நடக்கும்...’ மனதில் நினைத்த தேன்மொழி வெளியில் நல்ல பெண்ணாய் நின்றிருந்தாள்.

“அப்புறம் அம்மாயி எப்படி இருக்கீங்க? மூட்டு வலியெல்லாம் எப்படி இருக்கு?” கேட்டுக் கொண்டே அவள் தன் பாட்டியின் அருகில் அமர,

“தினமும் பேபிம்மா மூட்டுவலி மருந்து தேய்ச்சு விடறதால... இப்போ மூட்டுவலி எல்லாம் இல்லை...” பெரியவள் பெருமையுடன் அல்லியை பார்க்க... அதைக் கண்டு தேன்மொழிக்கு உள்ளுக்குள் காந்தியது.

‘வந்த கொஞ்ச நாளிலேயே என் தம்பியையும், என் அம்மாயியையும் கைக்குள் போட்டுட்ட இல்ல... உன்னை என்ன செய்றேன் பாரு...’ மனதுக்குள் கருவியவள் வெளியே,

“உங்க பேபிம்மா உங்களுக்கு மட்டும் தான் செய்வாளா? எங்களுக்கு எல்லாம் செய்ய மாட்டாளா?” வினயத்துடன் அவள் கேள்வி கேட்க... அல்லி அவளை யோசனையாய் பார்த்தாள்.

“உனக்கு என்ன வேணும் தேனு... நான் செய்றேன்...” பேத்தியின் முகம் பற்றிப் பாசத்துடன் பெரியவள் சொல்ல...

“ஏன் உங்க பேபிம்மா செய்ய மாட்டாளா?” அல்லியை ஒரு பார்வை பார்த்தவள்,

“இன்னைக்குப் பூரா நான் இங்கே தான் இருக்கப் போறேன்... அதனால என் தம்பி பொண்டாட்டி அவ கையால எனக்குச் சமைச்சு போடணும்...”

மனதுக்குள் கொக்கரித்தபடி சொன்னவள் அல்லியை திமிராய் பார்த்தாள். அவள் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்ட அல்லி... அவளைக் கோபமாய் முறைத்து பார்த்தாள்.

தேன்மொழியின் மகள் சித்ரா சென்னையிலுள்ள பள்ளியில் விடுதியில் தங்கி படிக்கிறாள். அதுவும் இப்போது தான் அவளை அங்கே கொண்டு போய் விட்டு வந்தார்கள் தேன்மொழி, தாஸ் தம்பதியினர். அதனால் தேன்மொழிக்கு வேலைவெட்டி எதுவும் இல்லாததால் எப்பவுமே இது மாதிரி அவள் அவ்வப்போது இங்கே வந்து முழுநாளும் இருந்துவிட்டு போவது வழக்கம் என்பதால் பெரியவள் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

“உனக்கு விதவிதமா சாப்பாடு தானே வேணும்... வேலை செய்பவர்களிடம் சொன்னால் செஞ்சு தர போறாங்க... அதுக்கு எதுக்குப் பேபிம்மாவை கஷ்டப்படுத்தணும்?” அல்லிக்காகப் பெரியவள் பரிந்து பேச...

“ம்ஹூம்... என் தம்பி தலையெழுத்து இப்படியா அமையணும்? மனைவின்னா வாய்க்கு ருசியா சமைச்சு போட வேணாம்... இப்படியா காலை ஆட்டிக்கிட்டு மூணு வேளையும் மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டு சும்மா இருப்பது? சாப்பிட்ட சாப்பாட்டுக்காவது உழைக்க வேணாமா?” தேன்மொழியின் பேச்சில் அல்லியின் முகம் சிறுத்துப் போனது.

“தேனு வார்த்தையை யோசித்துப் பேசு...” பெரியவள் பேத்தியை அடக்க...

“ஆயாம்மா நானே சமைக்கிறேன்னு அவங்க கிட்ட சொல்லுங்க... இங்கே யாரும் ஓசி சோறு சாப்பிடலன்னு சொல்லுங்க...” அல்லியும் ரோசத்துடன் பதில் கூற...

“பேபிம்மா... நீ செய்யணும்ன்னு எந்த அவசியமும் இல்லைம்மா...” பெரியவள் வருத்தத்துடன் மறுத்து கூற...

“உங்க பேபிம்மா சமையல் செஞ்சா ஒண்ணும் குறைஞ்சு போயிட மாட்டா” எக்காளத்துடன் தேன்மொழி சொல்ல...

“இருந்தாலும் தேனு...” அப்போதும் பெரியவள் தயங்க...

“பரவாயில்ல ஆயாம்மா... இன்னைக்கு நானே சமைக்கிறேன்... எனக்கும் சும்மாயிருந்து போர் அடிக்குது”

சொன்ன அல்லி... அந்த மூதாட்டியின் முகத்திற்காகச் சமையலறை நோக்கி சென்றாள்.

மதிய உணவு சமைத்து முடித்த அல்லி லக்ஷ்மியம்மாவை உண்பதற்கு அழைக்க... தேன்மொழி வரவேற்பறையை விட்டு அகலவில்லை. பாட்டி உண்டு விட்டுச் சென்ற பின் தானே அவள் அல்லியிடம் வம்பிழுக்க முடியும். அதனால் இருவருக்குமான தனிமைக்காகக் காத்திருந்தாள். அதே போல் பெரியவள் உண்டு விட்டுப் படுக்கச் செல்ல... தேன்மொழி உணவு மேஜைக்கு வந்தாள்.

தேன்மொழி ஆசையுடன் தட்டில் எடுத்து வைத்து திருப்தியுடன் சாப்பிட்டு முடித்தவள் தான் சாப்பிட்ட எச்சில் தட்டை எடுக்காமல் கையைக் கழுவ சென்றாள். அல்லி அதைக் கண்டு கொள்ளாமல் அங்கிருந்து நகர முயல,

“என் தட்டை எடுத்து கழுவ போடு...” தேன்மொழியின் அதிகார பேச்சில் அல்லி வெகுண்டாள்.

“அது என் வேலையல்ல... அது வேலைக்காரங்க வேலை... உன் வேலை...”

அல்லி சொன்னது ஒன்று அதை வேலைகாரர்கள் செய்ய வேண்டும் இல்லை தேன்மொழி அவள் சாப்பிட்ட தட்டை அவளே எடுத்து வைக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் தான். ஆனால் அது இரண்டையும் சேர்த்துச் சொன்னது தான் அவள் செய்த தவறு. அதைத் தவறாகப் புரிந்து கொண்ட தேன்மொழிக்கு பழைய வாழ்க்கையின் உண்மை சுட...

“யாரை பார்த்து வேலைக்காரின்னு சொல்ற? என்னையவா?”

ஆங்காரத்துடன் சொன்னவள் அல்லியின் கன்னத்தில் ஓங்கி அடித்துவிட்டாள். அல்லியும் கோபத்தில் பதிலுக்கு அடிக்கக் கையைத் தூக்க... அந்நேரம் பார்த்து அங்கே வந்த அரசுவின் கண்ணில் அந்தக் காட்சி பட அவன் அதிர்ந்து போனான்.

“ஹேய் அல்லி... என்ன பண்ற...?” சொல்லி கொண்டே அல்லியின் அருகில் வேகமாய் வந்தவன் அவளின் கையைப் பிடித்துக் கீழிறக்கினான்.

“இங்கே பாரு அரசு... இவ என்னை வேலைக்காரின்னு சொல்றா?”

தனக்குப் பரிந்து பேச தம்பி வந்த சந்தோசத்தில் தேன்மொழி அவனுக்கு மேலும் எடுத்து கொடுத்தாள்.

“இல்ல அரசு... நான் அந்த அர்த்தத்தில் சொல்லல அரசு...”

அல்லி தேன்மொழியின் கூற்றை மறுத்து பேச... அவள் முகத்தின் முன்னே கையை நீட்டி நிறுத்துமாறு சைகை செய்தவன்,

“நீ பேச கூடியவள் தான் அல்லி... எனக்கு அது நல்லாவே தெரியும்...” என்றவனின் பேச்சில் அல்லி அதிர்ந்து போக,

“நான் உனக்கு எத்தனை தடவை சொல்லிருக்கேன்... என் அக்கா எனக்குத் தெய்வம் மாதிரி... அவங்களைத் தேவையில்லாமல் பேசியது மட்டுமில்லாமல் அவங்களை அடிக்கவும் கையை ஓங்கியிருக்க... உன்னிடம் நான் இதை எதிர்பார்க்கல அல்லி...” முகத்தைச் சுழித்துக் கொண்டு சொன்னவனின் பேச்சில் அவளின் மனம் அடிபட்டுப் போனது.

“முதல்ல அக்கா கிட்ட மன்னிப்பு கேளு அல்லி...” அவன் பிடிவாதமாய் அல்லியிடம் சொல்ல... அல்லி அவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தாள்.

“அரசு என்ன நடந்ததுன்னு தெரியாம பேசாதே...” அவளுக்கும் சற்றுக் கோபம் வந்தது.

“எது நடந்திருந்தாலும் நீ அவங்களை அடிக்கக் கையை ஓங்கியது தப்பு தான்...” அவன் தன் பிடியில் நிற்க... அவளோ எதுவும் பேசாமல் அங்கிருந்து செல்ல... அவள் தோளை பற்றி நிறுத்தியவன்,

“நான் சொன்னதைக் கேட்க போறியா இல்லையா?” கோபமாய்க் கர்ஜித்தவனின் கர்ஜனையில் தைரியமான அவளுக்கே குளிரெடுத்தது. அவளையும் அறியாமல் அவள் வாய்,

“மன்னிச்சுக்கோங்க...”

வார்த்தை என்னமோ தேன்மொழியிடம் இருந்தாலும்... அவளின் பார்வை என்னமோ அவனிடத்திலேயே பதிந்திருந்தது. அவள் மன்னிப்பு கேட்ட பின்பு தான் அவளின் தோளை பற்றியிருந்த தன் கையை விடுவித்தான்.

அவனின் செயலில் நொந்து போனவள் தன்னைப் பற்றிப் புரிந்து கொள்ளாதவனிடம் மேலும் பேசுவதால் எந்தவித பிரயோஜனம் இல்லை என்றுணர்ந்து மேற்கொண்டு அவனிடம் பேச்சை வளர்க்காமல் அவள் தங்கள் அறைக்குச் சென்று விட...

“சாரிக்கா... அவள் ஏதோ தெரியாமல்...” அவன் தன் தமக்கையிடம் மன்னிப்பு வேண்ட,

“நீ எதுக்கு அரசு என்னிடம் மன்னிப்பு கேட்கணும். நீ என் தம்பி அரசு...” என்றவள்,

“ஆனாலும் அவளுக்கு ரொம்பத் தான் இடம் கொடுத்து வச்சிருக்க... பார்த்துடா... பிறகு உன் தலை மேலேறி உட்கார்ந்துக்கப் போறா...”

அக்காவின் பேச்சு அவனுக்கு ரசிக்கவில்லை. ஆனாலும் அவளை மறுத்து பேசவும் மனமில்லை... அதே சமயம் அல்லியை விட்டு கொடுக்கவும் அவனுக்கு விருப்பமில்லை.

“அக்கா... மாமா இன்னைக்கு லஞ்ச்க்கு வர மாட்டேன்னு சொல்ல சொன்னாரு... அவர் போற மீட்டிங்ல லஞ்ச் பார்த்துக்கிறேன் சொன்னாருக்கா...” அக்காவின் கணவன் பேச்சை எடுத்து அவளின் கவனத்தைத் திசை திருப்ப... அவன் நினைத்தது போல் அவளின் கவனம் கணவன் பக்கம் சென்றது.

****

மதிய உணவை உண்ட அரசு தேன்மொழியை அழைத்துக் கொண்டு அவளின் வீட்டில் விட்டவன் நேரே அலுவலகத்துக்குச் சென்றுவிட்டான். அங்கே ஒருத்தி அவன் மேல் கோபம் கொண்டிருப்பதை ஏனோ அவன் மறந்து போனான். இரவு தாமதமாக வீடு வந்தவனிடம் லக்ஷ்மியம்மா,

“பேபிம்மாவுக்கு உடம்பு சரியில்லை அரசு... ஹாஸ்பிட்டல் போலாம்ன்னா வேணாம்ன்னு சொல்றா? உனக்கு ஃபோன் பண்ணி சொல்லலாம்ன்னாலும் அதுக்கும் வேணாம்ன்னு சொல்லிட்டா...” பெரியவளின் கவலை அவனைத் தொற்றிக் கொள்ள வேகமாய் மாடியேறினான். மதியம் நடந்தது அவனுக்கு நினைவில் இல்லை போலும்.

“அம்முலு...என்னடா செய்து?” அன்பாய் கேட்டுக் கொண்டே கட்டிலில் படுத்திருந்த அவளருகில் அவன் அமர, அவளோ அசையாமல் படுத்திருந்தாள்.

“காய்ச்சல் அடிக்குதா?”

அவன் கேள்வி கேட்டுக் கொண்டே அவளின் நெற்றியில் கை வைத்து பார்ப்பதற்காக அவளின் முகத்தில் படிந்திருந்த கூந்தலை விலக்க... அவளது கன்னத்தில் பதிந்திருந்த கை விரல் தடத்தைக் கண்டு அவன் அதிர்த்து தான் போனான். அவளின் மாநிற முகத்திலும் அடித்த தடமானது நன்றாகத் தெரிந்தது.

“அம்முலு...” பதறி போனவனாய் அவளை அள்ளி எடுத்தவன், “யாரு உன்னை அடிச்சது?”

அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு தனியே அமர்ந்தவள், “எல்லாம் உன் அக்கா கைங்கரியம் தான்...” கிண்டல் குரலில் கூற... அதைக் கேட்டு அவன் இன்னமும் அதிர்ந்து போனான்.

“அக்காவா...?”

“ஆமாம் உன் அக்கா தான்... அவங்களுக்காகக் கையைச் சுட்டு கிட்டு சமைச்சு போட்டேன்ல்ல அதுக்கு அவங்க கொடுத்த பரிசு தான்...”

தன் இரண்டு கையையும் அவன் முன் நீட்டி அவள் கோபமாய்ப் பேச... அவளின் கையைப் பார்த்தவன் கண்ணில் கண்ணீர் துளிர்த்தது. அல்லி முன்பின் சமையலைறை பக்கம் எட்டி பார்த்ததில்லை. அதனால் அவள் ஏகப்பட்ட விழுப்புண்களைத் தன் கைகளில் வாங்கியிருந்தாள். அவளின் உள்ளங்கையில் தீ சுட்டதினால் உண்டான கொப்பளங்களும், உள்ளங்கைக்கும் முழங்கைக்கும் இடையில் எண்ணெய் தெறித்ததினால் வந்த காயத்தைக் கண்டவன் கண்கள் கலங்கியது.

“சமைக்கத் தான் ஆளிருக்கே... நீ ஏண்டா கஷ்டப்பட்ட?” கேட்டவன் அவளின் கையைப் பிடித்துத் தன்னருகே கொண்டு வர...

அவனின் கண்களிலிருந்து சொட்டிய கண்ணீர் துளி அவளின் காயத்திற்கு மருந்தாய் அதன் மீது விழ... அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள். கல்லை போன்ற மனதுடையவன் என்று எப்போதும் அவனை மனதுக்குள் சபிப்பவள்... இன்று அவனின் கண்ணீரை கண்டு ஆச்சிரியமடைந்தாள்.

கல்லுக்குள் ஈரம் என்பது இது தானோ...!!!

“என்ன நடந்தது அல்லி?” அல்லியின் கைகளில் தீக்காயத்திற்கான மருந்தை தடவி கொண்டே அரசு கேட்க...

‘உன் அக்கா செஞ்ச தப்புக்கு நீ மருந்தை தடவு... அது தான் உனக்கான பனிஷ்மென்ட்...’ மனதில் அவனைக் கருவியபடி... அவன் மருந்து தடவுவதற்கு வாகாய் தன் கையை நீட்டியிருந்தவள் அவனைக் கேலியாய் நோக்கியபடி,

“ரொம்பச் சீக்கிரம் கேட்டுட்ட அரசு... என்னவொரு ஸ்பீட்...”

அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் நக்கலும், நையாண்டியும் நூறு சதவீதத்துக்கும் மேலிருந்ததைக் கவனித்தவன்... அதைத் தாங்க முடியாமல் கண்களை இறுக மூடி திறந்தான்.

“ப்ளீஸ் அல்லி...”

அவனின் முகத்திலும், வார்த்தையிலும் தெரிந்த வருத்தத்தில் அவள் தன் கேலியை கைவிட்டவளாய் அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

“என்ன நடந்ததுன்னு இப்போ சொன்னால் மட்டும் உன் அக்கா அடித்தது மறைந்து போய்விடுமா? இல்லை நான் உன் அக்காவிடம் மன்னிப்பு கேட்டது இல்லையென்று ஆகிவிடுமா? நடந்தது எதுவும் மாறப் போறதில்லை. அப்புறம் எதுக்கு வேஸ்ட்டா சொல்லிக்கிட்டு...?” அவளின் குரலில் கோபத்தை விட ஆதங்கமே அதிகமாய் இருந்தது.

“எதையும் மாத்த முடியாது தான் அல்லி... ஆனால் இனிமேல் இது போல் நடக்காமல் பார்த்து கொள்வேன் இல்லையா?”

வருந்தும் குரலில் அவன் கூறினாலும்... ‘இனிமேல் உன்னை நான் கவனமாகப் பார்த்து கொள்வேன்’ என்ற உறுதி அதில் தெரிந்தது.

அவனின் எண்ணம் புரிந்ததாலோ என்னமோ அவள் நடந்தது முழுவதையும் அவனிடம் கொட்டி தீர்த்துவிட்டாள். அல்லியிடம் தேன்மொழி நடந்து கொண்ட விதம் அவனுக்கே அவ்வளவு உவப்பாக இல்லை. அல்லியை சமைக்கச் சொன்னதும் இல்லாமல் அவளை எச்சில் தட்டை வேறு எடுக்கச் சொல்லியது அவனுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. அத்தோடு விட்டாளா தேவையில்லாமல் கோபப்பட்டு அல்லியை அடித்ததோடு இல்லாமல்... தன்னிடமும் அவளைப் பற்றித் தவறாகச் சொல்லி அவளை மன்னிப்பு வேறு கேட்க

வைத்துவிட்டாளே என்று தன் அக்காவின் மேல் கோபம் கோபமாய் வந்தது.

“இது தான் நடந்தது அரசு... முழுவதையும் விசாரிக்காமல் நீயும் உன் அக்கா சார்பாய் பேசிட்ட...” அவளின் குற்றச்சாட்டுக்கு அவனிடத்தில் பதிலில்லை.

“உன் அக்கா சொன்னதை உண்மைன்னு நீயும் நம்பிட்ட இல்ல அரசு...” அவனை ஆழ்ந்து பார்த்து சொன்னவளின் கண்களைச் சந்திக்க முடியாமல் அவன் வேறு பக்கம் பார்த்தான்.

தேன்மொழி அல்லி தன்னை வேலைக்காரி என்று சொன்னாள் என்று கூறிய போது அல்லியிடத்தில் அவனுக்குக் கட்டுக்கடங்காத கோபம் பொங்கியது என்னமோ உண்மை தான். அது ஏனென்று அவனுக்கு இன்னமும் புரியவில்லை. அது அவனுக்குப் பழைய வாழ்க்கையை ஞாபகப்படுத்தியதா? இல்லை அல்லியின் உள்மனதில் தாங்கள் இன்னமும் அவளின் வீட்டு வேலைக்காரர்களாகத் தான் இருக்கிறோம் என்ற உண்மையை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாததாலா? ஏனோ அவளிடத்தில் தன் கோபத்தைக் காட்ட எண்ணியவன்... அதை அவள் தேன்மொழியிடம் மன்னிப்புக் கேட்குமாறு சொல்லி தன் மனதின் கோபத்தை அவ்வாறு ஆற்றிக் கொண்டான்.

“இங்கே என்னைப் பாரு அரசு...” அவளின் குரலிலிருந்த அழுத்தத்தில் அவன் அவளை நோக்கி திரும்பினான்.

“நான் என்னைக்காவது உன்னையோ இல்லை ஆயாம்மாவையோ என் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரர்களாய் நினைத்திருக்கிறேனா? இல்லை தப்பா ஏதும் நடந்திருக்கேனா?” அவளின் கேள்வியில் அவன் தலை மறுப்பாய் அசைந்தது.

அவள் வந்த நாள் முதற்கொண்டு அவனும் தான் அவளைப் பார்த்து கொண்டிருக்கிறானே... அவள் அம்மாயியிடம் எந்தளவுக்கு அன்பாய் நடந்து கொள்கிறாள் என்று.

அதேசமயம் அவனிடத்திலும் அவள் நன்றாகத் தான் நடந்து கொள்கிறாள். அதையும் அவன் இல்லையென்று சொல்ல முடியாது. என்ன அவளுக்கு இருக்கும் ஒரே கோபம்... அவன் அவளை மிரட்டி கல்யாணம் பண்ணி கொண்டது மட்டுமே... அதுவும் அவனின் அவள் மீதான காதல் தெரியும் போது அந்தக் கோபமும் பிசுபிசுத்து போய்விடும் என்று அவனுக்கு நன்கு தெரியும்.

“அப்புறம் எப்படி உன் அக்கா சொன்னதை நீ நம்பினே அரசு...?” அவளின் கேள்வியில், அவளின் குற்றச்சாட்டில் அவன் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

“நான் திமிர் பிடித்தவள் தான், பிடிவாதம் பிடித்தவள் தான் அரசு... இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் நான் பொய் பேசுபவள் அல்ல அரசு... எதையும் நேர்மையாய் செஞ்சு தான் எனக்குப் பழக்கம்... முன்னாடி ஒண்ணு... பின்னாடி ஒண்ணுன்னு புறம் பேச எனக்குத் தெரியாது. உன் அக்காவே சொன்னாலும் என்னைப் பத்தி உனக்குத் தெரிந்திருக்க வேண்டாமா? இந்த அடிப்படை புரிதல் இல்லாமல் எப்படி அரசு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட...” என்று கேட்டவள்,

“ம்ஹூம்... நம் கல்யாணம் தான் அப்படி நடக்கவில்லையே... நான் ஒரு மடச்சி... சில நேரங்களில் அதை மறந்துவிட்டுப் பேசுகிறேன்... நீ கொடுத்த கடனை வசூலிக்கக் கல்யாணம் பண்ணிக் கொண்டவள் தானே நான்... இதில் புரிதல் எங்கே இருந்து வரும்...?” விரக்தியாய் கூறியவள்...

“நான் சொல்வது சரி தானே அரசு...?” என்று கேள்வி வேறு கேட்டாள்.

“ப்ளீஸ் அம்முலு... இதுக்கு மேல் பேசி என்னைக் கொல்லாதே...” வேதனையுடன் சொன்னவன்,

“இனிமேல் இது மாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்... ப்ளீஸ் அக்காவுக்காக நான் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன்...” தன் கையைப் பிடித்துக் கொண்டு

மன்னிப்பு கேட்டு கெஞ்சி கொண்டிருந்தவனைக் கண்டு என்ன நினைத்தாளோ...

“உனக்காக நான் எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்...” என்றவளை கண்கள் ஒளிர பார்த்தவனின் கண் முன் கையை நீட்டி விரலால் சொடக்கு போட்டவள்...

“ஹலோ கற்பனையைக் கண்டபடி அலைய விடாதே... நான் சொன்னது இன்று மதியம் நடந்ததை மட்டும் தான்...”

‘மட்டும்’ என்ற வார்த்தையில் சற்று அதிகப்படியாய் அவள் அழுத்தம் கொடுத்து சொல்ல... அதில் அவன் மனக்கஷ்டம் மறைந்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதைக் கஷ்டப்பட்டு அடக்கியபடி,

“நான் என்ன கற்பனை பண்ணினேன்னு நீ கற்பனை பண்ணின?” ஒற்றைப் புருவத்தைக் கேலியாய் அவன் உயர்த்த...

“அரசு... உனக்கு ரொம்பத் தான் லொள்ளு... நீயெல்லாம் சத்தியமா திருந்தாத ஜென்மம்... முதல்ல இங்கேயிருந்து போடா...” அவள் சத்தமாய்க் கத்த...

“எனக்கு ரொம்ப லொள்ளு இருக்கப் போய்த் தான்... உன்கிட்ட மல்லு கட்டிட்டு இருக்கேன்...” என்று கேலி பேசியவனை அவள் முறைக்க,

“சரி... சரி... முறைக்காதே... நான் போகிறேன்... நீ சமத்தாய் தூங்கு...” என்றவன் பால்கனி நோக்கி செல்ல... அவள் அவனை முறைத்தபடி கட்டிலில் படுத்தாள்.

வெகுநேரம் கழித்தும் அவன் வராததை உணர்ந்தவள் தன்னால் தான் பால்கனியில் இருக்கிறானோ என்று மனம் கேட்காமல் பால்கனி பக்கம் போனாள். பால்கனி கதவை லேசாகத் திறக்கும் போதே அவனின் பேச்சு குரல் கேட்டது.

“அக்கா... நீங்க என்ன சொன்னாலும் நீங்க பண்ணியது ரொம்பத் தப்புக்கா. அவள் அவங்க வீட்டில் எவ்வளவு செல்லமாய் வளர்ந்த பொண்ணு தெரியுமா? அதே மாதிரி

தான் நான் அவளை வைச்சுக்க நினைக்கிறேன். அவளைப் போய் நீங்க வேலை ஏவி இருக்கீங்க? வீடு நிறைய வேலையாள் இருக்கும் போது அவளை ஏன் வேலை செய்யச் சொன்னீங்க? நீங்க வேணும்ன்னே செஞ்ச மாதிரி தான் இருக்கு. அதிலும் உங்க எச்சில் ப்ளேட்டை அவளை எடுக்கச் சொன்னது எனக்கே ரொம்பக் கஷ்டமாயிருக்கு... பணத்தில் புரண்டு வளர்ந்த அவளுக்கு எப்படி இருந்திருக்கும்? அவள் மேல் உங்களுக்கு அப்படி என்ன கோபம்? அவள் அப்படியென்ன உங்களுக்குப் பாதகம் பண்ணிட்டா...?"

"என்னை உங்களுக்குப் பிடிக்குமில்ல... அப்போ என் மனைவி அல்லியும் உங்களுக்குப் பிடிச்சு தான் ஆகணும். அவள் வேறு... நான் வேறில்லை. அவளை அவமானப்படுத்தினா அது என்னை அவமானப்படுத்தின மாதிரி... நான் கஷ்டப்பட்டப்போ பணம் கொடுத்து உதவினீங்க... அதனால உங்க மேல் எனக்கு மதிப்பிருக்கு, மரியாதை இருக்கு... இல்லைங்கல்ல... அதுக்காக என் மனைவி உங்களுக்கு அடிமையாய் இருக்கணும்ன்னு அவசியமில்லை. என் மேல் உண்மையான அன்பிருந்தா இனிமேல் இந்த மாதிரி ஒண்ணு நடக்காம பார்த்துக்கோங்க..." தேன்மொழி பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் படபடவெனப் பேசியவன்... பின்பு,

"நாளைக்கு உங்க பேரில் ஒரு வீடு முடிக்கலாம்ன்னு இருக்கேன். காலையில் கிளம்பி ரெடியாயிருங்க... நான் வந்து மாமாவையும், உங்களையும் பிக்கப் பண்ணிக்கிறேன்..." என்று கூறியபடி முடிக்க...

'ஏண்டா தம்பி... திட்டுவது எல்லாம் திட்டி விட்டு என்னை ஐஸ் வைக்கிறதுக்கு என் பேரில் வீடு ரெஜிஸ்டர் பண்றியா? இதை நம்ப நான் ஒண்ணும் முதலிலிருந்த முட்டாள் அக்கா இல்லை. நீ இவ்வளவு பேசியதுக்கு அப்புறமும் அவளை நான் நிம்மதியா விடுவேன்னு நீ நினைக்கற? இனிமேல் தான்டா அவளுக்கு இருக்கு' மறுப்பக்கம் அலைப்பேசியை அணைத்த தேன்மொழியின் மனம் எரிமலையாய் குமுறியது.

‘என்னை எதிர்த்து சுண்டு விரலை அசைக்கப் பயப்படும் என் தம்பியை எனக்கு எதிரா திருப்பி விட்டுட்ட இல்ல... என் தம்பியின் வாழ்க்கையிலிருந்து உன்னை ஒரேடியாய் விலகி போக வைக்கல என் பேரு தேன்மொழி இல்லை. தேவையில்லாமல் இந்தத் தேன்மொழியைப் பகைச்சுட்ட... அதுக்கான விளைவுகளை நீ சீக்கிரம் சந்திக்க வேண்டி வரும்...’ அல்லியின் மேலிருந்த கோபத்தில் அவளைப் பழிவாங்க எண்ணினாள் தேன்மொழி.

அரசுவின் பேச்சில் அல்லி திகைத்து போய் அப்படியே நின்றிருந்தாள். அவன் அக்கா அவனுக்கு எவ்வளவு முக்கியம் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். அதை அவன் வாய் வார்த்தையாக அவளிடமே சொல்லியிருக்கிறான். அப்படிப்பட்டவன் இன்று தனக்காகத் தேன்மொழியிடம் பேசுகிறான் என்றால்... அவளுக்கே அது சற்று பிரமிப்பாக இருந்தது. அதிலும் அவனும், அவளும் வேறு வேறில்லை... ஒன்று தான் என்பதை அந்தத் தேன்மொழிக்கு எவ்வளவு அழகாக உணர்த்திவிட்டான். அவன் சொன்னது உண்மையோ பொய்யோ... அவனின் அக்கா என்றாலும் தன்னை அவளிடம் விட்டுக் கொடுக்காமல் பேசியதே அவளுக்கு உற்சாகம் அளிப்பதாய்...

அதே உற்சாகத்துடன் அவன் முன்னே போய் நின்றவள் கண்ணில் அவன் விரலிடுக்கில் புகைந்து கொண்டிருந்த சிகரெட் கண்ணில் பட்டது. மேலும் பல சிகரெட் துண்டுகள் அருகிலிருந்த ஆஷ்ட்ரேயில் கிடப்பதை கண்டவள் ஒரு முடிவோடு அவன் கையிலிருந்த சிகரெட்டை தன் கையில் பற்றினாள்.

எங்கோ வெறித்துக் கொண்டு ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தவன் அவளின் செயலில் சுயநினைவுக்கு வந்தான். தன் கையிலிருந்த சிகரெட் அவளின் கைக்குப் போனது எப்படி என்று குழம்பி கொண்டே அவன் அவளைப் பார்க்க... அவன் பார்ப்பது தெரிந்தே அவள் வேண்டுமென்றே அந்தச் சிகரெட்டை தன் உதட்டின் அருகில் கொண்டு சென்றாள்.

“ஏய் என்ன பண்ற நீ?” பதறியவனாய் அவளின் கையிலிருந்த சிகரெட்டை தட்டி விட அவளோ கையை லாவகமாய் நகற்றியபடி,

“நீ மட்டும் சிகரெட் பிடிக்கலாம்... நான் பிடிக்கக் கூடாதா?” அவளின் கேள்வியில் திகைத்தவன், பின்பு...

“ஏதோ டென்சன் அதான்... இதெல்லாம் உனக்கு எதுக்கு? முதலில் அதைக் கொடு...” அவன் தன் கையை நீட்ட...

“ம்ஹூம்... தர மாட்டேன்...” என்று தலையை அழகாய் ஆட்டி மறுத்தவள்,

“முதல்ல எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்... அது என்ன ஆண்களுக்கு டென்சன், கவலைன்னா சிகரெட் பிடிக்கிறீங்க... தண்ணி அடிக்கிறீங்க... ஏன் எங்களுக்கு மட்டும் டென்சன் இல்லையா? கவலை இல்லையா? இப்போ எனக்கு ரொம்பக் கவலையாயிருக்கு... அதனால நானும் உன்னை மாதிரி சிகரெட் பிடிக்கப் போறேன்... அப்படியாவது என் கவலை போகுதான்னு பார்க்கிறேன்...” என்றவள் மறுபடியும் சிகரெட்டை வாயின் அருகில் கொண்டு செல்ல... அவன் மீண்டும் அதைப் பிடுங்க வர... அவள் அதைத் தடுக்க...

“சொன்னால் கேளு அம்முலு... ஏற்கெனவே உன் கையில் தீச்சுட்ட காயம் இருக்கு... இதில் சிகரெட்டும் உன்னைச் சுட போகுது... ப்ளீஸ் குடு அம்முலு...” அவன் கெஞ்ச...

“சரி நான் இதைக் கொடுக்கிறேன்... தயவுசெஞ்சு இந்தக் கருமத்தை குடிக்காதே...” என்றவளை யோசனையாய் அவன் பார்க்க...

“ஹலோ உடனே யோசனையைப் பறக்க விடாதே... நீ சிகரெட் பிடிப்பதால் கெடுதல் உனக்கு மட்டுமில்ல... உன் பக்கத்திலிருக்கும் எனக்கும் தான் பாதிப்பு... அதுக்குத் தான் சொன்னேன்... நான் உன்னை விட்டு போனதுக்கு அப்புறம் இதை நீ கன்டினியூ பண்ணிக்கலாம்... அதுக்கு

அப்புறம் நான் ஒண்ணும் உன்னைச் சொல்ல மாட்டேன்... நீ ப்ரீ பேர்ட்... நானும் ப்ரீ பேர்ட்...”

“நான் வாழ்நாள் முழுவதும் சிகரெட் குடிக்க மாட்டேன்... ஏன்னா என் வாழ்நாள் முழுவதும் நீ என்னுடன் வருவேன்னு எனக்கு நம்பிக்கையிருக்கு” என்றவன் அவள் கையிலிருந்த சிகரெட்டை வாங்கி ஆஷ்ட்ரேயில் நசுக்கி போட்டான். அதைப் பார்த்து நிம்மதியானவள் அங்கிருந்து அகல முயல, அவள் கையைப் பற்றி நிறுத்தியவன்,

“அது மட்டும் தான் காரணமா? இல்லை வேறு ஏதும்...?” அவன் முடிக்காமல் நிறுத்த...

“ம்... கரெக்ட்டா கண்டுபிடிச்சிட்டியே அரசு... நல்ல மனைவியின் கடமையில் இதுவும் ஒண்ணு...”

அவள் கிண்டலாய் சொல்லி முடிக்கும் முன்பே அவளின் பற்றிய கையை விடாமல் பிடித்துக் கொண்டு ஒரு சுற்று சுற்றி தன் முன் கொண்டு வந்தவன்,

“நல்ல மனைவியின் கடமையில் மிக மிக முக்கியமான ஒண்ணு இருக்கு தெரியுமா?”

அவளைப் பற்றிய கையை அழுந்த பிடித்தபடி அவளின் கண்ணோடு கலந்து கேட்டவனின் பார்வை அவளை எதோ செய்ய... அவனைக் காண முடியாமல் தன் பார்வையை வேறு பக்கம் பார்த்தாள்.

“அதே போல் நல்ல கணவனுக்கு மிக மிக முக்கியமான கடமை ஒண்ணு இருக்கு... அதாவது உனக்குத் தெரியுமா?” என்றவன் அவள் முகம் நோக்கி குனிவது போல் நடிக்க... அதில் பயந்து போய் அவனைத் தள்ளிவிட்டு அங்கிருந்து வேகமாய் நகன்றவள்,

“அரசு... நீ ரொம்ப மோசம்... ஏதோ உன் அக்காவிடம் என்னைப் பத்தி நல்லவிதமாய்ச் சொன்னேன்னு... உனக்கு நல்லது பண்ண வந்தா... நீ எனக்குக் கெடுதல் பண்றியா? உன்னை...” கோபமாய்ச் சொல்லியவளை கண்டு அவன்

வாய் விட்டு சிரிக்க... வெளியில் அவனை முறைத்தபடி அவள் சென்றாலும் மனதுக்குள் நகைத்து கொண்டாள்.

அவள் சென்ற சிறிது நேரம் கழித்து உள்ளே வந்தவன் அவளின் மறுபக்கம் வந்து படுத்தான். ஏனோ இன்று இருவரின் மனமும் நிறைந்திருந்தது.

****

அடுத்தடுத்து வந்த நாட்கள் மாதங்களாகி இதே போல் சண்டையில்லாமல் கழிய... அரசுவுக்கு மனதில் நம்பிக்கை தோன்ற ஆரம்பித்தது. எப்படியும் அல்லி தன்னுடன் மனமொத்து வாழ்வாள் என்று. அவளுக்கோ அவன் போல் நம்பிக்கை ஏதும் இல்லையென்றாலும்... வாழ்க்கையை அதன் போக்கில் வாழ பழகி கொண்டாள்.

அதிலும் அவளின் தம்பி அஸ்வினுடனான பேச்சு அவளை உயிர்ப்புடன் வாழ வைத்துக் கொண்டிருந்தது. ஆம்... அஸ்வின் அவ்வப்போது அவளுடன் பேசுவான். அவனுக்கு அவர்களின் திருமணத்திற்கான அடிப்படை காரணம் தெரியாது. அதை அவளின் பெற்றோரும் சொல்லவில்லை... அவளும் சொல்லவில்லை.

ஒருநாள் நாட்காட்டியை பார்த்து கொண்டிருந்தவளுக்கு அப்போது தான் அது ஞாபகத்தில் வந்தது. பெண்களுக்கு வரும் மாதாந்திர பிரச்சினை அவளுக்குத் திருமணத்திற்குப் பின் வரவே இல்லையென்று. அவளுக்கு அவ்வப்போது இப்படி ஆகுவது உண்டு தான். அவள் கல்லூரி விடுதியில் சேர்ந்த புதிதில் இது போல் ஆகியிருக்கிறது. அதன் பின் மருத்துவரிடம் மருந்து வாங்கி உட்கொண்ட பின் இது சரியாகி இருக்கிறது. அதன் பின் மீண்டும் அந்தப் பிரச்சினை வந்ததை எண்ணியவளுக்குக் கவலை தொற்றிக் கொண்டது. இங்கு மருத்துவரை பற்றி யாரிடம் கேட்பது என்று தெரியாமல் லக்ஷ்மியம்மாவிடம் கேட்டாள்.

“ஏதும் விசேசமா?” மகிழ்ச்சி பொங்க பெரியவள் கேட்க...

“விசேசமா?”

அவரின் கேள்வியில் குழம்பியவள் அவரையே கேள்வி கேட்டாள். அவளின் பதில் கேள்வியில் விசயம் அதுவல்ல என்று பெரியவளுக்குப் புரிந்து போனது. ஆனாலும் ஏமாற்றம் அடையவில்லை. சின்னஞ்சிறுசுகள் கொஞ்சம் காலம் சந்தோசமாய் இருக்கலாம் என்று குழந்தை பிறப்பை தள்ளி போட்டிருக்கலாம் என்று முற்போக்காய் நினைத்து அதைப் பெரியதாய் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார்.

“பேபிம்மா... உடம்புக்கு ஏதும் வருத்தமா?” அவரின் குரலில் வருத்தம் தொற்றிக் கொண்டது.

“எப்போதும் வரும் மாதாந்திர பிரச்சினை தான் ஆயாம்மா...” சிறுவயது முதல் வளர்த்தவள் என்ற உரிமையில் அல்லி அவரிடம் சொல்ல...

“நம்ம காயூ இது சம்பந்தமா பார்க்கும் டாக்டர் தான்... பேசாமல் அவளிடம் பாரேன் பேபிம்மா... நல்ல கைராசியும் கூட...” பெரியவள் கூற... வேறுவழியின்றி அல்லி ஒத்துக் கொண்டு காயத்ரியை பார்க்க சென்றாள்.

“வாங்க... வாங்க... மிசஸ். அரசு...” தன் மருத்துவமனை தேடி வந்த அல்லியை உற்சாகமாய் வரவேற்றாள் காயத்ரி.

ஒன்றும் பேசாமல் சிரித்தபடி அமர்ந்த அல்லி... அவளை யோசனையாய் உற்று நோக்கினாள். அன்று அரசுவிடம் காதல் யாசகம் கேட்டு கெஞ்சிய காயத்ரியா இவள்? என்று அவளுக்கு வியப்பாய் இருந்தது. அகத்தின் கவலை முகத்தில் பிரதிபலிக்காமல் அந்தளவுக்குக் கம்பீரமாய் அமர்ந்திருந்தாள் காயத்ரி.

“என்ன அல்லி ஏதும் விசேசமா?” காயத்ரியும் அதே கேள்வி கேட்க... அல்லி நொந்து போனாள்.

“இல்லை டாக்டர்...” என்று அவள் ஆரம்பிக்கும் போதே...

“சும்மா பேர் சொல்லி கூப்பிடு அல்லி...”

“இல்லை என்னை விட உங்களுக்கு நிச்சயம் வயது அதிகமா தான் இருக்கும்... பேர் வேணாமே...”

“சரி அப்போ அக்கான்னு கூப்பிடு...” காயத்ரியின் பேச்சில்,

‘ஏன் எனக்குச் சக்களத்தியாய் வரும் ஐடியா ஏதும் உனக்கிருக்கா?’ மனதில் கேட்ட அல்லி வெகுண்டாள். அரசுவை விட்டு பிரிய வேண்டும் என்று நினைப்பவள் நினைவில் இப்படியொரு நினைப்பு எப்படி வந்தது? என்பதை அவள் சற்றும் ஆராயவில்லை.

“அதெல்லாம் வேணாம்... நாம் தொழில் நிமித்தமாய்ச் சந்தித்ததாய் இருக்கட்டும்... அதனால் டாக்டர்ன்னே கூப்பிடுறேன்...” அல்லியின் பேச்சை காயத்ரி மறுக்கவில்லை.

அதன் பின் அல்லியின் பிரச்சினையைக் கேட்டறிந்த காயத்ரி... அது சம்பந்தப்பட்ட அந்தரங்கமான சில கேள்விகளை அவளிடம் கேட்க... அல்லியோ ஒன்றுக்கும் பதில் சொல்ல தெரியாமல் பேந்த பேந்த விழித்தாள். அவளின் இந்த மாதிரி ஒரு செய்கையை எதிர்பார்க்காத காயத்ரிக்கு ஏதோ ஒன்று புரிவது போலிருந்தது. ஆனால் புரிந்த அந்தச் செய்தியோ அவளுக்கு உவகையைத் தருவதற்குப் பதில் வருத்தத்தையே அளித்தது.

காயத்ரி அரசுவை காதலித்தாள் தான் இல்லை என்பதற்கில்லை... அவன் கிடைக்கவில்லை என்று அவனிடமே சண்டை போட்டவள் தான்... அதையும் இல்லை என்பதற்கில்லை... இது எல்லாமே இறந்த காலம்... அதாவது அவனின் திருமணச் செய்தி மூலம் எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது.

அதனால் அவன் எங்கிருந்தாலும் யாரை திருமணம் செய்தாலும் நன்றாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை மட்டுமே அவள் நெஞ்சில் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது என்பது மட்டுமே உண்மை. ஆனால் அல்லி பேசாமல் முழிப்பதை பார்த்தால் அவர்களுக்கிடையில் ஒன்றுமே இல்லையோ... இப்படியா

அரசுவின் வாழ்க்கை பாழாக வேண்டும் என்ற நினைவு அவள் உள்ளே எழுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

“நான் கேட்கிறேன்னு நீ தப்பா நினைக்க வேணாம்... உனக்கு அரசுக்கும் இடையில்...” காயத்ரி மேலே எப்படிக் கேட்க என்று சங்கடப்பட்டுக் கொண்டு அவளிடம் கேட்க...

“இதெல்லாம் எதுக்கு? அது எங்கள் பெர்சனல் மேட்டர்... நான் பார்க்க வந்த விசயத்தை மட்டும் பாருங்க டாக்டர்...” அல்லி சற்று விறைப்பாகவே பதிலளித்தாள்.

“இல்லை அல்லி... நான் சொல்வதை நீ தப்பா புரிஞ்சிக்கிட்ட... நீ என்னை எது சம்பந்தமா பார்க்க வந்தியோ... அதுக்கும் உன் வாழ்க்கைக்கும் சம்பந்தம் இருக்கு. அதனால் தான் அதைக் கேட்கிறேன்...”

பொறுமையாய் சொன்ன காயத்ரி அவளைப் பார்த்து புன்னகைத்தாள். அந்தப் புன்னகையோ அல்லிக்கு அமிலத்தை அருந்தியது போல் எரிச்சலாக இருந்தது.

“நான் தான் தேவையில்லை என்கிறேனே... ஏன் திரும்பத் திரும்ப அதையே பேசிட்டு இருக்கீங்க... உங்களால டேப்லெட் எழுதி தர முடியுமா முடியாதா? இல்லை நான் வேறு டாக்டரை பார்த்து கொள்கிறேன்...” படபடவெனப் பேசியவள் எழுவதற்கு முயல...

“ஓகே ஓகே... அல்லி... கோபப்படாதே...” என்ற காயத்ரி மீதி சந்தேகத்தையும் அவளிடம் கேட்டுக் கொண்டு அவளின் உடல்நிலைக்கேற்ப மருந்தை எழுதி கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்டு அல்லி எழும் போது காயத்ரி,

“அல்லி நான் ஒரு விசயம் சொன்னா கோபப்பட மாட்டியே...” என்றவள்,

“அரசு அழகில்லாமல் இருப்பதால் நீ அவரை வெறுக்கிறாயா? அப்படியொரு எண்ணம் உனக்கு இருக்குமானால்... அவரின் முகத்தை மாற்றிப் பழைய அரசுவாய்க் கொண்டு வர மருத்துவத்தால் முடியும். இந்த மாதிரி ஃசில்லியான காரணத்துக்காக அவரை

வெறுத்துடாதே... அவரைப் போல் ஒரு நல்லவரை பார்ப்பது அரிது...” காயத்ரி பேச பேச... அல்லிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

‘யாரை பற்றி யாரிடம் பேசுகிறாய்? என் புருசனை பத்தி என் கிட்டேயே சொல்றியா? நீ கண்டியா... அவன் அழகில்லைன்னு நான் சொன்னதை நீ கண்டியா... பின்னே எதுக்குத் தேவையில்லாத இந்தப் பேச்சு? அவன் நல்லவன்னு எனக்கும் தெரியும்... அதை நீ சொல்லி நான் தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமில்லை. அவனைப் பத்தி உன்னை விட எனக்கு நல்லா தெரியும். அதனால் நீ கொஞ்சம் வாயை மூடி கொண்டு சும்மாயிரு...’ மனதுக்குள் குமைந்தவள்...

“டாக்டர்... உங்க கிட்ட நான் ஒண்ணு சொல்லலாமா?” என்றவளை கேள்வியாய் பார்த்தாள் காயத்ரி.

“முதல்ல நீங்க அரசுவை மறந்திட்டு வேற ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கோங்க... நீங்க இருக்கிற நிலைமைக்கு அது தான் நல்லது” தன்னுடைய காதல் அல்லிக்கு எப்படித் தெரியும்? என்று யோசித்த காயத்ரி...

‘ஒருவேளை அரசு மனைவியிடம் எல்லாவற்றையும் மறைக்காமல் சொல்லிவிட்டாரோ என்னமோ... அந்த மட்டும் கணவன், மனைவியிடையே ஒற்றுமை இருக்கத் தான் செய்யுது’ என்று நினைத்தவள் அரசுவின் வாழ்வு பாழாகவில்லை என்று எண்ணம் தோன்ற... இப்போது அல்லியின் பேச்சு காயத்ரிக்குச் சிரிப்பை வரவழைத்தது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

“எனக்குத் தான் ஏற்கெனவே கல்யாணம் ஆகிவிட்டதே...” சிரிப்புடன் கூறிய காயத்ரியை அதிர்ச்சியுடன் அவள் பார்க்க,

“ஆமாம் மிசஸ். அரசு... எனது டாக்டர் தொழில் தான் என் கணவன்... இந்த ஸ்டெதஸ்கோப் தான் என் தாலி... நான் பிரசவம் பார்க்கும் குழந்தைகள் எல்லாம் என் குழந்தைகள்...” என்று கூறவும் அல்லிக்கு சிறிது

மகிழ்ச்சியாக இருந்தாலும் கொஞ்சமே கொஞ்சம் கஷ்டமாய் இருந்தது.

“இருந்தாலும் நீங்க அரசுவை மறந்திட்டு...” அவள் இழுக்கும் போதே... காயத்ரியின் முகம் இறுகிய பாவனையைக் காட்டியது.

“திஸ் இஸ் த லிமிட் அல்லி... என் வாழ்க்கையை நான் தான் முடிவு பண்ணுவேன்...” என்று கோபமாய்ச் சொன்னவள்,

“உங்களுக்கிடையில் என்னால் குழப்பம் வராது... அதனால் என்னைப் பத்தி கவலைப்படத் தேவையில்லை...” சற்று நிதானத்துடன் முடித்தாள்.

காயத்ரியின் பேச்சு அல்லியின் மனதில் கோப அலைகளை உருவாக்கி விட... அவள் பதில் பேசாமல் வெளியேறினாள்.

‘இவளுக்கு அவன் மேல் காதலில்லை என்றால் வேறொருத்தனை கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... எதுக்குக் கல்யாணம் பண்ணிக்காம இந்தத் தொழிலை கட்டிக்கிட்டு அழணும்... அவ மனசுல இன்னமும் அரசு தான் இருக்கான். அதான் அவ அப்படிப் பேசுறா...’ அரசு மீதான காயத்ரியின் காதலை கண்டு அவள் மனம் பொருமியது.

அவளின் பொருமல் வீட்டிற்கு வந்தும் நிற்காமல் மிகச் சரியாய் அரசுவிடம் கோபமாய் வெளிப்பட்டது. அதன் விளைவு அவளிடம் கோபித்துக் கொண்டு வெளியில் சென்ற அரசு... நள்ளிரவு தாண்டியும் வீடு வந்து சேரவில்லை.

அலுவலக நேரத்தில் தேன்மொழியிடமிருந்து அழைப்பு வர அதை எடுக்கவா? வேண்டாமா? என்று அரசு யோசித்துக் கொண்டிருந்தான். இப்போ இருக்கும் நிலைமையில் எடுக்காமல் இருந்தாலும் பிரச்சினை... எடுத்து பேசினாலும் பிரச்சினை... அவனுக்கு என்ன தான் செய்வது என்று தெரியவில்லை. வேறுவழியின்றி அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன்,

“என்ன அக்கா இந்த நேரத்தில்...?” வலிய வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன் அவன் பேச...

“தம்பி உன் நிலைமை இப்படியாகி விட்டதே... இதுக்குத் தானா அந்தச் சீமை சித்ராங்கியை காதலிச்சு கைப்பிடிச்ச... இப்படி உன் வாழ்க்கை தரிசு நிலமா... பாலைவனமா போகத் தானா நீ அவளைத் தேடி பிடிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... இதுக்குத் தான் சொல்றது நாம காதலிக்கிறவங்களை விட... நம்மைக் காதலிக்கிறவங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு சொல்றது... நீ மட்டும் உன்னைக் காதலிக்கிற காயூவை கல்யாணம் பண்ணியிருந்தின்னா... இந்நேரம் உன் வாரிசு அவள் வயித்தில் வளர்ந்திருக்கும்...” அதுவரை அக்காவின் வார்த்தைகளை அர்த்தம் புரியாமல் கேட்டு கொண்டிருந்தவன் அவளின் கடைசி வாக்கியத்தில்,

“அக்கா...” என்று உரக்க கத்திவிட்டான்.

‘யார் வயிற்றில் யார் வாரிசு...? என் அம்முலுவை தவிர மனதால் கூட வேறு பெண்ணை நினைக்காத என்னைப் போய் அடுத்தப் பெண்ணுடன் எப்படித் தான் கூசாமல் இணை கூட்டுறாங்களோ இந்த அக்கா? இந்த அக்காவுக்கு வர வர விவஸ்தையே இல்லாமல் போச்சு... என்ன பேசுறோம்ன்னு யோசிக்கிறதே இல்லை...’ மனதுக்குள் தேன்மொழியைத் திட்டியவனால் பல்லை மட்டுமே ஆத்திரத்துடன் கடிக்க முடிந்தது.

“அக்கா... காயூவை இப்படி என்னுடன் சேர்த்து வைத்து பேசுவதை நிறுத்துங்க... நாளைக்கே அடுத்தவனுடன் கல்யாணமாக வேண்டிய பெண்... நீங்க இப்படிப் பேசுவதால் அவள் வாழ்க்கைக்குத் தான் பிரச்சினை வரும்...” அக்காவின் கடைசிப் பேச்சுக்கு மட்டும் பதிலளித்தவன் அவளின் பேச்சின் சாராம்சத்தைக் கொஞ்சமும் புரிந்து கொள்ள முற்படவில்லை.

“சரிப்பா... நான் காயூ கூட இணை கூட்டல... நீ கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வந்திருக்கியே அந்தச் சண்டிராணி கூட உன்னைச் சேர்த்து வைச்சு பேசறேன்... ம்ஹூம்... சேர்த்து வச்சு பேச மட்டும் தான் முடியும்... மத்ததுக்கு இங்கே எங்கே வழியிருக்கு?” அவள் நொடித்துக் கொள்ள...

“அக்கா ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லியிருக்கேன்... என்னைப் பத்தி என்ன வேணும்ன்னாலும் பேசுங்க... ஆனா அவளைப் பத்தி தப்பா பேச வேணாம்...” அவன் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்ததோ...? ஆனால் அதுவெல்லாம் தேன்மொழியைச் சிறிதும் பாதிக்கவில்லை.

“ஆமாம்டா... அவளைச் சொன்னால் மட்டும் உனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துருமே. அவள் உன் மனைவியா நடந்து கொள்ளாத போதே நீ இப்படி அவளுக்காக உருகுனேன்னா... அவள் மட்டும் உன் பொண்டாட்டியா நடந்துக்கிட்டா எங்களையெல்லாம் மதிக்கக் கூட மாட்டே போலிருக்கே...”

இப்போது தான் தேன்மொழி சொல்ல வந்த விசயம் அவனுக்கு உறைத்தது. அந்த விசயத்தை உணர்ந்த அவனுக்கோ திக்கென்று இருந்தது.

‘இது எப்படி இந்த அக்காவுக்குத் தெரியும்? இது எனக்கும் அல்லிக்கும் மட்டுமே அறிந்த தெரிந்த விசயம்... இதை அக்காவுக்கு யார் சொன்னது? நிச்சயம் அல்லி சொல்லியிருக்க வாய்ப்பில்லை’ அவன் இன்னமும் குழம்பி போனான்.

“அல்லி என் மனைவியா வாழலன்னு உங்களுக்கு யார் சொன்னது? அப்படியொரு விசயம் நடக்கவே இல்லை. நாங்க ரெண்டு பேரும் சந்தோசமா தான் இருக்கோம்...” மனைவியை விட்டுக் கொடுக்காமல் அவன் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்ல...

“வேற யார்டா இந்தக் கர்மத்தை எல்லாம் வெளியில் போய்ச் சொல்லுவா... எல்லாம் உன் பொண்டாட்டி அல்லி தான் சொல்லி இருக்கா”

“அல்லியா?” அவள் ஏன் அவ்வாறு சொல்ல வேண்டும்? என்று அவனுக்குத் திகைப்பாய் இருந்தது.

“ஆமாம்... அவளே தான்... காலையில் நம்ம காயூ கிட்ட செக்கப்க்கு போனப்போ கணவன், மனைவிக்கிடையே இருக்கும் உறவு பத்தின விசயத்துக்குப் பேந்த பேந்த முழிச்சாளாம். அப்போ அதுக்கு என்ன அர்த்தம் அரசு?”

தேன்மொழியின் வார்த்தையில் அவனுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது. தம்பியாக இருந்தாலும் எதை யாரிடம் பேச வேண்டும் என்ற விவஸ்தை தேன்மொழிக்கு வேண்டாமா?

“அக்கா... அவள் சின்னப் பொண்ணு... அதனால சொல்ல சங்கடப்பட்டு அப்படி முழிச்சிருக்கலாம். அதைப் போய் ஏன் பெருசா எடுத்துக்குறீங்க? நாங்க சந்தோசமா தான் இருக்கோம்... உங்களுக்குச் சந்தேகமாயிருந்தா அவளை மெடிக்கல் செக்கப் பண்ணி பார்க்கிறீங்களா?” அவனுக்கு வந்த கோபத்தில் அவன் அவ்வாறு பேச...

“அய்யோ தம்பி... அது எல்லாம் வேணாம்... உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கையிருக்கு... எதுக்கும் அவளைக் கொஞ்சம் கண்டிச்சு வை...”

அதற்கு மேல் பேச பயந்தவளாய் தேன்மொழி அலைப்பேசியை அணைக்க... ஊப் என்ற பெருமூச்சை இழுத்துவிட்டபடி நாற்காலியில் சாய்ந்தான் அரசு. எங்கே மருத்துவமனைக்கு இப்போதே புறப்படு என்று அக்கா

சொல்லிவிடுவாளோ என்று அவன் மனதுக்குள் கொஞ்சம் பயந்து தான் போனான்.

இப்போது அவனின் கோபம் எல்லாம் அல்லியின் மேல் திரும்பியது. 'இவளை யாரு தனியா காயூவை பார்க்க போகச் சொன்னது? ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நானே அவளைக் கூட்டிட்டு போயிருப்பேனே... இவளுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை...' மனதுக்குள் அல்லியை கடிந்து கொண்டவன்... அவள் ஏன் மருத்துவரை பார்க்க போனாள் என்பதை அறிந்து கொள்ளத் தவறிவிட்டான்.

அரசுவிடம் பேசிவிட்டு இங்கே தேன்மொழி நிலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அந்தக் காயூவின் பேச்சை அரைகுறையாய் கேட்டு அரசுவிடம் பேசியிருக்கக் கூடாதோ என்று உள்ளுக்குள் நொந்தாள். தேன்மொழி எப்போதும் போல் அம்மாயிடம் பேசுவதற்காக அரசுவின் வீட்டிற்கு அழைக்க... அப்போது தான் அம்மாயி, அல்லி காயத்ரியை நாடி சென்றிருப்பதைச் சொன்னார். என்ன விசயமாக இருக்கும் என்று தேன்மொழிக்கு மனசு குறுகுறுக்க உடனே காயத்ரிக்கு அழைக்க... அவளிடம் மெதுவே விசயத்தை வாங்கினாள். ஆனால் அவ்வளவு சீக்கிரம் காயத்ரி விசயத்தைச் சொல்லிவிடவில்லை.

தேன்மொழி சாமர்த்தியமாகக் காயத்ரியும் அறியாமல் அவள் வாயிலிருந்து விசயத்தைக் கறந்துவிட்டாள். அல்லியும், அரசுவும் தாம்பத்திய பந்தத்தில் ஈடுபடவில்லையோ என்ற சந்தேகத்தைக் காயத்ரி தன்னையும் அறியாமல் அவளிடம் சொல்லிவிட... அல்லி மாட்டி கொண்டாள் என்று தேன்மொழி மனதுக்குள் கொக்கரித்துக் கொண்டாள். அதன் விளைவே அவள் தன் தம்பியிடம் மேலே பேசியது... அவனிடம் கூறினால் அல்லியின் மேல் கோபம் கொள்வான்... சின்ன விசயத்தை ஊதி பெருசாக்கலாம் என்று அவள் நினைக்க... அவனோ அவன் மனைவியை அவளிடத்தில் கடைசி வரை விட்டு கொடுக்கவில்லை.

மதியத்திற்கு வீட்டிற்குச் சென்ற அரசு அல்லியிடம், “நீ காயூவை பார்க்க போயிருந்தியா?” என்று மொட்டையாகக் கேட்க, அவள் ஆம் என்க,

“என்னிடம் சொல்லியிருந்தா நானே உன்னைக் கூட்டிட்டு போயிருப்பேனே... எதுக்குத் தனியா போன?” அவன் என்னவோ சாதாரணமா தான் கேட்டான். அவளுக்குத் தான் பற்றிக் கொண்டு வந்தது.

‘எதற்காக டாக்டரை பார்க்க போன? உடம்பு ஏதும் சரியில்லையா? இதெல்லாம் கேட்கணும்ன்னு தோணாது... அவளைப் பார்க்கிறதுக்கு மட்டும் ஜொள்ளு விட்டுட்டு முதல் ஆளாய் கிளம்ப நினைக்கிறதை பாரு... நான் எப்படிப் போனாலும் பரவாயில்லை... இவனுக்கு அவளைப் பார்ப்பது மட்டும் தான் குறிக்கோள்... ஆமாம் நான் அவளைப் போய்ப் பார்த்தது இவனுக்கு எப்படித் தெரியும்? ஆயாம்மா ஏதும் சொல்லி... இல்லை இருக்காது. இவனே இப்போது தான் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறான்... அதிலும் ஆயாம்மா டேப்லெட் போட்டுட்டு தூங்க போயிருப்பாங்க... அவங்க சொல்லியிருக்கச் சான்ஸ் இல்லை. அப்போ அந்தக் காயத்ரி தான் சொல்லியிருக்கணும். ம்ஹூம்... நெட்வொர்க் ரொம்ப ஸ்பீடா தான் வேலை செய்யுது...’

மனதுக்குள் பொருமியவள்... ஏற்கெனவே காயத்ரியின் மேலிருந்த அவளின் கோபம் அவன் மேல் திரும்பியது.

“நான் ஒண்ணும் சின்னப்பிள்ளை இல்லை... தனியா போக எனக்குத் தெரியும்” வெடுக்கென்று கூறியவளை கண்டு அப்போதும் அவனுக்குக் கோபம் வரவில்லை.

“நீ சொன்னாலும் சொல்லலைன்னாலும் நீ சின்னபிள்ளை தான்... அதான் காயூ கிட்ட போய்த் தேவையில்லாமல் உளறியிருக்க...”

“அப்படி நான் என்ன தேவையில்லாமல் உளறியிருக்கேன்...? புரியாமல் பேசாதே அரசு...” அவளின் பேச்சு அவனுக்குக் கோபத்தை வரவழைத்தது.

“நீ தான் புரியாமல் பேசி வம்பை விலை கொடுத்து வாங்கிட்டு வந்திருக்க... எனக்கும், உனக்கும் இடையில் ஒண்ணுமே நடக்கலன்னு எதுக்கு நம்ம அந்தரங்கத்தை அந்தக் காயூவிடம் போய்ச் சொன்ன...?” அவன் கேட்ட விதத்தில் அவளின் முகம் சிவந்தது.

“நான் அப்படியெல்லாம் சொல்லல...” அவள் மறுக்க...

“நீ சொல்லாமல் அவளுக்கு எப்படித் தெரியும்? இது உனக்கும், எனக்கும் இடையில் உள்ள ரகசியம்... ஒண்ணு நான் சொல்லியிருக்கணும்... இல்லை நீ சொல்லியிருக்கணும்... நான் சொல்லவில்லை என்றால் அப்போ இதை நீ தான் சொல்லியிருக்கணும்” அவன் கோபமாய்க் கேட்க...

“ஆமாம் நான் தான் சொன்னேன் இப்போ அதுக்கு என்ன அரசு? நான் சொல்லியதை அவ எதுக்கு உன் கிட்ட சொன்னா? ஒருவேளை உனக்கு வாழ்க்கை தர்றேன்னு சொன்னாளோ? இருக்கும் இருக்கும்... இன்னமும் அவளுக்கு உன் மேல் ஒரு கண் இருக்கத் தான் செய்யுது” அவள் ஆத்திரத்துடன் பேச...

“ஏய்... என்ன பேசுறன்னு தெரிஞ்சு தான் பேசுறியா? நீ பண்ணிய தப்புக்கு எதுக்குக் காயூவை இழுக்குற? நம் பேச்சில் தேவையில்லாமல் அவளை நீ இழுக்காதே...” ஆள்காட்டி விரலால் அவன் எச்சரிக்க...

“இழுத்தா என்ன செய்வ? அவ உன்னைய நினைச்சிட்டு கல்யாணமே பண்ணிக்கப் போறது இல்லையாம்... அப்போ அதுக்கு என்ன அர்த்தம்? அவ மனசுல இன்னமும் நீ இருக்கன்னு தானே அர்த்தம். ஒரு டாக்டரா இருந்திட்டு பேசண்ட்டோட டீட்டைல்ஸ் பத்தி அடுத்தவங்க கிட்ட சொல்ல கூடாதுன்னு தெரியாத அந்த முட்டாள் தான் உனக்கு லாயக்கு. நீ சொல்றதை எல்லாம் சரிங்க மாமோய்ன்னு தலையை ஆட்டி கேட்டுட்டு இருப்பா... போ.. போய் அவளைக் கல்யாணம் பண்ணிக்கோ...” பதிலுக்கு ஆங்காரமாய்க் கத்த...

“நான் என்ன கேட்கிறேன்... நீ என்ன பதில் பேசுற? லூசு மாதிரி உளறாதே... கணவன், மனைவிக்குன்னு சில அந்தரங்க ரகசியம் இருக்கு... அதை நீ இப்படி வெளிச்சம் போட்டு காட்டிட்டு வந்திருக்கியே... அதோட விளைவை பத்தி நீ கொஞ்சமும் யோசிக்க மாட்டியா?” இன்னமும் தான் சொல்ல வந்ததைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாளே என்ற ஆதங்கத்தில் அவன் பேச...

“என்ன பெருசா விளைவு வந்திட போகுது? என்னோட இந்த நிலைமைக்குக் காரணம் நீ தான்டா... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தான் காரணம்... வேற யாரையாவது கல்யாணம் பண்ணியிருந்தா கூட நான் சந்தோசமா வாழ்ந்திருப்பேன்... போயும் போயும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என் வாழ்க்கை மோசம் போனது தான் மிச்சம்... உன்னைப் பார்க்கவே பிடிக்கல... என் முகத்திலே விழிக்காதே... போடா... முதல்ல இங்கிருந்து வெளியில் போடா...”

கோபத்தின் பிடியில் பேசியவள் கொஞ்சம் கொஞ்சமாய் இயலாமையின் பிடியில் சிக்கி... கண்ணீருக்கு தத்து பிள்ளையாய் மாறி போக... அவளின் அழுகை அவனைப் பெரிதும் பாதித்தது.

“போறேன்... உன் முகத்தில் விழிக்க முடியாத அளவுக்கு நான் கண் காணாம போறேன்... அப்பவாவது நீ சந்தோசமா இருந்தா சரி...” மனதில் எழுந்த வலியுடன் கூறியவன் தங்கள் அறையை விட்டு வேகமாய் வெளியேறினான்.

அவன் போவதை அவள் உணர்ந்தாலும் தடுக்க முற்படவில்லை. அவள் தன் அழுகையில் கரைந்து கொண்டிருந்தாள். நிச்சயம் அது அவன் அவளைப் பேசிய பேச்சிற்காக இல்லை... அந்தக் காயத்ரி சொன்னதைக் கேட்டுத் தன்னைக் கேள்வி கேட்கிறானே... அப்படியென்றால் அவனுக்கு அவள் தான் முக்கியமா என்ற ஆற்றாமையில் வந்த கண்ணீர் தான் அது...

****

மாலையில் முகத்தைக் கழுவி கொண்டு கீழே வந்த அல்லி லக்ஷ்மியம்மாவிடம் சென்று பேசி கொண்டிருந்தாள். அவள் அழுததற்கான சுவடுகளாய் அவளின் சிவந்த விழிகளும், தடித்து வீங்கிய இமைகளும் இருக்க... அவளின் குரல் வேறு நமநம என்று இழுத்ததில் அது வேறு சாட்சியாய் இருக்க... பெரியவளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

“என்ன பேபிம்மா... அழுதியா?”

“நான் அழுதேனா... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே... இங்கே நான் சந்தோசமா இருக்கேன்... ஹாஸ்பிடல் போயிட்டு வந்ததுல ஒத்துக்காம கொஞ்சம் தடுமல் பிடிச்சியிருக்கு அவ்வளவு தான்...”

அவள் சமாளிக்கப் பெரியவளும் அதை உண்மை என்று நம்பிவிட்டாள். அல்லி பெரியவளுக்குப் புத்தகங்கள் படித்துக் காண்பிக்க... பின் இருவரும் தொலைக்காட்சி பார்க்க... என்று நேரம் விரைவாக ஓடி செல்ல இரவும் வந்தது.

****

இரவு உணவு உண்டுவிட்டு பெரியவள் போய்ப் படுத்து விட... அரசு இன்னமும் வீடு வந்து சேரவில்லை. அப்போதும் அல்லி தவறாக எண்ணவில்லை. வேலை ஏதும் இருந்திருக்கும் அதனால் வர தாமதமாகிறது என்று எண்ணி கொண்டு வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்து கொண்டிருந்தாள். நேரம் பத்து மணியைத் தாண்டியதும் அவள் யோசனையாய் வாயிலை பார்த்தாள்.

பின்பு பன்னிரெண்டு மணியாகவும் கொஞ்சம் பதற்றம் தொற்றிக் கொள்ள எழுந்து வாசலுக்குச் சென்றவள் அங்கே நிலைக்கதவில் சாய்ந்து அவனின் வரவிற்காகக் காத்திருந்தாள். ஏனோ அவனுக்கு அலைப்பேசியில் அழைத்துப் பேச வேண்டும் என்று மட்டும் அவளுக்குத் தோணவில்லை. ஏனெனில் அது மாதிரி அவனிடம் பேசி அவளுக்கு வழக்கமில்லை.

நேரம் செல்ல செல்ல அவள் வயிற்றில் இனம் புரியாத பயப்பந்து உருள... அவளையும் அறியாமல் அவள் கைகள் அலைப்பேசியை எடுத்து அவனின் எண்ணிற்கு அழைத்தது. மறுமுனையில் அவன் அழைப்பை எடுக்காமல் இருக்க... பலமுறை அழைத்தும் அதே போல் நடக்க... அவளுக்கோ அச்சத்தின் அளவு கூடிக் கொண்டே போனது. எப்படி அவனைத் தேடுவது? என்ன செய்வது? என்று ஒரு எண்ணமும் பிடிபடாமல் அப்படியே வாசலிலேயே அமர்ந்துவிட்டாள்.

அவளையும் அறியாமல் அவளின் கண்கள் கண்ணீரை சொரிந்தது. ஏன் அழுகிறோம்? எதுக்கு அழுகிறோம்? என்று தெரியாமலேயே அழுது கரைந்தாள். எவ்வளவு நேரம் அழுதாளோ அது அவளுக்கே தெரியாது... பின் மெதுவே கண்ணீரை துடைத்து கொண்டவள் நினைவில் அரசு கூறி சென்ற வார்த்தைகள் ஞாபகத்தில் வந்தது.

“போறேன்... உன் முகத்தில் விழிக்க முடியாத அளவுக்கு நான் கண் காணாம போறேன்... அப்பவாவது நீ சந்தோசமா இருந்தா சரி...”

அவனின் வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவளின் காதுகளில் ஒலிக்க... தாங்க முடியாமல் காதுகளை இறுக பொத்தி கொண்டாள். அவன் சொன்ன கண் காணாத இடம் என்றால்... யோசித்தவளுக்கு அதன் அர்த்தம் புரிய மீண்டும் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

‘சாரி அரசு... நான் ஏதோ கோபத்தில் தெரியாமல் பேசிட்டேன்... அதுக்காக நீ முட்டாள்தனமா ஏதும் பண்ணிடாதே... எங்கிருந்தாலும் என் கண் முன்னே வந்துவிடு அரசு... நான் இனிமேல் இது போல் பேச மாட்டேன் அரசு...’ மனதுக்குள் அழுது புலம்பியவள் அவன் நல்லபடியாய் வீடு திரும்ப வேண்டும் என்ற வேண்டுதலுடன் அவனுக்காய் காத்திருந்தாள்.

அதிகாலை மூன்று மணியளவில் அவனின் கார் வீட்டு வளாகத்திற்குள் நுழைய அவள் பதற்றத்துடன் எழுந்தாள். காரில் இருந்து இறங்கியவனை அவள் கண்கள்

மேலிருந்து கீழாய் வேகமாய் அலச... தலை களைந்திருக்க, ஆடைகள் நலுங்கியிருக்க அவனிருந்த அலங்கோலத்தை விட... அவன் வலது கைப்பகுதியில் போடப்பட்டு இருந்த கட்டு அவள் கண்ணில் பட அவள் முகம் கலக்கத்தைச் சுமந்தது. வாயிலிலேயே அவள் அமர்ந்திருப்பதை அவன் கண்டாலும்... அவளின் பார்வையை உணர்ந்தாலும்... அவளைக் கண்டு கொள்ளாமல் அவன் தங்கள் அறைக்குச் செல்ல, அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அறைக்குள் நுழைந்ததும் தான் தாமதம், அல்லி அவனை இறுக அணைத்து அவனின் நெஞ்சில் முகம் புதைத்தவள்,

“அரசு இவ்வளவு நேரம் எங்கே போன அரசு? நான் எப்படியெல்லாம் பயந்து போயிட்டேன் தெரியுமா? நான் பேசியது தப்பு தான்... இனிமேல் அப்படிப் பேச மாட்டேன்... இனிமேல் இது மாதிரி பயமுறுத்தாதே... என்ன?” புலம்பியவளின் கைகளைப் பிடித்துத் தள்ளி நிறுத்தியவன்,

“நான் தொட்டால் உனக்கு அருவருப்பா இருக்கும்... தாங்க முடியாதுன்னு சொல்லுவ... இப்போ நீ தொட்டதும் எனக்கு அப்படித்தான் இருக்கு... அருவருப்பா, தாங்க முடியாததா, சகிக்க முடியாததா இருக்கு... தயவுசெஞ்சு என்னைத் தொடாதே...” அவன் பேச பேச அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்.

அவனின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவளைச் சம்மட்டி கொண்டு தாக்கியதை போல் வலித்தது. அன்று தான் பேசியதும் அவனுக்கு இப்படித்தானே வலித்திருக்கும் என்பதைத் தாமதமாய் இன்று அவள் உணர்ந்தாள். அந்த வலி எதனால் எழுந்தது என்பதை அவள் உணர்ந்த போது இன்னமும் அதிகமாய்த் திகைத்து போனாள். அந்தக் கணம் அரசு கணவனாய் தன் மனதில் நுழைந்து விட்டதை அவள் உணர்ந்தாள்.

அல்லியால் தன் மனம் கூறும் செய்தியை நம்ப முடியவில்லை. ‘அய்யோ... இது எப்படிச் சாத்தியமாயிற்று?’ அவள் மனம் கூக்குரலிட்டது. பிடிக்காது... பிடிக்காது என்று எவனை இரவும் பகலும் வெறுத்தாளோ... அவனை அவள் மனம் ஏற்றுக் கொண்டு விட்டதா? அப்போ கொஞ்ச நேரம் முன்பு அவனைக் காணாது அவள் துடித்த துடிப்பு, அழுத அழுகை எல்லாம் அவனுக்காகத் தானா? அவனைக் காணவில்லை என்று துடித்ததால் வந்த கண்ணீர் தானா? எது தன்னை அவன் பால் ஈர்த்தது என்று இன்னமும் அவளுக்கு விளங்கவில்லை.

‘நான் என்ன தான் கோபமாய்ப் பேசினாலும் நாய்க்குட்டி போல் அவன் என்னையே சுற்றி வருவதாலா? இல்லை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத அவனின் தூய அன்பினாலா? எதனால் என் மனம் அவனை ஏற்றுக் கொண்டது? கழுத்தில் கத்தி வைத்து மிரட்டி திருமணம் செய்தவன் என்ற எண்ணம் மாயமாய் மறைந்து போன அதிசயம் தான் என்ன?’ பல கேள்விகள் அவள் மனதில் சடசடவென முளைக்க... ஆனால் அதற்கான விடை தான் அவளிடத்தில் இல்லை.

அவளோ தன் யோசனையில் மூழ்கியவளாய் அப்படியே கல் சிலையாய் அசையாது நிற்க, அவனோ அவளை ஒரு மார்க்கமாய்ப் பார்த்தபடி அவளை முன்னும், பின்னும் ஒரு சுற்று சுற்றி வந்தான். அவள் முன்னே வந்து நின்றவன் அவளை இமைக்காது பார்க்க... அவளோ அதை உணராதிருக்க... அவன் அவளின் முகத்தை இருகரங்களால் தாங்க...

கல் சிலையாய் மாறியிருந்த அல்லிக்கு அப்போது தான் உயிர் வந்தது. அவனைப் பரிதவிப்புடன் பார்த்தவள் அப்போது தான் உணர்ந்தாள் தன் முகத்தை அவனின் கைகள் தாங்கியிருப்பதை... அவனின் செயலில் அவள் மனதில் பரவசம் எழுந்தாலும்... கொஞ்ச நேரம் முன்பு பேசியது போல் ஏதும் அச்சாணியமாய்ப் பேசிவிடுவானோ

என்ற பயத்தில் அவனின் முகத்தையே கலக்கத்துடன் பார்த்தாள்.

“சாரி அரசு... அன்னைக்கு நான் ஏதோ தெரியாமல் பேசிட்டேன்... இப்போ எனக்கு எல்லாமே புரியுது...” தன் மனதை அவனுக்கு உணர்த்திடும் வேகத்தில் அவள் பேச...

“என்ன புரிஞ்சது?”

அவளைப் பார்த்தபடி உணர்ச்சியற்ற குரலில் கேட்டவனின் முகத்திலிருந்து அவன் என்ன நினைக்கிறான் என்று அவளுக்குச் சத்தியமாய்ப் புரியவில்லை.

“நான் உன்னை... எனக்கு...” வார்த்தைகள் வராமல் சதிராட்டம் போட, அவள் மழலை மொழி பேசும் சிறுப்பிள்ளையானாள்.

“எனக்கு...?” அவனின் வார்த்தைகள் அவனின் பார்வையைப் போல் கூர்மையாய் வந்தது.

“ஏண்டா... கொடுமை படுத்தற அரசு... இன்னுமா உனக்குப் புரியல?” என்றவள் அவனின் சட்டை காலரை பிடித்து இழுத்து அவன் நெஞ்சில் சாய...

“நான் தான் என்னைத் தொடக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல...” அதட்டலாய் சொன்னாலும் அவன் அவளை விலக்கி தள்ள முற்படவில்லை. அதில் கொஞ்சம் தைரியம் வர பெற்றவள்,

“நீ தொடக் கூடாதுன்னு சொன்னா... தொடாமலிருக்க நான் என்ன அரசுவா? நான் அல்லியாக்கும்... யார் பேச்சையும் நான் கேட்க மாட்டேனாக்கும். இவ்வளவு ஏன் சில சமயம் நானே என் பேச்சை கேட்க மாட்டேன்...” என்று கிண்டலாய் சொன்னவள் அவனின் நெஞ்சில் இன்னமும் ஆழமாய் முகத்தைப் புதைத்துக் கொள்ள...

“அப்போ பேபிம்மாவுக்கு எல்லாம் புரிய ஆரம்பிச்சிருச்சுன்னு நினைக்கிறேன்” என்றவனை அவள்

ஆச்சிரியத்துடன் அண்ணாந்து பார்க்க... அவன் அவளைப் பார்த்து கண்சிமிட்டி சிரிக்க...

“அரசு... அப்போ பொய்யா தான் சொன்னியா?” அவள் சிணுங்க...

“ம்... உன் கூடக் கொஞ்சம் விளையாடி பார்க்கலாம்ன்னு தோணிச்சு... அதான் விளையாடி பார்த்தேன்...”

“அதுக்காக இப்படித் தான் வீட்டுக்கு வராமல் இருந்து பயமுறுத்துவியா? நான் எப்படிப் பயந்து போயிட்டேன் தெரியுமா?”

“அதான் பார்த்தாலே தெரியுதே... மூக்கு சிவக்கும் அளவுக்கு அழுதிருக்கியே...” மிளகாய் பழம் போல் சிவந்திருந்த அவளின் கூர் மூக்கை பிடித்து ஆட்டியபடி சொன்னவன்,

“வீட்டுக்கு லேட்டா வந்ததுக்குக் காரணம்... கம்பெனியில் நேத்து பகல் கரெண்ட் இல்லை... அதனால நைட் தான் வேலை. அதான் வேலை முடிச்சு வர லேட்டாகிருச்சு...” அவன் தாமதமாய் வந்ததற்கு விளக்கம் சொல்ல... சரியென்று தலையசைத்து கேட்டு கொண்டாள்.

“நான் நினைச்சேன்... நீ என் முகத்தில் முழிக்கப் பிடிக்காமல் ஏதேனும்...” அவள் முடிக்கும் முன்னே, அவள் முகத்தைக் கைகளால் வருடியவன்,

“யாருக்கேனும் இந்த மதி முகத்தைப் பார்க்க பிடிக்காமல் இருக்குமா? அதிலும் எனக்குப் பார்க்க பார்க்க தெவிட்டாத அழகு முகம் உன் முகம்...” காதலாய் சொல்ல...

“மதி வெள்ளையா அழகா இருக்கும் அரசு... ஆனால் நான் கறுப்பா அசிங்கமா இருக்கேனே... இதைக் கூட உன்னால் ஒழுங்கா சொல்ல முடியல” அவனின் பேச்சை விளையாட்டாய் எண்ணி அவள் பேச...

‘அல்லி நீ எப்போது தான் என் மனதை உணர போற?’ எண்ணியவன் மனதுக்குள் பெருமூச்சு விட்டான்.

“சரி அதை விடு... ஏன் அரசு... உன்னைத் தொடாதேன்னு சொன்ன...? நான் எவ்வளவு பீல் பண்ணினேன் தெரியுமா?” தன்னைத் தொடக் கூடாது என்று அவன் கூறியதால் எழுந்த மனத்தாங்கலுடன் அவள் சொல்ல...

“அப்படிச் சொன்னதினால் தானே... உனக்கு எல்லாமே புரிஞ்சது...? இல்லைன்னா இந்த ஜென்மத்தில் உனக்குப் புரிந்திருக்குமோ என்னமோ?”

“அப்படின்னா வேணும்ன்னே தான் அப்படிப் பேசினியா? உன்னை...” அவள் சராமரியாக அவன் நெஞ்சில் அடிக்க...

அவளின் அடிகளைச் சுகமாய்த் தாங்கி கொண்டவன், அவளை லாவகமாய்த் தன் கையணைப்பில் கொண்டு வந்து... அவள் நாடியில் கை வைத்து அவளின் முகத்தை நிமிர்த்தியவன் அவளின் விழியோடு தன் விழியைக் கலந்தபடி,

“கொஞ்ச நேரம் பார்க்காம இருக்க முடியல... ஒரு வார்த்தை சொன்னா தாங்கிக்க முடியல... இதுக்குப் பேர் என்ன அம்முலு?” ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி வினவியவனைத் திகைப்புடன் அவள் பார்க்க,

“நான் சொல்லவா...” அவளின் காதருகே குனிந்தவன்,

“இதுக்குப் பெயர் தான் காதல்...” கிசுகிசுப்பாய் அவன் சொல்ல...

அவனின் குரலில் காதல் வராதவர்களுக்குக் கூடக் காதல் வரும்... ஆனால் அவளுக்கு அந்தக் காதல் கொஞ்சமாவது எட்டி பார்த்ததா என்றால்... ம்ஹூம்...

“இது காதலான்னு எனக்குச் சொல்ல தெரியல அரசு... ஆனா உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு... அது மட்டும் உண்மை” தன் மனதை மறைக்காமல் கூறியவள் அவன் தோள் வளைவில் சுகமாய்ச் சாய்ந்தாள்.

“ஏதோ ஒண்ணு என்னைப் பிடிச்சியிருக்குன்னு சொன்னியே அதுவே எனக்குப் போதும்”

அந்த மட்டும் அவள் மனதில் தான் நிறைந்திருக்கிறோமே என்ற மனநிறைவுடன் அவளின் உச்சந்தலையில் தன் கன்னத்தை வைத்து அழுத்தமாய் அவளை அணைத்துக் கொண்டான்.

“இல்லையா பின்னே... யாருக்காவது வலிய இப்படியொரு அடிமை வந்து சிக்குமா? அதான் உன்னைக் கெட்டியாய்ப் பிடிச்சிட்டேன். எனக்கொரு அடிமை சிக்கிட்டான்... ஹா... ஹா...” என்று கூறியவள் வாய் விட்டு சிரிக்க...

சிரிக்கும் அவளின் உதட்டை கண்களில் மயக்கத்துடன் அவன் பார்க்க... அவனின் பார்வையின் அர்த்தம் புரியாமல் சிரிப்பை கைவிட்டவள் அவனைக் கேள்வியாய் பார்க்க...

“ம்ஹூம்... நான் உனக்கு அடிமையா? அதுவும் சரி தான்... புருசன்னாலே அடிமைன்னு தானே அர்த்தம்...” என்றவன் அவளின் நெற்றியில் முற்றியபடி,

“இப்படியே பேசிட்டு இருக்கலாம்ன்னு எண்ணமா? எனக்குக் கசகசன்னு இருக்கு... குளிக்கப் போகவா?”

“ம்... சாரி...” என்றவள் அவனை விட்டு விலக... அப்போது தான் கவனித்தாள் அவனின் கையிலிருக்கும் காயத்தை...

“அய்யோ வந்துமே கேட்கணும்ன்னு நினைச்சேன்... இது எப்படி வந்தது?” அவனின் காயத்தைத் தொட்டு பார்த்து பதறியவளின் பதட்டமே அவளின் மனதை அவனுக்கு உணர்த்துவதாய்!!!

“ஒண்ணுமில்லை அம்முலு... மெசின்ல உள்ள ஆணி கையில் இழுத்திருச்சு... அதான்... பயப்படும்படியா ஒண்ணுமில்லை...” அவனின் வார்த்தையில் அவள் ஆறுதல் அடைந்தாலும் அவள் கலக்கத்துடன் அந்தக் காயத்தைப் பார்த்து கொண்டிருந்தாள்.

“அம்முலு... ஒரு நாளில் மாமாவுக்கு இத்தனை அதிர்ச்சி கொடுக்காதே... என் சின்ன இதயம் தாங்காதும்மா”

“என்ன அதிர்ச்சி?” அவள் புரியாமல் அவனைப் பார்க்க...

“இப்படி ஓவரா பாசத்தைப் பொழிஞ்சா நீ என் பொண்டாட்டி அம்முலுவான்னு எனக்குச் சந்தேகமாயிருக்கு...”

“அரசு உனக்கு ரொம்பத் தான் லொள்ளு... போடா...” அவள் அவனிடம் முறுக்கி கொள்ள...

“ம்... இப்போ கன்பார்ம்... நீ என் மனைவி அல்லி தான்...” அவள் தாடை பற்றிக் கொஞ்சியவன் குளியலறைக்குப் புகுந்து கொள்ள...

“வெளியில் வாடா... உன்னை வச்சுக்கிறேன்...” அவள் கத்த...

“அதுக்குத் தானே இத்தனை நாளாய்க் காத்திருந்தேன் கண்மணியே...” குளியலறை கதவை திறந்து தலையை நீட்டி சொல்லியவன், அவளின் கண்கள் சுற்றும் முற்றும் எதையோ தேடுவதை உணர்ந்து,

“நோ வெப்பன்ஸ்... மீ பாவம்...” என்று போலியாய் அலறியவாறு கதவை சாத்தி கொண்டான். அவனின் செயலில் அவளுக்குச் சிரிப்பு வர மனநிறைவுடன் படுக்கையில் சாய்ந்தாள்.

குளித்து முடித்து வந்தவன் அல்லியின் அருகில் வந்து படுத்து, “உன்னைக் கட்டிப் பிடிச்சுக்கவா?” அனுமதி கேட்டவனை முறைத்து பார்த்தவள்,

“என்னமோ இதுக்கு முன்னால எல்லாம் பெர்மிசன் கேட்ட மாதிரி ஓவரா சீன் போடாத அரசு...” என்றவள் அவன் பக்கமாய்த் திரும்பி படுக்க,

“அது வேற... இது வேற...” என்று சொல்லியவாறு அவள் அருகில் நெருங்கி படுத்தவன்... சட்டென்று அவள் நெஞ்சில் முகம் புதைத்து அவளை அணைக்க... அதில் அவள் பதறியவளாய்,

“அரசு என்னதிது?” அவள் அவன் தலை முடியை கொத்தாய் பற்றி அவனின் தலையை அகற்ற முயல... அவனோ பிடிவாதமாய் முகம் புதைத்து படுத்தவன்,

“ப்ளீஸ் அம்முலு... வேற எதுக்கும் உன்னை வற்புறுத்த மாட்டேன்... ஜஸ்ட் இப்படியே தூங்க தான் போறேன்...” என்றவனிடம் அதற்கு மேல் அவள் மல்லு கட்டவில்லை. அடுத்து சில நிமிடங்களில் அவன் நிம்மதியாய் தூங்கிவிட... அவள் தான் தூங்காமல் முழித்திருந்தாள்.

அவனின் அருகாமை, கணவன் என்ற புதிதாய் மனதில் முளைத்த உறவு பந்தம் எல்லாமுமாய்ச் சேர்த்து அவளுள் புதுமையான உணர்வலைகளைக் கிளப்பிவிட... அந்த உணர்வே மனதுக்குச் சுகமாய் இருக்க... கிழக்கு வானம் வெளுத்தது கூடத் தெரியாமல் அவளின் கைகள் அவளையும் அறியாமல் அவனின் தலையை வருடி கொடுத்துக் கொண்டிருந்தது.

இத்தனைக்கும் அவள் அவனைக் காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை. அவனும் அவளைக் காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை. காதலை மனதால் உணர்ந்து கொண்ட இவர்களுக்கிடையில் மொழிக்கு வேலையில்லையோ!!! ஒருவேளை தனக்கு வேலை வரும் நாளுக்காக அது மௌனமாய்த் தவமிருக்கிறதோ!!!

“அம்முலு... அம்முலு...” அரசுவின் குரல் கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் ஒலிக்க...

“ம்... ம்...” அவள் மெதுவே கண் விழித்தாள். தலை எல்லாம் பாரமாக, இமைகளைத் திறக்கவே சிரமமாய் இருந்தது அவளுக்கு.

“அம்முலு என்னடா பண்ணுது?” கவலையுடன் கேட்டவனின் கைகள் அவளின் நெற்றியிலும், கழுத்திலும் தொட்டு பார்க்க... அவளோ அதைப் பற்றிக் கொண்டு மீண்டும் உறங்க முற்பட்டாள்.

“என்ன இப்படிக் காய்ச்சல் கொதிக்குது?” அவனின் பதற்ற குரலில் மீண்டும் சிரமப்பட்டுக் கண் விழித்தவள்,

“அதெல்லாம் ஒண்ணுமில்லை அரசு...” தூங்காமல் இருந்ததால் இப்படி உடல் சூடு அதிகரித்து இருக்கும்

என்றெண்ணியவள் அவனைச் சமாதானப்படுத்த அவனோ அவள் பேச்சை கேட்கவில்லை.

“நீ பேசாமல் இரு...” என்று அவளை அதட்டியவன், பின் நிதானித்து,

“காயூவை கூப்பிடவா? உனக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லை...”

இனிமேல் கொண்டு தான் செய்யும் யாதொரு காரியமும் இருவரிடையிலும் சிறிதொரு மனஸ்தாபத்தையும் உண்டாக்கி விடக் கூடாது என்பதில் அவன் தீவிரமாய் இருந்தான்.

“ம்...” என்றவள் சம்மதமாய்த் தலையசைக்க... அவன் உடனடியாய் காயத்ரியை அழைத்தான்.

காயத்ரி வந்து அல்லியை பரிசோதிக்க... அரசு பதட்டமாய் அவளின் முகத்தைப் பார்த்திருந்தான். “காயூ அவளுக்கு ஒண்ணுமில்லைல...” அவனின் பதட்டம் கண்டு காயத்ரிக்குச் சிரிப்புத் தொற்றிக் கொண்டது.

“சாதாரண வைரல் பீவர் தான் ரெண்டு மூணு நாளில் சரியாகிடும்...” என்றவள் அதற்கான மருந்தை எழுதி கொடுக்க... அதை அவன் பத்திரமாய் வாங்கிக் கொண்டான்.

“அல்லி... அரசு மாதிரி கணவன் கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கணும்...” அதைக் கேட்டு அல்லியின் தலை ஆமோதிப்பாய் அசைய...

“அப்புறம் நேத்து கொடுத்த டேப்லெட் எல்லாம் போடுற தானே...” அதற்கும் அவள் ஆமென்று தலையசைத்தாள். அவளால் பேச கூட முடியவில்லை. அந்தளவுக்கு அவள் உடல் பலகீனமாய் இருந்தது.

“நேத்து எதுக்கு உன்னைப் பார்க்க வந்தா...?” அரசுவின் கேள்வியில் அல்லிக்கு புரிந்து போனது... அவனிடம்

விசயத்தைச் சொன்னது காயத்ரி இல்லை என்று. பின் வேறு யாராக இருக்கும்? என்று அவள் யோசித்தாள்.

“அதை அவளிடமே கேளுங்க அரசு...” அவனிடம் தான் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் காயத்ரி அல்லியை கையைக் காட்டி விட்டு எழுந்து கொண்டாள்.

“அப்புறம் அரசு... தேனுக்கா... நேத்து அவங்க மாமியாருக்கு செக்கப்புக்கு வர சொன்னாங்க... இன்னைக்கு என்னால முடியாது... நாளைக்கு வர்றேன் சொல்லிடுங்க...” அவனிடம் பேசியவாறு அவள் நடக்க...

அதைக் கேட்ட அல்லிக்கு எல்லாம் புரிந்து போனது. அரசுவிடம் தன்னைப் பற்றிக் கோள் மூட்டி விட்டது தேன்மொழி தான் என்று...

“தேன்மொழி...” ஆத்திரத்துடன் அவள் பல்லை கடித்தாள். அதற்குள் அரசு காயத்ரியை வழியனுப்பி விட்டுவிட்டு உள்ளே வர அவள் தேன்மொழியை மறந்தாள்.

அரசுவை காணாமல் தவித்த தவிப்பால் வந்த அயர்ச்சியாலோ இல்லை இரவு முழுவதும் தூங்காமல் மனதை போட்டு உழட்டி கொண்டதாலோ என்னமோ அவளுக்கு வந்த காய்ச்சல் மூன்று நாட்களுக்கு மேல் நீட்டித்தது. அதோடு மாதாந்திர பிரச்சினையும் சேர்ந்து கொள்ள... அல்லி வாடிய கொடியானாள்.

அவளை விட அவன் தான் மிகவும் கவலை கொண்டான். அவளின் உடல்நிலை கொஞ்சமும் முன்னேற்றம் இல்லாமலிருப்பதைக் கண்டவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அவ்வப்போது காயத்ரியை அழைத்து அவளை எப்படிப் பார்த்துக் கொள்வது என்று தன் சந்தேகத்தைக் கேட்டு தெளிந்து கொண்டான். அவளை ஒரு சேயாய் எண்ணி தாயாய் மடி தாங்கினான் என்றால் மிகையில்லை.

“அரசு... அரசு...” நடு இரவில் ஒலித்த அல்லியின் பலகீனமான குரலில் சட்டென்று விழித்த அரசு...

“என்னம்மா என்ன செய்யுது?” பதட்டத்துடன் கேட்டுக் கொண்டே எழுந்தமர,

“ஆயாம்மாவை கூட்டிட்டு வாயேன்...” அழுகையோடு அவள் குரல் ஒலிக்க...

“இந்த நேரத்தில் எப்படி ஆயாம்மாவை எழுப்புவது? என்னன்னு சொல்லுடா... நான் பார்க்கிறேன்...” அவன் ஆறுதலாய் அவள் கைப்பிடித்துக் கேட்க... அவளோ உடைந்து போய் அழ ஆரம்பித்தாள்.

“என்னடா...?” அவளின் அழுகை கண்டு அவனுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது.

“ப்ளீஸ் சொல்லுடா... என்னால முடிஞ்ச ஹெல்ப் பண்றேன்...” அவளைத் தன்னோடு அணைத்துக் கொள்ள அவன் முயல...

அவளோ இருந்த இடத்தை விட்டு அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். அவளின் செய்கை அவனுக்கு வித்தியாசமாய்ப் பட,

“வயிறு வலிக்குதா?” அவன் கேட்டதற்கு இல்லை என்றவள்,

“அதிகமா... அதிகமா...” அவனிடம் எப்படிச் சொல்வது? என்று அவள் தடுமாற...

“சொல்லும்மா...” அவனின் முகத்தில் தெரிந்த கவலையில்,

“ப்ளீடிங் அதிகமாய் இருக்கு... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு அரசு...”

என்ன தான் கணவன் என்றாலும் அவனின் முகம் பார்த்து அவளால் சொல்ல முடியவில்லை. அவள் சொன்னது அவனுக்கு முதலில் ஒன்றுமே புரியாத போதும்... பின் கொஞ்சம் கொஞ்சமாய் அவனின் மூளையில் ஏறியது.

“ஹாஸ்பிட்டல் போவோமா?” அவனின் பதட்டம் இன்னமும் கூடியது.

“ம்...” என்றவளால் எழ கூட முடியாத நிலை...

அந்தளவுக்குக் காய்ச்சலாய் உடல் பலகீனப்பட்டு இருந்தது. எப்படி எழுந்து உடை மாற்றி மருத்துவமனை செல்வது என்று யோசித்தவளுக்கு ஆயாசமாய் இருந்தது. ஆனால் அந்த மாதிரியான எந்த எண்ணமும் அவனுக்கில்லை போலும். முடிவு எடுத்தவுடன் உடனே உடை மாற்றியவன் அவளைக் கைத்தாங்கலாய் தூக்குவதற்காக அவள் அருகில் வர,

“வேண்டாம்... கிட்டே வராதே அரசு...” சொல்லும் போதே அவள் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நின்றது.

“எதுக்கு?” அதட்டலாய் சொன்னவன் அவளைத் தூக்கிய பின்பே அவள் எதற்காகச் சொன்னாள் என்பதை உணர்ந்தான்.

அவளை அப்படியே கட்டிலில் அமர வைத்தவன் அவளிடம் கேட்டு கேட்டு அவளுக்குத் தேவையானவற்றை எடுத்து கொடுத்து உதவி செய்ய...

“அரசு கொஞ்சம் வெளியில் போறியா?”

ஒரு கணம் அவளை ஏறிட்டு பார்த்தவன், ஒன்றும் பேசாமல் வெளியில் போய்விட்டு... அடுத்தப் பத்து நிமிடங்களில் உள்ளே நுழைய... அங்கே அவள் உடையை மாற்றிக் கொண்டு தயாராய் இருந்தாள்.

“போலாமா...” என்றவனைப் பார்த்து தலையசைத்தவள் மெல்ல நடக்க முயல... அதைக் கண்டு அவன் தன் கைகளில் சிறு குழந்தையாய் அவளை ஏந்தி கொள்ள...

“அரசு வேணாம்... கீழே இறக்கி விடு...” அவள் சங்கடமாய் நெளிய...

“ஒண்ணும் பேசாதே... உன் உடல் இருக்கும் லட்சணத்தில் நீ நடந்தேன்னா மயங்கி கீழே விழுந்திடுவே...” என்றவன் அவளை அடக்க... அதற்கு மேல் அவள் ஏதும் பேசவில்லை.

தன்னைத் தூக்கி கொண்டு செல்லும் அவனின் முகத்தைப் பார்த்தவளுக்கு அவனின் முகத்தின் அவலட்சணம் கண்ணுக்கு தெரியவில்லை. மாறாக அவனின் அக அழகு அதிகமாய் அதில் ஒளிர... மனதில் எழுந்த காதலுடன் அவனின் கழுத்தில் தன் கைகளை மாலையாகக் கோர்த்துக் கொண்டு, அவன் நெஞ்சில் முகம் புதைத்து கதகதப்பாய் ஒன்றி கொண்டாள்.

மருத்துவமனையில் அவளைச் சேர்த்துவிட்டு அரசு காயத்ரிக்கு அழைக்க... அவள் வந்து அல்லியை பார்த்து, பயப்படத் தேவையில்லை என்று கூறிய பின்னரே அரசு அமைதியானான். இருநாட்கள் மருத்துமனையில் இருந்துவிட்டு வீட்டிற்கு வந்த அல்லியை அவனே கவனமாய்ப் பார்த்துக் கொண்டான். அவனின் இந்தச் சேவையில் அல்லியின் மனம் முழுதாய் அவன் பால் வீழ்ந்தது என்றே சொல்லலாம்.

ஏனெனில் அவளின் அன்னை கூட அவளை வேலைக்காரர்களை வைத்து தான் வளர்த்தார்... பார்த்துக் கொண்டார். ஆனால் அரசுவோ அவனின் வசதிக்கு ஒரு வேலையாள் இல்லை ஒன்பது வேலையாள் வைத்து அவளைப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் அதையெல்லாம் அவன் செய்யாமல் அவளின் வேலைகளை அவனே பார்த்துக் கொண்டான். காலையில் கொஞ்ச நேரம் அலுவலகம் செல்பவன் மீதி நேரம் முழுவதும் அவளுடனே செலவழித்தான்.

அதிலும் அவளின் அந்தரங்கமான பிரச்சினைக்குக் கூட அவன் முகம் சுளிக்காமல், அருவருப்பு அடையாமல் உதவிய போது... “அரசு...” என்று அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டு கதறிவிட்டாள்...

“ஹேய் எதுக்கு அழுற அம்முலு...?” அவளை அணைத்து அவளின் தலை கோதி அவன் ஆறுதல் அளித்த போதும் அவளின் அழுகை நிற்கவில்லை.

“உன் மேல எவ்வளவு வெறுப்புக் காண்பிச்சேன்... ஆனாலும் உன்னால எப்படி அரசு இப்படி நடந்து கொள்ள

முடியுது? என் மேல் உனக்குக் கோபம் வரலையா? என் மேல அப்படி என்ன அன்பு அரசு?" அழுது கொண்டே அவனை இறுக்கமாய் அணைத்து கொண்டவளின் கண்ணீர் முழுவதும் அவனின் நெஞ்சில்...

"கணவன், மனைவி உறவுன்னா நீ என்ன நினைச்ச அம்முலு... கட்டிலில் புரள்வது மட்டும் தான் கணவன், மனைவி உறவா? அதையும் தாண்டி நிறைய இருக்கு... எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா மனைவிங்கிற ஸ்தானத்தில் நீ எனக்குப் பணிவிடை செய்ய மாட்டியா? அது போலத் தான் நான் உனக்குச் செஞ்சது... இதுக்கு ஏன் நீ இவ்வளவு யோசிக்கிற?" அவனின் வாய் பேசினாலும் அவனின் கைகள் அவளின் முதுகை நீவி ஆறுதல் படுத்தியது.

"ஆனாலும் நீ செஞ்ச மாதிரி எந்தக் கணவனும் செய்ய மாட்டான்... நீ ரொம்ப வித்தியாசமானவன்..." என்றவளின் முகத்தை நிமிர்த்தி அவளைப் பார்த்தவன்,

"இந்தக் கணவன்... அதாவது உன் கணவன் செய்வான்... ஏன்னா அந்தளவுக்கு என் மனைவி அல்லியை எனக்கு ரொம்பப் பிடிக்கும்..." சொல்லி கொண்டே அவன் அவள் நெற்றியில் முத்தமிட...

"அரசு..." பிரமிப்பாய் அவனைப் பார்த்தவள்... அடுத்தக் கணம் முத்த மழையால் அவனின் முகத்தை நனைத்தாள். அவனும் அதில் கிறங்கி, மயங்கி நின்றவன் சுகமாய் நனைந்தான்.

அந்தக் கிறக்கத்திலும், மயக்கத்திலும் கூட அவன் தன் காதலை அவளிடத்தில் வெளிப்படுத்த வில்லை. அந்த மட்டும் அவள் தான் தன் காதலை முதலில் சொல்ல வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான்.

'கணவனாய் அவளின் மனதில் இடம் பிடித்த நான்... கூடிய விரைவில் அவளின் மனதில் காதலனாய் இடம் பிடிப்பேன்' என்ற நம்பிக்கை அவன் மனதில் ஆல மர வேராய் ஆழ வேரோடியிருந்தது.

அவனின் இந்த நம்பிக்கையை அவள்
காப்பாற்றுவாளா...???

“அரசு... நான் நல்லா ஆகிட்டேன்... என் உடம்புக்கு ஒண்ணுமில்லை... இதெல்லாம் நான் செய்ய மாட்டேனா?”

அல்லிக்கு உடல்நலம் சரியாகி ஐந்து நாட்களுக்கு மேலாகிவிட்டது. இன்னமும் அவளை ஒரு வேலை செய்ய விடாமல் தானே அவளின் அனைத்து வேலைகளையும் செய்த அரசுவை கண்டு தான் அவள் அவ்வாறு சலித்துக் கொண்டாள்.

பின்னே அவள் சொல்ல சொல்ல கேட்காமல் அவன் அவளின் குட்டை கூந்தலை அழகாய் வாரி ஒரு ரப்பர் பேண்டிற்குள் மொத்தமாய் அடக்கினான். தூக்கி போடப்பட்டிருந்த அந்தக் குதிரைவால் கொண்டை அவளுக்கு மிகவும் பொருத்தமாய் இருந்தது. பின்பு அவளின் முகத்தை வெதுவெதுப்பான நீரில் நனைத்த துண்டால் துடைத்து விட்டு... பவுடர் போட்டு, ஒட்டும் பொட்டை எடுத்து அவள் நெற்றியில் ஒட்டி விட்டவனைப் பார்த்து அவள்,

“நான் என்ன சின்னக் குழந்தையா அரசு...” செல்லமாய்ச் சிணுங்கினாள்.

“அட... பேபிம்மா எப்போ பெரிய பெண்ணானீங்க... சொல்லவே இல்லை” அவளைக் கேலி பேசியவன்... அவளின் தாடையில் கை வைத்து இங்கும் அங்கும் திருப்பிப் பார்த்துவிட்டு,

“இப்போ ஓகே...” என்று அவள் கன்னத்தைச் செல்லமாய்க் கிள்ளி அழகு கொஞ்சியவன், கண்ணாடியை எடுத்து அவள் கையில் தர, அதில் தன் முகம் பார்த்தவள் அவன் வெகு நேர்த்தியாய் தனக்கு அலங்காரம் பண்ணியிருப்பதைக் கண்டு அதிசயித்தாள்.

“சூப்பர் அரசு... எப்படி அரசு இப்படி?” வியந்து போனவளாய் அவள் சொல்ல...

“ம்... அய்யாவோட மகிமை அப்படி...” அவன் தன் சட்டை காலரை தூக்கிவிட்டுக் கொண்டான்.

“ம்ஹூம்... ரொம்பத் தான் பெருமைப்பட்டுக்காதே அரசு... உண்மையைச் சொல்லு... யாருக்கேனும் இந்த மாதிரி செஞ்சிவிட்ட எக்ஸ்பீரியன்ஸ் இருக்கா?” தலையைச் சாய்த்துக் கொண்டு அவள் ஒரு மாதிரி குரலில் கேட்க...

அவன் தன் இருகைகளையும் தலைக்கு மேல் தூக்கி பெரிய கும்பிடாய் போட்டவன், “அம்மா தாயே... இந்த விளையாட்டுக்கு நான் வரவில்லை... ஏதோ உடம்பு சரியில்லாத பொண்ணாச்சேன்னு ஹெல்ப் பண்ணினா... ஹும்... இதுக்குத் தான் சொல்றது நல்லதுக்குக் காலமில்லைன்னு”

அவன் போலியாய் அலுத்துக் கொள்ள... அவன் சொன்னதை உண்மை என்றெண்ணி, அவள் பதறி போய் அவனின் கையைப் பிடித்து,

“அச்சச்சோ... அப்படியெல்லாம் இல்லை அரசு... நான் சும்மா தான் சொன்னேன்... நீ தப்பா நினைச்சுக்கிட்டியா? சாரி...” அவள் மன்னிப்பு வேண்ட...

எப்போதுமே அவனை வருந்த வைக்க வேண்டும் என்று வேண்டுமென்றே வம்பு பேசும் அல்லி... இன்று அவளின் சாதாரணப் பேச்சுக்கு கூட மன்னிப்பு கேட்டது அவன் மீதான அவளின் அன்பை அவனுக்கு எடுத்து காட்ட... அதில் அவனின் மனம் நெகிழ்ந்தது.

“நானும் விளையாட்டுக்கு தான் சொன்னேன் அம்முலு... தப்பா எல்லாம் நினைக்கல...” அவன் அவளைச் சமாதானப்படுத்தும் போதே அங்கு லக்ஷ்மியம்மா வந்தார். அவரைக் கண்டதும் கட்டிலில் இருந்து எழுந்த அல்லி அவர் புறம் சென்று,

“ஆயாம்மா... மூட்டுவலியை வைச்சிட்டு எதுக்கு மாடியேறி வந்தீங்க...” சொல்லிக் கொண்டே அவரைக் கைத்தாங்கலாய் கட்டிலில் அமர்த்த...

அரசு மனம் நிறைய மகிழ்ச்சியுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். தன்னைப் போலவே தன்னவளும் தன் அம்மாயியின் நலம் பேணுகிறாள் என்று அவன் மனதில் நிம்மதி கொண்டான்.

“உன்னைப் பார்க்க வருவதை விட... எனக்கு மூட்டுவலி பெரிசில்லை பேபிம்மா...” பெரியவள் சொன்னது கேட்டு, சின்னவள் அவரின் தோளில் சலுகையாய் சாய்ந்து கொண்டாள்.

அவளுக்கு உடம்பு சரியில்லாத நாளில் இருந்து பெரியவள் தன் மூட்டுவலியை கூடப் பொருட்படுத்தாமல் தினமும் காலையிலும், மாலையிலும் இருவேளை அவளைப் பார்க்க மாடியேறி வந்துவிடுவார். அரசுவும், அல்லியும் சொன்னால் கூட அவர் கேட்பதில்லை.

அவருக்கு இருந்த அக்கறையில் நூறில் ஒரு பங்கு கூடத் தேன்மொழிக்கு தன் தம்பியின் மனைவி மீது இருக்கவில்லை. அல்லிக்கு உடல்நலம் சரியில்லை என்று தெரிந்தும் அவள் ஒருநாள் கூட வந்து அல்லியை எட்டி பார்க்கவில்லை. அதில் அரசுக்கு தன் அக்காளின் மீது கொஞ்சம் மனவருத்தம் தான். ஆனால் அதை அவன் அக்காவிடம் வெளிக்காட்டி கொள்ளவில்லை.

“அரசு... மூட்டுவலி தைலம் தீர்ந்து போச்சு... சென்னைக்குப் போகும் போது வாங்கிட்டு வாப்பா...” பெரியவள் பேரனிடம் கூற...

“எனக்கு ஞாபகம் இருக்கு அம்மாயி... நம்ம மேனேஜர் சென்னைக்குப் போயிருக்காரு... அவர் கிட்ட சொல்லி அனுப்பியிருக்கேன்.. உங்க தைலம் நாளைக்கு வந்துரும்...” என்றவனை விசித்திரமாகப் பார்த்த அம்மாயி,

“அரசு... முதல்ல எல்லாம் அடிக்கடி சென்னைக்குப் போவ... இப்ப கொஞ்ச நாளா போறதில்லையே... ஏன்?”

ஏனெனில் அப்போதெல்லாம் அவன் அல்லியை பார்க்க தான் அடிக்கடி சென்னை செல்வான். இப்போது

திருமணத்துக்குப் பின் அவன் சென்னை போவதே இல்லை. அதைத் தான் அம்மாயி சுட்டி காட்டினார். தன்னை இனம் கண்டு கொண்டாரே என்று அவன் பிடிபட்டுக் கொண்ட தினுசில் திருதிருவென முழித்தான். அவனின் முகம் மாறியதை அல்லி கவனித்து விட்டாள்.

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை அம்மாயி... இப்போ அங்கே வேலையில்லை...” அவன் சமாளித்த விதத்தில் அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

“ஓ... அப்படியா...” என்ற பெரியவள் இருவரிடம் விடைப்பெற்று அறையை விட்டு வெளியேற... அவ்வளவு நேரம் அவன் அடக்கி வைத்திருந்த மூச்சை இழுத்து வெளியிட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

இப்போது அவனின் கவனம் அல்லியிடம் திரும்ப... அவளோ எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.
“அம்முலு... என்ன யோசனை?” அவளின் தலையில் கைவைத்து செல்லமாய் ஆட்டியவன் வினவியபடி அவளருகில் அமர்ந்தான்.

“அரசு...” அவன் முகத்தை ஏறிட்டு அவள் பார்க்க,

“அரசுக்கு என்ன வச்சிருக்க...?” கேலியாய் அவன் கேட்க,

“நீ அந்தப் பெண்ணைப் பார்க்க தான் சென்னைக்குப் போனியா?” அவளின் கேள்வியில் அவன் திடுக்கிட்டான்.

“எந்தப் பெண்ணை...?” ஒருவேளை தான் அவளைப் பார்க்க போன விசயத்தை ஊகித்து விட்டாளோ என்று குழம்பி தான் போனான்.

“அதான் நீ காதலிக்கும் பெண்ணை... அன்னைக்குக் கூடக் காயத்ரி கிட்ட சொல்லிட்டு இருந்தியே... ஒரு பெண்ணைக் காதலிப்பதாய்...” அதைக் கேட்டு அவன் குழப்பம் நீங்கியவனாய் வாய் விட்டுச் சிரித்தான்.

“ஆமாம்... நான் காதலிக்கும் பெண்ணைப் பார்க்க தான் போனேன்...”

அவன் அவளைத் தானே காதலித்தான். அவளைத் தான் பார்க்க போனான். அதனால் தங்கு தடையின்றி அவனின் வார்த்தைகள் வெளிவந்தது. அதைக் கேட்டு அவள் மனம் கூம்பி போனது.

“அப்போ நீ காதலிச்சது உண்மை தானா அரசு...?”

“ம்... சத்தியமான உண்மை...” அவளின் கைப்பற்றி அவன் சத்தியம் வைக்க... அதில் அவள் மனம் மிகவும் அடிப்பட்டுப் போனது.

“அவளைக் கல்யாணம் பண்ணிக்க நினைச்சியா அரசு?”

கண்களில் பரிதவிப்புடன் கேட்டவளின் நெற்றில் முத்தமிட்டு, “ஆம்...” என்று அவன் சொல்ல...

அவனின் பதில் கூட அவளைக் கோபப்படுத்த வில்லை. ஆனால் அவனின் செயல் அவளைப் பெரும் கோபத்திற்குள்ளாகியது. அவனின் சட்டையைக் கொத்தாகப் பற்றியவள்,

“ஆம்பிளங்கிற திமிராடா உனக்கு... கட்டிய மனைவி கிட்டேயே எனக்குக் காதலி இருக்கிறான்னு சத்தியமா பண்ணுற... அவளைத் தான் கல்யாணம் பண்ணிக்க இருந்ததா சொல்ற... அப்படியெல்லாம் சொல்லிட்டு என்னையும் முத்தமிடுற... உன்னை எல்லாம்...”

சுற்றும் முற்றும் பார்த்தவள் கண்ணில் ஒன்றும் சிக்காததால் தன் கையே தனக்கு உதவி என்று களத்தில் இறங்கிவிட்டாள். தன் கை கொண்டு அவனைச் சராமாரியாக அவள் அடிக்க... அவனோ அவளின் கையைத் தடுத்தபடி,

“நீ கேட்டதுக்குத் தானே பதில் சொன்னேன்... அதுக்குப் போய் இப்படி அடிக்கிறியே... உன் கிட்ட எல்லாம் உண்மையைச் சொல்லியிருக்கக் கூடாது... பொய் தான் சொல்லிருக்கணும்...” அவனது சலிப்பில் அவளின் கோபம் எல்லையைக் கடந்தது.

“சொன்னதே தப்புங்கிறேன்... இதில் பொய் வேறா...?” கோபமாய்க் கத்தினாள்.

“அச்சச்சோ பேபிம்மாவுக்குக் கோபம் வந்து விட்டதே...” போலியாய் வருத்தப்பட்டவனை மீண்டும் அடிக்க அவள் கையை ஓங்க... அவன் அதை லாவகமாய் அடக்கியபடி,

“நான் தான் அவளைக் காதலிச்சேன்... அவள் என்னைக் காதலிக்கலையே...” முகத்தில் கவலை தேக்கி சொன்னவனைக் கண்டு அவளுள் குதூகலம் எழுந்தாலும்... அவனின் கவலை அவளையும் பாதிக்கத் தான் செய்தது.

“ஏன் அரசு...?”

“தெரியல...” அசட்டையாய் தோளை குலுக்கியவன்,

“ஒருவேளை நான் அழகா இல்லாமல் இருப்பதால் கூட இருக்கலாம்...”

அவளின் கண்களை ஊடுருவி பார்த்துக் கொண்டு சொன்னவனின் மனம் அவளின் பதிலுக்காய் வேகமாய்த் துடித்தது. ஏனெனில் அவன் காதலிப்பது அவள் தானே...!

“உன்னைப் போய் ஒருத்தி வேணாம்ன்னு சொன்னாளா? அவளுக்கு நிச்சயம் கண்ணில்லைன்னு தான் சொல்வேன். வெளியழகு தான் அழகா அரசு...? இல்லையே... எப்பவும் மனசு தான் அழகாயிருக்கணும்... உன்னோட மனசு ரொம்ப அழகு அரசு... அந்தப் பொண்ணுக்கு நீ கிடைக்கக் கொடுத்து வைக்கல...” என்று சொன்னவள்,

“நீ எனக்குக் கிடைக்கணும்ன்னு இருக்கு... நான் ரொம்பக் கொடுத்து வச்சவள்...” என்றபடி அவள் அவனின் தோளில் சாய்ந்து கொள்ள...

அவளின் பதிலில் அவனின் கைகள் அவளை இறுக அணைத்துக் கொண்டது. அவளின் பதிலில் அவன் மனம் அடைந்த ஆறுதலை சொல்ல வார்த்தைகள் இல்லை.

அவன் வாழ்நாள் முழுமைக்கும் இந்த வார்த்தைகள் போதும். அவளின் இந்த அன்பு போதும்...

“அப்புறம் என்ன ஆனா அந்தப் பொண்ணு...?” அவள் மெதுவே கேட்க... அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தவன்,

“அப்புறம் என்ன... அவளுக்குக் கல்யாணம் ஆகிருச்சு...” அவள் கழுத்தில் தான் கட்டிய தாலியை தூக்கி ஆட்டியபடி அவன் சொல்ல...

“ஓ... உனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்திருக்கும் இல்ல?”

“ம்ஹூம்... அது இறந்த காலம்... இப்போ நீயும், நானும் தான் நிகழ்காலம்... நான் உன் கணவன், நீ என் மனைவி இது தான் நிஜம்... நம் வாழ்க்கையை நாம் சந்தோசமா வாழுவோம்... நீ இப்படித் தேவையில்லாமல் யோசிக்கிறதை விடு...” என்றவன் நியாபகம் வந்தவனாய்,

“ஆமாம்... சென்னை என்ற உடன் தான் நினைவுக்கு வருது... உன்னோட மார்க் லிஸ்ட் வந்திருக்கும் இல்ல... வாங்க போகலையா?”

“ம்... போகணும்...”

“கொஞ்சம் உடம்பு தேறியதும் போகலாம்...” என்றவன்,

“மேற்கொண்டு என்ன பண்ண போற... படிக்கப் போறியா? இல்லை... என் கூடக் கம்பெனிக்கு வர்றியா?”

“பிறகு யோசிக்கலாம் அரசு... எனக்கு இன்னமும் உடம்பு சரியாகல...” உதட்டை பிதுக்கி கொண்டு பொய்யாய் காரணம் சொன்னவளின் தலையில் வலிக்காமல் செல்லமாய்க் குட்டியவன்,

“மேல படிக்கிறதுக்குச் சோம்பேறித்தனமா? இல்லை என்னோடு கம்பெனிக்கு வருவதில் பிடித்தம் இல்லையா?”

“ரெண்டும் இல்லை அரசு... இப்போ கொஞ்ச மாசமா தான் புக் இல்லாமல் லைப்பை ஃப்ரீயா என்ஜாய் பண்ணிக்கிட்டு

இருக்கேன்... இன்னும் கொஞ்ச நாள் என்ஜாய் பண்ணிட்டு நானே வர்றேன்... அதுவரை என்னைத் தொந்திரவு செய்யாதே... அப்புறம் நீயே என் கழுத்தை பிடிச்சுத் தள்ளினால் கூடக் கம்பெனிக்கு வருவதை நிறுத்த மாட்டேன்...”

“பார்க்கலாம்... பார்க்கலாம்...” என்றபடி எழுந்தவன்,

“சரி கொஞ்ச நேரமாவது கம்பெனிக்கு போயிட்டு வர்றேன்... நீ சமாளிச்சுக்குவே தானே...” அவன் கண்ணில் கொஞ்சம் கவலை எட்டி பார்த்ததோ...?

“நீ திரும்பி வரும் வரை நான் நல்லா தூங்க போறேன்... நீ வந்த பிறகு தான் மதிய சாப்பாடு எல்லாம்...” புன்னகைத்தபடி சொன்னவளின் புன்னகை அவனையும் தொற்றிக் கொள்ள... அங்கிருந்து நகர முயல, அவனின் கையைப் பற்றித் தடுத்தவள்,

“அரசு...” என்றழைத்து அவனின் கழுத்தில் கை வைத்து தன் அருகில் அவனை இழுத்தவள் அவனது கன்னத்தில் தன் இதழை அழுந்த பதித்தாள்.

அவள் இதழ் தந்த முத்திரையில் அவன் உடல் நெகிழ்ந்து அவனின் கைகள் அவளைத் தன்னோடு சேர்த்து அணைக்க... அவனின் இதழ்கள் சூடாய் அவளின் கழுத்தில் முத்திரையைப் பதித்தது. எல்லாம் ஒரு கணம் தான் தன்னைச் சுதாரித்துக் கொண்டு விலகியவன், அவளின் உச்சந்தலையில் இதழை பதித்தபடி,

“பை...” என்க... அவளோ அவனின் கையை விடாமல் பற்றியபடி,

“தேங்க்ஸ் அரசு... நீ மட்டும் என் கணவனா வரலைன்னா நான் என்னவாகி இருப்பேனோ...?” கண்கள் கலங்க கூறியவளை ஒரு முறை அணைத்து ஆறுதல் படுத்தி விலகியவன்,

“எந்த ஜென்மத்திலும் நான் தான் உனக்குக் கணவனாக வருவேன்... அதனால் கவலைபடாமல் இரு... நான்

எப்போதும் உனக்கு உறுதுணையாய் உன் கூடவே இருப்பேன். அதை மனதில் வைத்து கொள்...”

அவள் கன்னம் தட்டி அவன் சொல்ல... அவனின் பேச்சில் நெகிழ்ந்தவள் அவனுக்குத் தலையசைத்து விடையளிக்க... அவனும் மனநிறைவுடன் அறையை விட்டு வெளியேறினான்.

அவன் போவதை பார்த்து கொண்டிருந்தவளுக்கு அவனைக் குறித்துப் பிரமிப்பாய் இருந்தது. தான் என்ன தான் அவனை நெருங்கிய போதும்... அவன் சற்றும் அதைச் சாதகமாக எண்ணி கொண்டு அவளிடம் வரம்பு மீறி நடக்காமல் இருப்பதே... அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது. காமம் இல்லா அவனின் அன்பு கண்டு அவளுக்குப் பேச வார்த்தைகள் இல்லை.

அன்பை மட்டுமே கொண்டாடும் அவனின் அன்பு மனதுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று அவளது உள்ளமும், உடலும் பரபரத்தது. ஆனால் என்ன செய்வது? என்று தான் அவளுக்குத் தெரியவில்லை. அது அவள் கையில் தான் இருக்கிறது என்பது அப்போது அவளுக்குத் தெரியவில்லை. தெரியும் போது அவன் கேட்காமலே அதை அவள் அவனுக்குக் கொடுப்பாளா???

****

மதியம் வீட்டிற்கு வந்த அரசு நேரே அறைக்குத் தான் சென்றான். அங்கே அவளைக் காணாது திகைத்தவன் காதில்... பால்கனி பக்கம் இருந்து வந்த அல்லியின் பாட்டு குரல் விழ... அவளின் இனிமையான குரலில் அவனின் முகத்தில் ஆச்சிரியம் குடியேறியது. மெல்ல அவன் அங்கே சென்று எட்டி பார்க்க...

அங்கே அவள் சாரலாய் தூறிக் கொண்டிருந்த மதிய மழையில் ஏகாந்தமாய் நனைந்து கொண்டிருந்தாள். அவளின் வாய் மெலிதாய் பாடலை முணுமுணுத்துக் கொண்டிருக்க... அவளின் கைகள் சாரலில் விளையாடி கொண்டிருந்தது. அவளது உடை லேசாய் நனைந்திருக்க...

அவள் தன் உடல்நிலையை மறந்து சுகமாய் மழையில் லயித்திருந்தாள்.

முதலில் அவளை ரசனையுடன் வருடிய அவனின் விழிகள் அவளின் அழகில் இமைக்க மறந்து அவளிடமே குடி கொண்டது. அறைக்கும், பால்கனிக்கும் இடையிலிருந்த கதவின் மீது சாய்ந்து இரு கைகளைக் கட்டி கொண்டு அவளின் அழகை அவன் பருகி கொண்டிருக்க... ஏதோ உள்ளுணர்வு உந்த திரும்பி பார்த்தவள்,

“ஹேய் அரசு வந்துட்டியா... வா... வா... மழையில் நனையிறது சூப்பரா இருக்கு...” என்றபடி அவள் அவனை அழைக்க... அதில் அவனின் மாய உலகம் கலைந்து நடப்பு புரிய... அவனின் அறிவுக்கு முதலில் பட்டது அவளின் உடல்நிலை தான்.

“இது தான் நீ தூங்கும் லட்சணமா? என்ன பண்ணிட்டிருக்க அம்முலு... இப்ப தான் காய்ச்சல் விட்டுக் கொஞ்சம் நல்லாகியிருக்க... அதுக்குள்ள மழையில் ஆட்டமா?” கேட்டபடி அவளருகில் வந்தவன்... அவளின் கையைப் பிடித்து இழுக்க... அவளோ அவன் இழுத்த இழுப்பிற்கு வராமல் அவனைத் தன்னோடு சேர்த்து மழையில் நனைய வைத்தாள்.

“ஹா... ஹா... இப்போ நீயே மழையில் நனைஞ்சுட்ட அரசு... இனி நீ என்னை மட்டும் தப்பு சொல்ல முடியாதே...” கட்டை விரலை அவன் கண் முன் ஆட்டி பழிப்பு கட்டியவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே அருகில் வந்தவன்,

“உன்னை எப்படி உள்ளே கூட்டிட்டு போகணும்ன்னு எனக்குத் தெரியும்” அவன் அவளை இரு கை கொண்டு அலேக்காகத் தூக்க...

“அரசு... விடு... நானே வர்றேன்...” அவனின் கரங்களில் அவள் துள்ள...

“ஷ்...” என்று அவளை அடக்கியவன் அறைக்குள் வந்து தான் இறக்கிவிட்டான்.

“சொல் பேச்சு கேட்பதாயில்லை என்ன...?”

அவளை அதட்டியவன் அவள் முகம் பார்க்க... பனியில் நனைந்த ரோஜாவாய் அவள் நின்றிருந்த தோற்றம் அவனை ஏதோ செய்தது. அதிலும் அவளின் இதழ் மீது துளிர்த்திருந்த மழை துளி அவனை வாவென்று அழைப்பது போலிருக்க... அவனையும் அறியாமல் அவள் அருகில் சென்றவன் அவளின் தாடையைத் தன் ஒற்றைக் கையால் பற்றி நிமிர்த்தி அவள் முகம் நோக்கி குனிந்தான்.

அவனின் திடீரென்ற அந்தச் செயலில் அவள் திகைத்து போனவளாய் அவனை இமைக்காது பார்க்க... அவன் கண்ணில் தெரிந்த ஏதோவொரு உணர்வில் கட்டுண்டவளாய் அவள் அசையாது சிலையாய் நின்றிருந்தாள். அவள் கண்களில் தெரிந்த திகைப்பில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவன்... அவளின் நெற்றியில் படிந்திருந்த முடியை எடுத்து அவளது காதோரம் சுருட்டி விட்டவன்,

“திரும்பவும் காய்ச்சல் வந்துற போகுது... போய் ட்ரெஸ் மாத்து...” மென்மையான குரலில் சொன்னவன் அங்கிருந்து செல்ல முற்பட...

“நீயும் தான் நனைஞ்சிருக்க அரசு... நீயும் ட்ரெஸ் மாத்து...” அவள் அவன் கையைப் பிடித்துத் தடுக்க... மெதுவே தன் கையை அவள் பிடியிலிருந்து உருவி கொண்டே,

“நீ முதல்ல ட்ரெஸ் மாத்திட்டு வா... நான் அப்புறமா மாத்திக்கிறேன்...” என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் அறையை விட்டு செல்ல... அவள் யோசனையாய் அவனின் முதுகை வெறித்தாள்.

‘என்ன நடந்ததுன்னு இவன் இப்படி முகத்தைப் பார்க்காமல் பேசிட்டுப் போறான்... என்னை மழையில் நனையாதேன்னு சத்தம் போட்டுட்டே என் பக்கமா வந்தான்... நான் அவனையும் சேர்த்து மழையில் நனைய வைச்சேன்... அதுக்குச் சத்தம் போட்டுட்டே என்னைத் தூக்கிட்டு ரூமுக்கு வந்தான்... என்னை இறக்கி விட்டுட்டு அப்புறம்... ஆங்... என்

முகத்தைக் கையால் பிடிச்சி அவன் பக்கம் திருப்பியவன் என் முகம் பார்த்து குனிஞ்சான்... அப்புறம்...' யோசித்தவள் காதுக்குப் பின் சுருண்டிருந்த முடியை கையில் எடுத்து தன் கண் முன் நீட்டியபடி...

'இதைக் காதுக்குப் பின்னால சுருட்டி விட்டான்... அதுக்கு அப்புறம் ட்ரெஸ் மாத்துன்னு சொல்லிட்டு போயிட்டான்... அப்படி இவன் மாறும்படி இடையில் என்ன தான் நடந்தது?'

'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' விஜய் சேதுபதி போல் நடந்ததை ரிவென்ட் பண்ணி பண்ணி அவள் யோசிக்க... கடைசியாய் அவளுக்குப் பல்பும் எரிந்தது... அவனின் தேவையும் புரிந்தது. அல்லிராணியாய், சண்டிராணியாய் வலம் வந்தவள் முதன் முறையாய் வெட்கத்தில் முகம் சிவந்தாள்.

“வாவ்... வீடு சூப்பராயிருக்கு அரசு... எவ்வளவு ரசனையோட பார்த்து பார்த்து இன்டீரியர் செஞ்சிருக்க... உனக்குள்ளேயும் நல்ல ரசனையிருக்கு... ம்... கலக்குற அரசு...” அரசுவிடம் சொல்லிய அல்லி பால்கனியில் நின்று கொண்டு வெளிப்புறம் எட்டி பார்த்தாள்.

“ஹேய்... இங்கே இருந்து பார்த்தா கடல் நல்லா தெரியுது. ரொம்ப அழகாயிருக்கு அரசு... அங்கே கொழும்பிலும் இதே மாதிரி கடல் தெரியிற மாதிரி ஒரு வீடு வாங்கு... நாள் முழுவதும் அதைப் பார்த்து ரசித்தால் போதும்... எனக்குச் சாப்பாடு, தண்ணி, தூக்கம் எதுவும் வேணாம். அந்தளவுக்கு எனக்குக் கடல்ன்னா ரொம்பப் பிடிக்கும்...” என்று அவள் சொல்லி கொண்டே போக...

பால்கனியின் கைப்பிடி சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டு அவளின் மகிழ்ச்சியை ரசித்துப் பார்த்தான் அரசு. சிறு குழந்தை போல் கண்களில் ஆர்வம் பொங்க அவள் பேசியது கண்டு அவனது மனம் அவளிடத்தில் மயங்கி நின்றது.

அல்லிக்கு மதிப்பெண் சான்றிதழ்களை வாங்க அவளைச் சென்னைக்குக் கூட்டி கொண்டு வந்திருந்தான் அரசு. அவளுடன் எங்கேயாவது தனித்துச் செல்ல விரும்பியவன் இந்தச் சென்னை பயணத்தைத் தேர்ந்தெடுத்தான். அதன்படி சென்னை வந்தவர்கள் அவனின் வீட்டிற்கு வந்திறங்க... அந்த வீட்டின் அழகில் மெய் மறந்து போனவளாய் அவள் பேசியது தான் மேற்கண்டது.

“அரசு... வாங்கிக் கொடுப்பியா என்ன?” அவனைப் போட்டு அவள் உலுக்கியதில் தான் அவனுக்குச் சுற்றும் புறம் உறைத்தது. ஆனால் அவள் என்ன கேட்டாள்? என்று புரியாமல் அவன் அவளைப் பார்க்க,

“சரியான கஞ்சுஸ்டா நீ... பொண்டாட்டி முதன் முறையா ஒண்ணு கேட்கிறாளே வாங்கிக் கொடுப்போம்ன்னு நினைக்கிறியா... ஒண்ணுமே சொல்லாம கல்லு மாதிரி

நிற்கிறதை பாரு...” அவள் கோபம் கொண்டு உள்ளே செல்ல... அவள் கைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன்,

“என்னன்னு சொல்லு? வாங்கித் தர்றேன்... உனக்கு இல்லாததா அம்முலு...”

“நான் பேசியது கூடக் கேட்காமல் அப்படி என்ன யோசனை அரசு...?”

இடுப்பில் இரு கையையும் வைத்துக் கொண்டு அவள் அவனை முறைக்க... அவனின் யோசனையே அவள் தான் என்பதை எப்படிச் சொல்வது? என்று தெரியாமல் அவன் விழிக்க... அவனின் தடுமாற்றத்தில் அவளின் முகம் சுருங்கி போனது.

“அரசு சென்னைக்கு வந்ததும் உனக்கு உன் லவ்வர் ஞாபகம் வந்துடுச்சா...?”

கொஞ்சம் கவலை தோய்ந்த குரலில் கூறியவள் நிலைக்கதவில் சாய்ந்து கொண்டு அவன் முகம் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்திருந்தாள். அவன் தன் காதலி பற்றிய யோசனையில் இருந்திருப்பானோ என்ற நினைவே அவளுக்கு மனதில் சுருக்கென்ற ஒரு வலியை ஏற்படுத்தியது. அது எதனால் என்பதை அவள் ஆராயவில்லை.

அவளின் பேச்சில் சற்று சுதாரித்தவன் அவளருகே வந்து அவளை அறைக்குள் அழைத்துச் சென்றவன், அவள் முகம் பற்றி நிமிர்த்தி, “உன்னைத் தான் நினைத்து கொண்டிருந்தேன்...” தன் மனதை மறையாது அவன் எடுத்துரைக்க... அவளின் முகம் மலர்ந்தது.

“என்னையவா...?” கண்கள் விரிய கேட்டவளின் கண்களுக்குள் ஊடுருவி பார்த்தவன்,

“பின்னே என் மனைவி உன்னை இல்லாமல் வேறு யாரை நினைப்பேன்...” அவனின் பதிலில் அவள் சமாதானமானாள்.

“ம்... ம்... நம்பிட்டேன்...” ராகம் போட்டு இழுத்தவளின் காதை வலிக்காமல் பிடித்துத் திருகியவன்,

“அதுக்காக நெஞ்சை கிழித்தா காண்பிக்க முடியும்... உண்மை தான்ம்மா... என்னை நம்பு...”

“தேங்க்ஸ்...” என்றவள் மனநிறைவுடன் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

“இப்படியே இருக்கலாம்ன்னு தான் ஆசையாயிருக்கு... வந்த வேலை பார்க்க வேணாமா?” அவனது பேச்சில் முகம் சிவந்து விலகியவள்... தான் படித்த கல்லூரிக்கு செல்ல ஆயத்தமானாள்.

அவளது கல்லூரிக்கு சென்று அவளின் மதிப்பெண் சான்றிதழை வாங்கி விட்டு வெளியில் வந்தவர்கள் காரிலேறி அமர்ந்ததும், “ரொம்ப நல்ல மார்க் வாங்கியிருக்க... நீ ரொம்பப் படிப்ஸோ...” அவன் படிப்பை பற்றிக் கேட்டதும் கண்கள் மின்ன,

“எனக்குப் படிக்க ரொம்ப ரொம்பப் பிடிக்கும் அரசு...” அவள் கூறியதை கேட்டதும்,

“மேலே படியேன்... எனக்குத் தான் படிக்க ஆசையிருந்தும் படிக்க முடியல... நீயாவது படியேன்...”

“ஏன் அரசு நீ படிக்கல?” தன் படிப்பை மறந்து அவனின் படிப்பை பற்றி விசாரித்தாள்.

“ஏன்னா உன் அளவுக்கு எனக்கு வசதியில்லை... அதுவுமில்லாமல் அம்மாயியை வேலை பார்க்க வைச்சுட்டு நான் சுகமாய்ப் படிப்பதை நான் விரும்பல... இது எல்லாத்தையும் விட... வாழ்க்கையில் முன்னேறியே ஆக வேண்டிய கட்டாயத்தில் நான் இருந்தேன்... அதான் படிப்பை தூக்கி போட்டுட்டு தொழிலை கையிலெடுத்தேன்...”

“ஓ...” என்றவள், “உண்மையில் நீ பாவம் தான் அரசு... சின்ன வயசில் ரொம்பக் கஷ்டப்பட்டியோ?” மெய்யான

வருத்தத்தில் அவள் கேட்க...

அவளின் வருத்தத்தில் அவன் பட்ட துன்பமும், வேதனைகளும் சூரியனை கண்ட பனியாய் விலகி ஓடுவதை அவன் உணர்ந்தான்.

“நீ இப்படிக் கேட்கும் போது நான் பட்ட கஷ்டம் எல்லாம் ஒண்ணுமில்லாமல் போய் விட்டது...” அவளைப் பார்த்து சிரித்தவன்,

“உனக்குப் பிடித்த ஷாப்பிங் மால் போகலாமா?” என்று புகழ் பெற்ற அந்த மாலின் பேரை சொல்ல... அதைக் கேட்டவள் உற்சாகத்தில் துள்ளி குதிக்காத குறை தான். அவளின் உற்சாகம் அவனையும் தொற்றிக் கொள்ள... அதைக் காரை ஓட்டுவதில் காண்பித்தான்.

****

“அரசு... அந்தக் குழந்தையைப் பாரேன்... எவ்வளவு அழகு இல்ல...” அல்லி சொன்ன திசையில் திரும்பி பார்த்த அரசு... அங்கே ஒரு இரண்டு வயது பெண் குழந்தை ஒன்று அங்கும் மிங்கும் தளிர் நடை போட்டது அவனின் மனதையும் கவர்வதாய்...

“ம்... அழகாயிருக்கு...” அவளிடத்தில் சொல்லியவன் கண்கள் அந்தக் குழந்தையின் மீதிருக்க... அந்தக் குழந்தை மெல்ல தளிர் நடை போட்டு அவர்கள் அருகில் வர,

“இங்கே வாங்க...” அல்லி அந்தக் குழந்தையை அழைக்க... அது சிரித்தபடி அவளருகே வர... அல்லி மகிழ்ச்சியுடன் அதைத் தூக்கி கொண்டாள்.

“ஹவ் ஸ்வீட்...” அதன் குண்டு கன்னத்தில் அவள் முத்தமிட... அது கிலுக்கி சிரித்தது.

அரசுவும் அதன் அருகில் வந்து சொடக்கு போட்டு விளையாட்டு காண்பிக்க... அது அவனின் முகம் கண்டு பயந்து அழ ஆரம்பிக்க... அதில் அரசுவின் முகம் வெளிறிப் போனது. அதை அல்லி கவனிக்கவில்லை... அவள் அழும்

குழந்தையைச் சமாதானப்படுத்துவதில் முனைந்திருந்தாள்.

அதற்குள் அந்தக் குழந்தையின் அன்னை அல்லியின் கைகளிலிருந்து குழந்தையை வாங்கியவள், “சாரி...” என்று சொல்லிவிட்டு நிமிர்ந்தவள் அரசுவின் முகத்தைப் பார்த்ததும் பயந்தவளாய் அரண்டு போய் அங்கிருந்து அவசரமாய் நகர... அரசுவின் முகம் அவமானத்தில் இறுகி போனது. இதை அல்லியின் கண்கள் கவனித்துவிட்டன.

“அரசு...” அவள் அவனை அழைத்தும் அவன் திரும்பி பார்க்காததால் அவன் அருகில் நெருங்கி அமர்ந்தவள் அவனின் கைகளைத் தன் கைகளில் கோர்த்துக் கொண்டு அவன் தோளில் சாய... அவளின் அந்தச் செயல் அவனின் புண்பட்ட இதயத்திற்கு மருந்தாய் அமைய... அவனின் மனம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாந்தமானது.

“அரசு வீட்டுக்கு போகலாமா?”

“இன்னமும் ஷாப்பிங் முடியலையே... முடிச்சிட்டு போகலாம்?” அவன் சொல்ல...

அவள் பிடிவாதமாய் மறுத்து அவனை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டாள். வீட்டிற்கு வந்ததும் அவனை இறுக அணைத்து கொண்டவள் தேம்பி தேம்பி அழ ஆரம்பிக்க... அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

“ஹேய் அம்முலு... இது என்ன எப்ப பாரு டேமை திறந்து விட்டுட்டே இருக்க? என் அல்லிராணி அடுத்தவங்களைத் தான் அழ வைக்கணும். இப்படி அழுதிட்டு இருக்கக் கூடாது...” தன் கவலை மறந்து அவன் கேலி பேச...

“எப்படிடா உன்னால் இந்த நிலையிலும் ஜோக் அடிக்க முடியுது? உனக்குக் கஷ்டமாயில்ல...” கண்களில் கண்ணீர் வழிய அவனைப் பார்த்தவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது.

“எனக்கு எதுக்குக் கஷ்டமாயிருக்கணும்?”

“அதான் அந்தப் பேபியோட அம்மா உன்னை அப்படிப் பார்த்தாங்களே...” அவள் சொல்லும் போதே அவளுக்குக் கண்ணீர் வழிந்தது.

அவள் தனக்காக அழுவது கண்டு அவனுக்கு ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும்... அவளின் கண்ணீர் கண்டு அவனுக்கு வருத்தமாய் இருக்க... அவளின் கண்ணீரை மென்மையாய் துடைத்து விட்டவன், தன் மன வேதனையை அவளுக்காக மறைத்துக் கொண்டு அவன் பேசினான்.

“எல்லோரையும் ஒரே மாதிரி நினைக்க முடியுமா? சிலர் மனசில் நினைச்சுப்பாங்க... அவங்க மனசில பட்டதை முகத்தில் காட்டிட்டு போயிட்டாங்க... அவ்வளவுதான்... இதுக்கா நீ கண்ணீர் விட்டுட்டிருந்த... எனக்கு இது பழகி போயிடுச்சு...” அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து அவன் ஆறுதல் படுத்த...

“இதில் நானும் உன்னை இந்த மாதிரி பேசி கொடுமை படுத்திட்டேன் அரசு... ஐம் சாரி...” அவள் தான் நடந்து கொண்ட முறைக்கு மன்னிப்பு வேண்ட...

“என் அம்முலு என்னை என்ன கொடுமை வேணும்னாலும் படுத்தலாம்... உனக்கு அதுக்குப் புல் ரைட்ஸ் இருக்கு... அதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும்...” அவன் கேலியாய் சொல்ல... அவளுக்கும் சிறிது சிரிப்பு வந்தது.

“சொல்லிட்ட இல்ல... இனி பாரு... எப்படியெல்லாம் உன்னைக் கொடுமைப் படுத்துறேன்னு...” சொல்லிவிட்டு வாய் விட்டு சிரித்தவளின் நெற்றியில் தன் நெற்றியால் முட்டியவன்,

“நான் கஷ்டப்படுறதை பார்க்க அவ்வளவு ஆசையா?” கிண்டல் பண்ணியவனிடம் அவள் வேறு கேட்டாள்.

“அரசு... நீ லவ் பண்ணிய பொண்ணு அவ்வளவு அழகா...?”

திடுமென அவள் கேட்டதில் திகைத்தவன் சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டான். எதிரில் இருந்த அவளை உற்றுப் பார்த்தான்.

தனக்காக அழுது சிவந்திருந்த விழிகளுடன், கவலை தோய்ந்த முகமும், தான் என்ன பதில் சொல்ல போகிறோமோ? என்று கண்களில் நிராசையும், ஏக்கமும் போட்டி போட தன்னையே பார்த்து கொண்டுருந்தவளை கண்டவனுக்கு இவளை விடவா தன் மேல் வேறு யாரும் அன்பை, அக்கறையைக் காட்ட முடியும்...? இவளை விடவா வேறு பெண் அழகாயிருக்கக் கூடும்? என்ற கேள்விகள் எழுந்து... என்றுமில்லாத திருநாளாய் அவளின் அழகு பன்மடங்கு அதிகரித்திருப்பதை அவன் உணர்ந்தான்.

“உன்னை விட யாரும் அழகில்லை அம்முலு... எனக்கு நீ மட்டும் தான் அழகு...”

அவளின் தோழிகளுக்கு எல்லாம் காதலன் இருக்க... அவளுக்கு மட்டும் காதலன் என்று யாரும் இருந்ததில்லை. அவள் நிறம் கொஞ்சம் குறைவு என்பதால் அவளைச் சீந்துவார் யாருமில்லை. அதுவே அவளுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இன்று அரசு இவ்வாறு கூறியதை கேட்டு அவள் மனம் நெகிழ்ந்து போனது.

“தேங்க்ஸ் அரசு... நான் அழகாயிருக்கேன் சொன்னதுக்கு...” என்றவள்,

“ஏன் அரசு எல்லோரும் வெளித் தோற்றத்துக்கு மதிப்பு கொடுக்குறாங்க... மனசுன்னு ஒண்ணு இருப்பதை ஏன் மறந்துடுறாங்க...?”

“அவங்களை விடு... உனக்காக நானிருக்கேன்... எனக்காக நீயிருக்கிறாய்... பின்னே எதுக்கு வீணா கவலைப்படுற?” அவன் ஆறுதலாய் சொல்ல...

“நீ மட்டும் இது போல் முகத்தில் காயம் ஏற்படாமல் இருந்தால் என்னைக் கல்யாணம் பண்ணியிருக்க மாட்டயில்ல... உன் அழகுக்கு ஏத்த பெண்ணைத் தானே தேர்தெடுத்திருப்ப...”

அவளின் குரல் கம்மியது. ஏதோ நினைவில் அவள் அதைச் சொன்னாலும் அதன் அர்த்தம் முழுதாய் இப்போது

அவளுக்கு உறைக்க... தன் நிலை கண்டு அவளுக்கே பரிதாபமாய் இருந்தது.

‘நான் இந்த விழுப்புண்களை வாங்கியதே உனக்காகத் தான் பெண்ணே... இது தான் நான் உன்னை அடைய வேண்டும் என்ற தீவிரத்தை என்னுள் விதைத்துக் கொண்டிருந்தது என்று நான் சொன்னால் நீ நம்புவாயா? நான் அழகாயிருந்தாலும்... அழகாய் இல்லா விட்டாலும் உன்னைத் தான் நான் மணந்திருப்பேன்... உன் மீதான என் காதலை உன்னால் மட்டுமல்ல... வேறு யாராலும் புரிந்து கொள்ள முடியாது’ மனதுக்கு அவளுடன் நீளமாய்ப் பேசியவன்,

“ச்சு... அசடு மாதிரி பேசாதே... எந்தச் சூழ்நிலையிலும் நீ தான் என் மனைவி...” ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

“என்னமோ போ... நீ சொல்றதை என்னால் புரிந்து கொள்ள முடியல அரசு... அழகான, நல்லவனான நீ எதுக்குச் சுமாரான என்னை மிரட்டுவது போல் மிரட்டி வலுக்கட்டாயமாய்க் கல்யாணம் பண்ணிக்கிட்ட? அது ஒண்ணு தான் இடிக்குது அரசு...” நெற்றியை ஆள்காட்டி விரலால் தட்டி யோசிக்க...

“இவ்வளவு யோசிச்ச நீ... அதையும் ஏன்னு யோசிச்சு பாரு...” அவன் விளையாட்டாய் கூறுவது போல் அவனின் காதலை அவளுக்கு உணர்த்த முயல...

“ம்ஹூம்... எதுவுமே தோண மாட்டேங்குது?”

அவனின் செயலில் அவளின் மீதான அவன் காதலிருக்கும் என்பதை அவள் கொஞ்சமும் யோசிக்கவில்லை.

“அரசு... இந்தத் தழும்புகள் எல்லாம் எப்படி வந்தது? முதல்ல இது கிடையாதே?” தன் பெருத்த சந்தேகத்தை அவள் கேட்க... அவன் என்ன பதில் சொல்வது? என்று யோசித்தவன்,

“ஆக்சிடெண்ட்...” என்று ஒற்றை வார்த்தையில் சுருக்கமாய் முடித்துக் கொள்ள... அவளால் மேலே கேள்வி கேட்க முடியவில்லை.

“சரி அதை விடு... இன்னைக்கு நைட் ப்ளைட்டுக்கு ஊருக்கு போகணுமே... எல்லாமே வாங்கியாச்சா? இல்லை ஏதும் வாங்க வேண்டியதிருக்கா...”

அவன் பேச்சை மாற்ற முயல, அது நன்றாக வேலை செய்தது. அவள் தன் மனதை வாங்கும் பொருள்களைப் பட்டியலிடுவதில் செலுத்த... அவன் தன்னை மணம் புரிந்து கொள்வதற்கான காரணத்தை ஆராய மறந்துவிட்டாள்.

****

“அரசு... அரசு...”

புயல் போல் அரசுவின் வீட்டிற்குள் நுழைந்தாள் தேன்மொழி. அன்று ஞாயிறு என்பதால் சாவகாசமாய் எழுந்து வரவேற்பறையில் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த அரசு... அக்காவின் கோபக் குரலில் திடுக்கிட்டு போய் அவளைப் பார்த்தான். அவன் அருகில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மியம்மாவும் பேத்தியின் வருகையை யோசனையாய் பார்த்தார்.

“வாம்மா தேனு... என்ன காலையில் வந்திருக்க...?” பேத்தியை வரவேற்ற முதியவள் அவளை அமர சொல்ல...

“வாங்க அக்கா...” அதற்குள் சுதாரித்துக் கொண்ட அரசுவும் அவளை அமர சொன்னான்.

தேன்மொழி தொப்பென்று சோபாவில் அமர்ந்தவள்... “அரசு உன்னிடம் முக்கியமான ஒன்றை கேட்க வேணும்” அவள் சொல்லும் போதே அவனுக்குத் திக்கென்று இருந்தது.

இப்போது தான் அவனின் வாழ்க்கை எந்தவித பிரச்சினையும் இல்லாமல் சுமூகமாகப் போய்க்

கொண்டிருக்கிறது. அதில் தன் அக்கா என்ன மாதிரியான குழப்பம் விளைவிக்கப் போகிறாளோ என்று அவன் யோசனையாய் அவளைப் பார்க்க...

“உன் மாமனார் கடன் அடைப்பதற்காக நீ பணம் கொடுத்தியா?” பட்டென்று நேரிடையாய் வந்த கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

“அப்படியெல்லாம் இல்லையே அக்கா...” தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் பொய்யாய் பதிலளித்தான்.

தன் சகோதரியே ஆனாலும் அவள் முன்னால் தன் மனைவி அல்லி தலை குனிய கூடாது என்று அவன் எண்ணினான். பெரியவளும் அதைத் தான் எண்ணினாரோ என்னமோ பேரனின் பேச்சிற்கு மறுபேச்சு பேசவில்லை.

“அரசு...” ஏறக்குறைய கத்தினாள் தேன்மொழி.

“எப்போ இருந்து இப்படிப் பொய்யெல்லாம் பேச ஆரம்பிச்ச அரசு... உன் பொண்டாட்டி சொல்லி கொடுத்தாளா... இப்படிப் பேச சொல்லி? இருக்கும் இருக்கும்... கல்யாணத்துக்குப் பின்னாடி நீ தான் ரொம்பவே மாறிட்டியே...”

“அக்கா... நீங்க நினைக்கிற மாதிரி எதுவுமில்லை...” அவன் இடைமறித்துப் பேச... அவனைக் கையமர்த்தித் தடுத்த தேன்மொழி,

“எது நான் நினைக்கிற மாதிரியில்ல... கோடிக்கணக்கான பணத்தை அவங்களுக்குக் கொடுத்தது மட்டுமில்லாமல்... அதைத் திருப்பித் தர வேணாம்ன்னு வேற சொல்லியிருக்க... நீ இல்லை அப்படின்னு பொய் சொன்னாலும்... உன் மாமியார்க்காரி அது உண்மைன்னு ஊரெல்லாம் தம்பட்டம் அடிச்சிட்டு திரியறா... நேத்து ஒரு கல்யாண வீட்டுக்கு போயிருந்தப்போ அங்கே அவ அடிச்ச தம்பட்டம் இருக்கே... அப்பப்பா... காது கொடுத்து கேட்க முடியல...”

தேன்மொழி பேசி கொண்டிருக்கும் போது... அல்லி அப்போது தான் எழுந்து மாடிப்படியில் இருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

“வாடியம்மா வா... வாழ வந்த வீட்டில் நீ வாழுற லட்சணம் நல்லா தான் இருக்கு... ஒரு குடும்பப் பொண்ணு எழுந்திரிக்க வேண்டிய நேரமா இது?”

தேன்மொழி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்காமல் அரசுவின் அருகில் சென்றமர்ந்த அல்லி... அவன் கையிலிருந்த செய்தித்தாளை பிடுங்கி படிக்க ஆரம்பிக்க... அதைக் கண்டு தேன்மொழியின் கோபம் எல்லையைக் கடக்க ஆரம்பித்தது.

“அக்கா... மாமா கிட்ட நான் கொஞ்சம் பேசணும்... நாம கிளம்பலாமா?” மேலும் பிரச்சினையாவதற்கு முன் அக்காவை கிளப்பி விடுவோம் என்றெண்ணி அரசு கேட்க, அதைக் கேட்ட தேன்மொழி,

“பொண்டாட்டியை கண்டதும் அக்கா வேண்டாதவள் ஆகிட்டேனா?” தம்பியிடம் காய்ந்தவள்,

“என் தம்பிக்கு மனைவியா வாழுறதுக்கு முன்னாடியே அவனை நல்லத்தான் கைக்குள் போட்டு வச்சிருக்க... நல்ல கைக்காரி தான்டி நீ... அதான் என் இளிச்சவாய் தம்பி உனக்காகப் பணத்தை அள்ளி கொட்டி உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கானே... அந்தத் தைரியம் தான் உன்னை இப்படியெல்லாம் நடக்க வைக்குது. உன் அப்பாவுக்கு அவன் கொடுத்த கடனுக்காகவாவது நீ அவனுடன் ஒழுங்கா குடும்பம் நடத்தியிருக்கணும்... ஆனா அதுக்குத் தான் இங்கே வழியில்லையே”

தேன்மொழியின் வார்த்தையில் அல்லிக்கு ஆத்திரம் வர தான் செய்தது. அவள் ஆத்திரத்துடன் அரசுவை பார்க்க... அவனோ என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டு தன் கோபத்தைக் கட்டுக்குள்

கொண்டு வந்தவள் செய்தித்தாளினுள் முகத்தைப் புதைத்தாள்.

“தேனு... என்ன பேச்சு பேசுற... உன்னிடம் இந்த மாதிரி பேச்சை எதிர்பார்க்கல... நான் வளர்த்த வளர்ப்பு ரொம்பத் தப்பா போயிருச்சேன்னு வருத்தப்படுறேன்...”

லக்ஷ்மியம்மாள் பேத்தியை கடிந்தார். அதையெல்லாம் உணரும் நிலையில் தேன்மொழி இல்லை. அவள் அல்லியை காயப்படுத்துவதில் தான் கவனமாய் இருந்தாள்.

“ஏண்டா தம்பி... அவ்வளவு பணம் கொடுத்துக் கல்யாணம் பண்ணுமளவுக்கு இந்த மூஞ்சியில் அப்படி என்னத்தைக் கண்ட...? அழகு போல் பெண் கையிலிருந்தும் இப்படி ஒருத்தியை போய்க் கல்யாணம் பண்ணியிருக்கியே உன்னைச் சொல்லணும்...” அவள் பேசி கொண்டே போகவும்,

“அக்கா...” என்று சத்தம் போட்ட அரசு...

“இனிமேல் என் மனைவியை இப்படிக் கேவலமா பேசுவதாயிருந்தா... இந்த வீட்டுக்கு வராதீங்க...” அவன் திட்டவட்டமாய்க் கூற... தேன்மொழி அவனின் வார்த்தைகளில் திகைத்து போனாள்.

“அரசு...”

“உங்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்வதற்கு நான் கடமைப்பட்டவன்... அதை இப்போ மாதிரி எப்பவும் நான் செய்வேன்... தம்பிங்கிற கடமையை நான் மறக்க மாட்டேன். அதே மாதிரி அல்லிக்கு கணவனாய் நான் செய்ய வேண்டிய கடமையும் இருக்கு. அவளை இப்படி நீங்க பேசுறது அவளை மட்டுமில்லாமல் என்னையும் சேர்த்து அவமதிக்கிறது போலிருக்கு... உங்களுக்கு அவளைப் பிடிக்கலைன்னா இனிமேல் நீங்க இங்கே வர வேணாம்...” அவனின் பேச்சை அம்மாயி எதிர்க்கவில்லை... ஆமோதிப்பது போல் மௌனம் காத்தார்.

இவ்வளவு பேச்சுக்கும் அல்லி நிமிர்ந்து யாரையும் பார்க்கவில்லை. அவள் அரசுவுக்காக எல்லாவற்றையும் பொறுத்து கொண்டாள். அதற்கு ஏற்றார் போல் அரசுவும் அவளுக்குச் சாதகமாய்ப் பேச அவளின் மனம் குளிர்ந்து போனது.

“அம்மாயி... நீங்களும் அவங்க கூடச் சேர்ந்திட்டீங்கல்ல... அவன் இந்தப் பேச்சுப் பேசுறான் நீங்க ஒண்ணும் பேசாம இருக்கீங்க...” கண்களில் நீர் வழிய தேன்மொழி கேட்க...

“நல்லவனாய் இருந்தவனை இப்படி மாத்தியது உன் பேச்சு தான் தேனு... எனக்கு நீ எப்படி முக்கியமோ... அது போல் அரசுவும், பேபிம்மாவும் முக்கியம். இதில் நான் தலையிட முடியாது” பெரியவள் தன்னிலையை விளக்கி கூற...

“எனக்கு யாரும் வேணாம்... இனிமேல் நான் இந்த வீட்டு வாசப்படி மிதிச்சா... என்னை என்னன்னு கேளுங்க...” என்று கத்திவிட்டு தேன்மொழி வீட்டை விட்டு வெளியேற... அரசு தலையில் கையை வைத்து விட்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

“அரசு... அவள் பேசுறதை எல்லாம் பெருசா எடுத்துக்காதே... தேனுவை பத்தி தான் உனக்குத் தெரியுமே... விடுப்பா... நன்றி கடனுக்கும் ஒரு அளவு தான் இருக்கு அரசு... இவ்வளவு நாள் நீ அவளுக்காய் இருந்தது போதும். இனிமேல் உன் வாழ்க்கையை நீ பாரு...” பெரியவள் பேரனை ஆறுதல் படுத்தி விட்டு தன் அறைக்கு எழுந்து செல்ல... அரசு அல்லியை பார்த்தான். அதே சமயம் அவளும் அவனைத் தான் நிமிர்ந்து பார்த்தாள்.

“சாரி அல்லி... அக்கா ஏதோ தெரியாம...” அவன் பேசி கொண்டிருக்கும் போதே அவள் எழுந்து மாடிக்கு செல்ல... அவளைத் திகைப்பாய் பார்த்தவன் அவசரமாய் அவளைப் பின் தொடர்ந்தான்.

“அக்காவுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்குறேன்...” அறைக்குள் நுழைந்தபடி அரசு அல்லியிடம் மன்னிப்பு கேட்டான்.

அவனுக்குத் தெரியும் தேன்மொழியின் பேச்சு அவளின் மனதை எந்தளவிற்குக் காயப்படுத்தி இருக்கும் என்று... அதற்கு நிச்சயம் அல்லி தன் மீது கோபப்படப் போகிறாள்... ஆத்திரத்தில் திட்டி தீர்க்க போகிறாள் என்று அவன் எண்ணி கொண்டிருக்க... அவளோ பாய்ந்து வந்து அவனை அணைத்து கொண்டாள்.

“தேங்க்ஸ் அரசு...” என்று சொல்லி கொண்டே...

ஒவ்வொரு நன்றிக்கும் அவள் அவன் முகத்தில் ஒவ்வொரு முத்தம் வைக்க... அவளின் இதழொற்றலில் அவன் என்றும் போல் இன்றும் மெய் மறந்து நின்றான். இந்த மாதிரி ஒரு நிகழ்வை அவன் அவளிடமிருந்து சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளின் அன்பில் அவன் திக்குமுக்காடி தான் போனான்.

“அரசு...” அவள் அழைத்ததும் தன் உணர்வு பெற்றவன் அவளைப் பார்க்க...

“உன் அக்கா பேசிய விதம் தப்புன்னாலும்... அவங்க பேசிய அர்த்தம் உண்மை தானே அரசு...” அவன் புரியாமல் அவளைப் பார்க்க...

“நாமளும்... நாமளும்...” எப்படிச் சொல்வதென்று தெரியாமல் அவன் நெஞ்சில் முகம் புதைத்தவள்,

“நாமளும் மத்த ஹஸ்பென்ட் அன்ட் வைப் மாதிரி வாழலாமா?” அவளின் வார்த்தைகளைக் கேட்டு அவனால் நம்ப முடியவில்லை.

அவனுக்கு ஜிவ்வென்று வானத்தில் பறப்பது போல் சந்தோசமாயிருந்தது. எல்லாம் ஒரு கணம் தான்... தன் உணர்வுகளை அடக்கியவன், அவளை விலக்கி விட்டுக் கட்டிலில் போய் அமர்ந்தான். அவள் தன்னைக் கணவனாய் நினைத்திருப்பது அவனுக்கு மகிழ்ச்சியே என்றாலும்... அவள் தன்னை நெஞ்சு நிறையக் காதலோடு அணுகும் நாளை தான் அவன் வெகு விருப்பத்துடன் எதிர்பார்த்தான்.

காதல் இல்லாமல் கணவன், மனைவியாய் கடமைக்கு வாழ்வதை அவன் அறவே வெறுத்தான்.

“அரசு... நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்... நீ பதில் பேசாமலிருந்தா எப்படி? பெண்ணான நானே வெட்கத்தை விட்டுக் கேட்கிறேன்... நீ ஏன் அமைதியாயிருக்க?” அவன் அருகில் வந்து அவள் உலுக்கி எடுக்க... அவனோ பதில் பேசாமலிருக்க... அவளுக்கு அழுகையும் ஆத்திரமும் வெடித்தது.

“உனக்குக் கூட என்னைப் பிடிக்கல இல்ல... பணத்தை வசூலிக்கத் தானே என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... அப்படிப்பட்ட உன்னிடம் போய் நான் அன்பை எதிர்ப்பார்ப்பது என் முட்டாள்த்தனம்...”

கழிவிரக்கத்தில் அவள் அழுகையுடன் பேசி கொண்டே தேம்ப... அவளின் வார்த்தைகள் அவளுக்கு எத்தனை வேதனை அளித்ததோ தெரியாது... ஆனால் அவனுக்கு உயிர் போகிற வேதனையை அது அளித்தது.

“ப்ளீஸ் அம்முலு...” அவளின் வாய் மேல் கை வைத்து அவள் பேசுவதைத் தடை செய்தவன்,

“உன் மேல் நான் வச்சிருக்கிற காதலின் அளவு எவ்வளவுன்னு உனக்குத் தெரியுமா?” என்றவன் அவளைத் தன் கைப்பிடியில் கொண்டு வந்து தன் மடி மீது அமர்த்தியவன். தனது முத்திரையை அவள் முகமெங்கும் பதிக்க... அதில் கிறங்கி போய் அவள் நிற்க... தன்னைப் புரிந்து கொள்ள வில்லையே என்ற அவனது ஆதங்கம் முழுவதும் அந்த முத்தத்தில் வெளிப்பட்டது.

என்ன தான் அவன் உணர்ச்சி வசப்பட்டாலும் அவளின் இதழ் மீது கவிதை எழுத அவன் சிறிது தயங்க தான் செய்தான். ஆனால் அல்லி கண் மூடி மயக்கத்துடன் உதடுகள் துடிக்க இருந்த விதம் அவனை மேற்கொண்டு செயல் பட அழைப்பு விடுத்தது. ஒரு பெண் தனது முழு விருப்பம் இல்லாமல் அது கணவனே ஆனாலும் அவனை நெருங்க மாட்டாள். அல்லியின் இந்த நிலை அவளின்

மனதை அவனுக்கு உணர்த்துவதாய் இருந்தது. அதில் காதல் இல்லாமல் இல்லை... ஆனால் அவள் அதை உணரவில்லை என்பதை அவன் உணர்ந்தான்.

அவனின் கண நேர தயக்கத்தைக் கண்டு அல்லி மெல்ல கண் விழித்தாள். அவனின் குழப்ப முகம் கண்டு, என்ன? என்பது போல் பார்க்க...

“இல்ல... நீ இன்னும் குளிக்கவே இல்லையே...” சூழ்நிலையை மாற்ற எண்ணி அவள் மூக்கை பிடித்து ஆட்டியபடி அவன் கேலியாய் சொல்ல...

“ம்... சேர்த்து வச்சு பிறகு குளிச்சுக்கிறேன்... மிஸ்டர். அரசு இப்படியே பேசி பேசி தப்பிக்கலாம்ன்னு நினைப்பா? இன்னைக்கு என்ன பேசினாலும் இந்த அல்லியிடமிருந்து தப்ப முடியாது...” என்றவள் சிறிதும் தயங்காமல் அவனின் இதழில் தன் இதழை பொருத்த... அவளின் செயலில் ஒரு கணம் பிரம்மித்தவன்... அடுத்தக் கணம் அந்தச் செயலை தனதாக்கி கொண்டான்.

காதலில் அவன் காட்டிய மென்மையில், அன்பில் அவள் முற்றிலும் கரைந்து போய் அவனோடு ஒன்றினாள். அல்லிராணியாய் வலம் வந்தவளை முதன் முறையாய் அவளின் பெண்மையை அவன் உணர செய்த விதத்தில் அவள் உருகி தான் போனாள். அவளின் உணர்வுகள் எல்லாம் அரசுவாய்ப் போனான் என்றால் மிகையில்லை. அந்தளவுக்கு அவனின் காதலில் அவள் விருப்பமாய்ச் சரணடைந்தாள்.

ஏற்கெனவே அவளிடம் மதி மயங்கி நிற்கும் அரசு... இன்று அவள் காட்டிய இணக்கத்தில் ஆனந்தத்தின் எல்லைக்கே சென்றிருந்தான். அவளை விடவே மனமில்லாமல் மேலும் மேலும் அவளை அவன் நாட.. அவளும் அவன் விருப்பம் அறிந்து அவனின் ஆசைக்கு இணங்க... அங்கே அழகிய இல்லறம் அழகாய் மொட்டவிழ்ந்து இனிமையாய் மணம் பரப்பி அழகிய பூவாய் மலர்ந்தது.

“அம்முலு... இன்னமும் என்ன தூக்கம்? எழுந்திரு...” அரசு அவளை உலுக்கியதில் கண்களைத் திறந்தவள் அவனை ஏறிட்டு பார்க்க... அவனோ குளித்து முடித்துப் புத்துணர்ச்சியோடு இருந்தான்.

“என்ன இன்னும் எழும்ப மனம் வரவில்லையா?” என்றவனின் வார்த்தையில் தான் அவளுக்குச் சற்று நேரத்திற்கு முன்பு நடந்தது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

அந்த நினைவு வந்ததும் வெட்கம் அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டி கொள்ள... அவன் முகம் காண நாணியவள்... முகத்தைப் போர்வைக்குள் மறைத்து கொண்டாள். அவளின் செயலில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... ஆனாலும் அவளின் உணர்வுக்கு மதிப்பு கொடுக்கும் பொருட்டு,

“நான் கீழே போகிறேன்... நீ குளிச்சிட்டு வா...” என்றவன் அறையை விட்டு வெளியேற... அவள் நிம்மதி பெருமூச்சு விட்டவளாய் படுக்கையில் இருந்து எழுந்தாள்.

குளித்து முடித்துக் கீழே வந்தவள் அவன் முகம் பார்க்காமல் பேசியவள்... அம்மாயியின் பின் மறைந்து கொண்டு அவனுக்குக் கண்ணாமூச்சி காண்பித்தாள். அவனும் அவளின் வெட்கத்தைக் கருத்தில் கொண்டு அவளிடம் அதிகம் வம்பிழுக்காமல் இருந்தான். இரவு வரை இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் தொடர... இரவு உணவு முடிந்து அறைக்குள் வந்தவளை அவன் அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டு,

“என்ன அல்லிராணி என் கண்ணில் படாமல் கண்ணாமூச்சி ஆட்டமா காண்பிக்கிற? இப்போ எங்கே போக முடியும்? எப்படியிருந்தாலும் என்னிடமிருந்து நீ தப்ப முடியுமா?” என்றபடி அவன் அவளை வாசம் பிடிக்க...

அவளோ அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் அவன் நெஞ்சுக்குள் முகம் புதைக்க... அவளின் முகத்தை ஒற்றை விரல் கொண்டு நிமிர்த்தியவன்,

“என்ன அம்முலு? புதுசா வெட்கம் எல்லாம் பட்டுக்கிட்டு...” கண் சிமிட்டி கேட்க... அதில் முகம் சிவந்தவள்,

“அது வந்து... அரசு... நீ... நீங்க...” ஒவ்வொரு வார்த்தையாய் அவள் தடுமாற...

அவளின் தயக்கம் அவனுக்குப் புரிந்து போனது. அவனைத் தோழனாய் நினைத்து பழகியவளுக்கு இன்றைய உறவுக்குப் பின் அவனை அப்படி நினைக்க அவளால் முடியவில்லை. அந்தத் தடுமாற்றத்தின் விளைவே இது...

“அம்முலு... இது என்ன புதுசா நீங்க... வாங்க... போங்கன்னுட்டு... நீ எப்போதும் போல் நீ... வா, போன்னே பேசு. உனக்கு நான் கணவனாய் இருப்பதை விட நல்ல தோழனாய் இருக்கவே விரும்புறேன். அதனால் எந்தவித தடுமாற்றமும் இல்லாமல் பழைய அல்லிராணியாவே நீ இரு”

“இல்ல... யாராவது...”

“யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க...” என்றவன் அவள் காதுக்கருகில் குனிந்து,

“உனக்கு ஒண்ணு தெரியுமா? நீ அப்படிக் கூப்பிடுவது தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு...” அவனின் பேச்சில் கண்ணில் வியப்பை தாங்கி பார்த்தவள்,

“தேங்க்ஸ் அரசு...” என்று அவள் அவன் கன்னத்தில் முத்தமிட... அவளைப் பார்த்து அவன் புன்னகைத்தான்.

“அரசு... உன் அக்காவை பழைய மாதிரி இங்கே வந்திட்டுப் போகச் சொல்லு... அவங்களை அந்த மாதிரி நீ பேசியது எனக்கே கஷ்டமா இருக்கும் போது அவங்களுக்கு எப்படி இருக்கும்?” அவளின் பேச்சை அவன் பிரம்மிப்புடன் பார்த்தவன்...

“அக்கா உன்னைத் தான் பேசினாங்க அம்முலு... என்னை இல்லை...”

“ம்... தெரியும்... அவங்க என்னைப் பேசிய போதெல்லாம் எல்லாமே நல்லது தானே நடந்திருக்கு... அவங்க பேசிய ரெண்டு தடவையும்... நாம நம்ம மனஸ்தாபத்தை ஒதுக்கி வச்சிட்டு கணவன், மனைவியாய் வாழ தான் அது உதவியிருக்கு. அந்த ஒண்ணுக்காகவே நாம அவங்களை மன்னிக்கலாம். அதிலும் எனக்கு எந்த நேரத்திலும் சப்போர்ட் பண்ண நீயிருக்கும் போது எனக்கு என்ன கவலை?” அல்லியின் நல்ல மனது அவனுக்குப் புரிய...

“நீ சொல்றதால நான் செய்றேன்...” என்றவன்,

“உன்னைப் போல் நல்ல மனது யாருக்கும் வராது...” என்று அவளை அணைத்து கொண்டவனின் கைகள் அவனின் மகிழ்ச்சியை அவளுக்கு உணர்த்தும் வண்ணம் அவளின் மேனியில் அத்துமீற...

“அரசு...” அவனின் கைகள் பேசிய மொழியின் அர்த்தம் புரிந்தவளாய் அவள் சிணுங்க...

“என்ன அம்முலுவுக்கு மறுபடியும் வெட்கம் வந்துவிட்டதா?” அவள் முகம் நிமிர்த்திப் பார்க்க... அவள் அவனுக்கு முகம் காட்டாமல் தலை குனிய,

“இந்த வெட்கத்தை நான் போக்கவா?” மென்மையான குரலில் கூறியவனை அவள் சட்டென்று நிமிர்ந்து பார்க்க...

“பழிக்கு பழிக்கு என்பது போல... வெட்கத்தைப் போக்க... அந்த வெட்கத்தையே கொடுத்தால் போச்சு...” என்றவனை,

“அரசு... நீ ரொம்ப மோசம்...” அவள் மேலும் சிணுங்க...

சிணுங்கிய அந்த இதழ்களைச் சிறை செய்தான் அந்த அன்பு காதலன். அதில் மனம் மயங்கி தன் கைகளை அவன் கழுத்தில் மாலையாகக் கோர்த்து அவனுக்குச் சற்றும் சளைக்காதவளாய் அழைப்பு விடுத்தாள் அவள்.

****

நேரம் யாருக்கும் காத்துக் கொண்டிருப்பது இல்லை... அரசு, அல்லியின் வாழ்க்கை சந்தோசமாய்ச் செல்ல... நாட்கள்

மாதங்களாகி இருந்தது. அன்று அலுவலகத்தில் இருந்து வந்த அரசுவை இறுக அணைத்து அவள் முத்தமழை பொழிய,

“இன்னைக்கு வானிலை அறிக்கையில் இடியுடன் கூடிய மழைன்னு சொல்லவே இல்ல...” அவன் கேலியுடன் கூறிக் கொண்டே அவளுக்கு இசைந்து கொடுக்க... அவளோ அவன் கூறியதை கண்டு கொள்ளாமல்,

“அரசு... நமக்குப் பாப்பா வர போகுது” மகிழ்ச்சியுடன் கூறியவளை அவனும் மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டான்.

“ஹேய் உண்மையாவா?” சந்தோசத்தில் வாய் விட்டு கூவியவன்,

“எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு அம்முலு...” என்றவன் தன் மகிழ்ச்சியைத் தனது அழுத்தமான முத்திரையின் மூலம் வெளிப்படுத்த...

அதில் அவள் கிறங்கி போய் நின்றாள். இருவரின் மனதிலும் குழந்தையைப் பற்றிய கனவுகள் பல முளைக்க... அதைப் பற்றிய கற்பனையில் இருவரும் மூழ்கியிருந்தனர்.

“ஆனாலும் அம்முலு... நீ இப்படித் தடாலடியா சொல்லுவேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை...” திடீரெனக் கூறியவன் வாய் விட்டு சிரிக்க...

“பின்னே எப்படிச் சொல்லியிருக்கணும்?” அவள் புரியாமல் கேட்க...

“எத்தனை சினிமா பார்த்திருக்க... ஹஸ்பென்ட் வந்ததும் அவன் கையை எடுத்து வயித்தில் வச்சுச் சிம்பாலிக்கா சொல்லணும்... அதைப் புரிஞ்சிட்டு அந்த ஹஸ்பென்ட் தான் மனைவியைக் கட்டி பிடிச்சு முத்தம் கொடுத்து தூக்கி சுத்தணும்... ஆனா இங்கே எல்லாம் தலை கீழா நடக்குது” வேண்டுமென்றே பெருமூச்சு விட...

“அரசு... நீ சினிமா பார்த்து ரொம்பத் தான் கெட்டு போயிட்ட...” அவளோ அவனை அடி மொத்தினாள்.

“வலிக்குது அம்முலு விடு... மீ பாவம்...” வாய் அப்படிச் சொன்னாலும் அவளின் அடிகளை அவன் சுகமாய்த் தாங்கி கொள்ளத் தான் செய்தான்.

“சரி டாக்டர் கிட்ட போய்க் காட்டினியா?” அரசுவின் கேள்விக்கு இல்லையென்று அவள் உதட்டை பிதுக்க...

“அப்புறம் எப்படிப் பேபின்னு கன்பார்ம் பண்ணின?”

“ரெண்டு மாசமா பிரீயர்ட்ஸ் வரல... அப்போ இது பேபி தானே...”

கண்களில் ஆர்வமும், ஏக்கமும் போட்டி போட கேட்டவளை கண்டு அவன் மனதுக்குள் இரக்கம் சுரந்தது.

“ம்... நிச்சயம் இது பேபியாகத் தான் இருக்கணும்...”

அவளுக்குச் சொல்வது போல் தனக்கும் சேர்த்து சொல்லி கொண்டவன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

அவனின் மனதில் அவனையும் அறியாமல் ஒருவித அச்சம் எழுந்தது. அது அன்று அந்தச் சிறு பெண் குழந்தை அவனைக் கண்டு மிரண்டு அழுததின் விளைவால் வந்த அச்சமா? இல்லை ஏற்கெனவே அவளுக்கு இருக்கும் மாதாந்திர பிரச்சினை போல் இதுவும் வேறு ஏதும் பிரச்சினையா என்ற நினைவில் எழுந்த அச்சமா? எது என்று அவனுக்குப் புரியவில்லை.

அந்த நொடி அவனின் மனம் கலங்கியிருந்தது மட்டும் உண்மை... ஆனால் அப்போது அவனுக்குத் தெரியவில்லை... இது இரண்டும் அவனின் அச்சத்திற்குக் காரணமில்லை என்று. அதன் உண்மையான காரணம் அவனுக்குத் தெரிந்த போது... அதை எப்படி எதிர் கொள்வது? என்று தெரியாமல் அவன் நிலைக்குழைந்து தான் போனான்.

“அரசு... ரிசல்ட் பாசிட்டிவ்ன்னு வந்திரும்ல்ல...”

தன் கைகளைப் பிடித்தபடி கண்களில் ஆர்வத்தையும், ஏக்கத்தையும் தேக்கியபடி கேட்ட அல்லியிடம்... என்ன பதில் சொல்வது? என்று அரசுவுக்குத் தெரியவில்லை. அவனுக்குமே பரிசோதனையின் முடிவு சாதகமாக இருக்க வேண்டும் என்று மனதில் கவலையிருக்கத் தான் செய்தது.

“அம்முலு... எல்லாம் நல்லதாவே நடக்கும்...” அவளின் தோளில் கை போட்டு அணைத்து அவளை ஆறுதல் படுத்தினான்.

“ம்... ம்...” என்று முனங்கியவளின் கண்கள் பரிசோதனை கூடத்தின் மீதே இருந்தது.

அல்லியை பரிசோதனைக்காகக் காயத்ரியிடம் கூட்டி கொண்டு வந்திருந்தான் அரசு. தானாகச் சுயமாகக் கர்ப்பம் உறுதி செய்யும் கருவியில் பார்ப்பதற்கு அவனுக்கு விருப்பமில்லை. அதனால் அவளை மருத்துவமனைக்கு அழைத்து வந்திருந்தான். வந்தயிடத்தில் கர்ப்பத்தை உறுதி செய்யும் பரிசோதனையின் முடிவுக்காகத் தான் இருவரும் காத்திருந்தனர்.

“மிசஸ். அல்லிராணி...” செவிலிப்பெண் கூப்பிடவும்,

அரசு எழும்பும் முன் அல்லி ஓடி சென்று முடிவு அடங்கிய கவரை வேகமாய் வாங்கினாள். ஆர்வமாய் அதைப் பிரித்துப் பார்த்தவளின் கண்கள் கலங்கியது. அவளின் கலக்கத்தைக் கண்டவன் அவளருகில் வந்து அதைப் பார்க்க... பரிசோதனையின் முடிவு “நெகட்டிவ்” என்று வந்திருந்தது. குழந்தை பற்றிய கனவுகளில் திளைத்திருந்த அவனுக்குமே இது சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்தது.

“ரொம்ப எதிர்பார்த்தேன் அரசு...”

கண்களில் கண்ணீர் வழிய, முகத்தில் எல்லையில்லா சோகத்தைத் தேக்கியபடி அவள் வலியுடன் சொல்ல... அவளின் வலி கண்டு அவனுக்கும் வலித்தது. 'நானும் தான்...' என்று சொல்ல துடித்த நாவை மிகுந்த கஷ்டப்பட்டு அடக்கி கொண்டான். ஆனாலும் உடனடியாய் தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

"ச்சு... அம்முலு... இதுக்குப் போய் ஏன் கலங்குற? நமக்கு என்ன வயசாகியா போச்சு... இந்த முறை இல்லையென்றால் அடுத்த முறை பார்த்துக்கலாம்..." அவளுக்காக அவன் ஆறுதல் வார்த்தை சொல்ல... அவள் பதில் சொல்லாமல் அவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"சரி வா... காயூவை பார்த்திட்டு போகலாம்..."

"அதான் இல்லைன்னு ஆகிருச்சே... எதுக்கு டாக்டரை பார்க்கணும்... வேணாம் அரசு..." அவளுக்கிருந்த மனநிலையில் வீட்டிற்குச் சென்று ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது.

"எதுக்கும் உன் ஹெல்த்தை செக் பண்ணிட்டு போயிரலாம்..." என்றவனை மறுத்து பேச அவளால் முடியவில்லை.

காயத்ரி அவளைப் பரிசோதிக்கும் போது சில கேள்விகளைக் கேட்க... அதற்கு அவள் அளித்த பதில்கள் காயத்ரியையும் சற்று குழப்ப தான் செய்தது. அல்லியின் பதில்கள் எல்லாம் கர்ப்பம் அடைந்தவர்களுக்கு ஏற்படும் அறிகுறிகளைக் குறிப்பதாய் இருந்தது.

"எதுக்கும் ப்ளட் டெஸ்ட் பண்ணி பார்க்கலாம்... சில சமயம் யூரின் டெஸ்டில் தெரியாதது இதில் தெரிந்துவிடும். நீ கன்சீவா இல்லையான்னு இதில் உறுதியா கண்டுப்பிடிக்க முடியும். இதன் ரிசல்ட் வைச்சு தான் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னன்னு சொல்ல முடியும்" அல்லிக்கு ஆறுதல் கூறியவள் அவளை அடுத்தப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தாள்.

அந்தப் பரிசோதனையின் முடிவு அவர்கள் இருவரின் வயிற்றில் பாலை வார்த்தது. ஆம்... அல்லி கர்ப்பம் தரித்து இருப்பதாக அது உறுதி செய்தது.

“நான் சொன்னேன்ல அரசு... நம்ம நம்பிக்கை வீண் போகாதுன்னு...” மகிழ்ச்சியில் உற்சாகமாய்ச் சொன்னவளை... மெல்லிய தலையசைப்புடன் அவள் கூறியதை ஆமோதித்த அரசு விரிந்த புன்னகையுடன் அணைத்துக் கொண்டான்.

பரிசோதனையின் முடிவை காயத்ரியின் கையில் கொடுத்து விட்டு அவளின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தனர் அல்லியும், அரசுவும். அவர்கள் இருவரின் மகிழ்ச்சியைக் காயத்ரியின் முகம் பிரதிபலிக்கவில்லை. அவள் யோசனையுடன் கையிலிருந்த முடிவை பார்த்து கொண்டிருந்தாள்.

“அல்லி... இந்த நர்ஸ் உனக்கு வெயிட், ஹைட், எல்லாம் செக் பண்ணிட்டுக் கார்ட் போட்டு தருவாங்க... அதை வாங்கிட்டு வா...” என்று சொல்ல... ஏமாற்றம் கவிழ்ந்த முகத்துடன் அல்லி அரசுவை பார்த்துக் கொண்டே அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

காயத்ரி மகிழ்ச்சியோடு தன்னை வாழ்த்துவாள் என்று எதிர்பார்த்து இருந்தவளுக்குக் காயத்ரியின் இந்தப் பேச்சு ரசிக்கவில்லை.

‘இவளுக்கு இன்னமும் அரசு மேல் காதலிருக்கு... அதான் நான் குழந்தை உண்டானது இவளுக்குப் பிடிக்கவில்லை. அடுத்த முறை செக்கப்பிற்கு வேறு டாக்டரை தான் பார்க்க போகணும். இவள் வேணாம்...’ மனதுக்குள் சிறு பிள்ளையாய் காயத்ரியிடம் கோபித்துக் கொண்டாள் அல்லி.

“என்ன காயூ... ஏதேனும் பிரச்சினையா?” காயத்ரியின் முகம் பார்த்தே அரசு சரியாய் கணித்துவிட்டான். அவனுள் படபடப்புக் கூடியது.

“ஆம்.. அரசு...” என்றவள் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் சிறிது நேரம் மௌனம் காத்தாள்.

“அல்லிக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லையே...”

அவன் கவலை தோய்ந்த குரலில் கேட்டது காயத்ரிக்கு சுருக்கென்று உள்ளுக்குள் வலித்தது. என்ன தான் அவன் வேறு பெண்ணைத் திருமணம் செய்தாலும்... அவளின் மனதில் காதலனாய், கணவனாய் கோலோச்சி இருப்பவன் அரசு அல்லவா!

‘என்ன காயூ... நீயே இப்படிக் கலங்கலாமா? இப்போ நீ ஒரு மருத்துவர்... அதற்கு ஏற்றார் போல் நடந்து கொள்...’ தனக்குத் தானே சொல்லி தேற்றி கொண்டவள்,

“அரசு... அல்லியோட ப்ளட் ரிசல்ட்ல HCG லெவல் நார்மல் லெவலுக்குக் கீழே இருக்கு. சாதாரணமா கர்ப்பமான பெண்களுக்கு இது நார்மல் லெவலுக்கு அதிகமாய் இருக்கணும்” அவள் சொல்லும் போதே...

“அதனால அல்லிக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லையே...”

குழந்தையைப் பற்றிக் கூடக் கேட்காமல் தன் மனைவியைப் பற்றி மட்டும் கேட்கும் அவனின் காதல் கண்டு அவளுக்குச் சிறிது பொறாமையாகக் கூட இருந்தது. அதிலும் அவன் முகத்தில் தெரிந்த பதட்டம் அவளுக்கு ஆச்சிரியமாய் இருந்தது. அவளுக்குத் தெரிந்த வரை அரசு எதற்கும் பதட்டப்பட மாட்டான். எதையும் பொறுமையும், நிதானமுமாய்ச் செய்து முடிப்பான்.

“ரிலாக்ஸ் அரசு... எதுக்கும் இன்னும் இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும் ப்ளட் டெஸ்ட் பண்ணி பார்ப்போம்... ஒருவேளை அதில் நார்மலா இருந்தால் பிரச்சினை இல்லை... நாளான்னைக்கு இதே நேரம் அல்லியை ப்ளட் டெஸ்ட்க்கு கூட்டிட்டு வாங்க... மனசை தளர விடாதீங்க... நம்பிக்கையுடன் இருங்க...” அவனுக்கு ஆறுதல் சொன்னவளை பார்த்து அவன் வெறுமெனே தலையசைத்தான்.

அதற்குள் அல்லியும் வந்துவிட இருவரும் வீட்டிற்குக் கிளம்பினர். காரில் வரும் போது அல்லி சலசலவெனப் பேசி கொண்டே வர, அவன் தனக்குள் யோசனையில் மூழ்கியிருந்தான். காயத்ரி அல்லி குழந்தை உண்டாகி இருக்கிறாள் என்று நம்பிக்கை வார்த்தை அளிக்கவில்லை... அதேசமயம் குழந்தை உண்டாகவில்லை என்றும் சொல்லவில்லை... அப்போ அவள் என்ன தான் சொல்ல வருகிறாள்? என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை. அவனுக்கு மிகுந்த குழப்பமாய் இருந்தது.

“அரசு... நான் பாட்டுக்கு பேசிக்கிட்டு இருக்கேன்... நீ பேசாம வர... அப்படி என்ன யோசிச்சிட்டு இருக்க...” அவனின் கையைப் பிடித்து அவள் உலுக்க...

“ஆங்... என்ன சொன்ன அம்முலு...” ஏதோ கனவில் இருந்து முழித்தவனைப் போல் அவன் முழிக்க... அவள் விசித்தரமாய் அவனைப் பார்த்தாள்.

“அரசு உனக்கு என்னவாச்சு? இரு இரு... நம்ம பையன் வெளியில் வந்ததும் உன்னை உதைக்கச் சொல்றேன்... அம்மா உன்னைப் பத்தி பேசிட்டு வர்றேன்... அப்பா அதைக் கவனிக்காம வர்றாங்கன்னு அவன் கிட்ட போட்டுக் கொடுக்கேன் பாரு...” ஆள்காட்டி விரலை ஆட்டியபடி மிரட்டியவளை கண்டு அவன் தன் கவலை மறந்து சிரித்துவிட்டான்.

“ம்... இது தான் என் அரசு...” என்று அவன் இடக்கையின் மீது சாய்ந்தவள்,

“ஏன் அரசு... அடுத்தச் செக்கப்புக்கு வேற டாக்டர் கிட்ட காண்பிக்கலாமா? இந்தக் காயத்ரி வேணாம்...”

“ஏண்டா... அவள் நல்லா தானே பார்க்கிறாள்”

“நான் குழந்தை உண்டானதுக்கு அவள் ஒரு விஷ் கூடப் பண்ணல அரசு...”

அதைக் கேட்டதும் அவன் முகம் மாறியது. ஒருவேளை அது குழந்தையே இல்லையோ என்ற நினைவு அவனுக்குள்

எழுந்ததும் அவனுக்குக் குப்பென்று வியர்த்தது.

“என்ன அரசு... நான் சொல்லிட்டு இருக்கேன்... ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிற...” அவன் பதில் பேசாமலிருப்பது அவளுக்கு எரிச்சல் வந்தது.

“காயூவும் பேமஸ் கைனகாலஜிஸ்ட் தான் அம்முலு... அதுவும் இல்லாமல் தெரிந்தவளும் கூட... எந்தச் சந்தேகமானாலும் கேட்டு தெரிஞ்சிக்கலாம்...” அவன் சொல்ல சொல்ல...

“சரி...”

மெதுவே முனங்கியவள் தனக்கு அதில் சம்மதமில்லை என்பதைத் தெளிவாய் உணர்த்தினாள். ஆனால் யோசனையில் மூழ்கியிருந்தவனோ அதைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் பின்னால் வர போகும் பல பிரச்சினையைத் தவிர்த்திருக்கலாம்.

இரண்டு நாள் கழித்து மீண்டும் ரத்த பரிசோதனை செய்து... அதன் முடிவை எடுத்துக் கொண்டு இருவரும் மீண்டும் காயத்ரியை சந்தித்தனர். அல்லியின் முகத்தில் அவ்வளவாய் மலர்ச்சி இல்லை. மீண்டும் இவளிடமா காண்பிக்க வேண்டும் என்று அவளுக்குக் குமுறலாக இருந்தது.

“வாங்க...” முக மலர்ச்சியுடன் இருவரையும் வரவேற்ற காயத்ரி பரிசோதனை முடிவை வாங்கிப் பார்த்தவள் புருவம் இரண்டும் யோசனையில் சுருங்கியது.

‘ம்ஹூம்... இவளுக்கு அப்படி என்னத்தான் கடுப்போ? எப்ப பாரு... மூஞ்சியைத் தூக்கி வச்சிட்டு...’ எரிச்சலுடன் நினைத்த அல்லி அரசுவின் காதில்,

“இதுக்குத் தான் சொன்னேன்... இப்போ நீயே பாரு... அவ முகத்துல கொஞ்சமாவது சந்தோசம் இருக்கா?” அவனோ காயத்ரி என்ன பதில் சொல்ல போகிறாளோ? அல்லிக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்ற கவலையில் இருக்க...

அந்த நேரத்தில் அல்லி பேசிய பேச்சு அவனுக்கு ரசிக்கவில்லை.

“கொஞ்ச நேரம் பேசாமலிரு அல்லி...”

எப்போதும் அம்முலு என்பவன் இப்போது அல்லி என்றது மட்டுமில்லாமல் கோபப் படுகிறானே என்று அல்லி மனதுக்குள் அவனைத் திட்டி தீர்த்தாள்.

“எதுக்கும் ஸ்கேன் பண்ணி பார்த்திரலாம்...”

காயத்ரியின் குரலில் கொஞ்சம் கவலை எட்டி பார்த்ததோ? அது எதையும் அல்லி உணரவில்லை. அவள் பாட்டிற்கு அரசு மேலுள்ள கோபத்தில் உம்மென்று இருந்தாள். அரசுக்கு அல்லியை வைத்துக் கொண்டு காயத்ரியிடம் வேறு எதுவும் கேட்கவும் முடியவில்லை.

“அல்லி நல்லா தண்ணி குடிச்சிட்டு... ஒன் அவர் கழிச்சு ஸ்கேனிங் ரூமுக்கு வா...” காயத்ரி சொன்னதுக்குத் தலையை ஆட்டிவிட்டு அவள் வெளியில் செல்ல... ஒரு நொடி தாமதித்த அரசு...

“காயூ எதுவாக இருந்தாலும் நேரே சொல்லிவிடு... எனக்கு அல்லியை விடக் குழந்தை முக்கியமில்லை... இதனால் அவளுக்கு ஏதும் ஆபத்து என்றால் எனக்கு இந்தக் குழந்தையே வேணாம்...” சொல்லும் போதே அவன் கண்கள் கலங்கியது. அதைக் காயத்ரியும் கண்டு கொண்டாள்.

“எந்தப் பிரச்சினையும் இருக்காது... நீங்க கவலைப்படாதீங்க அரசு...”

காயத்ரி கூறியதும் சிறிது நம்பிக்கை வரப் பெற்றவனாய் அவன் வெளியேற... காயத்ரிக்கு அவனைக் கண்டு பாவமாயிருந்தது.

அரசுவுக்குப் பொய்யாய் வாக்கு கொடுத்த தன் நிலையை எண்ணி மனதுக்குள் சபித்தாள் அவள். ஏனெனில் இன்றைய பரிசோதனை முடிவிலும் அல்லியின் ரத்தத்தில்

HCGயின் அளவு கர்ப்பம் அடைந்த பெண்களுக்கு அதிகரிப்பது போல் அதிகரிக்கவில்லை. அதுவே அவளுக்குப் பெருத்த குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. நிச்சயம் இது குழந்தையில்லை என்பது மட்டும் அவளின் மருத்துவ அறிவுக்கு எட்டியது.

“டாக்டர்... குழந்தை நல்லாயிருக்கா...”

காயத்ரியுடன் தனக்கிருந்த மனஸ்தாபம் கூடக் குழந்தை பற்றிக் கேட்கும் ஆர்வத்தில் பின்னுக்குத் தள்ளப்பட... கண்கள் மின்ன ஆர்வத்துடன் அல்லி கேட்க... அவளின் ஆர்வம் கண்டு காயத்ரிக்கு கூடக் கண்கள் கலங்கிவிட்டது.

அவள் என்னவென்று கூறுவாள்... ‘நீ கர்ப்பம் உண்டாகிய பகுதி தவறான பகுதி... அது கர்ப்பப் பை இல்லை... கர்ப்பப் பைக் குழாய் என்பதை நீ எப்படித் தாங்குவாய்?’

அவள் அனுபவத்தில் இது போல் நிறையப் பேரை பார்த்திருக்கிறாள்... அவர்களுக்குச் சிகிச்சையும் அளித்திருக்கிறாள். ஏனோ இன்று முதன்முறையாக அல்லியை நினைத்து அவள் மனம் கலங்கியது. ஒருவேளை அது அரசுவின் குழந்தை என்பதால் கூட இருக்கலாம்.

“ம்... நல்லாயிருக்கு...”

பொய்யாய் பதிலுரைத்த காயத்ரி அல்லியின் கன்னம் தட்டி சிரித்தாள். எடுத்த உடன் அல்லியின் உடல்நிலையைப் பற்றி முகத்தில் அடித்தார் போன்று சொல்ல வேண்டாம் என்று அவள் நினைத்தாள். ஏனெனில் குழந்தை உண்டாகி இருக்கிறோம் என்று மகிழ்ச்சியில் திளைத்திருப்பவளிடம் போய் இந்த மாதிரி கூறுவதை அவள் விரும்பவில்லை. ஆனால் சொல்லித்தான் ஆக வேண்டும். சொல்லாமல் மறைக்க மறைக்க அது விபரீதத்தில் தான் கொண்டு போய் முடியும்.

முதலில் அரசுவிடம் சொல்வோம்... அவன் பக்குவமாய் அல்லியிடம் எடுத்து சொல்லட்டும் என்று அவள்

நினைத்தாள். அந்த நினைவு தான் அரசு மற்றும் அல்லியின் வாழ்க்கையில் விபரீதத்தைக் கொண்டு வர போகிறது என்பதைக் காயத்ரி அந்நேரம் உணரவில்லை.

“அல்லி நீ ட்ரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வா...” காயத்ரி அல்லியிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்தவள் அரசுவிடம்,

“அல்லியை வீட்டில் விட்டு விட்டு உடனே இங்கே வாங்க... நான் உங்க கிட்ட தனியா பேசணும்...” அவள் சொன்னதுமே அரசுவுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

“அல்லிக்கு ஏதும்...” அவன் இழுக்க...

“அதைப் பத்தி பேச தான் வர சொல்றேன்...” என்றவள் அல்லி வருதை கண்டு பேச்சை நிறுத்தி கொள்ள... அவனும் தன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு எழுந்தான்.

அல்லியை வீட்டில் விட்டு விட்டு வேகமாய் மருத்துவமனை அடைந்தவன் நேரே காயத்ரியை பார்க்க செல்ல... அவளோ மற்ற நோயாளிகளைப் பார்க்க சென்றிருந்தாள். அவளுக்காக அவன் அரை மணி நேரம் காத்திருந்தான். அவன் காத்திருந்த ஒவ்வொரு மணித்துளியும் அவனுக்கு நரகமாய் இருந்தது. அல்லிக்கு என்னவாய் இருக்கும் என்ற கேள்வியே அவன் தலையைக் குடைந்தது.

அடுத்த அரைமணி நேரத்தில் அங்கு வந்த காயத்ரி அவனைப் பார்த்து புன்னகைத்தபடி, “உள்ளே வாங்க அரசு...” என்றழைக்க... அவளைப் பின் தொடர்ந்து அவளின் அறைக்குள் சென்றான்.

“ப்ளீஸ் காயூ... என்ன பிரச்சினைன்னு சொல்லு... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு”

“கொஞ்சம் பிரச்சினை தான் அரசு... அதை எப்படிச் சொல்றதுன்னு தான் தெரியல... இதைச் சொல்ல எனக்கு வருத்தமா தான் இருக்கு... அதுக்காகச் சொல்லாமலும் இருக்க முடியாது...” என்று பீடிகையுடன் ஆரம்பித்தவளை அச்சத்துடன் பார்த்தான் அரசு.

“சாதாரணமா எல்லாப் பெண்களுக்கும் கருவானது கர்ப்பையில் தான் வளரும்... ஆனால் அல்லிக்கு அது கர்ப்பைப்பை குழாயில் வளர்ந்திருக்கிறது. அதாவது நார்மலா கருவுற்ற முட்டை சூலகத்திலிருந்து கர்ப்பப்பை குழாய் வழியா கர்ப்பப்பைக்குப் போய்ச் சேரும். ஆனால் அல்லியின் விசயத்தில் அது கர்ப்பப்பைக் குழாயில் தங்கிவிட்டது தான் பரிதாபம்...”

அவள் பேசும் போதே இடையில் குறுக்கிட்டவன், “இதனால் அல்லிக்கும் ஏதும் பாதிப்பு வருமா?” அவனின் குரலில் கவலை நிரம்பி வழிந்தது.

“நிச்சயம் இது அல்லியின் உயிருக்கு கூட ஆபத்தை விளைவிக்கலாம்...” அவளின் பேச்சில் அவன் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போனான்.

“இப்போதைக்கு அல்லிக்கு எந்தவொரு வலியும் இல்லை... அதனால் கவலை கொள்ளத் தேவையில்லை. இப்போதே அதுக்கான சிகிச்சையை எடுத்துக் கொண்டால் பயமில்லை. இதுவே காலம் தாழ்த்த தாழ்த்த கர்ப்பப்பை குழாய் வெடித்து அவளின் உயிருக்கு தான் ஆபத்தாய் முடியும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அல்லியிடம் விசயத்தைச் சொல்லி அவளைச் சிகிச்சைக்கு அழைச்சிட்டு வாங்க...” என்றவளிடம் உயிரற்ற உடலாய் விடை பெற்றுக் கொண்டு வெளியில் வந்த அரசுவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

யாருமில்லாத இடத்திற்குச் சென்று ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஆனால் எங்கே செல்வது என்று தெரியாமல் அலுவகத்துக்கு வந்தவன் நேரே தன் அறைக்குச் சென்றான். அங்கே கழிவறையினுள் சென்று கதவை பூட்டி கொண்டவன் குழாயை திறந்து விட்டு அதிலிருந்து வழிந்த நீரை முகத்தில் வேகமாய் அடித்துக் கொண்டான். அவன் முகத்திலிருந்து வழிந்த நீருடன் அவனின் கண்ணீரும் கலந்து கீழே வடிந்தது. தண்ணீர் விட்டு கழுவ கழுவ அவன் கண்ணில் இருந்து கண்ணீரும் விடாமல் வழிந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்திற்கு மேல்

தாங்க முடியாமல் தலை பிடித்துக் கொண்டு அப்படியே கதவில் சாய்ந்து நின்றான்.

‘கடவுளே... உனக்குக் கண்ணில்லையா? ஏன் இப்படியொரு நிலையை எனக்குக் கொடுத்தாய்? எல்லோரையும் போல் குழந்தை வேண்டும் என்று கனவு கண்டது எங்கள் தப்பா? எத்தனை ஆசையாய் இருந்தாள் குழந்தை வேண்டுமென்று... இதை எப்படி நான் என் அம்முலுவிடம் சொல்லுவேன்? சொன்னால் அவள் தாங்குவாளா? அவள் கஷ்டப்படுவதைப் பார்க்கும் சக்தி எனக்கு இல்லையே...’ கண்களில் கண்ணீர் வழிய பைத்தியக்காரன் போல் வெகுநேரம் அப்படியே நின்றிருந்தான்.

காலில் ஈரமாய் ஏதோ படுவதை உணர்ந்தவன் தன்னுணர்வுக்கு வர... வாஷ்பேசினில் நீர் நிறைந்து கீழே வழிந்து கழிவறை முழுவதும் பரவியிருந்தது. வேகமாய்க் குழாயை மூடியவன் வெளியில் வந்தான். தன் இருக்கையில் அமர்ந்து யோசித்தவன் வேறுவழியில்லாமல் கனத்த மனதுடன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

“அரசு... வந்துட்டியா... உன் கிட்ட ஒண்ணு சொல்லணும்ன்னு இருந்தேன்... நீயே வந்துட்ட...” உற்சாகமாய் வரவேற்ற அல்லியை பார்த்து வெறுமனே புன்னகைத்தவன் என்ன என்பது போல் பார்த்தான்.

“இந்த இடத்தில சுருக்கு சுருக்கு தைக்கிற மாதிரி ஒரு பீலிங் இருக்கு... ஒருவேளை குழந்தை அசையுதோ? ஆனால் இப்போவேவா? உன் குழந்தை தானே... உன்னைப் போல் சுறுசுறுப்பாய் இருக்கோ என்னமோ? நல்லவேளை என்னைப் போல் சோம்பேறியாய் இல்லை” என்றவள் அவளின் இடது வயிற்றின் அடிப்பகுதியை சுட்டி காண்பிக்க... காயத்ரி சொன்னது அவன் காதில் ஒலிக்க அவன் முகம் வெளிறிப் போனது.

“எப்போ இருந்து இப்படியிருக்கு...?” அவன் பதட்டமாய்க் கேட்க...

“எதுக்கு இவ்வளவு பதட்டப்படுற அரசு...?” அவனை அவள் நிதானப்படுத்த,

“விளையாடாதே அம்முலு... பதில் சொல்லு?” கொஞ்சமும் பதற்றம் குறையாமல் கேட்டவனை அவள் கூர்மையாய் பார்த்தாள்.

“என்ன அரசு? என்னவானது உனக்கு?”

“அது வந்து... அம்முலு...” தடுமாறியவன்... எப்படியும் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று, “நீ நினைப்பது போல் இது கர்ப்பம் இல்லை... இது...” என்றவன் காயத்ரி சொன்னது அனைத்தையும் ஒன்று விடாமல் கூறியவன்,

“எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு அம்முலு... உடனே ஹாஸ்பிட்டல் போவோம்... வா...” அவள் கைப்பிடித்து அழைக்க... அவளோ நின்ற இடத்தில் அசையாமல் வேரூன்றி போய் அப்படியே நின்றிருந்தாள்.

“ப்ளீஸ் அம்முலு சொன்னால் கேளு... உன் நல்லதுக்குத் தான் சொல்றேன்...” அவன் விடாப்பிடியாய் கெஞ்ச... அவனின் கைகளை உதறித் தள்ளியவள் அவனை உக்கிரமாய்ப் பார்த்தாள்.

“நினைச்சேன் அரசு... நான் குழந்தை உண்டானதுக்கு அந்தக் காயத்ரி சந்தோசப்படாமல் இருக்கும் போதே நினைச்சேன்... அவளுக்கு என் மேல் பொறாமைன்னு... அப்போவே எனக்குத் தெரியும்... அவள் இந்த மாதிரி கதை கட்டிவிடுவாள்ன்னு... அது எப்படி அரசு... ரிசல்ட் பாசிட்டிவ்... ஸ்கேனிங்ல பேபி நல்லா இருந்தது... அப்போ அது எல்லாமே பொய்யா? அவ தான் ஏதோ கதை சொன்னாள்ன்னா உனக்கு எங்கே புத்தி போச்சு அரசு...? உன்னிடம் நான் இதை எதிர்பார்க்கவில்லை அரசு” அவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனுக்குள் கோபத்தைக் கிளப்பியது. ஆனாலும் அவளுக்காய் அடக்கி கொண்டான்.

“லூசுத்தனமாய்ப் பேசாதே அம்முலு... அவள் எதுக்கு வீணா பொய் சொல்லணும்? புரியாமல் பேசாதே... சரி காயூ வேணாம்... வேற டாக்டர் கிட்ட போய்க் காண்பிக்கலாம் வா... அவங்களும் இதே சொன்னால் எங்களை நம்புவியா?” அவன் கேட்டதும் தான் தாமதம்...

“ஓஹோ... எங்களை ரொம்ப நல்லாயிருக்கு... அப்போ நீயும் அவள் கூட உடந்தையா? என் குழந்தையைக் கொல்லுவதற்கு அவளுடன் சேர்ந்து எத்தனை நாளாய் திட்டமிட்ட அரசு...? உனக்கு என் மேல் தான் அன்பில்லை. என் வயிற்றில் வளரும் உன் குழந்தை மீதுமா அன்பில்லை. எப்படி அன்பிருக்கும் பணத்துக்காக மிரட்டி என்னைக் கல்யாணம் பண்ணியவன் தானே நீ... நீ பொய் சொல்ற... என் குழந்தை நல்லா தான் இருக்கு... நீ சொல்றதை நான் நம்ப மாட்டேன்... உனக்குக் காயத்ரியை கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு ஆசையிருந்தா அவளைப் பண்ணிக்கோ... ஆனால் என் குழந்தையை ஒண்ணும் பண்ணிடாதே... எனக்கு என் குழந்தை வேணும்... வேணும்...”

ஆவேசமாய்க் கத்தியவள் அப்படியே மடங்கி அமர்ந்து அழ ஆரம்பிக்க... அவனின் பத்து வருட மாசில்லா காதலை ஒரு நொடிக்குள் சந்தேகித்து ஒன்றுமில்லாததாய் செய்துவிட்டாள் அவனருமை மனைவி.

அவனோ அவளின் வார்த்தைகள் எனும் இடி தாக்கத்தில் இருந்து மீள முடியாதவனாய் அப்படியே இறுகி போய் நின்றிருந்தான். எதற்காக அவன் இவ்வளவு நாள் பயந்தானோ அந்த வார்த்தைகளை அவள் வாயினாலே அவன் கேட்டுவிட்டான். காதலில்லா வாழ்க்கை நிலைக்காது என்பதை அவள் அவனுக்கு உணர்த்திவிட்டாள்.

‘அரசு இதுக்கே இப்படி இடிஞ்சு போயிட்டேன்னா எப்படி? அவளிடம் நீ வாங்கிக் கட்டி கொள்வதற்கு இன்னமும் இருக்கு? அவள் இப்படிப் பேசுவது உனக்குப் புதுசா என்ன? வேறு யார் பேசுறாங்க... உன் மனைவி தானே... பேசினால் பேசிவிட்டு போகட்டுமே... உன் மீது எல்லையில்லா அன்பு வைத்திருப்பவள் ஏதோ கோபத்தில் பேசுவதை எல்லாம் நீ கணக்கில் எடுத்து கொள்வாயா? போ... அவளிடம் சமாதானமாய்ப் பேசி அவளைச் சிகிச்சைக்குச் சம்மதிக்க வை... தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் அவளின் உயிர் ஆபத்தில் இருக்கிறது என்பதை மறந்துவிடாதே... உனக்குக் காரியம் பெரியதா? வீரியம் பெரியதா?’ தனக்குத் தானே பேசி தன்னைத் தேற்றி கொண்டவன் அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தான்.

“அம்முலு... சொன்னால் கேளும்மா... நான் சொல்வது அத்தனையும் சத்தியமான உண்மை. உன் வீண் பிடிவாதத்தால் உன்னோட உயிருக்கு நீயே உலை வைத்துக் கொள்ளாதே. எழுந்திரு... ஹாஸ்பிட்டல் போகலாம்...” சிறு குழந்தைக்குச் சொல்வது போல் எடுத்து சொல்லியவன் அவளைத் தொட வர... அவனின் கைக்கு எட்டாத தூரத்திற்குப் பின்னால் நகர்ந்தவள்,

“என் உயிர் போனாலும் பரவாயில்லை... நான் உன்னோடு ஹாஸ்பிட்டல் வர மாட்டேன்... என் குழந்தையைக் கொல்ல நினைக்கும் கொலைக்கார பாவி நீ... உன்னோடு நான் வரவே மாட்டேன்...” கத்தியவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்.

“ப்ளீஸ் அம்முலு...” கெஞ்சி கேட்டு இறைஞ்சியவனைக் கண்டு அவள் கொஞ்சமும் இரங்கவில்லை. அவளின் பிடிவாதம் கண்டு அவனுள் பயம் எழுந்தது.

“ப்ளீஸ்டா... உன் காலை பிடிச்சுக் கேட்கிறேன்... என்னோடு ஹாஸ்பிட்டல் வா...” என்றவன் அவள் சற்றும் எதிர்பாராதவிதமாய் அவளின் காலை பிடித்து வேண்ட...

அவனின் இந்தச் செயலில் அவள் அதிர்ந்து தான் போனாள். அதே அதிர்வுடன் அவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்ணில் அவனின் கலங்கிய கண்கள் தென்பட... அவளின் மனம் ஒரு நொடி அவனுக்காய் பாகாய் உருகியது.

கம்பீரமான ஆண் மகன் தன் மனைவியே என்றாலும் ஒரு பெண்ணின் காலில் விழுவது என்பது நம் சமூகத்தில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத... ஒவ்வாத ஒன்று. ஆனால் அரசு தன்னுடைய ஆண் என்னும் அகங்காரத்தை மனைவியின் உயிரை காக்க வேண்டி துறக்க... அவனின் அந்தச் செயல் அவளின் மனதை சற்று அசைக்கத் தான் செய்தது.

'உனக்குக் கணவன் பெரியதா? உன் குழந்தை பெரியதா? அவன் உன் குழந்தையை அழிக்க வந்த எமன்... அவனின் பேச்சை நீ கேட்காதே... காரியமாக வேண்டுமென்றால் காலையும் பிடிப்பார்கள் என்பதை நீ கேள்விப்பட்டது இல்லையா? அதைத் தான் அவன் செய்து கொண்டிருக்கிறான்'

அவளுள் ஒரு குரல் எழுந்து அவனின் செயலை தயவு தாட்சண்யம் பார்க்காமல் நிராகரிக்கச் சொல்லியது. கணவனின் அன்பை பிள்ளை பாசம் வென்றது.

அவனின் பிடியிலிருந்து தன் கால்களை விடுவித்துக் கொள்ள அவள் போராட... அவளால் அது முடியவில்லை. அவனின் செயல் அவளின் கண்களில் மேலும் கண்ணீர் ஊற்றைப் பெருக்கியது.

"ப்ளீஸ் அரசு... தயவுசெய்து என் காலை விடு... எந்த ஜென்மத்தில் நான் என்ன பாவம் செய்தேனோ... இந்த ஜென்மத்தில் அதற்கான கஷ்டத்தை அனுபவிக்கிறேன்... இப்போ நீ என் காலை பிடித்து என் பாவத்தை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்யாதே... ப்ளீஸ்..." அவளின் வார்த்தையில் தன் கைகளில் ஏந்தியிருந்த அவளின் பாதத்தை நொடியில் விடுவித்தான்.

“நீ சொன்ன உடனே... நான் கேட்டேன் இல்லையா? அது போல் நான் சொல்றதையும் நீ கேளேன்...”

“மாட்டேன்... ம்ஹூம்... முடியாது...” என்றவள் அவன் முகம் பார்க்க விரும்பாமல் முழங்காலில் தன் முகத்தைப் புதைத்து கொண்டாள்.

“உனக்கு என்ன தான்டா வேணும்? ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிற?” என்றவனின் மூளையில் பளிச்சென்று மின்னல் வெட்டியது.

“அம்முலு... நான் உன்னைக் காதலிக்கவிலைன்னு தானே உனக்க மிகப் பெரிய குறை... இப்போ சொல்றேன் கேட்டுக்கோ... நான் உன்னைத் தான் காதலிக்கிறேன்... அதுவும் பத்து வருடமா உன்னை நான் காதலிக்கிறேன்... இனி வரும் காலம் முழுமையும் உன்னைக் காதலிப்பேன்...” உள்ளத்து ஒட்டுமொத்த காதலையும் தன் குரலில் உணர்த்தியவன் அவளை ஆவலாய் பார்த்தான்.

அவளாய் வந்து காதலை சொல்லும் போது தான் தன் மனதின் காதலை அவளிடம் சொல்ல வேண்டும் என்று அவனின் இத்தனை நாள் சபதத்தைக் கூட அவளின் உயிருக்காய் அவன் அதைத் தூக்கியெறிந்தான். ஆனால் அதைக் கொஞ்சமும் உணராது அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தது.

“ச்சீ... நீ இவ்வளவு தானா அரசு... உன்னைப் பத்தி நான் எவ்வளவு உயர்வாய் நினைத்திருந்தேன் தெரியுமா? ஆனால் உனக்குக் காரியமாவதற்காகப் பொய்யாய் காதலிக்கிறேன்னு சொல்றியே... காதல் என்பது எவ்வளவு புனிதமான ஒரு உணர்வு தெரியுமா? அதைப் போய் இப்படிக் கேவலப்படுத்துறியே. உனக்குக் கொஞ்சமும் மனசாட்சி இல்லையா?”

இத்தனை தூரம் அவன் இறங்கி வந்து கெஞ்சியும் அவனின் அன்பை கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல் தன் மனசாட்சியைக் குழி தோண்டி புதைத்து வைத்து விட்டு...

அவனைப் பார்த்து மனசாட்சி இல்லையா? என்று அவள் ஆவேசமாய்க் கேட்டாள்.

அல்லிக்கு எப்படிப் புரிய வைப்பது? என்று புரியாமல் ஒரு கணம் திகைத்தவன் நேரே தன் அம்மாயிடம் ஓடினான். பெரியவள் ஓய்வாய் நாற்காலியில் அமர்ந்திருக்க... அவரின் காலடியில் ஓடி சென்று அமர்ந்தவன், “அம்மாயி...” என்று கூவி கொண்டே அவரின் மடியில் முகம் புதைத்தான்.

பெரிவருக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னவோ ஏதோவென்று அவனைப் பார்க்க... அவனோ நிமிர்வதாய் இல்லை. அவனின் முதுகு குலுங்கியதில் இருந்து அவன் அழுகிறான் என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது. அவருக்குத் தெரிந்து அவரின் பேரன் எதற்கும் கலங்க மாட்டான்.

அன்று அல்லிக்காக அவளின் பெற்றோரிடம் அடி வாங்கிய போதும் அவன் சிறிதும் கலங்கவில்லை. அதையும் அழகாய் கம்பீரமாய்த் தான் எதிர் கொண்டான். அதே போல் வியாபாரத்தில் தோல்விகள் சில வந்த போதும் அவன் கண் கலங்கவில்லை... ஒற்றை ஆளாய் தைரியமாய் அதைச் சமாளித்து நின்றானே தவிர இது போல் அவன் கலங்கவில்லை. இவ்வளவு ஏன் அவன் அன்னை இறந்த செய்தி கேட்ட போது கூட அவன் கண்கள் கலங்கவில்லை. சிறிது நேரம் இறுகி போய் இருந்தவன் அடுத்தடுத்துக் காரியங்கள் செய்வதில் தன் கவனத்தைத் திருப்பியவன் மறந்தும் அழவில்லை. அப்படிப்பட்டவன் இன்று அழுகிறான் என்றால்...???

“அரசு... என்னப்பா... ஏன் அழுற?” அவனின் தலையைக் கோதி அவர் அவனை ஆறுதல் படுத்த... அவரை நிமிர்ந்து பார்த்தவன்,

“உங்க பேபிம்மா...” அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிய அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

“இப்படி அழற அளவுக்கு என்ன நடந்தது அரசு... பேபிம்மாவுக்கும், உனக்கும் ஏதும் பிரச்சினையா? இந்த மாதிரி சமயத்தில் அவளை நீ நல்லா வச்சிருக்கணும் அரசு”

“அய்யோ அம்மாயி... உங்க கிட்ட இதை எப்படிச் சொல்வேன்...?” என்றவன் வேறுவழியின்றி அல்லியின் உடல்நிலையை அவரிடம் விளக்கி சொல்ல...

“அய்யோ... பேபிம்மா...” நெஞ்சில் கையை வைத்தபடி அவர் அப்படியே அதிர்ந்து போனார்.

“இப்போ ஹாஸ்பிட்டல் கூப்பிட்டா வர மாட்டேங்கிறா... என் மேல் கோபப்படுறா... நீங்க வந்து அவளிடம் பேசுங்க அம்மாயி...” அவன் சொன்னதும் தான் தாமதம் அவர் உடனே எழுந்து, அவனை அழைத்துக் கொண்டு அவனின் அறைக்குச் சென்றார்.

“பேபிம்மா...” லக்ஷ்மியம்மாவின் அழைப்பில் விலுக்கென்று நிமிர்ந்தவள், “ஆயாம்மா...” என்று கதறிக் கொண்டு அவரின் மடியில் விழுந்து அழுதாள் அல்லி.

“பேபிம்மா... அரசு சொல்றதை கேளும்மா... அவன் உன் நல்லதுக்குத் தான் சொல்லுவான்...”

“இல்லை ஆயாம்மா... அவனை நீங்க நம்பாதீங்க... அவன் பொய் சொல்றான். என் குழந்தைக்கு ஒண்ணுமில்லை. அது நல்லா தான் இருக்கு...” அழுது கொண்டே அவள் கூற...

“பேபிம்மா... அரசு எதுக்காகப் பொய் சொல்லணும்...? அவனுக்கு உன் மேல் கொள்ளை பிரியம் இருக்கு... அதை நீ புரிஞ்சிக்கணும் பேபிம்மா...”

“ஆயாம்மா... நீங்க எதைச் சொன்னாலும் நான் கேட்கிறேன்... ஆனா... ஆனா... இதை மட்டும் நீங்க சொல்லாதீங்க... என்னால் தாங்க முடியல. எனக்கு இருக்கும் ஒரே ஆதரவு நீங்க மட்டும் தான்... நீங்களும் அவன் கூடச் சேர்ந்திட்டு என்னைக் கைவிட்டுறாதீங்க...” அவளின் அழுகை கூடி கொண்டே போக... பெரியவள் இயலாமையுடன் அரசுவை பார்க்க... அவள் அழுவதைக்

காண சகிக்காமல் அவன் கண்களை இறுக மூடி கொண்டான்.

அல்லியின் மனம் முழுவதும் எப்பாடு பட்டாவது தன் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே ஓட... அவளுக்கு அரசு சொல்வதோ... பெரியவள் கூறுவதோ எதுவுமே அவள் காதில் ஏறவில்லை. இந்தக் குழந்தை அவளுடையது மட்டுமல்ல... அது அவனுடையதும் கூட என்பதை ஏனோ அந்தக் கணம் மறந்தாள்.

அல்லியின் பிடிவாதத்தை மீறி அரசுவால் அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. அவன் காயத்ரிக்கு அழைத்துப் பேச... அல்லிக்கு ஏதேனும் வலி வந்தால் உடனே மருத்துவமனைக்கு அழைத்து வர சொன்ன காயத்ரி... அல்லிக்கு எந்தப் பாதிப்பும் வராமல் தான் பார்த்துக் கொள்வதாக வாக்குறுதி கொடுக்கவும் தான் அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது.

இரவு தூங்குவதற்காக அறைக்குள் நுழைந்த அரசு அங்கே அல்லியை காணாது அதிர்ந்தான். எங்கே போனாள்? என்று பதட்டத்துடன் அவன் வெளியில் வர... பக்கத்து அறையில் விளக்கு எரிவதை கண்டு நிம்மதியுற்றவனாய் அங்கே சென்றான். அவன் அறைக்குள் நுழைவதை கண்ட அல்லி வேகமாய் அவன் அருகில் வந்து,

“இங்கே எதுக்கு வந்த? முதல்ல இங்கிருந்து போ...” அறையில் வாயிலை நோக்கி கையைக் காண்பிக்க... அவனுக்கோ அவளை எப்படித் தனியாய் விடுவது? என்று பயமாக இருந்தது.

“இந்த மாதிரி நேரத்தில் நீ தனியா இருக்க வேணாம்... நம்ம ரூமுக்கு வா அம்முலு...” அவன் பணிவாய் வேண்ட...

“நான் உன் கூடப் படுக்க விரும்பல... நான் தூங்கும் போது என் குழந்தையை நீ ஏதாவது செஞ்சிடுவ...” அவள் கூறியதை கேட்டு அவனின் மனம் வலித்தது.

‘கடவுளே... குழந்தை... குழந்தைன்னு இப்படி உயிரை விடுறாளே... அது குழந்தையே இல்லைன்னு தெரிஞ்சா என்னாவாளோ?’ அப்போதும் அவளுக்காகத் தான் கவலைப்பட்டான் அந்தக் காதல் கணவன்.

ஆனால் அவனின் அன்பை புரிந்து கொள்ளும் மனநிலையில் அவள் இல்லை. அந்தளவுக்கு அவள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தாள். தான் அழகில்லை என்ற தாழ்வு மனப்பான்மை, கணவன் காதல் கொண்டு தன்னைத் திருமணம் செய்யவில்லை என்று அவள் உள்ளுக்குள் கனன்ற கோபம் எல்லாம் சேர்த்து அவளை மன அழுத்தத்திற்குத் தள்ளிவிட்டிருந்தது.

இது மாற வேண்டுமென்றால் ஒன்று அவன் தன் காதலை ஆழமாய் அவள் மனதில் உறைக்கும்படி உணர்த்த வேண்டும் இல்லை அவளாக அவனின் காதலை புரிந்து தெளிந்து அவனிடம் வர வேண்டும். இது இரண்டுமே இப்போதைக்குச் சாத்தியமாவது போல் தெரியவில்லை.

“போ அரசு...” மீண்டும் அவள் சொல்ல...

மனமே இல்லாமல் அவளைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே அவன் செல்ல... அவளோ சிறிதும் இரக்கம் காட்டாமல் அப்படியே நின்றாள். அவன் வெளியில் சென்றதும் கதவை தாளிட போனவளை தடுத்தவன்,

“நான் தான் உள்ளே வரலல்ல... அப்புறம் எதுக்குக் கதவை பூட்டுற... கதவு திறந்து இருக்கட்டும்...”

நள்ளிரவில் அவளுக்கு ஏதாவது ஒன்றென்றால் அவன் எப்படி அவளைக் காப்பான்? அதை மனதில் வைத்து சொல்ல... அவளோ முறைத்துக் கொண்டு நிற்க,

“ப்ளீஸ் அம்முலு...” அவனின் வார்த்தையில் என்ன கண்டாளோ ஒன்றும் பேசாமல் கட்டிலில் சென்று படுத்து கொண்டாள். அதை நிம்மதியுடன் பார்த்தவன் அந்த அறைக்கு வெளியில் சோபாவை இழுத்து போட்டு அங்கேயே படுத்தான். படுத்தவனின் கண்கள் முழுவதும்

அவள் மீதே நிலைத்திருந்தது. அவளோ அவனைச் சிறிதும் சட்டை செய்யாமல் படுத்தவுடன் தூங்கிவிட்டாள்.

நள்ளிரவில் அவனையும் அறியாமல் அவன் கண் அசரும் போது... வலியால் முனங்குவது போன்ற அவளின் குரல் அவனின் காதில் ஒலிக்க... சட்டென்று கண்களைத் திறந்தவன் வேகமாய் அவளருகே ஓடினான். அவன் நினைத்தது போல் அவள் வலியில் தான் அனத்தி கொண்டிருந்தாள்.

“அம்முலு என்ன செய்யுது?” அவனின் பதற்ற குரலில் கண்களைத் திறந்தவள் தன் வலியை அவனுக்குக் காட்டி கொள்ளாமல் அவனை வெறித்துப் பார்த்தாள்.

“சொல்லுடா... வயிறு வலிக்குதா?” அதற்கும் அவள் பேசாமலிருக்க...

“ப்ளீஸ் சொல்லு அம்முலு... என்னைத் தண்டிக்கிறதா நினைச்சு... உன்னை நீ தண்டிச்சிறாதே...” அவனின் இந்தக் கெஞ்சலுக்கும் அவள் கொஞ்சமும் அசரவில்லை. அவளுக்கு வலித்த போதும் அதைப் பல்லை கடித்துப் பொறுத்து கொண்டாள்.

“உனக்கு என்ன குழந்தை தானே வேணும்... இந்தக் குழந்தை போனால் என்ன... நாம இது போல் ஆயிரம் குழந்தை பெத்துக்கலாம்... ஆனா அதுக்கு நீ உயிரோடு இருக்கணும் அம்முலு... சுவர் இருந்தால் தான் சித்திரம்... ப்ளீஸ் புரிஞ்சுக்கோ... இன்னமும் என் மனசு உனக்குப் புரியலையா?”

“எத்தனை குழந்தை பெத்தாலும் என் முதல் குழந்தை போல் வருமா? அதை அழிக்க நினைக்கிற நீ ராட்சன்...” அவனைப் பார்த்து உரக்க பேசியவள் தன்னை மறந்து வலியில், “அம்மா...” என்று கத்திவிட்டாள்.

அதற்கு மேல் அவன் சிறிதும் தாமதிக்கவில்லை. தன் இரு கைகள் கொண்டு அவளைச் சிறு குழந்தை போல் அவன் தூக்க... அவளோ அவனுடன் செல்ல மறுத்து துள்ளினாள்.

அவளை அடக்கியபடி அவன் மாடிப்படியில் இறங்க... அதிக வலி கொடுத்த துன்பத்தில் அவளின் எதிர்ப்பு மெல்ல குறைய அவன் கையில் அப்படியே அவள் சோர்ந்து போய்த் தொய்ந்தாள்.

அந்த நிலையிலும் அவனுடன் ஒன்ற மறுத்தவளாய் முகத்தை மறுபக்கமாய்த் திருப்பிக் கொள்ள... அன்றொரு நாள் அவன் அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் போது அவள் தன் நெஞ்சில் முகம் புதைக்க... கழுத்தில் அவள் கைகள் மாலையாகக் கோர்க்க அவனுடன் ஒன்றியிருந்த தருணம் இப்போது அவனுக்கு நியாபகத்தில் வந்து அவனுக்கு வேதனையளித்தது.

வீட்டின் வாயிலுக்கு வந்தவன் எந்நேரமும் அங்கேயே இருக்கும் காரோட்டியை கார் எடுக்கச் சொல்லிவிட்டு... வீட்டில் வேலை செய்யும் வர்ஷினியிடத்தில் அம்மாயிடம் சொல்ல சொல்லி சொன்னவன் காரில் அல்லியை அமர வைத்து... தானும் அவளுடன் சேர்ந்து ஏறிக் கொண்டான். போகும் போதே காயத்ரிக்கு அழைத்து அல்லியை மருத்துவமனைக்கு அழைத்து வரும் விசயத்தைச் சொல்லியவன் சிகிச்சைக்கான ஏற்பாட்டைக் கவனிக்கச் சொன்னான். அப்போது வலியில் அரட்டிய அல்லியை பார்த்தவன் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொள்ள... ஏனோ அவளும் அதை எதிர்க்கவில்லை. அந்த நிலையில் அவனின் அணைப்பு அவளுக்குத் தேவையாயிருந்ததோ என்னமோ?

பிள்ளை பெறாமலேயே பிள்ளை பெறுவதற்கான அத்தனை வலியையும் தாங்கினாள் அல்லி. அவளுக்குப் புரிந்தது போனது தற்போது தன் வயிற்றில் தன் குழந்தை உயிரோடில்லை என்று... அந்த நினைவே வயிற்று வலியை விட அதிகமாய் அவள் மனதை வலிக்கச் செய்ய அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவள் வலியில் துவண்டு போய் அழுவதைக் கண்டு அவனுக்கும் கண்கள் கரித்தது. அவள் அருகிலேயே அமர்ந்து அவளின் கையைப் பிடித்து ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தான் அவன். அவன் அவளை ஆறுதல் படுத்தினானா? இல்லை அவளிடம்

அவன் ஆறுதல் தேடினானோ... அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

“கொஞ்சம் நேரம் பொறுத்துக்கோ அம்முலு... காயூ இப்ப வந்திருவா...” அந்த நேரத்தில் காயத்ரியின் பெயரை கேட்டதும் அல்லிக்கு வேப்பங்காயாய்க் கசந்தது.

காயத்ரி வந்ததும் செவிலிப்பெண் அவளைச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதற்காக ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்துக் கொண்டு செல்ல... அரசு அவளின் கையைப் பிடித்து, “பயப்படாதே... நான் இருக்கேன் அம்முலு...” என்று ஆறுதல் படுத்த...

“கடைசியில் நீ ஜெயிச்சுட்ட அரசு... நீ நினைச்சதை சாதிச்சுட்ட... உன்னோட கெட்ட நினைப்பு தான் என் குழந்தையைக் கொன்னுருச்சு அரசு... இனி... இனி... நமக்குள் எதுவுமில்லை... எல்லாம் முடிந்தது...” அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னவள் அவன் முகத்தைப் பார்க்க பிடிக்காமல் கண்களை மூடி கொள்ள...

அங்கிருந்த செவிலிப்பெண் ஸ்ட்ரெச்சரை தள்ளி கொண்டு போக... அரசுவின் கைப்பிடியில் இருந்த அல்லியின் கைகள் பிரிந்து செல்ல... உயிரற்ற உடலாய் அங்கிருந்த சுவற்றில் சாய்ந்தான் அவன். அதான் அவள் தன் வார்த்தை என்னும் கத்தியால் அவனை உயிரோடு கொன்று விட்டாளே...

‘என்ன வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறாய் அம்முலு... எல்லாம் முடிந்ததா? உன்னைப் பொருத்தவரையில் அப்படி இருக்கலாம்... ஆனால் என்னைப் பொருத்தவரை...???’ வேதனையுடன் நினைத்தவன்...

அடுத்தக் கணம் அவளுக்கு என்னவானதோ? அவள் எப்படி இந்த வலி, வேதனையைத் தாங்கிக் கொள்ளப் போகிறாளோ? என்று மனதுக்குள் அவளுக்காக வருந்தியவன் முகம் சொல்லொண்ணா துயரத்தை தாங்கியிருந்தது.

****

சத்திர சிகிச்சை முடிந்து அறைக்குள் கொண்டு வரப்பட்ட அல்லியின் நிலை கண்டு அவன் உயிரோடு செத்து விட்டான். இந்த நிலையில் அவளைக் கண் கொண்டு அவனால் பார்க்க முடியவில்லை. அம்மாயியும் விசயம் கேள்விப்பட்டு அங்கே வந்துவிட... அவரின் வருகை அவனுக்குச் சற்றுத் தெம்பை அளித்தது.

அல்லியின் நிலையைக் கேள்விப்பட்ட தாஸ் தன் மனைவி தேன்மொழியை அதட்டி கிளப்பி அவளை அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். வேண்டா வெறுப்பாய் வந்த தேன்மொழி அந்த அறையின் ஓரமாய் நின்று கொண்டாள். இது எதையும் கவனிக்கும் மனநிலையில் அரசு இல்லை. அவனின் கண்கள் எல்லாம் அல்லியின் மீதே இருந்தது.

திடுமென அவளிடம் அசைவு தெரிய அவளருகே வந்தவன், "அம்முலு எப்படியிருக்க?" அவளின் தலையைக் கோதி அவன் பரிவாய் கேட்க... அந்த நிலையிலும் அவனிடம் முகத்தைத் திருப்பினாள் அவன் அன்பு மனைவி அல்லி. இதைத் தேன்மொழியின் கண்கள் குறித்துக் கொண்டது.

"பேபிம்மா... எப்படியிருக்க...?" லக்ஷ்மியம்மாவின் குரலில் அவர் பக்கம் பார்த்தவள் புன்னகைத்தாள்.

'நல்லாயிருக்கேன்...' என்பது போல் தலையசைத்தவள்...

அரசுவின் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. அவளின் நடவடிக்கை தேன்மொழிக்கு அதிசயமாய் இருந்தது. கொஞ்ச நாட்களாய் ஓருயிர் ஈருடல் போல் ஒட்டி கொண்டு திரிந்தவர்கள் இன்று இப்படி விலகி நிற்பது அவளின் கண்ணை உறுத்தியது. அதிலும் அரசு ஒட்டி ஒட்டி வர... அல்லி விலகி விலகி போவதை சுவாரசியமாய்ப் பார்த்தவள் மனதில் ஒரு திட்டம் பளிச்சிட்டது.

வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாய் தேன்மொழி அல்லியின் தாய் பொற்கொடிக்கு அழைத்தாள். மறுமுனையில் அவர் எடுத்ததும் தன்னை

அறிமுகப்படுத்திக் கொண்டவள்... விசயத்தைச் சுருக்கமாய் விளக்கி சொல்லிவிட்டு,

“அல்லியின் மனம் மாறுவதற்குள் நீங்க வந்தீங்கன்னா... உங்க மகளை உங்களுடன் கூட்டிக்கிட்டு போகலாம்...” தேன்மொழி சொல்ல...

“எங்க மகளை வாழ்றதுக்குத் தான் கல்யாணம் பண்ணி கொடுத்திருக்கிறோம்... எங்க வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வந்து வாழாவெட்டியாய் வச்சிக்கிறதுக்கு இல்ல...” அவளின் பேச்சுக்குச் சம்மதிக்காமல் விட்டுக் கொடுக்காமல் பேசினார் பொற்கொடி. அதேசமயம் மகளின் உடல்நிலையைக் குறித்துக் கவலை தெரிவிக்க மறந்தும் போனார். அதிலேயே அவரின் மனநிலையைக் கணித்துவிட்டாள் தேன்மொழி.

“உங்களைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்... உங்களைப் பத்தி நான் வெளியில் விசாரிச்சிட்டு தான் உங்களுக்கு ஃபோன் பண்ணினேன். அன்னைக்கு விருந்தில் வச்சு உங்க மக கிட்ட நீங்க பேசியதை நான் கேட்க தான் செய்தேன். அதனால் கொஞ்சம் ஒளிவு மறைவு இல்லாமல் நேரிடையாய் நாம் பேசலாமா?” தேன்மொழி அவரின் குண இயல்புகளைப் பட்டென்று போட்டு உடைக்க... அதில் மூக்குடைந்து போனார் பொற்கொடி.

“சரி என்ன செய்யணும் சொல்லு...” வேண்டா வெறுப்பாய் அவர் கேட்க...

“ஒண்ணும் செய்ய வேணாம்... உங்க பொண்ணைக் கூட்டிட்டுப் போனா போதும்...”

“அவளை இங்கே கூட்டிட்டு வந்து நாங்க என்ன செய்ய?” என்று கேட்டவர், “என் மகளை அங்கிருந்து துரத்துறதுல உனக்கு என்ன அவ்வளவொரு வேகம்?”

“உங்க மகளை உங்களோட அனுப்பி வச்சிட்டு என் தம்பிக்கு எனக்குப் பிடிச்ச மாதிரி நல்ல பெண்ணாய் பார்த்து

வேறொரு கல்யாணம் பண்ணி வைப்பேன்” தான் மனதில் நினைத்ததை அப்படியே சொன்னாள் தேன்மொழி.

“என்னது...? என் மகள் உயிரோடு இருக்கும் போது உன் தம்பிக்கு இரண்டாவது கல்யாணம் பண்ணி வைப்பியா? அவனுக்கு எல்லாம் ஒரு கல்யாணமே அதிகம்... இதில் இரண்டாவது வேறா?” வெகுண்டார் பொற்கொடி.

“ஹலோ... என் தம்பியை தேவையில்லாமல் பேசும் வேலையை வச்சுக்காதீங்க...” என்று அவரை எச்சரித்தவள்,

“நான் சொல்ல வர்றதை முழுசாய் கேட்டுட்டு பேசுங்க... நீங்க உங்க பொண்ணைச் சும்மா கூட்டிட்டு போக வேணாம்... ஜீவனாம்சம்ங்கிற பேரில் பெரிய தொகையாய் என் தம்பியிடம் இருந்து நான் வாங்கிக் கொடுக்கிறேன். இப்போ சொல்லுங்க உங்களுக்கு ஓகேவான்னு?” தேர்ந்தெடுத்த வில்லியாய் பேரம் பேசினாள் தேன்மொழி.

தங்களை அவமானப்படுத்திய அரசுவை பதிலுக்கு அவமானப் படுத்துவதற்குச் சரியான சந்தர்ப்பம் இது என்று பொற்கொடி வஞ்சகமாய் நினைத்தார். வேலைக்கார நாய் அவனுக்கு அவ்வளவு திமிர் இருந்தால்... பிறந்ததில் இருந்து பணத்தில் புரளும் தான் எந்தவிதத்தில் சளைத்தவள்? என்ற போட்டி மனப்பான்மை மனதில் எழ... அரசுவை மண்டியிட வைக்கத் தன் மகளை ஆயுதமாகப் பயன்படுத்த எண்ணினார். அது மட்டும் இல்லாமல் கை நிறையப் பணத்தை அள்ளலாமே என்ற நினைவில்... ஒரு கல்லில் பல மாங்காய்களை அடிக்க அவர் திட்டமிட்டார். ஏனோ மகளின் வாழ்க்கையைத் தான் அழிக்க நினைக்கிறோமே என்பது மட்டும் அவரின் நினைவுக்கு உறைக்கவே இல்லை.

“எனக்கு ஓகே...” என்றவர் மறுநாளே மகளைப் பார்க்க கண்டியிலிருந்து கொழும்புவிற்கு வந்துவிட்டார். அவரின் வருகை உணர்ந்து தேன்மொழியும் அங்கே வந்து விட்டாள்.

“என் மகளை இப்படிப் பார்ப்பதற்குத் தானா உனக்குக் கல்யாணம் பண்ணி வச்சோம்... பூவாய் இருந்த என்

மகளை இப்படிக் கிழிந்த நாராய் ஆக்கிட்டியே...” அரசுவை பார்த்துக் குற்றம் சுமத்தியவர்... மகளின் அருகில் அமர்ந்து அவளை அணைத்துக் கொண்டார்.

‘இவ்வளவு நாள் இல்லாத பாசம்... இப்போ என்ன திடீர்ன்னு... இந்தம்மா என்ன கலகம் பண்ண வந்திருக்கோ தெரியலையே... சும்மாவே அம்முலு சாமியாடுவா... இதில் கூடச் சேர்ந்தாட ஆள் கிடைச்சா சும்மா விடுவாளா?’ அவன் யோசனையுடன் பொற்கொடியை பார்த்தான்.

யாருமில்லாத அநாதை போல் மனதுக்குள் துக்கப்பட்டுக் கொண்டிருந்த அல்லிக்கு அன்னையின் வருகை சற்று ஆறுதல் அளித்தது. அவளும் “அம்மா...” என்று அழுது கொண்டே அவரை அணைத்து கொண்டாள். ஒருவித வெற்றி சிரிப்புடன் பொற்கொடி அரசுவை பார்த்தார். அவரின் பார்வையின் அர்த்தம் புரியாமல் அரசு தான் குழம்பி போனான்.

அல்லியை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போது தான் அவர் பார்வையின் அர்த்தம் முழுதாய் அவனுக்குப் புரிந்தது. புரிந்த விசயமோ அவனுக்கு அதிர்ச்சியை அளித்தது. அதாவது அல்லி பொற்கொடியுடன் கண்டிக்கு செல்ல முடிவெடுத்திருந்தாள். ஏனோ அல்லிக்கு அரசுவை விட்டு சற்றுத் தூரம் தள்ளி போக வேண்டும் என்று தோணியது.

இப்போது அவள் இருக்கும் மனநிலையில் அவனின் வீட்டிற்குச் செல்வதோ, அவனின் பணத்தில் உட்கார்ந்து சாப்பிடுவதோ நடக்கும் காரியமாய்த் தெரியவில்லை. அந்தளவுக்கு அரசு என்ற வார்த்தையே அவளுக்குக் கசந்தது. அவளின் இந்த முடிவு தேன்மொழிக்கு இனிப்பாய் இனித்தது.

“அம்முலு... சொன்னால் கேளு... நீ எங்கேயும் போக வேணாம்... இங்கேயே இரு... நான் உன் கண்ணில் படக் கூடதுன்னா... நான் முன்னால் வரவே இல்லை. நீ இங்கே நம் வீட்டில் தான் இருக்கணும். உனக்கு எந்தப் பிரச்சினையும் வராமல் நான் பார்த்துக்கிறேன்... அம்மாயி

நீங்களாவது அவளிடம் சொல்லுங்களேன்... போக வேணாம்ன்னு” அல்லியிடம் கெஞ்சியவன்... அம்மாயியை பரிதாபமாய்ப் பார்த்தான்.

“பேபிம்மா... நான் உன்னை நல்லா பார்த்துக்கிறேன்... என் கூட வாம்மா...” பெரியவள் அவளின் தாடையைப் பற்றிக் கண் கலங்க கேட்க... அதைக் கண்டு அவளுக்குமே கண்ணைக் கரித்தது.

“ஆயாம்மா... உங்களை விட்டுப் போறது எனக்குக் கஷ்டமா தான் இருக்கு. ஆனா எனக்கு... இப்போ கொஞ்சம் இடம் மாற்றம் தேவை...” என்றவளின் வார்த்தைகளை அவரால் மறுக்க முடியவில்லை. ஏற்கெனவே உடலாலும், உள்ளத்தாலும் புண்பட்டிருக்கும் அவளை மேலும் கஷ்டப்படுத்த அவர் விரும்பவில்லை.

“அரசு... அவளை விட்டு விடப்பா... பேபிம்மா உடல் சரியானதும் நம்ம வீட்டுக்கு வந்துவிடுவாள்” என்று சொன்ன அம்மாயிடம், ‘இனிமேல் அவள் இங்கே வர போவதில்லை என்பதை நான் எப்படி உங்களிடம் சொல்லுவேன் அம்மாயி...’ மனதுக்குள் குமுறியவன் அவளைப் போக விடாமல் தடுப்பதில் முனைந்தான்.

“நல்லா இன்னொரு முறை யோசிச்சு பாரு அம்முலு... நீ இல்லைன்னா நான் உயிரோடு செத்து போவேன்... என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா?” மீண்டும் அவன் கெஞ்ச,

“அரசு... இதுயென்ன புது ட்ராமா... இனியும் நீ பேசுவதை நம்ப நான் தயாராயில்லை. நான் இல்லைன்னா நீ உயிரோடு செத்து போவாயா? ஆனா நான்... நீ இருக்கும் இடத்தில் இருந்தால் உண்மையில் மூச்சு முட்டி செத்து போவேன். நீ என்னைப் போக விடலைன்னா நான் என் உயிரை மாய்த்து கொள்ளவும் தயங்க மாட்டேன்...” அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் உறுதியாய் சொல்லியவளை திகைப்புடன் பார்த்தவன்... அவளின் முடிவை தடுக்க முடியாமல் செயலற்று போய் நின்றிருந்தான்.

அதன் பின் அல்லியின் முடிவுப் படி அவள் கிளம்புவதற்கான ஏற்பாடுகளை அவனே கனத்த மனதுடன் செய்து முடித்தான். மருத்துவமனை அறையை விட்டு அவள் வெளியில் செல்லும் போது அவள் கைப்பிடித்துத் தடுத்தவன், மற்றவர்களிடம்,

“ஒரு நிமிசம் வெளியில் வெய்ட் பண்ணுங்க...” என்றவன் அவர்களை அனுப்பிவிட்டு அறைக் கதவை மூடியவன்,

அடுத்தக் கணம் அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவள் அவனின் அணைப்பிலிருந்து விடுபடப் போராட... அவன் அதற்கு வழி கொடுக்கவே இல்லை. ஒரு கட்டத்திற்கு மேல் அவள் உடலிலும் போராட தெம்பில்லாததால் அப்படியே அவன் அணைப்பில் உணர்வற்ற மரமாய் நின்றிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து அவளை விடுவித்தவன் அவள் முகத்தைத் தன் இரு கைகளில் தாங்கி முகம் முழுவதும் முத்தமிட்டவன்... கடைசியாக அவளின் நெற்றியில் அழுந்த முத்தமிட்டு...

“உனக்காக நான் காத்திருப்பேன் அம்முலு...” அவன் அவளைப் பார்த்து சொல்ல...

“நீ எனக்காய்க் காத்திருக்க வேணாம்... நான் உன்னிடம் வரப் போவதும் இல்லை... இனி உன் வழி வேறு... என் வழி வேறு...”

விறைப்பாய் பதிலுரைத்தவள் அறைக் கதவை திறந்து கொண்டு வெளியில் போக... அவள் வேகத்திற்கு அவளின் உடல் ஒத்துழைக்க மறுக்க... தடுமாறி கீழ விழப் போனவளை அவன் தாங்க வந்தான். அவள் அவனின் கைகளை விலக்கி விட்டு சுவற்றைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள். அவனுக்கு மனதில் வருத்தம் எழுந்த போதும் ஒன்றும் பேசாமல் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவளை வழியனுப்ப வந்த காயத்ரி, “அல்லி... உடம்பை பார்த்துக்கோ...” என்று அக்கறையுடன் சொல்ல அதை

வெறுப்புடன் கேட்டு கொண்டவள் வெறுமனே தலையசைத்து விட்டு காரிலேறினாள்.

அவள் தன்னைப் பார்க்க மாட்டாளா? என்ற நப்பாசையுடன் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருக்க... அவள் லக்ஷ்மியம்மாவிடம் கையசைத்து விடை பெற்றவள் மறந்தும் அவனைத் திரும்பி பார்க்கவில்லை. அவளின் இந்தப் புறக்கணிப்பை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் அதையும் அவளுக்காய் தாங்கி கொண்டவன் கண்கள் கலங்க கார் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான். கை நழுவிய அவனின் சொர்க்கம்... மீண்டும் அவனின் கை வந்து சேரும் நாள் எந்நாளோ...???

“இமையே இமையே விலகும் இமையே
விழியே விழியே பிரியும் விழியே
எது நீ எது நான் இதயம் அதிலே
புரியும் நொடியில் பிரியும் கணமே
பனியில் மூடிப்போன பாதை மீது வெயில் வீசுமா...
இதயம் பேசுகின்ற வார்த்தை உந்தன் காதில் கேட்குமா”

நள்ளிரவில் உறக்கம் கலைந்து எழுந்த அல்லிக்குத் தாகம் எடுக்க அருகில் படுத்திருந்த அன்னையைப் பார்த்தாள். அவரோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். இன்று அவளைக் கவனிக்கும் வேலைக்கார பெண் வராததால் அவர் இங்கே அவளுக்குத் துணையாக வந்து படுத்திருந்தார்.

“அம்மா... அம்மா...” என்று அவள் பல முறை கத்தி எழுப்பிய பின் மெதுவே கண் விழித்தவர்,

“என்னடி...?” அவரின் குரலிலிருந்த எரிச்சலில் அவளுக்கு எதுவுமே கேட்க தோன்றவில்லை.

“எழுப்பி விட்டுட்டு பேசாமயிருந்தா என்ன அர்த்தம்?”

“எனக்குக் குடிக்க ஏதாவது வேணும் போல இருக்கும்மா...” மெதுவான குரலில் கூறியவள் அன்னையின் முகத்தைப் பாவமாகப் பார்க்க... அதைக் கண்டும் கூட அந்தத் தாய்க்கு சிறிதும் இரக்கம் வரவில்லை.

“இதுக்குத் தான் இப்படிப் பாதி ராத்திரியில் எழுப்பினியா? உன் பக்கத்துல இருக்கிற பிளாஸ்க்கில் பால் இருக்கு எடுத்து குடி...” கோபத்துடன் மொழிந்தவர் மீண்டும் படுத்து விட்ட தூக்கத்தைத் தொடர்ந்தார்.

அல்லியால் எழ கூட முடியவில்லை... மீண்டும் அன்னையை எழுப்பினால் அவர் திட்ட கூடும் என்றுணர்ந்து மெல்ல படுக்கையை விட்டு இறங்கியவள் பக்கத்தில் இருந்த மேஜையிலிருந்த பிளாஸ்க்கை எடுத்தாள். அதிலிருந்த பாலை ஊற்றி ஒருவாய் குடித்தவள், ‘தூ’வென்று துப்பினாள். பால் கெட்டுப் போயிருந்தது. அதை அப்படியே வைத்து விட்டு படுத்தவளுக்குப் பசியில் உயிர் போனது.

கண்டிக்கு வந்து மூன்று நாட்கள் தான் ஆகிறது. இந்த மூன்று நாட்களில் அவளுக்கு நரகத்தையே காட்டி விட்டார் அவள் அன்னை. வீட்டிற்கு அழைத்து வந்ததிலிருந்து வேலைக்கு ஆள் வைத்து அவளைப் பார்த்து கொண்டவர்

மறந்தும் அவளைப் பக்கத்திலிருந்து கவனித்துக் கொள்ளவில்லை. ஒரு நாளுக்கு ஒரு தடவை தான் அவளை வந்து எட்டி பார்த்துவிட்டு போவார். வேறு எந்தத் தேவைகளையும் அவள் வேலை செய்யும் பெண்ணின் மூலமா தான் அவரிடம் கேட்க முடியும்.

தாய் இப்படி என்றால் தந்தையோ அதற்கும் மேல்... வந்த அன்று பார்த்ததோடு சரி... அதன் பின் அவள் அவரைப் பார்க்கவே இல்லை. கேட்டதற்குத் தொழில் சம்பந்தமாக வெளியில் சென்றிருக்கிறார் என்ற பதிலே வந்தது. அவள் பிறந்ததிலிருந்து அவள் தாய், தந்தை அப்படித்தான் இருந்தார்கள்... அவள் தான் அவர்களின் குணத்தைக் கணிக்கத் தவறிவிட்டாள். திருமணத்துக்குப் பின் தான் அவர்களின் குண இயல்புகள் ஒவ்வொன்றாய் அவளின் கண்ணிற்குத் தென்பட ஆரம்பிக்கிறது.

அதிலும் அரசுவின் அன்பில் சுகமாய் இருந்தவளுக்குத் தாய், தந்தையின் நடத்தை மிகவும் உறுத்தியது. அவர்கள் அவள் மேல் அன்பாயில்லை என்பது வெகு தாமதமாய் அவள் அறிவுக்குப் புரிந்தது. அவர்களின் குணம் தெரிந்தும் தான் இங்கு வந்திருக்கக் கூடாது என்று அவள் மனம் வருந்தினாள். காலம் கடந்து வருந்துவதில் எந்தப் பயனும் இல்லையே...

அவளுக்குப் பசியில் மயக்கம் வருவது போலிருக்க வேறுவழியின்றி அருகிலிருந்த நீரை குடித்துத் தன் பசியைப் போக்கி கொண்டாள். வீடு நிறைய ஆட்கள் இருந்தும், சமையலறை முழுவதும் உணவு பண்டங்கள் இருந்தும் அவளுக்குப் பசியறிந்து உணவு கொடுக்க யாருமில்லை. ஏனோ அவளுக்கு அரசுவின் பரிவான பணிவிடைகள் ஞாபகத்திற்கு வந்து கண்கள் கரித்தது.

அன்றொரு நாள் அவளுக்கு உடல்நலம் சரியில்லாத போது அவன் அவளைக் கவனித்துக் கொண்டதை நினைத்தவளுக்குக் கண்கள் கலங்கியது. எப்படி ஒரு தாய் போல் அவளைத் தாங்கினான்... அவளின் பசியறிந்து, தேவையறிந்து அவளை ஒரு குழந்தை போல் பார்த்துக்

கொண்டான். அதை எல்லாம் எண்ணி பார்த்தவளுக்கு அந்த நொடியில் அவனின் அருகாமை, அரவணைப்பு எல்லாமும் வேண்டுமென்று அவளின் மனம் ஏங்கியது.

‘அரசு... நீ எனக்கு வேணும்டா... இங்கே எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு... என்னைக் கூட்டி கொண்டு உன்னோடு போயிரு...’ தனது ஆழ்மனதின் ஏக்கத்தின் வெளிப்பாட்டை அழுகையில் கரைத்தவள் கொஞ்சம் கொஞ்சமாய் நிதானத்துக்கு வந்தாள்.

‘அல்லி உனக்குக் கொஞ்சமும் கூடச் சூடு, சொரணை என்பது இல்லவே இல்லையா? உன் குழந்தையை வேண்டாமென்று சொன்னவன்... அவன் நினைத்தது மாதிரியே அதுவும் அழிந்து போச்சு. உன் குழந்தையின் அழிவிற்குக் காரணமான அவனிடம் நீ அன்பை எதிர்பார்க்கிறாயா? இதற்கு மேலும் அவன் உனக்கு வேண்டுமா?’ அவளின் மனசாட்சி கேள்வி கேட்க...

அதற்குப் பதில் சொல்ல முடியாமல் அவளுக்கு மீண்டும் அழுகை பொங்கியது. அவளின் மனம் அவன் வேண்டுமென்றது... ஆனால் அவளின் அறிவு அவன் வேண்டாமென்று தடை சொன்னது. மனதோடும், அறிவோடும் நடத்திய போராட்டத்தில் மிகவும் களைத்து போனவளாய் அப்படியே தூங்கி போனாள்.

மறுநாள் காலையில் பொற்கொடி பளபளவென்று பட்டுப்புடவை அணிந்து கண்ணாடியின் முன் நின்று கொண்டு உதட்டிற்குச் சாயமிட்டவாறு,

“அல்லி... நான் நாயகம் அண்ணன் வீட்டுக்கு விசேசத்துக்குப் போறேன்... இன்னைக்கும் வேலைக்காரி வரல... அதனால உன் வேலைகளை நீயே செஞ்சிக்கோ... இன்னும் இரண்டு நாள் தான் வேலைக்காரி வந்துடுவா... கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ...” என்று சொல்ல... அதைக் கேட்ட அல்லி முகத்தைச் சுளித்தாள்.

பெற்ற பெண் உடல் சரியில்லாமல் இருக்கும் போது அவளைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்ளாமல்

இப்படி அலங்காரம் பண்ணி கொண்டு போகும் அன்னையைக் கண்டு வெறுப்பாய் இருந்தது அவளுக்கு. அவரிடம் ஒன்றும் பேசாமல் அவள் அமைதி காக்க... அவரோ அவளைக் கண்டு கொள்ளாமல் அறையை விட்டு வெளியேறினார். அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. தனக்குப் பெற்றோரும் சரியில்லை... கணவனும் சரியில்லை என்ற கழிவிரக்கத்தில் அவளின் அழுகை இன்னமும் கூடி கொண்டே போனது. தேற்றுவதற்குக் கூட ஆளில்லாமல் தனக்குள் அழுதே கரைந்தாள்.

****

அரசு பகல் பொழுது முழுவதும் தொழில் தன் மனதை செலுத்தி அல்லியின் நினைவில் இருந்து வெற்றிகரமாக மீண்டவன்... இரவில் அவளின் நினைவில் தவிக்கத் தான் செய்தான். அவனுக்குமே தன்னைக் குறித்து ஆச்சிரியமாகத் தான் இருந்தது. அவள் அப்படி எடுத்தெறிந்து பேசியும் தான் ஏன் அவளையே சுற்றி சுற்றி வருகிறோம் என்று அவனுக்குமே புரியாத புதிராகத் தான் இருந்தது. அவள் என்ன தான் அவனை வெறுத்தாலும் அவனால் அவளை வெறுக்க முடியவில்லை. அந்தளவுக்கு அவனைக் காந்தம் போல் கவர்ந்து ஈர்த்தாள் அவள்.

அவளின் நினைவுகளில் மூழ்கியிருந்தவனின் கைகள் தன்னிச்சையாய் சிகரெட் பாக்கெட்டை எடுத்து அதிலிருந்து ஒரு சிகரெட்டை உருவியது. அதை லைட்டரால் பற்ற வைத்து வாயின் அருகில் கொண்டு போனவன்... அன்று அல்லி அவனைப் புகைப்பிடிக்கக் கூடாது என்று சொல்லி அவனை வம்பிழுத்தது ஞாபகம் வர... மனம் கனக்க அதை அணைத்து தூர எறிந்தான். எங்குத் திரும்பினாலும் அவள் ஞாபகம்... எதை எடுத்தாலும் அவளின் எண்ணம் என்று அவனின் ஒவ்வொரு அணுவிலும் கலந்து அவனை இம்சை செய்தாள் அல்லிராணியான அவனின் இம்சைராணி.

இன்றோடு அவனும் அவளும் பிரிந்து ஒரு மாத காலம் ஓடிவிட்டது. இடையில் ஓரிரு முறை அவளைப் பார்க்க சென்றான். அவளின் பெற்றோர் அவளைப் பார்க்கவே

விடவில்லை. சரி பார்க்க தான் முடியவில்லை தொலைப்பேசியிலாவது அவளை அழைத்துப் பேசலாம் என்றால் அவனின் எண் என்று தெரிந்ததும் அவள் அவனின் அழைப்பை எடுப்பதே இல்லை. அவளின் பிடிவாதம் அவன் அறிந்ததே...

ஆனாலும் அவனின் மனம் அவளை விட அதிகமாய்ப் பிடிவாதம் பிடித்தது அவள் தான் தனக்கு வேண்டுமென்று... எப்படி அவளைத் தன்னிடம் வரவழைக்க என்று அவனுக்குமே புரியவில்லை. அதற்கான வழியும் அவனுக்குப் புலப்படவில்லை. அவனின் இந்த வேதனைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைப்பது போல் அவளே அவனைத் தேடி நேரில் வந்தாள்...

அல்லிக்கு அறையிலேயே அடைந்து கிடப்பது எரிச்சலாக இருக்க... கொஞ்சம் நேரம் தோட்டத்தில் உலாவி கொண்டு வரலாம் என்று நினைத்தவள் அறையை விட்டு வெளியே வந்தாள். அப்போது பெற்றோரின் அறையிலிருந்து பேச்சு குரல் கேட்க... அதில் அவளின் பெயரும், அரசுவின் பெயரும் அடிப்பட... என்னவென்று தெரிந்து கொள்வதற்காக ஆர்வத்தில் அங்கே போனவள் அவர்கள் பேசியதை கேட்டு அதிர்ச்சியடைந்தாள்.

“இன்னமும் அல்லியை ஏன் இங்கே வச்சிருக்கே... இதையே சாக்கா வச்சிட்டு அவன் இங்கே அடிக்கடி வர்றது எனக்குச் சுத்தமா பிடிக்கல...” பரமேஷ்வர் மனைவியிடம் கடுகடுத்தார். அவருக்கு அரசுவை கண்டாலே பிடிக்கவில்லை. அதைக் கேட்டு அல்லியின் முகம் சுருங்கியது. என்ன தான் அவள் அவனை வெறுத்தாலும் அவன் அவளின் கணவன் அல்லவா...!

“என்னங்க... புரியாம பேசுறீங்க... உங்க பொண்ணு ஒரு பொன் முட்டையிடும் வாத்து... அதிலும் இவளை வைத்து தான் நான் அவனைப் பழிவாங்க போறேன்... டிவோர்ஸ்ங்கிற பேரில் அவனின் சொத்துக்களை எல்லாம் பறிச்சிட்டு அவனை ஓட்டாண்டியாய் நான் ஆக்கல... என் பேரு பொற்கொடி இல்லை... இந்தப் பணத்தை வச்சிட்டு

தானே அவன் நம்ம கண்ணில் விரலை விட்டு ஆட்டினான். அந்தப் பணத்தை அவனிடமிருந்து பறிச்சிட்டா... அதுக்கு அப்புறம் அவன் பழையபடி வேலைக்காரனாவே ஆகிருவான்... எப்படி என் திட்டம்?" கொக்கரித்த பொற்கொடியுடன் சேர்ந்து,

"சூப்பர்..." என்று சொல்லி வாய் விட்டு சிரித்தார் பரமேஷ்வர். தன் பெற்றோரின் பேச்சை கேட்ட அல்லிக்கு மனசு பதறியது. இந்தளவுக்குக் கீழ்த்தரமான பெற்றோரை பார்த்ததில்லை என அவள் மனம் வெம்பியது.

இதற்கு மேலும் பெற்றோரின் வீட்டிலிருக்க முடியாமல் அவளின் தன்மானம் தலை தூக்க... அங்கிருந்து வெளியேறுவதற்கான வழியை ஆராய்ந்தாள். மறந்தும் அரசுவிடம் செல்ல வேண்டும் என்று அவள் நினைக்கவில்லை. தன் உடல்நிலையைப் பொருட்படுத்தாமல் நாலைந்து நாட்கள் அலைந்து திரிந்ததில் அதற்கான வழியையும் கண்டு பிடித்தாள். அதன் விளைவு அவள் கொழும்புவிற்கு அதாவது அரசுவின் வீட்டிற்குப் பயணமானாள்.

காலையில் அலுவலகத்துக்குக் கிளம்பி கொண்டிருந்த அரசு அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு யோசனையுடன் கதவை திறந்தான். அங்கே நின்றிருந்த அல்லியை கண்டதும் அவனுக்குத் தன் கண்களை நம்பவே முடியவில்லை. சந்தோசத்தில் தலை கால் புரியாமல்,

"வா... வா... அம்முலு... சொல்லியிருந்தால் நானே உன்னை அழைக்க வந்திருப்பேனே..." அவள் தன்னோடு சேர்ந்து வாழ தான் வந்திருக்கிறாள் என்ற நினைவில் அவன் மகிழ்ச்சியுடன் பேச...

"நான் என் சர்ட்டிபிகேட்டை எடுத்திட்டு போக வந்தேன்..."

அவன் முகம் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டு அவள் சொல்ல... எங்கே அவன் முகம் பார்த்தால் தன் மனம் மாறிவிடுமோ என்ற பயம் அவளுக்கு. அவளின் பதிலில்

அதிர்ந்து போனவனின் கால்கள் தாமாக அவளுக்கு வழி விட்டு நின்றது.

அறைக்குள் நுழைந்தவள் அலமாரியை திறந்து அவளின் மதிப்பெண் சான்றிதழை மட்டும் எடுத்துக் கொண்டு அவனிடம் ஒன்றும் பேசாமல் வெளியேற... அதைக் கண்டு அவன் மனம் கொதித்தது. கடைசியில் அவள் சொன்ன மாதிரி அவனுக்கும், அவளுக்கும் இடையில் ஒன்றுமே இல்லாதது போல் அவள் நடந்து கொண்டது அவனின் மனதை காயப்படுத்தியது. இந்த அறையில் எத்தனை காதலோடு அவனும், அவளும் வாழ்ந்தார்கள். அந்த நினைவு கூடவா அவளுக்கு எழவில்லை... அதன் தாக்கம் கொஞ்சம் கூடவா அவளுக்கில்லை. அதற்கு மேல் தாங்க முடியாமல் அவன் அவளின் கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

“உன் மனசு மாறவே மாறாதா? என்னைக் கொஞ்சமும் புரிஞ்சிக்க மாட்டியா? இல்லை புரிஞ்சிக்கக் கூடாதுன்னு கண்ணையும், காதையும் மூடிட்டு இருக்கியா? ஊர், உலகத்துல எத்தனையோ பெண்கள் இருந்தும் நான் ஏன் உன்னைத் தேடி வந்து கல்யாணம் பண்ணினேன்னு யோசிக்கவே மாட்டியா? அதுவும் உன் அப்பாவிற்குக் கடன் கொடுப்பது போல் கொடுத்து... அதைத் திரும்பக் கொடுக்காமல் இருப்பதற்காக உன்னை மணம் முடித்துக் கொடுக்கச் சொன்னேனே அது ஏன்னு யோசிக்க மாட்டியா? பணத்துக்குப் பதிலா உங்க அப்பாவோட சொத்துகளை நான் வாங்கியிருக்கலாமே... ஆனால் அதையெல்லாம் விட்டுட்டு உன்னை ஏன் கல்யாணம் பண்ண கேட்டேன்னு யோசிக்க மாட்டியா?”

“நீ என்னை எவ்வளவு உதாசீனப்படுத்தினாலும் உன் பின்னால் நான் நாய்க்குட்டி மாதிரி சுத்தி சுத்தி வந்ததுக்கு என்ன காரணம்ன்னு யோசிக்க மாட்டியா? இதுக்கு எல்லாம் மேலாய் உயிருக்கு உயிராய் வாழ்ந்திட்டு இப்படி ஒரேடியாய் கொன்னு தூக்கியெறிஞ்சிட்டு போறியே இது நியாயமா? இத்தனை நாள் உன்னோடு வாழ்ந்த கணவன் என் மீது பாசம் இல்லை... ஆனால் நேத்து முளைச்ச உன்

குழந்தை மேல் அவ்வளோ பாசம் என்ன? உன் குழந்தை.. உன் குழந்தைன்னு ஏலம் போடுறியே... அது எனக்கும் குழந்தை தான்னு உனக்கு ஏன் புரியாம போச்சு? உன்னளவுக்கு எனக்கும் மனவலி இருக்கும்ன்னு உனக்கு ஏன் தோணாம போச்சு? சொல்லு... என் கேள்விக்கு எல்லாம் பதில் சொல்லு...”

இத்தனை நாள் அவன் மனதுக்குள் போட்டு புழுங்கி கொண்டிருந்த கோபம் எல்லாம் வெடித்துக் கிளம்பியது. அவளோ அவன் கேட்கும் போது காதையும் மனதையும் இறுக முடி வைத்தவள் போல் அவனுக்குப் பதில் பேசினாள்.

“என்ன பதில் சொல்ல சொல்ற அரசு...? நம் கல்யாணமே நமக்கு முதல் கோணல்... அதன் பின் நடந்து எல்லாமே முற்றிலும் கோணல். நீ என்ன தான் காரணம் சொன்னாலும் பணத்துக்காகத் தான் என்னை நீ கல்யாணம் பண்ணிக்கிட்ட... அதிலும் உன்னை ஒரு அழகான பொண்ணு காதலிக்க... அவலட்சணமான என்னை நீ கல்யாணம் பண்ணிக்கணும்ன்னா... அது உன் பணத்தைக் காப்பாத்திக்கத் தானே... இதே இது நீ அழகாயிருந்தா அந்தக் காயத்ரியை தானே பண்ணியிருப்ப... இதுக்கு வேறு காரணம் சொல்லாதே நான் நம்பத் தயாராயில்லை... உனக்கு நான் ஒத்து வர மாட்டேன்... இனி நாம் சேர்ந்து வாழ்ந்தாலும் நமக்குள் எதுவும் ஒட்டாது... வேண்டாம் அரசு... நமக்குள் எதுவும் வேண்டாம்... என்னை விட்டுரு...” என்றவள் அவனின் கையை உதறிவிட்டு விறுவிறுவென வெளியில் வந்தாள்.

அவளின் பதிலில் திகைத்து போய் இருந்தவன் அவளின் பேச்சை அசை போட... அதில் ஒவ்வொரு வார்த்தையின் பின்னும் ஒளிந்திருந்த அர்த்தத்தை உணர்ந்தவன் கண்கள் ஒளிர்ந்தது. அதன் பின் அவன் முகத்தில் விரிந்த புன்னகையுடன் ஒருவித சந்தோச மனநிலையில் அவளைத் தேடி கீழே சென்றான். அதற்குள் அவள் அம்மாயிடம் விடைப்பெற்று வெளியில் வந்தவள் வெளி

வாயிலை நோக்கி நடக்க... அப்போது தான் அவன் கவனித்தான்... அவள் காரில் வரவில்லை என்பதை...

“காரில் வராமல் எப்படி வந்த?” என்றவனை முறைத்து பார்த்தவள்,

“கார் இல்லாதவங்க எல்லாம் எப்படிப் பிரயாணம் செய்வாங்களோ அப்படித் தான் வந்தேன்...” கிண்டலுடன் கூறியவள் மேலே நடக்க... அவளை வழி மறித்து நின்றவன்,

“அது இல்லாதவங்களுக்கு... உன் வீட்டில் காருக்கா பஞ்சம்...” என்றவன் அவளைக் கூர்மையாகப் பார்க்க...

அவள் தலையைக் குனிந்தாள். ‘இனி நானும் இல்லாதவள் தான்...’ என்பதை ஏனோ அவனிடம் அவள் சொல்லவில்லை.

“சரி வா... நான் உன்னைக் கொண்டு விடுறேன்...”

“இல்லை வேண்டாம்... வந்த எனக்குப் போகத் தெரியும்”

விடாப்பிடியாய் மறுத்தவளை வலுக்கட்டாயமாய்த் தன் காரில் ஏற்றியவன் தானும் அமர்ந்து காரை கண்டியை நோக்கி செலுத்தினான். பயணம் முழுவதும் அவளும் பேசவில்லை... அவனும் பேசவில்லை. முதன்முதலில் அவனுடன் அவள் பிரயாணித்த போது நிலவிய அமைதியே இப்போதும் அங்கே நிலவியது.

அவளுடனான பயணத்தை நீட்டிக்க விரும்பி அவன் என்ன தான் மெதுவாய் காரை ஓட்டினாலும் மூன்று மணி நேரத்தில் அவர்கள் கண்டியை அடைந்தனர். அவள் வீடு வந்ததும் அவள் இறங்க முற்பட... அவள் கைப்பிடித்துத் தடுத்தவன்,

“நீ எங்கிட்ட நிறையக் கேள்வி கேட்ட இல்ல... அதுக்கான பதிலை நீயே கொஞ்சம் யோசிச்சாலும் உனக்கே அது புரியும். ஆனால் யோசிக்கவோ இல்லை புரிஞ்சிக்கவோ நீ முயற்சி பண்ணவே மாட்டேங்கிற... அதுக்காக நான்

உன்னை இப்படியே விட்டுற முடியாது... உனக்கான பதிலோடு கூடிய சீக்கிரம் நான் உன்னை வந்து பார்ப்பேன்... அது வரை உன்னிடம் இருந்து விடை பெறுவது உன் அன்பு கணவன் அரசு...” என்று கூறியவனை அவள் புரியாமல் பார்க்க... அவளின் பார்வை என்றும் போல் அவனைக் காந்தம் போல் ஈர்க்க...

“ஐ கான்ட் கண்ட்ரோல் மைசெல்ப்... ப்ளீஸ் அம்முலு...” என்றவன் அவள் முகத்தைப் பற்றி இழுத்து அவளின் இதழோடு தன் இதழை பதித்து நீண்ட முத்தத்தை அளித்தவன் சில பல நிமிடங்கள் கழித்து அவளை விடுவிக்க... அதில் இருவருக்குமே மூச்சு வாங்கியது.

“லூசாடா நீ...” என்று அவள் கோபத்தில் கத்த,

“ஆமாம் அம்முலு... நான் லூசு தான்... உன் மேல்...” கூலாகச் சொல்லியவன் அவளைப் பார்த்து கண்சிமிட்ட...

“ச்சே...”

எரிச்சலுடன் மொழிந்தவள் காரை விட்டிறங்கி கோபத்துடன் கார் கதவை அறைந்து சாத்த... அதில் அவளின் கோபத்தின் பரிமாணத்தை உணர்ந்தவனாய் அவன் வாய் சிரித்தான். அவள் அவனைத் திரும்பி பார்க்காமல் செல்ல...

“அம்முலு...” என்று அவளை அவன் கூப்பிட... அவளோ தன்னிச்சையாய் திரும்பி பார்த்தவள்... என்னவென்பது போல் கண்களில் கேள்வியைத் தாங்கி நின்றாள்.

“பை அம்முலு... அத்தானின் வருகைக்காக வழி மேல் விழி வைத்து காத்திரு...” புன்னகை முகமாய் அவன் சொல்ல...

“ஓடி போயிரு... இனியும் இங்கே இருந்த அவ்வளவு தான்...” என்றவளை பார்த்து,

“ஓடி எல்லாம் போக முடியாது... ஏன்னா நான் காரில் வந்திருக்கிறேன்...” என்றவன் அவள் மேலும் கோபமாய்ப் பேசுவதற்கு முன் சிரித்தபடி தன் காரை கிளப்பினான்.

அவனின் செயலும், பேச்சும் அவளுக்கு ஒரு பக்கம் ஆத்திரத்தை அளித்தாலும், மறுபக்கம் அவளுக்கு ஆறுதலாய் இருந்தது என்பது என்னவோ மறுக்க முடியாத உண்மை... அவன் கார் போவதை பார்த்துக் கொண்டு ஏதோ யோசனையில் அப்படியே நின்று கொண்டிருந்தாள் அவள்.

காரின் கண்ணாடி வழியே அவள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். 'வாழ்கையில் உன்னை ஒரு முறை தவற விட்டது போல் இனி வரும் நாளில் ஒரு போதும் உன்னைத் தவற விட மாட்டேன். கூடிய விரைவில் வருகிறேன் கண்மணி... உன்னை வாழ்நாள் முழுவதும் சிறையெடுக்க...' என்று நினைத்தவனின் முகம் தீவிரமாய் மாறியிருந்தது.

அவன் நினைத்திருந்தால் அவளை வலுக்கட்டாயமாய் அவனுடன் இருக்க வைத்திருக்கலாம். அவன் என்றுமே அவளைக் கஷ்டப்படுத்திப் பார்த்ததில்லை. அவளுக்காக அவன் தன்னைத் தான் வருத்தி கொள்வானே தவிர... அவளை அவன் என்றுமே வருந்த செய்ததில்லை. அதனால் தான் அவள் அவனைக் கொடிய வார்த்தைகள் கொண்டு தாக்கிய போதும், அவனை விட்டு பிரிந்த போதும் அவன் அவளை வெறுக்கவில்லை.

இப்போதும் கொஞ்சமும் அவனின் காதலை உணராமல் இருக்கும் அவளைக் கண்டு அவனுக்கு வெறுப்பு வரவில்லை மாறாகத் தன் காதலை அவளுக்கு எப்படியாவது உணர்த்திட வேண்டுமென்ற வெறி தான் அவன் மனம் முழுவதும் ஆக்கிரமித்து இருந்தது.

“அம்மா, அப்பா... நான் உங்க கிட்ட பேசணும்” அனுமதி கேட்டு உள்ளே நுழைந்த அல்லியை புரியாமல் பார்த்தனர் பரமேஷ்வரும், அவர் மனைவி பொற்கொடியும்.

“நான் இந்த வீட்டை விட்டு போறேன்...” மொட்டையாகச் சம்பந்தமில்லாமல் பேசியவளை கண்டு பொற்கொடி பதறினார்.

“என்னடி அல்லி... திடீர்ன்னு இப்படியொரு குண்டை தூக்கி போடுற?”

“நீங்க அரசுவை பழிவாங்கியதுக்கு அப்புறம் நின்னு நிதானமா குண்டை போட சொல்றீங்களா?” இரு கைகளையும் கட்டி கொண்டு அவரை அழுத்தமாய்ப் பார்த்தாள் அவள். அவளின் பேச்சில் அவர் திகைத்துப் போய்ப் பார்க்க...

“பேபிம்மா...” என்ற தந்தையின் குரலில் அருவருப்பில் முகத்தைச் சுளித்தவள், ஒரு கையை நீட்டி அவர் மேலே பேசுவதைத் தடுத்தவள்,

“தயவுசெய்து இனிமேல் என்னை அந்த மாதிரி கூப்பிடாதீங்க... அன்புங்கிறது மனசிலிருந்து வரணும்... இப்படி வாய் வார்த்தையில் காண்பிக்கக் கூடாது... இப்போ உங்க ரெண்டு பேரோட சுயரூபம் எனக்குத் தெரிஞ்சு போச்சு. அதனால பொய்யாய் நடிக்க வேணாம்...” என்றவளை முறைத்து பார்த்த பொற்கொடி,

“என்னடி ரொம்பத் தான் வாய் நீளுது... அந்த வேலைக்கார நாய்க்கு அவ்வளவு சப்போர்ட் பண்ணுறவ எதுக்கு அவனை விட்டுட்டு இங்கே வந்த...? அவன் கூடவே குடும்பம் நடத்தியிருக்க வேண்டியது தானே...” ‘குடும்பம்’ என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து பேசியவர் நக்கலுடன் அவளைப் பார்த்தார்.

“அம்மா... இதுக்கு மேலே அரசுவை பத்தி ஏதாச்சும் பேசினீங்க... நான் மனுசியா இருக்க மாட்டேன்... எனக்கும் அவனுக்கும் ஆயிரம் பிரச்சினை இருக்கும். அதுக்காக நீங்க அவனை வாய்க்கு வந்ததைப் பேசுறதை எல்லாம் கேட்டுக்கிட்டுச் சும்மாயிருக்க என்னால் முடியாது” என்று கோபத்தில் கத்தியவள்,

“அவன் கொடுத்த பணத்துக்காகப் பெத்த பொண்ணையே விலை பேசிய நீங்க அவனைப் பேசுறதுக்குக் கொஞ்சமும் தகுதியில்லாதவங்க... அன்னைக்கு அவன் பணம் கொடுத்தப்போ உங்களுக்கு இனிச்சது... இப்போ அவனைப் பார்த்தா கசக்குதா? அப்படி என்ன அவன் மேல் உங்களுக்கு வெறுப்பு...?” அவளின் கேள்விக்குப் பரமேஷ்வர் பதில் சொல்ல வாயை திறக்க... பொற்கொடி அவரைப் பார்வையால் அடக்கினார்.

சும்மாவே அவனுக்காக இவ்வளவு பரிந்து பேசுபவள் அவன் இவளை காதலித்தான் என்று சொன்னால் கொஞ்சம் கூட ரோசம் பார்க்காமல் அவனின் காலில் போய் விழுந்து சரணடைந்து விடுவாள் தன் மகள் என்று அவருக்கு நன்கு புரிந்தது. அரசுவை விவாகரத்து என்ற பெயரில் அவமானப்படுத்த முடியாமல் போனவர் வேண்டுமென்றே தன் மகளிடம் உண்மையைச் சொல்ல முன் வரவில்லை. இதுவும் கூட அவனை ஒருவிதத்தில் பழிவாங்கியது போல் தான்... இதனால் அவரின் மகளின் வாழ்வும் பாழாகிறது என்ற நினைவு அவருக்குக் கொஞ்சமும் எழவில்லை.

“ஆனா ஒண்ணு நீங்க நினைக்கிற மாதிரி நடக்க நான் விட மாட்டேன். அவனைப் பிரிஞ்சி இருக்கணும்ன்னு நினைச்சேன் தான். அதுக்காக அவனை டிவோர்ஸ் பண்ணனும்ன்னு நான் ஒருநாளும் நினைக்கல. அவன் என்னை மனைவியா மதிக்கலைன்னாலும்... நான் அவனை என்னோட கணவனா தான் நினைக்கிறேன்... நான் சாகுற வரை அவன் தான் எனக்குக் கணவன். அதனால என்னை வச்சு அவனை ப்ளாக்மெயில் பண்ணனும்ங்கிற ஐடியாவை இத்துடன் விட்டுருங்க...

அதுக்கு நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்... நீங்க அரசுவை இவ்வளவு கேவலமா பேசியதுக்கு அப்புறமும் நான் உங்க வீட்டில் இருந்தா... நான் சோத்தில் உப்பு போட்டு சாப்பிடாத ஜென்மமாயிடுவேன். நான் வர்றேன்..." என்றவள் அவர்களின் பதிலை எதிர்பாராமல் தன் தோளில் மாட்டிய சிறிய பையுடன் அங்கிருந்து வெளியேற...

அவளின் பெற்றோரின் கண்களோ வெறுப்புடன் அவள் போவதை பார்த்துக் கொண்டிருந்தது. அன்று அவர்கள் பேச்சை கேட்ட போது நல்லவளாகத் தெரிந்த மகள்... இன்று எதிர்த்து பேசியவுடன் கெட்டவளாகி போனாள். அதனால் அவர்கள் அவளைத் தடுத்து நிறுத்தும் பணியைச் செய்யவில்லை. கொஞ்சநாள் அடிப்பட்டால் தன்னாலே தங்களை நாடி வருவாள் என்று தப்புக்கணக்கு போட்டனர் அவர்கள் இருவரும்.

அவள் ஏற்கெனவே பார்த்து வைத்திருந்த வீட்டிற்கு வந்தவள்... மளமளவென்று தயாராகி வேலைக்குக் கிளம்பினாள். ஆம்... அவள் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் வேலைக்குச் சேர்ந்துவிட்டாள். இவள் மேல் நல்ல மதிப்புக் கொண்டிருந்த தலைமையாசிரியர் அவளுக்காகச் சிபாரிசு செய்து அவளுக்கு வேலை வாங்கிக் கொடுத்தார். அவர் தான் அவளுக்கு வீடும் பார்த்து கொடுத்தார். வீடு என்றால் மிகப்பெரிய வீடில்லை. சிறிய அறையும், அதை ஒட்டி அதைவிடச் சிறிய சமையலறையும், அத்தோடு குளியலறையும் இணைந்து இருந்தது. அவள் ஒருத்திக்கு அதுவே அதிகம் தான்.

****

அதன் பின் வந்த நாட்கள் றெக்கை கட்டி கொண்டு பறக்க... ஒருவாறு இந்த வாழ்க்கைக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் அல்லி பழகியிருந்தாள். காற்றோட்டமில்லாத அந்த அறையில், சொகுசு மெத்தையும், ஏசியும் இல்லாமல் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. பாவம் பிறந்ததில் இருந்து சுகமாய் வாழ்ந்தவள் இந்த மாதிரி ஏழ்மை நிலையைக் கனவிலும் நினைத்து பார்த்ததில்லை.

ஆனாலும் அதையெல்லாம் வைராக்கியத்துடன் வாழ அவள் பழகி கொண்டாள். அவ்வப்போது அரசுவின் ஞாபகம் வரும்... அப்போது எல்லாம் அவனின் மேலிருக்கும் கோபத்தை இழுத்து பிடித்து அவனின் ஞாபகத்தை மறக்கடித்தாள்.

அல்லி தன் வாழ்க்கை சாதாரணமாகத் தான் செல்கிறது என்ற நினைப்பில் நாட்களைக் கடத்த... ஆனால் அப்படியில்லை... அவளிடம் ஏதோ மாற்றம் இருக்கிறது... என்பதை அவளின் தலைமையாசிரியர் கண்டுபிடித்தார். பள்ளியில் அவள் படித்த நாட்களில் இருந்து அவளை அவருக்கு நன்கு தெரியும். எப்போதும் கலகலப்புடன், சிரித்த முகமாய் எல்லோரிடமும் அன்பாய் பழகும் அல்லியை கண்டிருந்தவருக்கு...

அமைதியாக, எதையோ பறிகொடுத்தார் போன்ற தோற்றத்தில் முகத்தில் புன்னகையிழந்து, களையிழந்து, எந்நேரமும் மன இறுக்கத்துடன் இருந்த இந்த அல்லி அவருக்கு வித்தியாசமாகத் தெரிந்தாள். மனித மனங்களைப் படிக்கத் தெரிந்த அவருக்கு அவளின் மனமாற்றம் வெகுவாய் உறுத்த... அதைப் பற்றி அவளிடம் பேசுவது என்று அவர் முடிவெடுத்தார்.

“அல்லி... இங்கே வாம்மா...” வீட்டிற்குக் கிளம்பி கொண்டிருந்தவளை அவர் அழைக்க...

“குட் ஈவினிங் மேடம்...” என்றபடி வந்தவள் அவரைப் பார்த்து சிரிக்க... அவளின் புன்னகை மனதில் இருந்து வராமல் வெறும் உதட்டளவில் மட்டுமே இருந்ததை அவர் கவனிக்கத் தான் செய்தார் அவர்.

“என்ன அல்லி வேலை எல்லாம் பழகியிருச்சா?” என்றவருக்கு ஆம் என்பது போல் அவள் தலையாட்ட... இதிலேயே அவளின் மன மாற்றத்தை அவர் நன்கு உணர்ந்தார். முதலிலிருந்த அல்லியாய் இருந்தால்... இந்நேரம் அருவி போல் வார்த்தைகள் ஒன்றுக்கு நூறாய்க் கொட்டியிருக்கும்.

“அல்லி... நீ முன்ன மாதிரி இல்லையே... உன் முகத்தில் சிரிப்புக் கொஞ்சம் கூட இல்லையே...” அவளைக் கேள்வியாய் பார்த்தவாறு அவர் சொல்ல...

“அப்படியா தெரியுது... ஆனா நான் முன்ன இருந்த மாதிரி தானே இருக்கேன்...” தன்னைக் குனிந்து நன்கு பார்த்துக் கொண்டு அவருக்கு அவள் பதிலளிக்க...

“உண்மையைச் சொல் அல்லி... உன் மனதை அரிக்கும் விசயம் தான் என்ன? உன் மனதில் ஏதோ சோகம் இருக்குன்னு எனக்குத் தோணுது... என்னை உன் அம்மா போல் நினைத்து கொள்... உன் மனதிலிருக்கும் கவலையை என்னிடம் சொன்னால் உன் கவலை குறையும் அல்லவா?” அவர் பரிவுடன் கேட்க... அவள் பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்தாள்.

அவர் சொல்வது போல் அவளின் மனதில் ஒரு எண்ணம் விடாமல் எழுந்து அவளை வாட்டுவது என்னவோ உண்மை தான். அவளின் கணவனின் அன்பு பொய்த்து போனதை அவளால் தாங்க முடியவில்லை. எவ்வளவு அன்பு காண்பித்தான் அதுவெல்லாம் வெறும் கானல் நீராய் மாறி போனதை அவளால் நம்ப முடியவில்லை... ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவனின் நினைவு தான் ஓயாமல் அவள் மனதை அரித்துக் கொண்டிருந்தது. அதை எப்படி அவரிடம் சொல்வது என்று தெரியாமல் மனதை போட்டு உழட்டி கொண்டிருந்தாள்.

“என்னிடம் சொல்ல உனக்கு விருப்பம் இல்லையென்று எனக்குத் தெரியுது. அது உன் இஷ்டம்... ஆனால் இது போல் நீ மன இறுக்கத்துடன் தொடர்ந்து இருந்து வந்தால் அது உன் உடல்நலத்தை மட்டுமில்லாமல், உன் மனதையும் பாதிக்கும். எனக்கு என்னவோ நீ நல்ல ஒரு சைக்யாட்ரிஸ்ட் கிட்ட போறது நல்லதுன்னு தோணுது...”

“எனக்கு... எனக்கு... உண்மையில் பைத்தியம் பிடிச்சியிருக்கா மேடம்...?” கண்களில் பயத்தைத் தேக்கி கொண்டு கேட்டவளின் அறியாமையைக் கண்டு அவருக்குப் பரிதாபமாக இருந்தது.

“இப்போ நீ பேசுறது தான் பைத்தியம் மாதிரி இருக்கு... உடல் சரியில்லைன்னா டாக்டர் கிட்ட போறோம் இல்லையா? அது போல் மனசு சரியில்லைன்னா அதுக்குரிய டாக்டரை போய்ப் பார்க்கிறது தப்பு இல்லை... அதை ஏன் நீ தப்பா நினைக்கிற?”

அவரின் பதிலில் சம்மதமாய் அவள் தலையசைக்க... அவர் தனக்குத் தெரிந்த மருத்துவர் பெயரை பரிந்துரை செய்ய... முதல் வேலையாய் அவரைப் போய்ப் பார்த்தாள் அவள். அந்தளவுக்கு அவள் மனதில் இனம் புரியாத பயம் முளைத்து அவளை இன்னமும் பயமுறுத்தியது.

அந்த மருத்துவரும் பெண் என்பதால் அவள் தன் மனதிலுள்ள வேதனைகளை எளிதாய் பகிர்ந்து கொள்ள முடிந்தது. அவரும் அவளின் மனதை புரிந்து கொண்டு எடுத்தவுடன் அவளைப் பயமுறுத்தாமல் கொஞ்சம் கொஞ்சமாய் அவளின் மனதிற்குச் சிகிச்சையளித்தார். அவரின் தொடர்ந்த சிகிச்சையினால் அவளின் மனம் மெல்ல மெல்ல தெளிவு பெற்றது.

அவளின் தெளிந்த மனதை கருத்தில் கொண்டு அவளுடன் சில விசயங்களைப் பேச விரும்பினார் அந்த மருத்துவர். ஏனெனில் ஒன்றும் பெறாத ஒரு விசயத்துக்காக இந்த இளம் பெண் தன் கணவனைப் பிரிந்து வாழ்க்கையை இழந்து கொண்டிருப்பது அந்த நடுத்தர வயது பெண் மருத்துவருக்கும் வருத்தத்தை அளித்தது. அதனால் அவளிடம் தனக்குத் தோன்றிய கருத்துக்களைச் சொல்ல விரும்பினார்.

“மிசஸ். அல்லி... என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது அல்லவா?” அவள் ஆமென்பது போல் தலையசைக்க...

“அப்போ நான் சொல்வதைக் கோபப்படாமல் கேளுங்க...” என்றவரை அமைதியாய் அவள் பார்க்க... அவர் மேலே தொடர்ந்தார்.

“உங்கள் அடிமனசில் நீங்கள் அழகாயில்லை என்ற எண்ணம் ஆழ வேரூன்றி இருக்கு. அதனாலேயே காதல் என்ற ஒன்று கிடைக்கவே கிடைக்காது என்று உங்களை நீங்களே குறைச்சு எடை போட்டு இருக்கீங்க... அதனால் தான் உங்கள் பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையை நேசித்து... அதே போல் அவரும் உங்களை நேசித்து... இருமனமும் ஒரு மனமாய் மாறிய பின் கல்யாணம் பண்ணிக்கனும்னு இருந்திருக்கீங்க... ஆனால் அதெல்லாம் உங்கள் கணவரின் அதிரடி, கட்டாயக் கல்யாணத்தால் நடக்க முடியாமல் போயிருச்சு என்கிற வருத்தம் உங்களுக்கு இருக்கு... உங்க அடி மனசில் அவர் உங்களை விருப்பமில்லாமல் கல்யாணம் பண்ணிக்கிட்டார் என்ற கோபம் அவர் மேல் உங்களுக்கு இருக்கு... அதனால் தான் குழந்தை விசயத்தில் உங்கள் கருத்துக்கு மாறாய் அவர் பேசவும்... உங்க ஒட்டுமொத்த கோபமும் அவர் மேல் திரும்பியிருக்கு...”

அத்தனை நேரம் அவரின் பேச்சை அமைதியாய் கேட்டவள்... அவர் குழந்தை என்றதும் அவளின் கண்கள் கலங்கியது. “அப்படியெல்லாம் இல்லை டாக்டர்... நான் அவரை அந்த மாதிரி நினைக்கல... அவரை நான் எவ்வளவு நேசித்தேன் தெரியுமா? ஆனால் அவர்...” அதற்கு மேல் அடக்க மாட்டாமல் அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

“நான் ஒண்ணு சொன்னா கோபிச்சுக்கக் கூடாது... நீங்க உங்க கணவரை நேசிச்சேன்னு சொல்றீங்களே அதுவே பொய்ன்னு தான் நான் சொல்வேன்... உங்களுக்கு உடம்பு சரியில்லாத போது அவர் உங்களை நல்லா பார்த்துக்கிட்டதால... அதில் நீங்க மனம் நெகிழ்ந்து அவருடன் குடும்பம் நடத்தியிருக்கீங்க... உங்கள் தனிமை உணர்வை போக்குவதற்காகவும், ஆதரவு இல்லாமல் இருந்த உங்களுக்கு அவரின் ஆதரவு மிகவும் தேவைப்பட்டதாலும் அவருடன் நெருங்கியிருக்கீங்க... என்னைக் கேட்டால் அது காதலே இல்லை என்பேன்... சந்தர்ப்பவசத்தால் தோன்றிய ஒருவித அன்பு... அதில்

காதல் கொஞ்சமும் இல்லை...” அவர் சொல்ல சொல்ல... அவளுக்கு ஏதோ ஒன்று புரிய ஆரம்பித்தது.

“ஆனால் உன்னவர் உங்க மேல் வைத்தது தூய்மையான காதல்... இந்தக் காலத்தில் இந்த மாதிரி மனைவி மேல் காதல் வைத்திருக்கும் கணவன் பார்ப்பது அரிது... அதிலும் உங்க காலில் விழுந்து கெஞ்சும் அளவுக்கு உங்க மேல் அவருக்கு அவ்வளவு காதலா?” அவர் கேட்ட விதத்தில் அவளுக்கு மனதில் ஏதோ ஒரு உணர்வு தலைத் தூக்கியது.

“நீங்க என்ன சின்னப் பெண்ணா? Ectopic கர்ப்பம் பற்றிக் கேள்விப்பட்டது இல்லையா?” அவரின் கேள்விக்கு அவளின் தலை இல்லையென்பது போல் அசைந்தது.

அவர் தன்னருகில் இருந்த கணினியில் அது சம்பந்தப்பட்ட தகவல்களை எடுத்து காண்பித்து அவளைப் படிக்கச் சொன்னார். அதைப் படிக்க... படிக்க... அதன் விபரீதம் மூளையில் உறைக்க... அரசு அவள் முன் மண்டியிட்டு கெஞ்சியது எல்லாம் ஞாபகத்தில் வர... அவனின் காதலை அவளின் மனம் முழுமையாய் உணர்ந்தது. அவனின் காதலை உணர்ந்ததுமே என்னவென்று புரியாத மனநிலையில் சஞ்சரித்தவளின் கண்களில் இருந்து கண்ணீர் மட்டும் விடாமல் கொட்டியது.

“பாருங்க... இதை வளர விட்டிருந்தால் அது உங்க உயிருக்கே எமனாய் மாறியிருக்கும். உங்க உயிருக்காக உங்க கிட்ட கெஞ்சிய அந்த நல்ல மனிதரின் காதலை கொஞ்சம் கூட உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? அழகு என்பது நிறத்தில் இல்லை... மனதில் என்பதை நன்கு புரிந்து கொள்ளுங்கள். உங்களை விட உங்க கணவர் அதை நன்கு புரிந்து வைத்திருக்கிறார். இனிமேலும் அவர் மேலுள்ள கோபத்தை இழுத்துப் பிடிக்காமல் முதலில் அவரின் காதலை புரிஞ்சுக்கோங்க... அவரை நல்லா புரிஞ்சிக்கிட்டு அவரோடு போய்க் குடும்பம் நடத்துங்க... இனியும் உங்க வாழ்க்கையை வீணாக்கி கொள்ளாதீங்க”

“தேங்க்ஸ் டாக்டர்... நீங்க என் மனதை மட்டும் குணப்படுத்தல... என் வாழ்க்கையும் சேர்த்து குணப்படுத்தி இருக்கீங்க... நிச்சயமாய் டாக்டர் இனி அவர் மனசை புரிஞ்சிட்டு அவரோடு வாழ்வேன்...” என்று நம்பிக்கையுடன் உறுதியாய் அவருக்குப் பதிலளித்தவள் வெளியில் வந்தாள்.

வீட்டிற்கு வரும் வழியெல்லாம் அவளின் மனம் சிறகை போல் லேசாகி இருந்தது. அவளுக்கு இப்போது தனிமை தேவைப்பட... எப்போதடா வீட்டிற்கு வருவோம் என்றிருந்தவள் வீட்டை அடைந்ததும்... கைப்பையைத் தூக்கி போட்டு விட்டுத் தரையில் கண் மூடி அமர்ந்தவள் கணவனின் நினைவுகளை ஒவ்வொன்றாய் அசை போட ஆரம்பித்தாள்.

திருமணமான புதிதில் இருந்து இன்று வரை நினைத்து பார்த்தவளுக்கு அவனின் ஒவ்வொரு செயலிலும் அவனின் காதல் நன்கு புரிய... அவனின் காதலின் ஆழம் கண்டு அவள் பிரம்மித்துத் தான் போனாள். தான் என்ன தான் அவனிடம் கோபமாய் நடந்து கொண்டாலும் அவன் தன்னிடம் காட்டிய நிதானம், பொறுமை, அன்பு எல்லாம்... எந்தக் கணவனும் தன் மனைவியிடத்தில் காண்பிக்காத ஒன்று. அந்தளவுக்கு நல்லவன் தன் கணவன் என்று அவள் மனம் பெருமிதப்பட்டது.

அவனை உடனே பார்க்க வேண்டும்... அவனின் நெஞ்சில் சாய்ந்து தான் செய்த தவறுக்கு எல்லாம் மன்னிப்பு கேட்டு அழ வேண்டும் என்று அவள் மனம் துடியாய்த் துடிதுடித்தது. இத்தனை நாள் அவன் தன்னைக் காதலித்துக் கைப்பிடிக்கவில்லை என்ற அவளின் மனதின் வெம்மை... அவனின் காதலை அவள் உணர்ந்த அந்தக் கணம் காணாமல் போயிருந்தது.

அவளின் அந்த நினைவு எல்லாம் ஒரு கணம் தான்... தான் மன்னிப்புக் கேட்டாலும் அவன் தன்னை ஏற்றுக் கொள்வானா? என்ற எண்ணம் தோன்ற... அதில் மனம் சோர்வுற... அவனை நினைத்து... அவனின் காதலை

நினைத்து... அதை இழந்த தன் மடத்தனத்தை நினைத்து அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது.
திருமணத்துக்குப் பின் உள்ள அவனின் காதலை மட்டும் நினைத்து பார்த்தவளுக்கு அவனின் பத்து வருட காத்திருந்த காதல் இன்னமும் தெரியவில்லை. அது தெரிந்தால் அவள் என்னாவாளோ?

“அரசு... நீ எனக்கு வேணும்டா... இதுநாள் வரை உன் காதலை புரிந்து கொள்ளாத உன் முட்டாள் மனைவி... இன்று உன் காதலை புரிந்து கொண்டேன்... என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாயா அரசு? மன்னிப்பு கேட்கும் அருகதை கூட எனக்கு இல்லை” என்று வாய் விட்டு புலம்பியவள் ஓவென்று அழ ஆரம்பிக்க... அந்நேரம் அவள் காதில்,

“அத்தானின் வருகைக்காக வழி மேல் விழி வைத்து காத்திரு...” என்ற அவனின் குரல் ஒலிக்க... அந்தக் குரலில் அவள் முகம் மலர்ந்தது... கண்கள் ஒளிர்ந்தது.

அதில் நம்பிக்கை வர பெற்றவளாய் தன் விழிகளைத் துடைத்து கொண்டாள். அவன் சொன்னது போல் தன்னைத் தேடி வருவான் என்று நம்பிக்கை அவள் மனதில் உறுதியாய் நிலைத்து நின்றது. அந்தளவுக்கு அவனின் காதல் மேல் நம்பிக்கை இருந்தது அவளுக்கு. முதன் முதலாய் அவனின் மேல் நம்பிக்கை வைத்தாள்.

அதன் பின் வந்த நாட்கள் மெதுவாய் நகர்வது போல் அவளுக்குத் தோன்றியது. தினமும் அவன் சொன்னது போல் அவனின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தாள். ஆனால் முழுதாய் இரண்டு மாதங்கள் கழிந்தும் வருவேன் என்று சொன்னவன் வரவே இல்லை. ஆனாலும் அவள் நம்பிக்கை இழந்து விடவில்லை. அவன் வருவான்... வருவான்... தன்னைத் தேடி வருவான்... என்று இடைவிடாது ஜெபித்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு நாள் அவனுக்காய் காத்திருந்தவள் அவனின் அலைப்பேசிக்கு மட்டும் அழைக்கவே இல்லை. ஏனோ அவனிடம் பேசுவதற்கு அவளுக்குப் புது மணப்பெண் போல்

வெட்கமாய், தயக்கமாய் இருந்தது. அதனால் அவனுக்கு அழைக்கவில்லை.

இதற்கிடையில் ஒருநாள் அல்லி காயத்ரியை கடைவீதியில் சந்தித்தாள். அவளைக் கண்டதும் ஓடி வந்து பேசிய காயத்ரியிடம் அவள் முன்பு போல் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை.

“அல்லி எப்படியிருக்க? உடம்பு இப்போ எப்படியிருக்கு?” அன்பாய் விசாரித்தவளிடம்,

“நல்லாயிருக்கேன் அக்கா...” அரசுவின் காதலை உணர்ந்ததாலோ என்னமோ அவளால் காயத்ரியை அக்காவென்று அழைக்க முடிந்தது.

“உன்னோட அக்கா என்கிற வார்த்தையைக் கேட்கும் போது ரொம்பச் சந்தோசமாயிருக்கு. உனக்கு இப்படியானதில் எனக்கு ரொம்ப வருத்தம் அல்லி... அடுத்து நீ சீக்கிரம் குழந்தை உண்டாகி... உனக்கு நான் தான் டெலிவரி பார்க்கணும்...” காயத்ரிக்கு அவளுக்கும், அரசுவுக்கும் இடையில் நடக்கும் பிரச்சினை ஏதும் தெரியாது. அவள் அம்மா வீட்டில் ஓய்வு எடுக்க வந்திருக்கிறாள் என்றே நினைத்தாள்.

தன்னைப் பார்த்து வெள்ளையாய் சிரித்த காயத்ரியை கண்டு அவளின் மனம் வலித்தது. ‘ச்சே... இவ்வளவு அன்பான ஒருத்தியை போய் அரசுவுடன் சேர்த்து பேசி... ச்சீ... நான் மனுசியே இல்லை... என் மேல் அன்பு கொண்ட இரு உள்ளங்களை நான் எந்தளவுக்குக் காயப்படுத்தி இருக்கேன்...’ மனதுக்குள் அல்லி நொந்து போனாள்.

“கூடிய சீக்கிரம் வருவேன் அக்கா... அதுக்குத் தயாராய் இருங்க...” சொல்லிய அல்லி காயத்ரியை பார்த்து சிரிக்க...

“யூ ஆர் மோஸ்ட் வெல்கம்... நானும் அதுக்குத் தான் காத்திருக்கிறேன்... அன்னைக்கு அரசுவின் வருத்தத்தை நேரில் பார்த்தவள் நான்... குழந்தை கூட வேணாம்... எனக்கு என் அல்லி தான் வேணும்ன்னு கேட்கும் போது

அவனின் முகத்தைப் பார்க்கணுமே... அதில் அவ்வளவு வருத்தம், வேதனை. அதையெல்லாம் போக்குற மாதிரி நீ விரைவில் நல்ல செய்தி சொல்லு...”

இப்போது காயத்ரி அரசுவை பற்றிப் பேசும் போது அல்லியின் மனதில் பொறாமை உணர்வு எழவில்லை. அமைதியாய் அவளைப் பார்த்து சிரிக்க... காயத்ரி அவளிடம் இருந்து விடைபெற... தனக்கும் அரசுவுக்கும் குழந்தை பிறந்தால் எப்படி இருக்கும் என்ற நினைவில் கனவில் மிதந்தபடி வீடு வந்து சேர்ந்தாள்.

****

மறுநாள் காலையில் அவள் பள்ளிக்கு வேக வேகமாய்க் கிளம்பி கொண்டிருந்த போது வீட்டின் அழைப்புமணி ஒலிக்க... மனதின் ஓரத்தில் எதிர்பார்ப்பு எட்டி பார்க்க ஓடி போய்க் கதவை திறந்தாள். அவளின் எதிர்ப்பார்ப்பை பொய்யாக்காமல் அங்கே விரிந்த புன்னகையுடன் அரசு நின்றிருந்தான்.

“என்ன அல்லிராணி... நான் சொன்னது போல் வழி மேல் விழி வைத்து காத்திருந்தாயா?” அவளைப் பார்த்து கண்சிமிட்டியபடி வேண்டுமென்றே அவளை இடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் அவளின் கணவன் இல்லை இல்லை அவளின் காதலன் அரசு.

தன்னுடைய இத்தனை நாள் தவத்தின் பலனை மெய்பிப்பது போல் தன் கண் முன் நின்றிருந்த அரசுவை அல்லி கண்ணிமைக்காமல் பார்த்தாள். அவனின் வருகையால் முகம் மலர்ந்து விகசிக்க, கண்கள் கண்ணீர் மழை பொழிய, அதற்கு நேர்மாறாய் அவளின் இதழ்கள் புன்னகை சிந்த... நீண்ட நெடு நாட்கள் கழித்து அவனைக் கண்டதில் மனம் பாரம் நீங்கினாலும், அவளின் உடல் பாரம் தாங்க முடியாமல் கால்கள் துவள அவள் அப்படியே கதவின் மேல் சாய்ந்து நின்றாள். அவள் சாய்ந்ததில் கதவு தானாக மூடி அவர்களுக்கு வேண்டிய தனிமையை வழங்கியது.

மனைவியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த அரசுவுக்கோ அவளின் இந்தத் தோற்றம் மனதிற்குள் பெரும் ஆச்சிரியத்தை விளைவித்தது. அவள் கோபப்படுவாள், ஆத்திரப்படுவாள், திட்டுவாள் என மனதில் நினைத்துக் கொண்டு வந்தவன்... அவள் எவ்வளவு திட்டினாலும் சரி... கோபப்பட்டாலும் சரி... அவளைச் சமாதானப்படுத்தித் தன் காதலை அவளுக்கு எடுத்து சொல்லி... எப்பாடுப் பட்டாவது அவளைத் தன்னுடன் அழைத்துப் போக வேண்டுமென்ற எண்ணத்தில் தான் அவன் இங்கே வந்தது. வந்தயிடத்தில் மனைவியின் வரவேற்பு அவனுக்குப் பெருத்த வியப்பை கொடுத்தது. அவனின் எண்ணங்களைக் கலைப்பது போல்,

“அரசு...” என்று ஓடி வந்து அவனை அணைத்து கொண்டாள் அவனின் காதல் மகாராணி அவனின் செல்ல அல்லிராணி.

“ஐ லவ் யூ அரசு... உன்னைப் பார்க்காமல் இத்தனை நாள் நான் எப்படித் தான் உயிரோடு இருந்தேனோ தெரியல... உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன் அரசு... ஆனாலும் நீ சொன்ன ஒரு வார்த்தைக்காக நான் நம்பிக்கையுடன் காத்திருந்தேன் அரசு... அதே மாதிரி நீ என்னை ஏமாத்தாம... என்னைப் பார்க்க வந்துட்ட... இப்போ உன் காதலை நான் நல்லாவே உணர்றேன் அரசு... உன் காதலின் ஆழத்தை நான் புரிஞ்சிக்கிட்டேன் அரசு... ஐ லவ்

யூ அரசு...” என்று கூறிக் கொண்டே அவள் தான் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு முத்தத்தை அவன் முகத்தில் பதித்தாள்.

அவள் கோபத்தை எந்தளவு அதிகமாய் வெளிப்படுத்துவாளோ... அதை விட அதிகமாய்த் தன் காதலை அவனிடத்தில் வெளிப்படுத்தினாள். கோபத்திலும் சரி, காதலிலும் சரி... அவள் என்றுமே மிதவாதி இல்லை... தீவிரவாதி தான் என்பதைத் தன் முத்த யுத்தத்தின் மூலம் அவனுக்கு நிரூபித்தாள்.

அவளின் இந்தக் காதல் வார்த்தைகள்... அதிலும் அவன் கூறிய வார்த்தைக்காக மட்டும் அவன் மேல் நம்பிக்கை வைத்து அவள் காத்திருந்தது எல்லாம் அவளின் மனமாற்றத்தை அவனுக்கு நன்கு உணர்த்தியது. அவள் தன் காதலை உணர்ந்து கொண்டாள் என்பதை அறிந்த அவனுக்கு... இவ்வளவு நாளாய் அவனின் மனதினுள் இருந்து அவனை உழட்டி கொண்டிருந்த அவனின் வெம்மை கூட அவளின் காதல் வார்த்தையில் அப்படியே குளிர்ந்து அவன் மனதை தென்றலாய்த் தாலாட்டியது. அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்ற ஒன்று மட்டும் அவனின் நினைவில் நின்று அவனை வானத்தில் சிறகில்லாமல் பறக்க செய்தது.

“மீ டூ அம்முலு... மீ டூ...” என்று கூறியவன் அவளின் செயலை தனதாக்கி கொண்டான்.

அவள் கோப முகம் காட்டிய போதே அவளிடத்தில் காதலை காட்டியவன்... இப்போது அவள் காட்டிய காதலில்... அவளின் மேல் அவன் காதல் பித்தனானான். எவ்வளவு நேரம் சென்றதோ இருவருக்கும் தெரியாது. ஒருவரின் காதலில் ஒருவர் முக்குளித்துக் கொண்டிருக்க... இருவருக்குமே அந்த மயக்க நிலையில் இருந்து விடுபட மனமில்லை.

“எப்படி அம்முலு இந்த மாற்றம்...? என்னால நம்ப முடியல... என் அம்முலு தானான்னு?” மனைவியின் மனமாற்றத்தை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை.

“அந்தளவுக்கு நான் உன்னைக் கொடுமை பண்ணியிருக்கேனா அரசு? சாரி அரசு... சாரி...” அவள் மனமுருக அவனிடம் மன்னிப்பு வேண்ட...

“என் அம்முலு என்னிடம் மன்னிப்பு கேட்கலாமா? அது தேவையே இல்லை... ஒவ்வொரு மனைவி எப்படியெல்லாம் கணவனைக் கொடுமைப்படுத்துறாங்க... அதைக் கம்பேர் பண்ணும் போது நீ பண்ணியது எல்லாம் ஒண்ணுமே இல்லை” அவள் மன்னிப்பு கேட்பது பொறுக்காமல் அவன் சொல்ல...

“நிஜமா...?” கண்களை அகல விரித்துக் கேட்க... அவளின் அறியாமையில் அவனுக்கு மனம் நெகிழ... அவளின் மூக்கை பிடித்து ஆட்டியவன்,

“நிஜமா... காட் பிராமிஸ்...” என்று சிரிக்காமல் சொல்ல... அதைக் கேட்டு அவள் எதிர்த்து வாதாடாமல் அப்படியா? என்பது போல் தலையசைக்க... அவளின் இந்த மாற்றம் அவனுக்கு அதிசயமாய் இருந்தது.

“அப்போ என் கேள்விகளுக்கும், உன் கேள்விகளுக்கும் விடை கண்டு பிடிச்சிட்டியா? எப்படி அம்முலு...?” அவளின் மாற்றம் எதனால் வந்தது என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

அவள் அவனை விட்டு பிரிந்து வந்ததிலிருந்து அவள் அன்னை வீட்டில் தான் பட்ட கஷ்டங்களை எல்லாம் கூறியவள்... அதன் பின் தன்னை வைத்து அவனைப் பழிவாங்க நினைத்த தாயின் எண்ணத்தைக் கூறினாள். அதைப் பொறுக்க முடியாமல் தான் வீட்டை விட்டு வெளியேறி வந்ததையும், அதன் பின் அவளின் மன இறுக்கத்தைக் கண்டுப்பிடித்த தலைமையாசிரியர் மூலமாய் மனநல மருத்துவரை நாடியதையும்...

அவர் மூலம் தான் தெளிவுற்று அவனின் காதலை புரிந்து கொண்டதையும் சொன்னவளை கண்டு அவன் மனம் நெகிழ்ந்தது. தன் காதலை உணர்வதற்கு முன்னமே தனக்காகத் தன் பெற்றோரிடம் வாதாடி... தனக்காகவே

வீட்டை விட்டு வெளியில் வந்த அவளின் செயல் காதல் இல்லாமல் வேறு என்ன? அவளின் காதல் அவனைச் சுனாமியாய் அவளுள் சுருட்டியது.

“பாரு... வீட்டுக்கு வந்த உன்னை உட்கார கூட வைக்காமல் பேசி கொண்டிருக்கேன்... நீ உட்காரு அரசு...” அவன் மனதை அறியாமல்...

அவன் அமர்வதற்கு ஏதுவாய் அவள் அங்கிருந்த பிளாஸ்டிக் சேரை எடுத்து போட... அவன் அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டே அதில் அமர... அவள் கொஞ்சமும் யோசிக்காமல் அவன் காலடியில் அமர்ந்து அவன் முகத்தை ஆர்வமாய்ப் பார்க்க... அவனுக்கு அன்றொரு நாள் அவள் அவனைப் பார்த்து பேசியது ஞாபகம் வந்தது.

“எனக்குக் கீழே படுத்துப் பழக்கம் இல்லை... வேலைக்காரன் உனக்குத் தான் கீழே படுத்துப் பழக்கம் இருக்கும்... அதனால் நீயே கீழே படுத்துக் கொள்”

அதை நினைத்து பார்த்தவனுக்கு... இன்று அவளின் செயலில் அவளின் மனதை நன்கு புரிந்து கொண்டவன் சட்டென்று நாற்காலியில் இருந்து எழுந்து அவளருகே அமர...

“அரசு... நீ ஏன் கீழே உட்காருற... உன் ட்ரெஸ் எல்லாம் அழுக்காகப் போகுது” அவனுக்காய் அவள் பதற...

“என் மகாராணி நீயே கீழே உட்காரும் போது... வேலைக்காரன் நான் கீழே உட்காருவதில் தப்பில்லை...” என்று கூறி அவன் அவளை அணைத்துக் கொள்ள...

“நான் ஒண்ணும் மகாராணி இல்லை... நீ ஒண்ணும் வேலைக்காரன் இல்லை... நீ என் கணவன்... காதலன் அரசு...” என்றவள் அவனைப் பார்த்து,

“இனிமேல் இது மாதிரி பேசாதே... எனக்கு அழுகை அழுகையாய் வருது...” என்றவளின் கண்கள் கலங்கியது.

“நீ சொல்லி நான் கேட்காமல் இருப்பேனா? இனிமேல் இப்படிப் பேசல போதுமா?” என்றவன் அவளின் கண்களைத் துடைக்க...

“ம்... ம்...” அவள் சமாதானமாக...

“என்ன அம்முலு இப்படி மெலிஞ்சு போயிட்ட...?”

கன்னங்கள் இரண்டும் ஒட்டி, கண்கள் குழிக்குள் சென்றிருக்க... கறுத்து மெலிந்து இருந்தவளை கண்டு அவனுக்குக் கண்கள் கரித்தது.

“ரொம்பக் கஷ்டப்பட்டியா அம்முலு? உன்னைக் கஷ்டப்பட வைச்சிட்டு நான் மட்டும் சுகமாய் இருந்திருக்கேனே... நான் பாவி அம்முலு... பாவி...” அவனின் கலங்கிய குரலில் அவனின் எல்லையற்ற அக்கறையைக் கண்டு கொண்டவள் அவனின் கையை ஆதரவாய் பிடித்துக் கொண்டு,

“அதான் நீ வந்துட்டல்ல அரசு... இனியெல்லாம் சரியாய் போகும். நீ ஊட்டி விடுறதுல நான் ஐம்பது கிலோவில் இருந்து எண்பது கிலோ கூடிருவேன். நீ ஒண்ணும் கவலைப்படாதே... என்ன உனக்குத் தான் கொஞ்சம் கஷ்டமாயிருக்கும்...”

அவனின் மனதை மாற்றி எண்ணி கேலியாய் பேசியவள்... கடைசி வரி கூறும் போது அவனைப் பார்த்து கண்சிமிட்ட... அவளின் பேச்சில், அவளின் பாவனையில் அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

வெகுநாள் கழித்து அவனின் சிரிப்பை கண்டவள்... அதை ஆவலுடன் பார்த்து ரசித்து அவனின் சந்தோசத்தை உள்வாங்க... அப்போது தான் கவனித்தாள் அவனின் முக மாற்றத்தை... பத்து வருடங்களுக்கு முன்பு பார்த்த அரசுவை போல் முகம் பொலிவுடன் இருந்தாலும், இப்போது பணம் கொடுத்த அழகு, அந்த வயதிற்கே உரிய கம்பீரம் எல்லாமுமாய்ச் சேர்த்து அவனின் அழகு பன் மடங்கு கூடியிருந்தது.

“அரசு... எவ்வளவு அழகாய் இருக்கத் தெரியுமா? ஃப்ரெஷா பறிச்ச ஆப்பிள் மாதிரி அவ்வளவு சிவப்பா... என்னமாய் அழகாய் இருக்க... எப்போ ட்ரீட்மென்ட் எடுத்துக்கிட்ட?” என்று அவனின் முகத்தை வருடியபடி கூறியவளின் முகத்தில் கலக்கம் இல்லை... தாழ்வு மனப்பான்மை இல்லை. மாறாக ‘இத்தனை அழகும் உடையவன் என் கணவன்...’ என்ற பெருமை, கர்வமே அதிலிருந்தது.

அதைக் கண்டு கொண்டவன் மனதில் எழுந்த நிம்மதியுடன் அவளின் கையைப் பிடித்துத் தன் கன்னத்தோடு வைத்துக் கொண்டான். எத்தனையோ பேர் அவனை அழகாய் இருக்கிறாய் என்று சொன்ன போது வராத சந்தோசம்... தன் காதல் மனைவி சொன்னதும் அவனுள் மகிழ்ச்சி ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது.

“எல்லாம் உனக்காகத் தான் அம்முலு... உனக்காக மட்டுமே தான் நான் ட்ரீட்மென்ட் எடுத்துக்கிட்டேன்... நீ என் காதலை உணர்ந்து கொள்வதற்காகத் தான் நான் ட்ரீட்மென்ட் எடுத்தேன்...” என்றவனைப் புரியாமல் அவள் பார்க்க...

“நீ தானே சொன்னே... நான் அழகாயிருந்தா உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்க மாட்டேன்னு... அது அப்படியில்லை... நான் அழகாய் இருந்தாலும்... அழகாய் இல்லைன்னாலும் எனக்கு என் அம்முலு மட்டும் தான் பிடிக்கும்... அவளை மட்டும் தான் காதலிப்பேன்... அவளுக்காக மட்டும் தான் காத்திருப்பேன்னு உனக்குச் சொல்ல தான் நான் என் முகத்தை மாற்றிக் கொண்டேன்...”

அவன் மனதில் எத்தனை காதல் அவள் மேலிருந்தால் இந்தளவுக்கு அவன் தன்னை வருத்தி கொள்வான் என்று உணர்ந்தவள்... கண்கள் கலங்க அவனை அணைத்து கொண்டாள்.

“எப்படி அரசு... என் மேல் உனக்கு இவ்வளவு காதல் வந்தது? நீயும் நானும் பார்த்து கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு மேலே இருக்குமே... எப்படி? எங்கே என்னைப் பார்த்து நீ காதலிச்ச? நீ இப்படி உருகி உருகி காதலிக்கும் அளவுக்கு

என்னிடத்தில் அப்படி என்ன இருக்கு?” அவள் சொல்லியது புரியாமல் அவளைப் பார்த்தவன்,

“அப்போ உனக்கு எந்த விசயமும் தெரியாதா? அப்புறம் எப்படி இந்த மாற்றம்?”

ஏனென்றால் அவன் இரண்டு முறை அவளைத் தான் பத்து வருடங்களாகக் காதலிப்பதை அவளுக்கு உணர்த்தியிருந்தான். அதில் தான் அவள் தன் காதலை உணர்ந்து கொண்டாள் அவன் நினைத்திருக்க... அவளோ அதைக் கொஞ்சமும் உணராமல் இருந்திருக்கிறாள்.

“நீ... நீ... நான் உன்னைக் காதலிப்பதாய் எப்படி உணர்ந்த அம்முலு?” கேட்கும் போதே அவனுக்குக் குரல் நடுங்கியது. அவனின் மனதில் சின்ன எதிர்பார்ப்பு எழுந்தது.

“அது என்ன அவ்வளவு கஷ்டமா? அதான் கல்யாணமான நாளில் இருந்து தான் நீ உன் காதலை காண்பிச்சிட்டு இருந்தியே... நான் தான் அதைக் கொஞ்சமும் புரிஞ்சிக்கல அரசு...” அவள் வருத்தத்துடன் கூற...

அவள் தன்னிடம் காதலை சொன்ன போது அடைந்த மகிழ்ச்சியை விட... அதிக மகிழ்ச்சியடைந்தான் அவன். அவன் தன் காதலை சொல்லாமேலே அதை அவள் உணர வேண்டுமென்பது அவனின் இத்தனை வருட தவம் அல்லவா!

தன் மகிழ்ச்சியை அவளுக்கு உணர்த்தும் விதமாய் அவளின் முகத்தைத் தன் இரு கைகளில் தாங்கி முத்தமழை பொழிந்தவன்,

“யூ ஆர் சோ ஸ்வீட் அம்முலு...” என்று கூறிக் கொண்டே தன் முத்த யுத்தத்தைத் தொடர... அவன் என்ன சொல்கிறான்? என்பது அவளுக்குப் புரியாத போதும்... அவனின் அன்பின் ஆழத்தை உணர்ந்தவளாய் அதை ஒருவித லயிப்புடன் சுகமாய் உள்வாங்கினாள்.

சிறிது நேரம் பொறுத்து பார்த்தவள் அவன் தன்னை விடாமல் இருக்க, “ஹேய் அரசு... மூச்சு வாங்குது விடுடா...”

என்றபடி அவனை விலக்க...

“நான் எவ்வளவு சந்தோசமாயிருக்கேன் தெரியுமா அம்முலு? நீ என்னடான்னா அதை உணராம விலகி போற...” அவன் குற்றம்சாட்ட... அவன் முகம் சுருங்கியதில் அவள் அவன் நெஞ்சில் சாய்ந்து அவனின் ஏக்கத்தைப் போக்கினாள்.

“இது நல்ல பிள்ளைக்கு அழகு...” என்று அவளைத் தன்னோடு அணைத்து கொண்டவன்,

“உன்னை எப்போ பார்த்து காதலிச்சேன்னு தானே கேட்ட... உனக்கு ஞாபகம் இருக்கா... உன்னோட பதினாலாவது பிறந்தநாள் அன்னைக்கு அம்மாயியை பார்க்க நீ வந்திருந்தியே...” அவன் சொல்ல...

“ம்... நல்லா ஞாபகம் இருக்கு... நீ கூட என்னை வெறிச்சு வெறிச்சு பார்த்தியே... உன் பார்வையில் எனக்கு வெட்கமாய் வந்தது. அதான் நான் ஆயாம்மாவின் பின்னால் ஒளிஞ்சிக்கிட்டேன்...” அவள் அன்றைய நாளை ஞாபகப் படுத்திச் சொல்ல...

“அப்போவே என் பார்வை உனக்கு வெட்கத்தை ஏற்படுத்தியதா? இது எனக்குத் தெரியாம பத்து வருசத்தை வேஸ்ட் பண்ணிட்டேனே...” அவன் போலி அங்கலாய்ப்புடன் சொல்ல... அதைக் கேட்டு அவள் கண்கள் வியப்பில் விரிந்தது.

“அரசு... அப்படின்னா... அப்போது இருந்தா நீ என்னைக் காதலிக்கிறே...” அவளால் அதை நம்ப முடியவில்லை.

“ஆம்... அப்போதிருந்து தான் காதலிக்கிறேன்... அன்னைக்குத் தாவாணி பாவாடையில் உன்னை முதன்முறையாய் பார்த்த போது என் மனசில் பசை போட்டது போல் பச்சக்குன்னு ஒட்டிக்கிட்ட... அன்னைக்கு என் மனசில் நுழைந்தவள் தான்... இந்த நொடி வரை என்னைப் பைத்தியக்காரனாய் ஆட்டுவிக்கிற...” அவளின்

நெற்றியில் முத்தமிட்டு சொன்னவனைப் பிரம்மிப்பாய் பார்த்தாள்.

அவனளவுக்கு அவள் அவனைக் காதலிக்கவில்லை. அப்படிப்பட்டவனைத் தன்னைக் காதலித்துக் கைப்பிடிக்கவில்லை என்று சொல்லி என்ன பாடுப்படுத்தினாள்? அதையெல்லாம் கொஞ்சமும் கண்டு கொள்ளாது தன்னை நாடி வந்திருக்கும் அவனின் காதல் மனம் அவளின் உயிரை உருக வைத்தது.

“உனக்காகத் தான் நான் உன் பெற்றோரிடம் வாங்கிய விழுப்புண்கள் தான் என் முகத்திலிருந்த தழும்புகள்...” என்றவனை அவள் கலக்கமாய்ப் பார்க்க... அவன் முகம் அன்றைய நினைவில் இறுகி போயிருந்தது.

“அவங்களா இப்படிச் செஞ்சது?” என்றவள்,

“அவங்களுக்காக நான் உன் கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்”

அவனின் முகத்தை அவள் தடவி கொடுத்தபடி மன்னிப்பு கேட்க, அன்று அவன் பட்ட மனவலி எல்லாம் அவளின் வருடலில் காணாமல் போக... அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

“இதுயென்ன உனக்காக நான் எதையும் தாங்குவேன்” என்றவனின் மனம் அன்றைய நாளுக்குச் சென்றது.

அன்று அவனின் அவள் மீதான காதலை கண்டு கொண்ட அவளின் பெற்றோர் அவனை அடித்து உதைத்தது... அதில் கோபம் கொண்டவன் அவளைக் கைப்பிடித்தே தீருவேன் என்று சபதம் போட்டது... அவளை அடைவதற்காகப் பணம் பெருக்குவதில் அவன் தீவிரமாய் இறங்கியது... அவன் நினைத்தது போல் பெரிய பணக்காரனாய் மாறியிருந்த போதும் அவளை அடைவதற்கான வழி தெரியாமல் அவன் திகைத்திருந்த நேரத்தில்... பரமேஷ்வரின் தொழில் நஷ்டம் அவனுக்குச் சாதகமாய் அமைய... அவருக்கு உதவுவது போல் உதவியவன்... பணத்தைத் திருப்பித் தராமலிருக்க

அவளை மணம் புரிய கேட்க... அதைப் பரமேஷ்வர் முழுமனதுடன் ஒத்துக் கொண்டது அவனுக்குமே ஆச்சிரியம்.

“நான் நினைச்சது போல் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... ஆனால் உன் மனசை நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கல... நீ ஒவ்வொரு வார்த்தையும் கோபமாய்ப் பேசும் போது தான் உன்னை இப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பு தோணிச்சு... ஆனாலும் என் காதல் உனக்குப் புரிய வைக்கும்ன்னு நம்பினேன்... கடைசி அது முடியாமல் போகவும் தான்... நான் என் முகத்தின் தழும்புகளை மாற்ற சிகிச்சைக்குப் போனேன். பழைய முகம் திரும்பக் கிடைக்கக் கிட்டத்தட்ட ரெண்டு மாசம் ஆச்சு. அதான் இவ்வளவு நாள் உன்னைப் பார்க்க வராமல் இருந்தேன்... நான் உன்னை ரொம்பக் காயப்படுத்திட்டேனோ அம்முலு...” அவன் உருக்கமாய்க் கேட்க... அவள் இல்லையென்று தலையசைத்தாள்.

“நீ இவ்வளவு கஷ்டப்பட்டு இருக்க வேண்டியதே இல்லை அரசு... உன் காதலை என்னிடம் சொல்லியிருந்தா... அப்போவே நான் உன்னை ஏத்துக்கிட்டு இருப்பேனே... இதுக்கு நீ இவ்வளவு போராடியிருக்க வேண்டிய அவசியமே இல்லையே அரசு... என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா அரசு?” அவளின் குரலில் இருந்த மிதமிஞ்சிய வருத்தத்தைக் கண்டவன்,

“உனக்குச் சரியான வயது வந்ததும் என் காதலை உன்னிடம் எப்படியும் சொல்லணும்ன்னு தான் நினைச்சிருந்தேன்... அதற்குள் என்னென்னமோ ஆகி போச்சு? இந்த முகத்தோட நான் எப்படி வந்து உன் கிட்ட லவ்வை சொல்லுவேன்...? அப்படி இருந்தும் சென்னையில் உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என் மனசு என்னையும் கேட்காமல் உன்னிடம் வந்து காதலை சொல்ல துடிக்கும். அதை அடக்குவதற்கு நான் பட்ட பாடு இருக்கே...”

“ஹேய்... நீ என்னைச் சென்னைக்கு வந்து பார்த்திருக்கியா? அப்போ சென்னையில் இருந்த உன்

லவ்வர் நான் தானா? ஹெய்யோ... என்னை நினைச்சே நான் பொறாமைப்பட்ட ஆள் நானா தான் இருப்பேன்... எந்தளவுக்கு முட்டாளாய் இருந்திருக்கேன்... எல்லாம் உன்னால் அரசு...” என்றவள் அவனிடம் செல்லமாய் அவள் கோபித்துக் கொள்ள...

“பொறாமை... ம்...” அவள் மூக்கை பிடித்து ஆட்டியவன்,

“பின்னே எப்படி உனக்குப் பிடிச்சது, விருப்பமானது எல்லாம் எனக்குத் தெரியும்? உன் பின்னால் லோலோன்னு சுத்த போய்த் தானே தெரியும்?”

“ஓ... நான் ஆயாம்மா சொல்லியிருப்பாங்கன்னு நினைச்சேன்...”

“அவங்க சொன்னது பாதி... நான் கண்டுபிடிச்சது மீதி...” அவன் பேசிய விதத்தில் அவள் அவனைக் கொஞ்சினாள்.

“எல்லாம் சரி தான்... நான் இங்கிருப்பதை எப்படிக் கண்டுப்பிடிச்ச?” அவள் ஆர்வமாய்க் கேட்க...

அவன் அவள் இருக்குமிடத்தைக் கண்டுப்பிடித்ததை நினைத்து பார்த்தவனுக்கு அவளை நினைத்துத் துக்கம் பொங்கியது. தன் பொருட்டு அவள் எத்தனை துன்பத்தைத் தாங்கியிருக்கிறாள் என்பதை உணர்ந்தவனின் மனம் அவளுக்காய் பாகாய் உருகியது.

அவளைத் தேடி கண்டிக்கு வந்தவன் நேரே அவளின் வீட்டிற்குத் தான் சென்றான். அங்கே அவள் இல்லை என்பதை அறிந்து அவள் அன்னையை அவன் கேட்க,

“உனக்குப் பரிஞ்சு பேசிட்டு எங்கே போய்ச் சீரழியறாளோ... யாருக்கு தெரியும்?” அலட்சியாய் அவர் கூற... அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அவரின் கழுத்தை நெறிக்கப் போக... அங்கிருந்த வேலையாட்கள் தான் அவனைத் தடுத்தனர்.

“நீங்க தானே அவளை இங்கே கூட்டிட்டு வந்தீங்க... அப்போ அவளைப் பத்திரமாய்ப் பார்த்துக்கணும்ன்னு தெரியாது? அவளுக்கு மட்டும் ஏதாச்சும் ஒண்ணுன்னா உங்களை

என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது?” கோபத்தில் கர்ஜித்தவனை உறுத்து பார்த்த பொற்கொடி,

“நான் என்னமோ அவளைக் கூட்டிட்டு வந்தேன்னு கத்துறீயே... இதைச் செய்யச் சொன்னது உன் அக்கா தான்... கோபப்படுறதா இருந்தா அவ கிட்ட போய்க் கோபப்படு... கத்து... சும்மா இங்கே வந்து கத்துற வேலையெல்லாம் வச்சுக்காதே...” அவர் சொன்னதைக் கேட்டு அவன் அதிர்ந்தான்.

கூடப்பிறந்த அக்காவே தன் வாழ்க்கையைக் குழைக்கும் அளவுக்குத் தான் அவளுக்கு என்ன கெடுதல் செய்தோம்? என்று அவனுக்குத் தெரியவில்லை. அதிர்ச்சியில் சிறிது நேரம் அமைதியாயிருந்தவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

“அல்லி எங்கே இருக்கா? அதை முதல்ல சொல்லுங்க?”

“அவள் இருக்கும் இடம் எனக்குத் தெரியாது?”

தயவு தாட்சண்யம் பார்க்காமல் சொல்லியவர் உள்ளே சென்று விட... வேறுவழியின்றி வீட்டில் இருந்து வெளியில் வந்தவனுக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் விழித்தான்.

அப்போது அங்கிருந்த தோட்டக்காரர் அவனிடம் ஓடி வந்து, “பேபிம்மா இருக்கும் இடம் எனக்குத் தெரியும்...” என்று சொல்ல... அவனின் கண்ணுக்கு அந்தத் தோட்டக்காரன் கடவுளாய்த் தெரிந்தான்.

அல்லி வேலை பார்க்கும் பள்ளியின் முகவரியும், அவள் வீட்டின் முகவரியையும் கொடுத்தவன், “நீங்க போய்ப் பேபிம்மாவை பாருங்க... பாவம் அவங்க... ரொம்பக் கஷ்டப்பட்டுட்டாங்க... போயும் போயும் இவங்க வயித்தில் போய்ப் பிறந்தாங்களே... என்ன செய்ய எல்லாம் தலைவிதி...”

பெத்தவங்களுக்கு இல்லாத அக்கறை தோட்டக்காரனுக்கு இருப்பதைக் கண்ட அரசுவுக்கு மனம் நெகிழ... தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை அள்ளி எடுத்தவன் தோட்டக்காரனின் கையில் திணிக்க...

“வேணாம் அய்யா... எத்தனையோ நாள் அந்த மகராசி பசியறிஞ்சு சாப்பாடு போட்டிருக்கு... அந்த நன்றி விசுவாசத்துல தான் நான் இதைச் சொல்றேன்...” என்றவன் அதை வாங்க மறுக்க...

“உங்க பேபிம்மாவுக்காக வாங்கிக்கங்க...” என்றவன் அவன் மறுக்க மறுக்க அவன் கையில் பணத்தைத் திணித்துவிட்டு வெளியில் வந்தான். வந்தவன் முதன் வேலையாகத் தன் அக்காள் கணவனிடம் பேசி எல்லா விவரத்தையும் சொல்லியவன்,

“இதுக்கு மேல் என்னால் எதையும் பொறுத்துக் கொள்ள முடியாது மாமா... இதுநாள் வரை இதை உங்க கிட்ட சொல்ல கூடாதுன்னு நினைச்சேன்... ஆனால் அக்கா பண்ற காரியம் எல்லாம் அது மாதிரி தான் இருக்கு... நீங்க தான் அவங்களைக் கண்டிச்சி வைக்கணும்” அவன் சொல்ல சொல்ல... மறுமுனையில் தாஸ் அமைதி காத்தான்.

“தேனுவை நான் பார்த்துக் கொள்கிறேன் அரசு... அவள் செஞ்ச காரியத்துக்கு அவளை உன்னால் மன்னிக்கக் கூட முடியாது. ஆனால் எனக்காக அவளை மன்னித்துவிடு...”

அவர் சொல்லவும் அவன் பதில் பேச தோன்றாது அலைப்பேசியை அணைத்தான். அடுத்தச் சில நிமிடங்களில் தன்னவளை தேடி வந்தவன் அவளைப் பார்த்த பின்பே நிம்மதியுற்றான்.

“அரசு... என்ன யோசனை?” அவள் உலுக்கவும் தான் தன் யோசனையில் இருந்து கலைந்தவன்,

“ஒண்ணுமில்லை அம்முலு...” என்று அவளை அணைத்துக் கொண்டான்.

இனி ஒரு போதும் நான் உன்னை விட்டு பிரிந்து இருக்க மாட்டேன் என்பது போலிருந்தது அவனின் அணைப்பு. ஏனோ அவனுக்குப் பொற்கொடி, தேன்மொழி செய்ததைச் சொல்ல பிடிக்கவில்லை. அதைச் சொல்லி அவளை மேலும் மேலும் துன்பத்திற்கு உள்ளாக்குவதை அவன் விரும்பவில்லை.

“எப்படிக் கண்டுப்பிடிச்சேன்னு கேட்டேன்ல...?” அவள் தன் கேள்வியில் பிடியாய் நிற்க,

“நீ உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் நான் கண்டிப்பிடித்து விடுவேன்... இந்தக் கண்டியில் கண்டு பிடிப்பதற்கா கஷ்டம்?” விளையாட்டாய் சொன்னாலும் அவளைக் கண்டு பிடிக்கும் முன் அவன் பட்ட பாடு அவனுக்கு மட்டுமே தெரியும்!

“சரி அம்முலு... இப்படியே பேசி கொண்டிருந்தால் எப்படி? நம்ம வீட்டுக்கு போக வேணாமா?”

தன்னிடம் கேட்டவனைப் பார்த்து ஆர்வத்துடன் ஆமென்பது போல் வேகமாய் அவள் தலையசைக்க... அவளின் ஆர்வம் கண்டு அவனின் உதடுகள் அவளைப் பார்த்துப் புன்னகை சிந்தியது.

அடுத்த அரைமணி நேரத்தில் வீட்டில் இருந்த பொருட்களை எல்லாம் அக்கம் பக்கம் உள்ளவர்களில் வறிய நிலையில் இருந்தவர்களிடம் கொடுத்து விட்டு இருவரும் நேரே தலைமையாசிரியரை பார்க்க சென்றனர். அவருக்கு நன்றி உரைத்தவன் பள்ளியின் முன்னேற்றத்திற்காகப் பெரிய தொகையை நன்கொடையாகக் கொடுக்க... அதைப் பெருமையுடன் பார்த்து கொண்டிருந்தாள் அல்லி. அதற்கடுத்து மருத்துவரையும் பார்த்துவிட்டு அவருக்கும் நன்றியுரைத்து விட்டு அவர்கள் இருவரும் கிளம்பி கொழும்புவிற்கு வர இரவாகி போனது.

வீட்டினுள் நுழைந்தவள் நேரே லக்ஷ்மியம்மா அறைக்குச் சென்று, “ஆயாம்மா...” என்று அவரை அணைத்துக் கொள்ள... எதிர்பாராமல் அவளைக் கண்டவர் மகிழ்ச்சியுடன்,

“பேபிம்மா வந்துட்டியா... நீ வருவேன்னு எனக்குத் தெரியும்... இப்போ உடம்பு எப்படியிருக்கு?”

அவளின் கன்னம் வருடி பாசத்துடன் கேட்டவரை கண்டு அவளுக்குக் கண்கள் கலங்கியது. இத்தகைய அன்பானவர்களை விட்டு விட்டு எதைத் தேடி தான் சென்றோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

“என்னை மன்னித்துவிடுங்க ஆயாம்மா...” மேலே பேச போனவளை புரியாமல் பார்த்த பெரியவளின் பார்வை உணர்ந்து... அல்லியின் தோள் பற்றி அவள் பேசுவதைத் தடை செய்தவன்,

“அது ஒண்ணுமில்லை அம்மாயி... இத்தனை நாள் உங்களைப் பிரிஞ்சு இருந்ததுக்கு உங்க பேபிம்மா மன்னிப்பு கேட்குறா”

தங்களுக்கு இடையில் நடத்த பனிப்போரை அவன் தன் பாட்டியிடம் சொல்லவில்லை என்பதை உணர்ந்த அவளும் அமைதி காத்தாள்.

“இதுக்குப் போயா மன்னிப்பு கேட்குற பேபிம்மா... நீ இங்கே வந்ததில் எனக்குச் சந்தோசம்...” அதன் பின் பேச்சும், அரட்டையுமாய் உணவு பொழுது செல்ல... இருவரும் தங்கள் அறைக்கு வந்தனர்.

அறைக்குள் நுழைந்தவள் மனதில் அவனும், அவளுமாய் வாழ்ந்த வாழ்க்கை நியாபகம் வந்து அவள் கண்ணில் கண்ணீரை உற்பத்தி செய்தது. அவளின் மனநிலை அறிந்தவனாய்,

“குளிச்சிட்டு வா...”

அவளின் கையில் துண்டையும், இரவு உடையையும் அவன் எடுத்து கொடுக்க, அவன் சொன்னதை அவள் செய்ய... தான் சொன்னதை மறுக்காமல் கேட்டுக் கொண்டு குளியறைக்குள் சென்றவளை பார்த்தவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

அவள் வந்ததும் அவன் குளிக்கச் செல்ல... அவள் படுக்கையில் வந்தமர்ந்தாள். அவள் மனதில் இவ்வளவு நேரம் இல்லாத ஒருவித குற்றவுணர்ச்சி எழ... முழங்காலை கட்டி கொண்டு அமைதியாய் அமர்ந்திருந்தாள். அரசுவும் குளித்து விட்டு வந்தவன் அவளருகில் வந்து,

“என்ன அம்முலு... இன்னமும் தூங்கலையா?” என்று கேட்டபடி அவளருகில் அமர்ந்து அவளைத் தன் மடியில் படுக்க வைக்க...

அவன் சொல்படி படுத்தவள் அமைதியாய் இருக்க... அவ்வளவு நாள் அவளிடம் பேச வேண்டும் என்று மனதில் நினைத்து வைத்திருந்த பழைய கதைகளை அவன் பேச... அதையெல்லாம் கேட்டு கொண்டிருந்தவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அவளின் கன்னத்தைத் தடவியவனின் கைவிரல்கள் அவளின் கண்ணீரை உணர,

“ஹேய் அம்முலு... அதான் எல்லாம் சரியாய் போச்சே... இப்போ எதுக்கு அழுற?” என்றவன் பதறியபடி அவளின் கண்ணீரை துடைக்க...

“உன் அன்புக்கு நான் கொஞ்சமும் தகுதியில்லாதவள் அரசு...” என்றவள் தேம்ப...

“உன்னை விட அதுக்குத் தகுதியானவங்க யாருமில்லை...”

“அது உன் பெருந்தன்மை அரசு... அன்னைக்கு நீ காலில் விழுந்து கதறி கூட நான் கொஞ்சமும் மனசாட்சி இல்லாமல் நடந்திருக்கேனே... நான் மனுசியே இல்லை அரசு... என்னை மன்னிச்சிடு அரசு...” என்றவள் அவனின் காலில் கையை வைக்க... அவனோ பதறி போய்க் காலை இழுத்துக் கொண்டான்.

“பக்தன் தான் தேவதை காலில் விழணும்... தேவதை பக்தனின் காலில் விழ கூடாது... நீ என் தேவதை பெண் அம்முலு...” என்றவன் காதல் அவளுக்குச் சில்லென்று ஊருடுருவ,

“அரசு... ஐலவ் யூ” என்றபடி அவன் நெஞ்சில் சாய...

“மீ டூ அம்முலு...” என்றவன் அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டு அவளின் தலையை வருடி தூங்க வைக்க...

வெகுநாள் கழித்து அவள் தன்னவனின் அணைப்பில் நிம்மதியாய் துயில் கொண்டாள். அவளைப் பார்த்துக் கொண்டு அவன் தான் வெகுநேரம் முழித்திருந்தான்.

****

அரசுவின் வீட்டிற்கு அவள் வந்து ஒரு வாரமாகி விட்டது. அவன் அவளை நல்ல நண்பன் போல் அக்கறையாய், அன்பாய் நன்கு கவனித்துக் கொண்டான். ஆனால் ஒரு போதும் அவன் அவளை மனைவியாய் அணுகவில்லை. அவனின் நடவடிக்கை அவளுக்குத் தான் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. ஏன் இப்படி நடந்து கொள்கிறான்? என்று யோசித்து யோசித்துப் பார்த்தவளுக்கு விடை தான் கிடைக்கவில்லை. அன்றிரவு எப்படியும் அவளிடம் கேட்டு விட வேண்டுமென்று நினைத்தவள் அவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்... கொஞ்சம் கோபத்தோடும்...!

அதே போல் அவன் படுக்க வந்ததும் அவனின் கைப்பிடித்துத் தடுத்தவள், “ஏன் அரசு இப்படி நடந்துக்கிற?”

“எப்படி நடந்துக்கிறேன்...?” அவனுக்கு நிஜமாய் அவள் என்ன சொல்லுகிறாள்? என்பது புரியவில்லை.

“அது வந்து...” அவள் இழுக்க... அவளை விசித்திரமாய்ப் பார்த்தவன்...

“என்ன வந்து?”

“நீ ஏன் என்னை மனைவியாய்...” எப்படிச் சொல்வது என்று புரியாமல் அவள் நிறுத்த... அவள் சொன்னது அவனுக்குப் புரிய சிரித்தபடி,

“இதுக்குத் தானா இந்த வந்து... போயி கதை...” என்றவன் அவளின் கையைத் தூக்கி பிடித்து ஆட்டியவன்,

“பாரு... எப்படி மெலிஞ்சியிருக்க...? உன் உடம்பு கொஞ்சம் தேறட்டும் அம்முலு... நம்ம வாழ்க்கை இன்னையோடு முடிஞ்சி போறதில்லை” அவனின் பதிலில் நிம்மதியுற்றவள்,

“போதும்டா அரசு... உன் அன்பு தொல்லை...” என்றவள் அவனை இறுக அணைத்துக் கொண்டு,

“இதுக்குள் மேல் என்னைப் படுத்தாதே அரசு...” என்றவளின் கிறக்க குரலில் அவன் முற்றிலுமாய்த் தன் வசம் இழந்தவன், அவளின் இதழை முற்றுகையிட... அதன் பின் நிகழ்ந்த காதல் யுத்தத்திற்கு இருவருமே மனமுவந்து பொறுப்பாயினர்.

அதன் பின் நாட்கள் இருவருக்குமே மகிழ்ச்சியாய் விரைந்து சென்றது. இடையில் அவளை அழைத்துக் கொண்டு வெளிநாட்டிற்குத் தேன்நிலவுக்குச் சென்று வந்தான் அரசு. அல்லி காட்டிய காதலில் அரசு என்றும் போல் மயக்கம் கொண்டவன் அந்த மயக்கத்தில் இருந்து தெளிய விரும்பவே இல்லை. கணவனின் அன்பில் அல்லி

கொஞ்சம் சதை போட்டு, நிறம் கொஞ்சம் அதிகரித்துப் பொலிவுடன் அழகாய் இருந்தாள்.

****

சரியாக மூன்று மாதம் கழித்து அவள் தான் கர்ப்பம் உண்டாகி இருப்பதாய் சந்தேகித்தவள் அரசுவிடம் சொல்லாமல் காயத்ரியை சென்று சந்தித்தாள். அவளைப் பரிசோதித்த காயத்ரி அவள் கர்ப்பம் அடைந்திருப்பதை உறுதி செய்து அவளை வாழ்த்த... அல்லியோ,

“போன தடவை மாதிரி ஏதும்...” அவள் பேசும் முன் கை நீட்டி தடுத்த காயத்ரி,

“அதான் ஸ்கேன் எல்லாம் எடுத்து பார்த்தேனே... கரு வளர்ச்சி நல்லாயிருக்கு... அதனால் பயப்படத் தேவையில்லை...” காயத்ரியின் வார்த்தையில் நிம்மதியுற்ற அல்லி,

“தேங்க்ஸ் அக்கா...” என்க, காயத்ரி சிரித்தபடி அவளுக்கு விடையளித்தாள்.

அன்று அரசுவின் வரவிற்காகப் பெருத்த எதிர்ப்புடன் அவள் காத்திருந்தாள். அவன் வந்ததும்... அன்று அவன் சொன்னது போல் அவனின் கையை எடுத்து தன் வயிற்றில் வைத்தவள் அவன் என்ன சொல்ல போகிறான்? என்று அவன் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்.

“என்ன அம்முலு வயிறு வலிக்குதா?” அவன் பதறியபடி கேட்க... அவள் தலையில் அடித்தபடி (அவள் தலையில் தான்) மீண்டும் அவன் கையை எடுத்து தன் வயிற்றில் வைக்க...

“என்ன சொல்ற அம்முலு?” அவன் புரியாமல் பாவமாய் அவளைப் பார்த்தான்.

“எவ்வளவு நேரம் தான்டா வெட்கப்படுற மாதிரி நடிக்கிறது...? என்ன சொல்ல வர்றேன்னு புரிஞ்சிக்காம... தத்தி... தத்தி...” என்று அவனைத் திட்டியவள்,

“உன்னை மாதிரி அறிவுக் கொழுந்துக்கு எல்லாம் டைரக்ட் ஆக்சன் தான்டா சரி...” சொல்லி கொண்டே அவனை அணைத்துக் கொண்டு,

“நீ அப்பாவாகப் போற அரசு...” என்று சந்தோசத்துடன் அவன் காதில் கத்தி சொல்ல... அவளின் சந்தோசம் அவனையும் தொற்றிக் கொண்டது.

“ஹேய்...” என்று உற்சாகக் கூச்சலிட்டவன் அவளைத் தூக்கி சுற்றியவன்,

“நானா தத்தி... உன்னை என்ன பண்றேன் பாரு...” அவளைக் கீழிறக்கியவன் அவள் முகம் நோக்கி குனிய, அவனைத் தடுத்தவள்,

“அய்யோ பாப்பா...” என்க அவன் அவளை விட்டு அவசரமாய் விலகினான்.

“அம்முலு... எதுக்கும் டாக்டர் கிட்ட செக்கப்புக்கு போயிட்டு வரலாமா...?” கவலையுடன் அவன் சொல்ல...

“அரசு கவலைப்படாதே... நான் காயத்ரி அக்காவிடம் செக்கப் போயிட்டு தான் வந்தேன். பேபி நல்லாயிருக்கு...”

முதலில் குழந்தை நன்றாக இருக்கிறது என்ற வார்த்தையில் நிம்மதியுற்றவன்... அவளின் அடுத்த வார்த்தையில் அவனுக்கு மயக்கம் வராத குறை தான்.

“எப்போ இருந்து காயத்ரி உனக்கு அக்காவானாள்?” அவன் கிண்டலுடன் கேட்க,

“உன் லவ்வை புரிஞ்சிக்கிட்டதில் இருந்து...” என்று சொல்லியவள் அவனின் நெஞ்சில் சாய்ந்து கொள்ள... அவளின் மனமாற்றம் குறித்து அவனுக்கு நிம்மதியாயிருந்தது.

அல்லி குழந்தை உண்டானது குறித்து லக்ஷ்மியம்மாவிற்குச் சந்தோசமாய் இருந்தது. அவரும் அரசுவும் அவளை உள்ளங்கையில் வைத்து தாங்கினர். அடுத்தப் பத்தாவது மாதம் அல்லி அழகிய ஆண்

குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவளுக்குக் காயத்ரி தான் பிரசவம் பார்த்தாள்.

அல்லியின் கையில் அவளின் குழந்தையைக் கொடுத்த காயத்ரி, “ அப்படியே உன்னைய மாதிரியே இருக்கான்” என்று குழந்தையைப் பார்த்து சொன்னவள்,

“அல்லி அடுத்த வாரம் நான் அமெரிக்காவுக்குப் போறேன்...”

“ஏனக்கா?”

“அங்கேயே செட்டில் ஆகப் போறேன் அல்லி... உனக்கு ஒரு பிரசவம் பார்க்கணும்ங்கிறதுக்காகத் தான் நான் இங்கே இருந்தேன். அன்னைக்கு உங்க ரெண்டு பேர் முகத்தில் இருந்த வேதனையைப் பார்த்த போது... அதைப் போக்கி உங்க முகத்தில் சிரிப்பை பார்க்கணும்னு நினைச்சேன்... இதோ என் ஆசை நிறைவேறி விட்டது. அதனால போகலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்” என்றவள் அல்லியின் நெற்றியில் குனிந்து முத்தமிட்டவள்,

“உன் அரசு உனக்கு மட்டும் தான்...” என்று கூறி புன்னகைக்க...

“அக்கா... இப்போ நான் அப்படி நினைக்கல...” கண்கள் கலங்க அவள் கூற...

“இந்த மாதிரி சமயத்தில் நீ கண்கள் கலங்க கூடாது” என்று அவளை அன்பாய் அதட்டிய காயத்ரி,

“என்ன இருந்தாலும் என்னைப் பார்க்கும் போது உன் மனசுல ஏதாவது ஒரு உறுத்தல் இருந்திட்டே இருக்கும். அதே மாதிரி எனக்கும் ஏதாவது தோணும்... இது எல்லாம் வேணாம்ன்னு தான்... நான் இப்படியொரு முடிவு எடுத்தேன்” என்றவள் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

“அரசு... அக்காவை பாருங்க... இப்படிப் பேசிட்டு போறாங்க...” அல்லி தன் ஆற்றாமையை அரசுவிடம்

சொல்லி புலம்ப...

“அவளை அவள் இஷ்டத்துக்கு விடு...” சர்வசாதாரணமாய்ச் சொன்னவனை ஆச்சிரியமாய் அவள் பார்க்க...

“உங்களுக்குக் கஷ்டமாய் இல்லையா?”

“எதுக்குக் கஷ்டமாயிருக்கணும்... உன்னைக் காதலிக்கிறதுக்கு ஒரு வருசத்துக்கு முன்னாடியே அவள் என்னிடம் காதலை சொன்னாள்... அப்போதே நான் முடியாதுன்னு தான் சொன்னேன்... அவளை ஒரு தோழியாய் எனக்கு ரொம்பப் பிடிக்கும்... காதலியாய் இல்லைன்னு எவ்வளவோ எடுத்து சொல்லி பார்த்துட்டேன் கேட்கல... அதுக்கப்புறம் உன்னைக் காதலிக்கிறேன்னு சொன்னேன்... அப்போவும் காயூ என்னை நம்பல... என் பேச்சை கேட்கவும் இல்லை... இப்போ சொல்லி புலம்புறதுல எந்த அர்த்தமுமில்லை...” இறுக்கமாய் முகத்தை வைத்தவன் உணர்ச்சியில்லாமல் சொல்ல...

“என்ன இருந்தாலும் அவங்க பாவம் தான்...” என்றவளை புரியாமல் பார்க்க...

“நான் உங்க காதலை எதுக்காமல் இருந்தா உங்களுக்குக் கஷ்டமா இருந்திருக்குமா? இல்லையா?” அவளின் கேள்விக்கு,

“கஷ்டமா இருந்திருக்குமா? செத்தே போயிருப்பேன்...” என்றவன் அவளை அணைத்துக் கொள்ள...

“அது மாதிரி தானே அவங்களுக்கு இருந்திருக்கும்...” அவனின் காதில் ரகசியம் சொல்லுவது போல் சொன்னவளை திகைப்பாய் பார்த்தான்.

“காயத்ரி அக்கா பாவம் தான்...” அவளுக்காய் இவள் வருத்தப்பட...

“என்ன செய்யச் சொல்ற? வேணும்ன்னா அவளை நான் கல்யாணம் பண்ணிக்கவா?” அவன் கோபமாய்க் கேட்க...

“கொன்னே போடுவேன்...” அவனின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் அவனின் காதை பிடித்து அவள் திருக...

“வலிக்குது அம்முலு... விடுடா...” என்றவன் போலியாய் அலற...

“சொல்லுவியாடா சொல்லுவியாடா?” என்றபடி அவனின் காதை மேலும் அவள் திருக...

“அப்புறம் என்னை என்ன தான் பண்ண சொல்ற... நீ ஓவரா சீன் போட்டா நான் என்ன தான் செய்வேன்?” என்றவன்,

“அவளை நினைத்து கவலைப்படாதே... அவளுக்கான ஆளை சந்திக்கும் போது அவளின் மனமும் மாறும்... எனக்கென்னமோ அவன் அந்த அமெரிக்காவில் தான் இருக்கான் தோணுது” அவன் சொன்னதும் அல்லியின் கண்கள் பிரகாசித்தது.

“நிஜமாவா அரசு...?”

“சத்தியமாய்...” என்று அவளை மீண்டும் அணைத்து கொண்டவன் மனம் காயத்ரிக்காக வருந்தியது.

அல்லியிடம் சொன்னது போல் அவளின் வாழ்வு சரியாக வேண்டுமென்று அவனின் உள்ளம் பிரார்த்தித்தது. யாருக்கு யாரென்று அந்த இறைவன் எழுதி வைத்தான் அன்று... அதை நம்மில் யாராலும் மாற்ற முடியாது.

****

“அரசு... அரசு...” அல்லியின் குரலில் கணினியில் வேலையாய் இருந்தவன் அதை மூடி வைத்து விட்டு தன் மனைவியைப் பார்த்தான்.

“அரசுவுக்கு என்ன வச்சிருக்க?”

கிண்டலாய் கேட்டபடி அவளின் கையைப் பிடித்துத் தன் மடியில் அமர வைக்க... அவளும் அவனின் கழுத்தில் தன் கைகளை மாலையாய் கோர்த்துக் கொண்டு அவன் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்தவள்,

“அரசு... நம்ம பையனுக்குப் பேர் வைக்கும் விழாவுக்கு உங்க அக்காவை கூப்பிட்டால் என்ன?” அவளின் வார்த்தையில் அவளை நிதானமாய் ஏறிட்டு பார்த்தவன்,

“அவங்க எதுக்கு?” உணர்ச்சியில்லாத குரலில் கேட்க... அவன் மனதில் என்ன நினைக்கிறான் என்று அவளுக்கும் புரிந்தது.

“ஆயாம்மாவுக்காகக் கூப்பிடு அரசு... அவங்க ரொம்ப ஃபீல் பண்றாங்க...” அவள் சொன்னதைக் கேட்டும் அவன் பேசாதிருக்க...

“ப்ளீஸ் அரசு...”

அவள் கெஞ்சவும் சம்மதித்தவன் அம்மாயியை விட்டே தேன்மொழியை அழைக்கச் சொன்னான். ஆனால் அக்காள் கணவன் தாஸை அவன் தனியாக அழைத்தான்.

‘வைபவ்’ என்று தங்கள் மகனுக்கு அரசுவும், அல்லியும் பெயர் வைக்க... பெயர் வைக்கும் வைபவம் வெகு விமர்சையாய் நடந்து முடிந்தது. வந்த இடத்தில் தேன்மொழி வாயை வைத்துக் கொண்டு சும்மா இறுக முடியாமல்,

“என்ன அல்லி பையன் உன்னை மாதிரி கறுப்பா இருக்கானே...” மாநிறத்தில் அழகாய் இருந்த குழந்தையைப் பற்றி வேண்டுமென்றே வம்பு பேச, அரசு அல்லியை பார்த்து பல்லை கடிக்க,

“பையன் தானே அண்ணி... கறுப்பா இருந்தா பிரச்சினையில்லை... அடுத்துப் பொண்ணை உங்க தம்பியை மாதிரி சிவப்பாய் பெத்துக் கொடுக்கிறேன்... அதுக்குள்ள அவளுக்கு மாப்பிள்ளை நீங்க ரெடி பண்ணுங்க...” என்று அல்லி பதிலுக்கு விளையாட்டாய் சொல்ல... அங்குக் கூடியிருந்தவர்கள் கொள்ளென்று சிரிக்கத் தேன்மொழி முகம் கூம்பி போனது.

அரசு மெச்சுதலாய் மனைவியைப் பார்க்க... அதைப் பார்த்து தேன்மொழிக்கு வயிறு எரிந்தது. தன் குணத்தால்

தம்பியின் அருமையை, அன்பை இழந்திருக்கிறோம் என்பதை அவள் கொஞ்சமும் உணரவில்லை. இன்னமும் அல்லியிடம் அதே பகைமையைப் பாராட்டினாள். அவளின் கணவன் தாஸ் தான் அவளைச் சத்தம் போட்டு அழைத்துப் போனான்.

****

அன்றிரவு அல்லியிடம் அரசு, "இதுக்குத் தான் சொன்னேன் அவங்களைக் கூப்பிட வேணாம்ன்னு... அவங்க எதாச்சும் சொல்லி... முன்ன மாதிரி நீ என்னிடம் கோபித்துக் கொண்டு போயிட்டா... என் நிலைமை... உன்னைக் காணாமல் நான் இல்ல கஷ்டப்படணும்" படபடவெனப் பேசியவனின் அருகில் வந்து அவனை ஆழ்ந்து பார்த்தவள்,

"உனக்குக் கொஞ்சம் கூடத் தைரியம் பத்தாது அரசு" அவள் சம்பந்தமில்லாமல் சொல்ல... அவளின் பேச்சின் அர்த்தம் புரியாமல் அவன் 'ஞே' என்று விழித்தான்.

"பின்னே என்ன... நான் கோபிச்சிட்டு போனா... நல்லா திட்டி, அடிச்சி, உதைச்சு, கையைக் காலை கட்டி என்னை இழுத்துட்டு வந்திருக்க வேணாமா?"

அவள் பேசியது கேட்டு... என்னமோ ஜாக்கிசான் சண்டை படம் பார்த்தவன் போல் ஆவென்று திகைத்து போய் அவளைப் பார்க்க... அவன் தாடையில் கை வைத்து அவனின் வாயை மூடியவள்,

"பொண்டாட்டி மேலே பாசம் இருக்க வேண்டியது தான்... அதுக்காக இப்படியா பொண்டாட்டி கிட்ட கெஞ்சிக்கிட்டு இருக்கிறது? அதான் சொன்னேன் உனக்குத் தைரியம் பத்தாதுன்னு..." சொல்லியவளின் அவனின் முகத்தைக் கிண்டல் சிரிப்புடன் பார்க்க...

அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் அவள் பேசியதின் அர்த்தம் மூளையில் உறைக்க... தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் அவளை ஒரு மார்க்கமாய்ப் பார்த்தபடி அவள் அருகே வந்தவன் அவள் முகம் நோக்கி குனிந்து அவளின்

இதழில் கவிதை பாட... அதில் சிறிது நேரம் மயங்கியவள் மூச்சு வாங்க அவனைத் தள்ளிவிட்டவள்,

“நீ ரொம்ப மோசம் அரசு...” அவனிடம் கோபப்பட,

“நான் எப்போதுமே என் பொண்டாட்டி பேச்சை கேட்கிறவன்... எனக்கு இப்போ உனக்குக் கிஸ் பண்ணனும் போலிருந்தது. சொன்னா நீ எப்படியும் ஒத்துக்க மாட்ட... நீ தானே சொன்ன... உன் பேச்சை நான் கேட்க கூடாதுன்னு... அதான் இப்படிப் பண்ணினேன். உண்மையில் நான் பொண்டாட்டிக்கு பயந்தவன்ம்மா... நான் எல்லாம் பொண்டாட்டி தாசனாக்கும். மனைவி சொல்லே மந்திரம்ன்னு வாழ்றவனாக்கும்...” பயப்படுவது போலியாய் நடுங்கியவன் நக்கலாய் கூறிக் கொண்டே அவளைப் பார்த்து குறும்பாய் சிரிக்க... அவனின் விசமம் அவளுக்குப் புரிந்தது.

“அந்தளவுக்கு நீ நல்லவனா அரசு?” போலியாய் வியந்தவள்,

“அட என் நல்லவனே... என் அறிவுக்கொழுந்து அத்தானே...” என்று அவனை விதவிதமாய் அவள் கொஞ்ச...

“நான் நல்லவனா இருக்கிறதுக்கு உனக்குக் கிண்டலா இருக்கா? இப்போ பாரு அத்தானோட இன்னொரு பக்கத்தை” என்றவன் சொல்லியபடி அவளை நோக்கி பாய...

“அய்யோ அரசு... வலிக்குது” அவள் அலற...

“எங்கே அம்முலு...? சாரி அம்முலு... சாரி அம்முலு...” அவளின் மேனியில் கண்களை ஓட்டியபடி அவன் மன்னிப்பு வேண்ட... அதைப் பார்த்து வாய்விட்டு சிரித்தவள்,

“அரசு உனக்கு இந்த வில்லன் கரெக்டர் எல்லாம் செட்டாகல... உனக்கு ரெமோ மாதிரி சாப்ட்டான லவ்வர் பாய் கரெக்டர் தான் சரி... அன்பானவன், காதலானவன் தான் என் அரசு...” என்றவளை பார்த்து முறைக்க முயன்றவன் அது முடியாமல் போக...

“என்னை உயிரோட கொல்லுற அம்முலு...” அவளின் பார்வையின் வீச்சில் என்றும் போல் இன்றும் மயங்கியவன்,

“என் அம்முலுவுக்கு நான் என்றும் லவ்வர் பாய் தான்... அது நூறு வயசானாலும்...” காதலுடன் கூறியவன் அதே காதலுடன் அவளை அணைத்துக் கொள்ள... அவளும் அவனின் காதலை உணர்ந்தவளாய் அவனின் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்தாள்.

அரசுவும், அல்லியும் ஒருவர் மீது மற்றொருவர் வைத்திருந்த தூய்மையான காதலால் இருவரின் மனதின் வெம்மையும் தீர்ந்தது...